உ

𑌓𑌂 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 ॥

# யாஜுஷ மந்த்ரப்ரச்னம், ஏகாக்நிகாண்டம்.

தமிழுரையுடன் கூடியது.

இஃது

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி அவர்களின்

ஆஜ்ஞையை முன்னிட்டு

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையால்

கும்பகோணம்

சாரதா விலாஸ பிரஸ்ஸில்

அச்சிடப்பட்டு, கும்பகோணத்தில் வெளியிடப்பட்டது.

இதன் விலை] 1952. [ரூ. 3—0—0

॥ श्रीः ॥

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य
श्रीमच्छङ्करभगवत्पादप्रतिष्ठित
श्रीकाञ्चीकामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वतीश्रीपादैः
क्रियते नारायणस्मृतिः ॥

"यदेव विद्यया करोति तदेव वीर्यवत्तरं भवति, विद्वान् यजेत, ज्ञात्वा कर्माणि कुर्वीत" इत्याद्याः श्रुतिस्मृतयः साङ्गस्य यज्ञस्य स्वरूपं तस्य विनियोगानां मन्त्राणामर्थं चावगत्य स्वाधिकारानुगुण्येन यज्ञानुष्ठानं प्रतिबन्धनिवृत्तिद्वारा फलं सञ्जनयतीति बोधयन्ति । तत्र प्रयोगेष्वपेक्षितेषु गर्भाधानादि संस्कारकर्मसु विनियुक्तानामैकाग्निकाण्डगतमन्त्राणां भाष्यं श्रीहरदत्ताचार्यैः अधिकारिष्वनुकम्पयाऽनुगृह्णत्। ऐकाग्निकाण्डगतमन्त्रप्रश्नभाष्याच्च तदर्थमेवोपसंक्षेपेणोपकाराय देशभाषायां मन्त्रव्याख्यानं श्रीवेदधर्मशास्त्रपरिपालनसभया मुद्राप्य प्रकाशितं साक्षात्कृत्य सन्तुष्यामः । एतद्व्याख्यानपरिशीलनेन कर्मतत्त्वज्ञा यथार्थमनुष्ठातारः सत्कृतार्थानुष्ठानेनात्मशुद्धिं सम्पादयन्तु श्रीमच्चन्द्रमौलीश्वरकृपया श्रेयांसि प्राप्नुवन्त्वित्याशास्महे ॥

विजययात्रास्थानम्-
कूपत्तूरे,
नन्दननामसं, कार्तिक
शुक्लपञ्चमी.

नारायणस्मृतिः ॥

ஸ்ரீ:

முத்ரை.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய, ஸ்ரீமச்சங்கரபகவத்பாத -ப்ரதிஷ்டித, ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிப ஜகத்குரு

## ஸ்ரீமச் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ச்ரீபாதர்களால்

செய்யப்படுகின்றது,

## நாராயணஸ்ம்ருதி.

'எந்தக் கர்மத்தை மந்த்ரார்த்தஜ்ஞாநத்துடன் செய்கிருனே அந்தக் கர்மமே அதிக வீர்யமுள்ளதாய் ஆகிறது', 'மந்த்ரார்த்தஜ்ஞானமுள்ளவனாய் யாகம் செய்யவேண்டும்', 'மந்த்ரார்த்தங்களை அறிந்து கர்மங்களைச் செய்யவேண்டும்' என்பது முதலாகிய ச்ருதிகளும், ஸ்ம்ருதிகளும், அங்கங்களுடன் கூடிய தர்மத்தின் ஸ்வரூபத்தையும், அதில் விநியோகிக்கப்பட்டுள்ள மந்த்ரங்களின் அர்த்தத்தையும் அறிந்து, தனது அதிகாரத்திற்குத் தகுந்தபடி தர்மத்தினநுஷ்டானமானது, ப்ரதி பந்தத்தை நிவ்ருத்தி செய்யும் வழியாய் பலத்தை உண்டுபண்ணுகிறது, என்று போதிக்கின்றன். அதில், முதலில் அபேக்ஷிதங்களான கர்ப்பாதானம் முதலிய ஸம்ஸ்கார கர்மங்களில் விநியோகிக்கப் பட்டுள்ள எகாக்னி காண்டத்திலுள்ள மந்த்ரங்களுக்கு பாஷ்யத்தை ஸ்ரீஹரதத்தாசார்யரவர்கள் அதிகாரிகளிடம் கருணையால் இயற்றி அனுக்ரஹித்தார்கள். ஏகாக்நி காண்டத்திலுள்ள மந்த்ரங் களிலின்றும், அவைகளின் பாஷ்யத்தினின்றும் அவைகளின் அர்த்தத்தை அறி வதற்குச் சக்தியற்றவர்களுக்கு உபகாரத்தின் பொருட்டு, தேசபாஷாமயமான மந்த்ர வ்யாக்யாநத்தை, ஸ்ரீ வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை அச்சிட்டு வெளியிட்டுள்ளதைப் பார்த்து ஸந்தோஷிக்கின்றோம். இந்த வ்யாக்யாநத்தைப் பரிசீலநம் செய்வதால் அறியப்பட்ட அந்தந்த மந்த்ரங்களின் அர்த்தங்களையுடைய அனுஷ்டாதாக்களான ஸஜ்ஜநங்கள், அந்தந்தக் கர்மங்களை அனுஷ்டிப்பதால் ஆத்ம சுத்தியை ஸம்பாதிப்பவர்களாகி ஸ்ரீமச் சந்த்ரமௌளீச்வர க்ருபையால் ச்ரேயஸ்ஸுகளை அடைய வேண்டுமெனக் கோருகிறோம்.

விஜயயாத்ராஸ்தானம், ஆடுதுறை.
நந்தன நாமஸம்வத்ஸர
கார்த்திக சுத்தபஞ்சமீ.

நாராயணஸ்ம்ருதி:

# முகவுரை

—o0o—

தைத்திரீய யஜுர்வேத சாகையைச் சேர்ந்த ஆபஸ்தம்ப ஸூத்ரிகள் அனுஷ்டிக்கவேண்டிய ஜாதகர்ம, உபநயன, விவாஹாதி ஸம்ஸ்கார கர்மாக்களிலும், ச்ராத்தாதிகளிலும் உபயோகிக்கக்கூடிய மந்த்ர பாகத்திற்கு “மந்த்ர ப்ரச்நம்” என்று சிஷ்ட வ்யவஹாரமிருக்கிறது. வேதங்களில் முழுவதும் கார்ஹபத்ய, ஆஹவநீய, தக்ஷிணாக்நி என்ற மூன்று அக்நிகளால் செய்ய வேண்டிய யாககர்மாவே சொல்லப்படுகிறது. இதில் ஒரே அக்நியால் ஸாத்ய மான கர்மாக்கள் விதிக்கப்படுவதால் இதற்கு “ஏகாக்நி காண்டம்” என்ற வ்யவஹாரமுமுண்டு.

## இதுவும் யஜுர்வேதமேயாகும்.

இந்த மந்த்ரப்ரச்நமென்கிற பாகமானது இரண்டு ப்ரச்னங்கள் கொண்டதாகும். இதுவும் யஜுர்வேதம்தான். தற்போது அத்யயனம் செய்யப் படுகிற யஜுர்வேதத்தின் ஏழு காண்டங்களிலோ, சாகை என்று சொல்லப் படுகிற தைத்திரீய ப்ராம்ஹண பாகத்திலோ இந்த மந்த்ரப்ரச்நம் படிக்கப் படவில்லை. “ஏகசதமத்வர்யுசாகா:” என்றபடி, யஜுர்வேதமானது 101-சாகைகள் (கிளைகள்) கொண்டது. அவைகளில் இந்த மந்த்ரப்ரச்நம் ஒன்றென்று சிலர் நினைக்கிறார்கள். வேதபாஷ்யகாரராகிய ஸாயண மாதவாசார்யர் இந்த மந்த்ரப்ரச்நத்தை வைச்வதேவகாண்டத்தில் சேர்ந்ததென்று சொல்லுகிறார். க்ருஹ்யஸூத்ர வ்யாக்யாதாவான ஸ்ரீ ஸுதர்சனாசார்யர் இந்த மந்த்ரப்ரச்நத்திற்கும் நித்யப்ரம்ஹயஜ்ஞ பாராயணாதிகள் உண்டென்று சொல்லுகிறார்.

முக்ய விஷயமென்னவென்றால் யஜுர்வேதம் முழுவதற்கும் ஸூத்ரம் செய்ய முன்வந்த ஆபஸ்தம்ப மஹர்ஷி ச்ரௌதங்களுக்கு கல்பம் எழுதியது போல் இந்த மந்த்ர ப்ரச்ந வரிசையை அனுஸரித்தும் க்ருஹ்ய கல்பஸூத்ர மெழுதியிருக்கிறார். மந்த்ரங்களை ஸாக்ஷாத்கரிக்கும் தபோமஹிமை பெற்ற மஹர்ஷி ஆபஸ்தம்பரே இந்த மந்த்ரப்ரச்னத்தை யஜுர்வேதபாகமாக அங்கீகரித்திருப்பதால் மந்த்ரப்ரச்நத்தைப்பற்றி மேற்றிசை நவீன விமர்சனங்கள் ஆதாரமற்ற வெறும் ஊஹங்களே. மனுவும் இந்த மந்த்ரப்ரச்னத்தை ப்ரமாணமாகக் கொள்ளுகிறார். மனுஸ்ம்ருதி ஒன்பதாவது அத்யாயத்தில் “யந்மேமாதா ப்ரலுலோப” என்ற மந்த்ரம் மனுவால் அநுவாதம் செய்யப் பட்டுள்ளது. அந்த மந்த்ரமானது மந்த்ரப்ரச்னம் தவிர வேறு எந்தவிடத்தி

லும் படிக்கப்படவில்லை. ஆதலால் மநு காலத்திற்கு முன்பும் இந்த மந்த்ர ப்ரச்நம் வைதிகர்களால் வேதபாகமாகவே அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. இது நிர்விவாதமான விஷயமாகும்.

## ஸ்வர-அக்ஷர லோபம் கூடாது.

நாம் நமது நித்ய கர்மாக்களில் உச்சரிக்கும் மந்த்ரங்கள் சுத்தமாயும், ஸ்வர, அக்ஷராதிகளில் குறைவில்லாதவையாயுமிருக்கவேண்டுமென்றும், இல்லையேல் விபரீத பலனைக் கொடுக்குமென்றும் சிக்ஷாகாரர்கள் கூறியுள்ளார்கள்.

𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍋 𑌹𑍀𑌨𑌃 𑌸𑍍𑌵𑌰𑌤𑍋 𑌵𑌰𑍍𑌣𑌤𑍋 𑌵𑌾 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌯𑍁-
𑌕𑍍𑌤𑍋 𑌨 𑌤𑌮𑌰𑍍𑌥𑌮𑌾𑌹 । 𑌸 𑌵𑌾𑌗𑍍𑌵𑌜𑍍𑌰𑍋 𑌯𑌜𑌮𑌾𑌨𑌂 𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑌿
𑌯𑌥𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑌤𑍍𑌰𑍁𑌃 𑌸𑍍𑌵𑌰𑌤𑍋𑌽𑌪𑌰𑌾𑌧𑌾𑌤𑍍 ॥

மந்த்ரமானது ஸ்வரத்தாலாவது, அக்ஷரத்தாலாவது குறைவுள்ளதாயிருந்தால் அது பொய்யாகச் சொல்லப்பட்ட வார்த்தைபோல் ஆகும். உண்மையான அர்த்தத்தைச் சொல்லாது. அது வஜ்ராயுதம் போன்ற வாக்கு. யஜமானனைத் தாக்கும். த்வஷ்டா என்ற தேவன் இந்த்ரனைக் கொல்லக் கூடிய பிள்ளை வேண்டுமென்று விரும்பி, "இந்த்ரசத்ரு: வர்த்தஸ்வ" என்ற மந்த்ரத்தால் ஹோமம் செய்தார். ஆனால் ஸ்வரத்தைத் தவறுதலாக அவர் சொல்லிவிட்டதால் "இந்த்ரனால் கொல்லப்படக்கூடிய பிள்ளை" என்ற விபரீத அர்த்தம் ஏற்பட்டுவிட்டது.

க்ருஹ்ய கர்மாக்களாகிய உபநயந விவாஹாதிகளில் சொல்லப்படும் மந்த்ரங்களில், ஆயுஸ், ஆரோக்யம், தனதான்யாதி ஸம்பத்துகள் போன்ற ஐஹிக க்ஷேமங்கள் பெரும்பாலும் ப்ரார்த்திக்கப்படுவதால், அவை நமக்குப் பலிக்க வேண்டுமானால், அந்த மந்த்ரங்களை நாம் ஸ்வர-வர்ண லோபமின்றி சொல்லி, தேவதைகளை ப்ரார்த்திக்க வேண்டும். ஸ்வரபேதத்தால் அர்த்த பேதம் ஏற்படுவதை ஸாதாரணமாக லோக வ்யவஹாரத்திலேயே நாம் காண்கிறோம். ஒருவன் எவ்வளவு தெளிவாகப் பேசினாலும் அவன் ப்ரயோகிக்கும் ஸ்வர விசேஷத்தைக் கொண்டு அர்த்தம் மாறுபட்டுப் போவது யாவரும் அறிந்ததே. ஆகையால் நாம் செய்யும் கர்மாக்களில் ஸ்வர அக்ஷராதி லோபமின்றி மந்த்ரங்களை உச்சரிக்கவேண்டியது ஆவச்யகமாகும்.

அதற்கு இந்த க்ரந்த ப்ரசுரமானது மிகுந்த உபகாரகமாயிருக்கும். வேத தர்ம சாஸ்த்ர பரிபாலன ஸபையின் முக்யமான உத்தேசத்தில் க்ருஹ்ய கர்மாக்களை யதாவத்தான மந்த்ர பூர்வகமாக அநுஷ்டிக்கும்படி செய்யவேண்டியது முதலாவது கொள்கையாகும். அதற்கேற்றபடி ஸ்வரத்துடன் இது அந்த ஸபையாரால் லோகோபகாரகமாக வெளியிடப்படுகிறது.

## மந்த்ரங்களுக்கு அர்த்தஜ்ஞானம்.

மேலும் இப் ப்ரசுரத்தில் க்ருஹ்ய கர்மாக்களின் மந்த்ரங்களுக்கு அர்த்தமும் சேர்த்து ப்ரசுரித்திருப்பது மஹத்தான உபகாரமாகும். மந்த்ரார்த்தஜ்

ஞான விஷயமாக நமது வைதிக மதத்தில் இருவித அபிப்ராயமிருக்கிறது. கர்மாக்களை அநுஷ்டிப்பவனுக்கு அந்த மந்த்ரார்த்த ஞானம் ஆவச்யகமென்றும், அது கர்மாவுக்கு அங்கமென்றும் மீமாம்ஸகர்களில் சிலரின் அபிப்ராயம். ஆனால் மற்றொரு பிரிவினர் இதை அங்கீகரிக்கவில்லை அர்த்தஜ்ஞானமின்றியே கர்மாக்களைச் செய்யலாமென்றும், அதனால் கர்மாவுக்கு வைகுண்யம் ஸம்பவிக்காதென்றும் அவர்கள் ஸித்தாந்தம் செய்துள்ளார்கள். ஆயினும் இங்கு நாம் அந்தச் சர்ச்சையில் ப்ரவேசிக்கப் போவதில்லை. விவாஹ-உபநயநாதி மந்த்ரார்த்தங்களைக் கர்மானுஷ்டானம் செய்கிறவன் மட்டுமின்றி அனைவருமே அறிந்துகொள்ள வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். அந்த மந்த்ரங்களில் அடங்கியுள்ள உயர்ந்த தத்வங்களையும், லோகஹிதங்களையும் ஸகல ஜனங்களும் படித்து அறிந்து ரஸித்து, கர்மாக்களை இன்னும் அதிக ச்ரத்தையோடு செய்யவேண்டுமென்பதே ப்ரக்ருதத்தில் நமது விருப்பம். ஜாதகர்மாவில் குழந்தை பிறந்தவுடன் அதன் க்ஷேமத்திற்காகச் செய்யப்படும் ஆச்சர்யகரமான மந்த்ர ப்ரயோகங்களையும், உபநயநத்தில் வித்யாப்யாஸத்திற்காக குருகுல வாஸம் செய்யப்போகும் மாணவகனின் பாதுகாப்புக்காகச் செய்யப்படும் மந்த்ர-தந்த்ரங்களையும், விவாஹத்தில் தம்பதிகள் பரஸ்பரம் ப்ரதிஜ்ஞை செய்துகொண்டு குடும்ப நிர்வாஹம் நடத்த ஒப்பந்தம் செய்து கொள்ளுவதையும், தர்மகார்யம், பசுபுத்ராதிகள், தனதான்யாதிகள் இவைகளின் ரக்ஷணத்தையும், இவைபோன்ற இன்னும் உயர்ந்த வைதிக லௌகிக தர்ம தத்வங்களையும் போதிக்கும் மந்த்ரங்களின் அர்த்தத்தையும், நமது கர்மாக்களிலுள்ள விசால நோக்கங்களையும் உலகத்தார் யாவருமே படித்து அறிந்து கொள்ள வேண்டும். உலக வாழ்க்கை முழுவதையும், தினஸரி மனித ப்ரவ்ருத்திகளையும் கூட, தெய்வாம்சம் பொருந்தியதாகச் செய்துள்ள மந்த்ரங்களின் மஹிமைகளை யாவருமே அறியவேண்டாமா? இந்த உயரிய நோக்கத்துடன்தான் வேத தர்ம சாஸ்த்ர பரிபாலனஸபையார் மந்த்ரப்ரச்ன மந்த்ரங்களுக்கு அர்த்தமும் எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

## அர்த்தஞானம் யாருக்கு?

உபநயநத்தில் ஏழு அல்லது எட்டு வயதுள்ள மாணவகனும், விவாஹத்தில் எட்டு வயதுள்ள கந்யகையும் மந்த்ர உச்சாரணங்களை யதாவத்தாகச் செய்யமுடியுமா, மந்த்ரார்த்தஜ்ஞானமும் எப்படி ஏற்படக்கூடும் என்று சிலர் ஸந்தேஹிக்கக்கூடும். இந்தச் சங்கையில் ந்யாயமிருக்கிறது. இதற்குச் சாஸ்த்ரங்கள் ஸமாதானம் கூறியுள்ளன. மந்த்ர, தந்த்ரங்கள் செய்யத் தகுதியற்ற பாலர்கள் விஷயத்தில் அவர்களுடைய பிதா முதலியவர்கள் அவைகளைச் செய்யலாமென்றும், அது அந்தப் பாலர்கள் செய்ததுபோலவே கருதப்பட வேண்டுமென்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகளின் ஆயுஷ்ய ஹோமாதி சாந்தி கார்யங்களிலும், ஜாதகர்மாதிகளிலும் செய்வதுபோல் உபநயநத்திலும் செய்யலாம். குழந்தையின் க்ஷேமத்தை மன:பூர்வகமாக ப்ரார்த்திப்பவன் பிதா. அதுபோல் கந்யகையின் மந்த்ரங்களையும் வரன், அதாவது பர்த்தா சொல்லலாம். யாகாதிகளில் யஜமானன் சொல்ல வேண்

டிய மந்த்ரங்களையும் செய்யவேண்டிய கார்யங்களையும் யஜமானனுக்குப் பதிலாக ருத்விக்குகளே ப்ரயோகிக்க வேதம் விதித்துள்ளதும் இங்குக் கவனிக்கத்தக்கது. மந்த்ரார்த்தஜ்ஞான விஷயமாக த்ரிகாண்டியிலும், குதூஹல வ்ருத்தியிலும் கூறியுள்ள நிர்ணயம் பின்வருமாறு: —

அர்த்தஜ்ஞானம் யாருக்கு வேண்டுமென்பதை யோஜிக்கவேண்டும். பேசுகிறவன், அதைக் கேட்பவன் இரண்டு பேர்கள் இருக்கவேண்டும். பேச்சு என்பது பிறர் புரிந்து கொள்ளுவதற்காகவே ஏற்பட்டது. பேச்சின் அர்த்தமானது அதைக் கேட்பவனுக்குப் புரிய வேண்டியதே முக்யம். எவனும் தனக்காகப் பேசிக்கொள்ளமாட்டான். தாம் புரிந்து கொள்ளத் தாமே பேசுவது என்பது இயற்கை விரோதம். மந்த்ரங்களை நாம் உச்சரிக்கும்போது அக்நி, இந்த்ராதி தேவர்களை உத்தேசித்துத்தான் சொல்லுகிறோம். அந்தந்த மந்த்ரங்கள் மூலம் நாம் என்ன கேட்கிறோம் என்பது அந்தந்தத் தேவதைகளுக்குத்தான் தெரியவேண்டும். "விஷ்ணோ ஹவ்யம் ரக்ஷஸ்வ' என்ற மந்த்ரத்தால் "ஏ! விஷ்ணுவே! நீ இந்த ஹவிஸ்ஸை ரக்ஷிக்கவேண்டும்'' என்று ப்ரார்த்திக்கிறோம். இதன் அர்த்தம், ரக்ஷணம் செய்கிற விஷ்ணுவுக்குத் தெரியவேண்டியதே முக்யம். "அக்நியே! நீ புஷ்டியைக் கொடுக்கவேண்டும்'', ''இந்த்ரனே! நீ பசு புத்ராதிகளைக் கொடுக்கவேண்டும்'' இத்யாதிகளான எல்லா மந்த்ரங்களிலும் பலனைக் கொடுக்கிற தேவதைக்கு அர்த்தஜ்ஞானம் ஏற்பட்டால் போதும். மந்த்ரம் சொல்லுகிறவன் அர்த்தஜ்ஞானத்துடன் சொல்லவேண்டிய நிர்ப்பந்தமில்லை. ''பவதி பிக்ஷாம் தேஹி' என்ற மந்த்ரத்தின் அர்த்தத்தையறியாத சிறுவன் அதைச்சொன்னாலும் அவனுக்குப் பிக்ஷை கிடைத்துவிடுவதும் லோக அநுபவம். பிக்ஷை போடுகிறவள் அதன் அர்த்தத்தை அறிந்துபோடுகிறாள். ராஜா, தனிகன், ஆகியவர்களை ஸ்துதி செய்கிறார்கள். ஸ்துதிகளின் அர்த்தம் தெரியாவிட்டாலும், யாசகம் கொடுப்பவர்கள் அர்த்தமறிந்து த்ருப்திபடைந்து கொடுத்துவிடுகிறார்களல்லவா! ஆசார்யாதிகளை ஸ்துதி செய்வதிலும் பெரும்பாலும் அர்த்தம் தெரியாமலே ஸ்துதிக்கிறார்கள். ஆசார்யாதிகள் அந்த ஸ்துதியின் அர்த்தம் தெரிந்து கொண்டு அனுக்ரஹித்து விடுகிறார்கள்.

இவ்வாறாக த்ரிகாண்டி முதலிய ப்ராசீன க்ரந்தகாரர்கள் விசாரம் செய்து மந்த்ரத்தை ப்ரயோகிப்பவனுக்கு அந்த மந்த்ரார்த்தஜ்ஞானம் ஆவச்யகமல்லவென்று நிர்ணயித்தார்கள்.

ஆகையால் உபநயந விவாஹாதிகளில் சிறுவர்கள் அர்த்தஜ்ஞானம் பெற அவகாசமில்லையாதலால் அவர்கள் ப்ரயோகிக்கும் மந்த்ரங்களும் ஸபலங்களாகி, தேவதைகள் அநுக்ரஹிக்கிறார்களென்பது வைதிகமத ஸித்தாந்தம். ஆயினும், உபநயந விவாஹாதிகளில் ஆசார்யாதிகளைக்கொண்டு அந்தச் சிறுவர்களுக்கும் அந்தந்த மந்த்ரார்த்தங்களை அவகாசம் நேரும்போது எடுத்து உபதேசிக்கச் செய்யவேண்டியது ஆவச்யகம்.

## மந்த்ரங்களும் தெய்வ ப்ரார்த்தனையும்.

இந்த இருபதாவது நூற்றாண்டிலும் நாகரிகத்தின் உச்சியில் ஏறிவிட்டதாகப் பெருமை கொள்ளும் எல்லாத் தேச மதங்களும் தெய்வ ப்ரார்த்தனையையும், தெய்வ அநுக்ரஹத்தையும் அங்கீகரித்துள்ளன. க்ருஸ்துவம், மகம்மதியம், பௌத்தம், ஜைநம், சீக்கியம் போன்ற உலகமதங்கள் பலவும் பாபம், புண்யம், பரலோகம், தைவம் ஆகிய நம்பிக்கைகளை உறுதியாகக் கொண்டவை. உலகவாழ்க்கை தைவச் செயலால் தான் நடக்கிறதென்ற கொள்கையுடையவை. ஸுக, துக்க ஸமயங்களில் தைவ ப்ரார்த்தனை செய்து தைவ அநுக்ரஹத்தைப் பெற வேண்டுமென்ற உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கின்றன. அவை தங்கள் தங்கள் வேத மந்த்ரங்களைக் கூறி ப்ரார்த்தனை நடத்துவதை அறியாதவரில்லை.

இப்படியிருக்க வைதிக ஹிந்துமதம் நமது மந்த்ரங்கள் மூலம் நாம் தைவ ப்ரார்த்தனை செய்து தைவாநுக்ரஹத்தால் இஷ்டகாமங்களைப் பெற்று ஸுகவாழ்வு நடத்துவதில் அவநம்பிக்கை கொள்ளவேண்டாம். "மந்த்ராதீனம்து தைவதம்" இத்யாதிகளான நமது ப்ரமாணங்கள், தேவதைகள் மந்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள், என்பதை உறுதிப்படுத்தியுள்ளன. விஷ ஜந்து தோஷ பரிஹாரார்த்தமாக இக்காலத்தில் கூட மந்த்ரங்கள் பலஸித்தி கொடுப்பதை அறிகிறோம். சூன்யம், பில்லு போன்ற துஷ்டகார்யங்களில் துர்மந்த்ரங்கள் பலிப்பதும் அநுபவத்தில் காண்கிறது. தேவதைகளுக்கும் நமக்குமிடையில் மந்த்ரங்கள் பேசும் கருவிகளாயிருந்து கார்யஸித்தி செய்துவைக்கின்றன.

## மந்த்ரங்களும் க்ரியைகளும்.

இதர மதங்களில் மந்த்ரங்களால் கேவல ப்ரார்த்தனை மட்டும் செய்யப்படுகின்றன. க்ரியை ஒன்றும் செய்யப்படுவதில்லை. நமது மதத்தில் மந்த்ர ப்ரார்த்தனைகளுடன் க்ரியைகளும் விதிக்கப்படுவது விசேஷமாகும். ஆஜ்யம், ததி, பயஸ், அன்னம், ஸமித்போன்ற உயர்ந்த ஹவிஸ்ஸுகளால் தேவதைகளை த்ருப்திசெய்து வைக்கும் க்ரியாகலாபமும் நமது ப்ரார்த்தனையில் கலந்துள்ளது. இதை த்ரவ்ய யஜ்ஞமென்று பகவான் கீதையில் கூறுகிறார்.

அன்னம், தீர்த்தம், தயிர், பால் போன்ற நமது ஜீவனாதார வஸ்துக்கள் யாவற்றையும் பகவானே கருணையால் நமக்குத் தந்து அருளுகிறார். பகவான் செய்துள்ள இந்த உபகாரத்திற்கு நன்றி தெரிவிக்கும் முறையில் அந்த வஸ்துக்களையே பகவானுக்கு ஹோமாதிகள் மூலமாக அர்ப்பணம் செய்து நிவேதனம் செய்துவிட்டே நாம் அவைகளை உபயோகிக்கவேண்டும். அப்படி நமது கடமையை, நன்றியைத் தெரிவிக்காமல் போனால் நம்மை "திருடன்" என்று கீதையில் பகவான் நிந்திக்கிறார். *(கீதை அத் 3—12)*

ஆகையால் ஹோமாதி க்ரியைகள் கலந்த மந்த்ரங்களால் தைவங்களை நாம் நமது இஷ்ட காமார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம். அந்த க்ரியைகள்

பற்பலவிதமாக விதிக்கப்பட்டுள்ளன. அததற்கேற்ற மந்த்ரங்கள் எவை யெவை என்பதும் வேதங்களாலோ, ருஷிகளாலோ நிர்ணயித்து வைக்கப் பட்டுள்ளன. அந்த க்ரியைகளிலும் பல தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன.

ப்ரக்ருதத்தில் இந்த மந்த்ரப்ரச்னத்தில், நித்ய க்ருஹ்ய கர்மாக்களான விவாஹம், உபநயனம், ஜாதகர்மா முதலிய ஸம்ஸ்கார கர்மாக்களுக்கும், ச்ராத்தாதி தர்மங்களுக்கும் அபேக்ஷிதமான மந்த்ரங்கள் படிக்கப்பட்டிருப்ப துடன், சிற்சில சாந்தி கர்மாக்களுக்கான மந்த்ரங்களுமிருக்கின்றன.

## ஸகலவித க்ஷேம ப்ரார்த்தனை.

உபநயன விவாஹாதி மந்த்ரங்கள் மூலமாக நாம் தேவதைகளை ப்ரார்த் தித்து நமது இஷ்டகாமங்களை அடையக்கூடியதாயிருப்பதுடன், முக்யமாக உலகவாழ்க்கையில் இன்றியமையாதவைகளாக வேண்டப்படுகிற ஆரோக்யம், தீர்க்காயுஸ், புஷ்டி, தேஜஸ், அந்நம், தனதான்யாதி ஸம்பத்து, பசுக்கள், புத்ரபௌத்ராதிகள் போன்ற ஸகல க்ஷேமங்களும் இந்த ப்ரார்த்தன மந்த்ரங் களில் பெரும்பாலும் அடங்கியிருப்பது வெகு விசேஷமாகும். மனித வாழ்க் கையில் ஒவ்வொரு விஷயத்தையும் தைவாம்சம் பொருந்தியதாகச் செய்து வாழ்க்கையைப் புனிதமாக்கிய மதம் இதுபோல் உலகில் வேறு எதுவுமில்லை. இதைச் சிற்சில உதாஹரணங்கள் மூலம் ஆஸ்திகர்களுக்கு எடுத்துரைப்போம்.

## ஜாதகர்மாவில் விசேஷங்கள்.

முதலில் ஜாதகர்மாவிலுள்ள இரண்டொரு அதிசயங்களை விளக்குவோம். சிசு பிறந்தவுடன் செய்யப்படவேண்டிய இந்தக் கர்மாவானது அற்புதமான தத்வங்கள் அடங்கியது. இந்தமாதிரி கார்யம் எந்த மதத்திலும் காணக் கூடியதல்ல. இதர மதங்களிலும், "பிறந்ததின ப்ரார்த்தனைகள்" நடத்து கிறார்கள். ஆயினும் நமது ப்ரார்த்தனை முறையிலுள்ள தத்வங்கள் விசேஷ மானவை. அதற்கான மந்த்ரங்களும் மிக அதிசயிக்கத்தக்கவை. ஜாத கர்மாவிலுள்ள ஒவ்வொரு மந்த்ரமும், க்ரியைகளும் சிசுவின் நீண்டகால ஆயுஸ், சரீர ஆரோக்யம், புஷ்டி, வர்ச்சஸ் என்ற தேஹகாந்தி, மேதை முதலிய க்ஷேமக் கோரிக்கைகளை வெளியிடுகிறது. சிசுவின் எதிர்காலத்தில் ஏற்பட வேண்டிய பாதுகாப்பு முறைகளும் மந்த்ரங்களில் அடங்கியிருக்கின்றன. வைத்யமுறையில் சிசுவுக்குச்செய்யப்படும் பாதுகாப்புகள் தாற்காலிகமானவை. மந்த்ரபூர்வமாகச் செய்யப்படும் பாதுகாப்போ சிசுவின் ஜீவனகாலம் முழுவ தும் க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய தேவதாநுக்ரஹ ப்ரார்த்தனைகள் அடங் கியது.

## துர்தேவதா நிரஸன மந்த்ரங்கள்.

## ஸூதிகாக்ருஹரக்ஷணம்.

ப்ரஸவமானவுடன் மாதாவுக்கும், சிசுவுக்கும் பற்பல ஆபத்துகள் இயற் கையாக ஏற்படக்கூடும். முக்யமாக யக்ஷ, ராக்ஷஸ, பிசாசங்கள் என்கிற

துஷ்ட தைவங்களால் அவர்களுக்குத் தீங்கு நேரிடுமென்பதை அறிந்து நமது தர்மசாஸ்த்ரங்களும், வைத்ய சாஸ்த்ரங்களும் ப்ரஸவ அறையிலும் வெளியிலும் பற்பல பந்தோபஸ்துக்களைச் செய்யும்படி விதித்துள்ளன.

இந்த மந்த்ரப்ரச்னத்தில் இதற்காக எட்டு மந்த்ரங்கள் படிக்கப்பட்டுள்ளன. (இரண்டாவது ப்ரச்நம், 13-ஆவது கண்டம், மந்த்ரங்கள் 7-12, 14-ஆவது கண்டம், மந்த்ரங்கள் 1-3). ப்ரஸவ க்ருஹத்தைச் சுற்றிக்கொண்டு சிசுவுக்குத் தீங்கு செய்யவரும் பிசாசங்களை விரட்ட இந்த மந்த்ரங்கள் ஏற்பட்டுள்ளன. கடுகுகலந்த அரிசித் தவிட்டைக் கொண்டு இந்த மந்த்ரங்களால் ஹோமம் செய்ய வேண்டும். அந்தப் பிசாசங்களின் பயங்கர உருவங்களும், வேஷங்களும், ஆயுதங்களும், சேஷ்டைகளும் மந்த்ரங்களில் கூறப்படுகின்றன. அந்தப் பிசாசங்களைக் கொளுத்தியெரியும்படி இந்த ஹோமம் மூலம் ப்ரார்த்திக்கப்படுகிறது.

குழந்தைகளை, அக்நி, ஸோமன், யமன், அந்தகன் போன்ற தேவர்களிடம் பாதுகாப்பிற்காக ஒப்புவித்து விடவேண்டும். இப்படி ஒப்புவிக்கப்பட்ட பாலர்களுக்கு "பரிதாக்ருதர்கள்" என்று பெயர். "அக்னயேத்வா பரிததாமி" இத்யாதி மந்த்ரங்கள். இந்தப் பாதுகாப்புச் செய்யப்பட்ட பாலர்களிடம் பிசாசங்கள் நெருங்கி வரப் பயப்படுகின்றன. ஆகையால் பரிதாக்ருதர்களல்லாத (பாதுகாப்புச் செய்யப்படாத) பாலர்களையே பிசாசங்கள் தேடிவருகிறதாக மந்த்ரம் கூறுகிறது. உபநயனத்தில், வித்யாப்யாஸம் செய்ய குருகுலத்திற்குப்போகும் மாணவர்களுக்கு இந்தப் பாதுகாப்புச் செய்யப்படுகிறது. (ப்ரச்னம் 2, கண்டம் 3, மந்த்ரம் 4.)

## ஸூதிகை—சிசுரக்ஷண கார்யங்கள்.

ப்ரஸவித்த ஸ்த்ரீயையும் சிசுவையும் பாதுகாக்க ப்ரயோகம் (ப்ர 2, கண் 14, மந்த்ரம் 3) மிக ஆச்சர்யகரமாயுள்ளது. இந்த ச்ருதியை ஆதாரமாகக்கொண்டு ஸ்ம்ருதிகளும் வைத்ய க்ரந்தங்களும் பாதுகாப்புகள் பலவற்றை விதிப்பதைக் கவனிக்கவேண்டும். பிறந்த குழந்தைகளைத் தூக்கிக் கொண்டுபோகும் (அதாவது ஹிம்ஸைசெய்யும்) ஸ்வபாவமுள்ள துஷ்ட தேவதைக்கு 'ஜாதஹாரிணீ' என்று பெயர். இந்தத் துர்தேவதையின் ஆபத்தை ஸமாளிக்க ஸ்ம்ருதிகள் கூறியுள்ள உபாயங்களாவன:—

𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌵𑌹𑍍𑌨𑍀𑌨𑍇𑌵 𑌤𑌥𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑍂𑌤𑌿𑌕𑌾𑌗𑍃𑌹𑍇 ।
𑌸𑌰𑍍𑌵𑌰𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 [illegible] ।
𑌕𑍍𑌷𑌣 [illegible] ।
𑌸𑌾 𑌜𑌾𑌤𑌹𑌾𑌰𑌿𑌣𑍀 𑌨𑌾𑌮 𑌤𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍 𑌸𑍂𑌤𑌿𑌕𑌾𑌗𑍃𑌹𑌮𑍍 ॥

ஸூதிகா க்ருஹத்தில் (ப்ரஸவ அறை) நெருப்பு, ஜலம், புகை, விளக்கு, கத்தி, உலக்கை, சாம்பல், கடுகு முதலிய வஸ்துக்கள் எப்போதும் வைக்கப்பட்டிருக்கவேண்டும். இவையில்லாவிட்டால் ஜாதஹாரிணீயென்ற துர்தேவதை

க்ஷணத்தில் நாசம் செய்யக்கூடிய சக்திவாய்ந்ததாகையால் சிசுவைக் கொன்று விடும். ஆகையால் மேற்கண்ட வஸ்துக்களால் ப்ரஸவ அறையைப் பாது காக்கவேண்டும்.'

மேலும் ப்ரஸவித்த ஆருவது நாள் ராத்ரியில் மிக்க விசேஷமான பாது காப்புகள் செய்யவேண்டும். புருஷர்கள் கையில் கத்தி வைத்துக்கொண்டு அன்று இரவில் ப்ரஸவ அறை ஸமீபம் விழித்துக்கொண்டிருந்து காவல் புரிய வேண்டும். ஸ்த்ரீகள் ஸங்கீதம் பாடிக்கொண்டு இரவில் கண் விழிக்கவேண்டும் பத்தாவது நாளிலும் இப்படியே.

𑌰𑌕𑍍𑌷𑌣𑍀𑌯𑌾 𑌤𑌥𑌾 𑌷𑌷𑍍𑌠𑍍𑌯𑌾𑌂 𑌨𑌿𑌶𑌾𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌜𑌾𑌗𑌰𑌣𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌜𑌨𑍍𑌮𑌦𑌾𑌨𑌾𑌂 𑌤𑌥𑌾 𑌬𑌲𑌿𑌃 ॥
𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌶𑍍𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌹𑌸𑍍𑌤𑌾𑌶𑍍𑌚 𑌨𑍃𑌤𑍍𑌯𑌗𑍀𑌤𑍈𑌶𑍍𑌚 𑌘𑍋𑌷𑌿𑌤𑌃 ।
𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌜𑌾𑌗𑌰𑌣𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌦𑌶𑌮𑍍𑌯𑌾𑌂 𑌚𑍈𑌵 𑌸𑍂𑌤𑌕𑍇 ।

வைத்ய க்ரந்தங்களிலும், தற்கால ஆங்கில வைத்ய முறையிலும் ஆருவது நாளில் ப்ரஸவித்தவளுக்கும் சிசுவுக்கும் ரோகம் ஏற்படுமென்று எச்சரிக்கப் படுகிறதைப் பார்க்கிறோம்.

மேலும் ப்ரஸவித்த ஏழாவது தினத்திலும் ம்ருத்யுவானவன் கொல்லும் முயற்சியுடன் வருகிறான். அன்று பாதுகாப்பு அவச்யம் செய்யவேண்டும். அன்று ஸாயங்காலத்தில் விக்னேச பூஜை செய்து பக்ஷ்யம் நைவேத்யம் செய்ய வேண்டுமென்று நாரதமஹர்ஷி கூறுகிறார்.

𑌜𑌨𑌨𑌾𑌤𑍍 𑌸𑌪𑍍𑌤𑌮𑍇𑌽𑌹𑍍𑌨𑌿 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑌾𑌯𑌾𑌤𑌿 𑌘𑌾𑌤𑌕𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌰𑌕𑍍𑌷𑌾𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾 𑌪𑍂𑌜𑌾 𑌵𑌿𑌘𑍍𑌨𑌰𑌾𑌜𑌪𑍇 ।
𑌸𑌾𑌯𑌾𑌹𑍍𑌨𑍇 𑌚 𑌗𑍃𑌹𑍇 𑌵𑌿𑌘𑍍𑌨𑍇𑌶𑌂 𑌪𑍂𑌜𑌯𑍇𑌦𑍍𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑌿𑌵𑍇𑌦𑌨𑍈𑌃 ॥

நம் தேசத்தில் இந்தப் பாதுகாப்பு முறை ஸம்ப்ரதாயம் இன்றுகூட இருக்கிறது. ஏழாவது நாளில் "காப்பு இடுவது" என்ற சுபகார்யம் நடத்துவதும், ஸுமங்கலிகள் ஸங்கீதம் பாடுவதும், "காப்பு அரிசி" என்ற சர்க்கரை கலந்த அரிசி பக்ஷ்யம் நிவேதனமாகி எல்லோருக்கும் கொடுப்பதும் பரம்பரையாக நடக்கிறது. மந்த்ரப்ரச்நத்தில் உள்ள மேற்கண்ட ஜாத கர்மஹோம மந்த்ரங்கள்தான் இந்தப் பாதுகாப்பு நடைமுறையை உலகத்திற்குக் காட்டி, சிசு ரக்ஷணமும், மாத்ரு ரக்ஷணமும் செய்துள்ளதென்று அறியவும்.

இந்த ஜாதகர்ம ஹோமத்தைப் பத்துத்தினங்கள் வரையில் தினம் தினம் செய்யும்படி ஆபஸ்தம்பர் விதித்துள்ளதும் கவனிக்கத் தக்கது. (ஆப. க்ரு. க-15. ஸூ-6.)

## சிசுவைப் பிதா பார்ப்பதும், மோப்பதும்.

பிள்ளை பிறந்ததும் அதைப் பிதா தனது மடியில் எடுத்து வைத்துக்கொள்ளுகிறான். அச்சமயம் அவனுக்குக் கரைபுரண்ட ஆவலும், அன்பும், உத்ஸாஹமும் ஏற்பட்டு, "இந்தப் புத்ரனிடம் நான் ஆயிரம் விதமான க்ஷேமத்தைப் பெற்று விளங்குவேன்" என்று உலக மனிதவர்க்கப் பேச்சு முறைப்படி தனது எதிர்கால நன்மைகளை நினைக்கிறான். (ப்ரச்னம் 2, கண்டம் 12, மந்த்ரம் 11.)

இங்கு மந்த்ரத்தில் 'ஸஹஸ்ரம்' (ஆயிரம்) என்று ப்ரயோகித்திருப்பது மிகுந்த அர்த்தபுஷ்டியுள்ளது.

பிறகு பிதா சிசுவை உச்சி மோந்து பார்ப்பதற்கு ஓர் மந்த்ரம் கூறப்படுகிறது. (ப்ரச்னம் 2, கண்டம் 12, மந்த்ரம் 13.)

"ஏ! புத்ரனே! நீ எனது [பிதாவின்] ஒவ்வொரு அங்கத்திலிருந்தும் உண்டாகிறாய். எனது ஹ்ருதயத்திலிருந்தும் ஜனிக்கிறாய். ஆகையால் புத்ரனென்கிற பெயருடன் எனது ஆத்மாவாகவே (நானாகவே) நீ இருக்கிறாய். நீ பல ஆண்டுகள் ஜீவித்திருக்கவேண்டும். கல்லுப்போல் இருக்கவேண்டும். தங்கம்போல் இருக்கவேண்டும்."

"பசுமாடு தனது கன்றுக்குட்டியைப் பிறந்தவுடன் ஹிம் என்ற அபிமான சப்தத்துடன் மோப்பதுபோல் நான் உன்னை மோந்துபார்க்கிறேன்" என்கிறான் பிதா.

## பிதா—புத்ரன் அபேதம்.

இந்த மந்த்ரத்திலுள்ள தத்வத்தை ஆதாரமாகக்கொண்டு ஆபஸ்தம்ப போதாயனாதி தர்மஸூத்ரகார ருஷிகளும் மனுவும் இந்த வைதிக மதத்தின் உயர்வையும், க்ருஹஸ்தனின் அம்ருதத்வத்தையும் ஸ்தாபித்துள்ளார்கள். புத்ரன், பிதாவின் ரூபத்தை அடைந்துள்ளான். ரூபம், குணம், நடை, பேச்சு, இங்கிதம், குரல்போன்ற ஸகல அம்சங்களிலும் புத்ரன் பிதாவைப்போலவே காணப்படுகிறான். இது எப்படி? இதை இந்த மந்த்ரம் விளக்குகிறது. பிதாவின் ஸகல அவயவங்களிலும் உள்ள இந்த்ரிய ஸாரமானது ஒன்றாகி, கர்ப்பத்தில் ப்ரவேசித்து, அந்தப் பிதாவின் உருவமே புத்ரன் என்ற மாற்றுப் பெயருடன் வெளிப்படுகிறது. ஆகையால் புத்ரன் வேறல்ல, பிதா வேறல்ல, இருவரும் ஒன்றே. இதை இந்த மந்த்ரம் "ஆத்மாவை புத்ரநாமாஸி" என்பதால் காட்டியுள்ளது. மனுவும் இதை விளக்குகிறார்,

பதிர்ஜாயாம் ஸம்ப்ரவிஶ்ய கர்போ பூத்வேஹ ஜாயதே।
ஜாயாயாஸ்தத்தி ஜாயாத்வம் யதஸ்யாம் ஜாயதே புந:॥

பர்த்தாவே தனது பார்யையின் கர்ப்பத்தில் இந்த்ரிய மூலமாக ப்ரவேசித்து மறுபடி அவள் வயிற்றிலிருந்து பிறக்கிறான். பார்யைக்கு "ஜாயா" என்ற பெயரும் இதனால்தான், பார்யையிடம் பர்த்தாவே மறுபடி ஜநிப்பதால் என்றார் மனு. ஆபஸ்தம்ப மஹர்ஷியும்,

ஸ ஏவாயம் விரூடஃ ப்ருதக் ப்ரத்யக்ஷேண உபலப்யதே । த்ருஶ்யதே ச ஸாரூப்யம் । தேஹத்வமேவாந்யத் ॥

இத்யாதி ஸூத்ரங்களால் பித்ரு-புத்ர ஒருமையை விளக்கியுள்ளார். பிதாவே புத்ரனாக முளைத்து ப்ரத்யக்ஷமாக காணப்படுகின்றான். இரண்டு பேருக்கும் ஸமமான ரூபாதிகள் தெரிகிறது. சரீரம் மட்டுமே தனி. என்கிறார்.

'ப்ரஜாமநு ப்ரஜாயஸே'

என்ற ச்ருதியும் இதை உறுதி செய்கிறது.

'ப்ரஜாதந்தும் மா வ்யவச்சேத்ஸீஃ'

என்ற உபநிஷத்தும் 'ப்ரஜாதந்து' என்பதால் இந்தத் தொடர்ச்சியைக் குறிப்பிடுகிறது.

இவ்வாறு கூடஸ்தனை பிதாவே, புத்ர பௌத்ராதி ரூபங்களில் அபேதமாகத் தொடர்ந்து ஜநிப்பதால் க்ருஹஸ்த வாழ்க்கையை அம்ருதம் என்று ருஷிகள் நிச்சயித்தனர்.

ப்ரஜாபிரக்னே அம்ருதத்வமஶ்யாம் । ததுதே மர்த்யாம்ருதம் ।

இத்யாதி ப்ரமாணங்களைப் பார்க்கவும்.

## சிசுவுக்கு மேதை முதலிய க்ஷேம ப்ரார்த்தனை.

சிசுவுக்குத் தேன், நெய் இரண்டையும் கலந்து சாப்பிடச் செய்யும்படி ஒரு மந்த்ரம் ப்ரவ்ருத்தித்துள்ளது. (ப்ரச்னம் 2, கண்டம் 12, மந்த்ரம் 1.) வைத்ய நூல்களும் இதைச் சொல்லுகின்றன. தேன், நெய் இரண்டின் குணமும் மேதை, வர்ச்சஸ் இவைகளைக் கொடுக்கக்கூடியவை. ஸவித்ரு தேவதை, ஸரஸ்வதீ தேவீ, தேவ வைத்யர்களான அச்விநீ தேவர்கள் ஆகியவர்கள் சிசுவுக்கு உயர்ந்த மேதையைக் கொடுக்கும்படி மந்த்ரத்தில் ப்ரார்த்திக்கப்படுகிறது.

## பஞ்ச பூதங்களால் பாதுகாப்பு.

மனித வாழ்வில் ப்ருதிவீ, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என்கிற பஞ்ச பூதங்களின் உதவி பூர்ணமாக இருக்கவேண்டும். சிசுவின் எதிர்கால வாழ்க்கையில் இந்தப் பஞ்சபூதங்களால் தீங்கு நேரிடாமலும், நன்மையே நேரிடவேண்டுமென்றும் பாதுகாப்புக் கோரப்படுகிறது. சிசுவுக்கு ஸ்நானம் செய்து வைக்கையில் ப்ரார்த்திப்பதின் தத்வம் கவனிக்கத்தக்கது. (ப்ரச்னம் 2, கண்டம் 12, மந்த்ரம் 17.)

வ்யாதி நிவ்ருத்தி, ம்ருத்யு பாச நிவ்ருத்தி ஆகியவை சில மந்த்ரங்களில் ப்ரார்த்திக்கப்படுகிறது.

முதல் முதலாகச் சிசுவுக்கு ஸ்தன்யபானம் செய்துவைப்பதற்கும் ஓர் மந்த்ரம் கூறப்படுகிறது. (ப்ரச்னம் 2, கண்டம் 13, மந்ரம் 2.) அதில், சிசுவுக்கு ஆயுஸ், தேஜஸ், யசஸ், பலம் ஆகியவை இந்த ஸ்தன்ய பானத்

திலுல் ஏற்படவேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது. இதன்மூலம் சிசுவின் வாழ்க்கை முழுவதும் தைவிகம் பொருந்தியதாகச்செய்ய ஆரம்பிக்கப்படுகிறது. இந்தமாதிரி விசேஷம் நமது வைதிகமதத்தில்தான் காணக்கூடியது. ஜாதகர்மாவில் இன்னும் பல தத்வங்கள் இருப்பதை மந்த்ரங்களில் காண்க.

## சீக்ர-ஸுக ப்ரஸவ மந்த்ரங்கள்.

கர்ப்பமானது சீக்ரமாயும், ஸுகமாயும் வெளிப்படுவதற்காகச் சில மந்த்ரங்கள் இதில் படிக்கப்பட்டுள்ளன. (ப்ரச்னம் 2, கண்டம் 11, மந்த்ரம் 14-17). ஸுகப்ரஸவத்தையும், சிசு ஜீவனுடன் வெளிப்படுவதையும் விரும்புவது உலக இயற்கை. நமது காருண்யம் நிறைந்த வேதமானது இந்த க்ஷேமத்தை நமக்குச் செய்ய நினைத்து, சில மந்த்ரங்களையும், ஒரு ப்ரயோகத்தையும் அருளியிருக்கிறது. அந்த மந்த்ரங்களின் அர்த்தத்தைக் கவனித்தால் மிக ஆச்சர்யகரமாயிருக்கும். இந்த மந்த்ர ப்ரயோகத்தைச் செய்து ஸுக-சீக்ர ப்ரஸவ நன்மையை நம்மவர்கள் ஏன் அடையக்கூடாது?

நதியில் ஓடுகிற தீர்த்தத்தை விதிப்படி க்ரஹித்து வந்து, "தூர்யந்தீ" என்ற பச்சிலையைக் கர்ப்பிணியின் கால்களில் வைத்துக்கட்டி, அந்தத் தீர்த்தத்தால் அவளை இந்த மந்த்ரங்களைக்கொண்டு ப்ரோக்ஷிக்கவேண்டும். நதீ ஜலத்தில் ஆக்ஸிஜன் என்ற ப்ராணவாயு அபரிமிதமாகப்பரவியுள்ளதென்பதை நவீன வைத்ய விஜ்ஞானமும் ஒப்புகிறது. தீர்த்தமானது இயற்கையிலேயே மருந்து சக்தி நிறைந்ததென்று நமது வேதங்கள் கோஷிக்கின்றன.

𑌆𑌪𑌃 𑌅𑌮𑍃𑌤𑌂 𑌆𑌪𑌃 𑌭𑍇𑌷𑌜𑌮𑍍 ।

என்று பல விடங்களில் கூறப்படுகிறது. தீர்த்தத்தில் அக்நியின் சக்தியும் நிறைந்துள்ளது.

𑌯𑌾 𑌅𑌗𑍍𑌨𑌿𑌂 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌦𑌧𑌿𑌰𑍇 ।

தீர்த்தத்தில் வித்யுத் சக்தி (மின்ஸாரம்)யும் நிரம்பியுள்ளது.

𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌦𑌸𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯 𑌮𑍇 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌮𑍍 ।

என்ற ச்ருதியானது ஜலத்தை "வித்யுத்" மின்னல் சக்தி என்று தெளிவாகக் கூறுகிறது. இக்காலத்தில் இது ப்ரத்யக்ஷமானதே. இயற்கையில் இவ்வளவு சக்திவாய்ந்த தீர்த்தத்தில் மந்த்ரசக்தியும் கலந்துவிட்டால் அதன் மஹிமை அபரிமிதமாகும்.

கர்ப்பிணியை ப்ரோக்ஷிக்கும் மந்த்ரங்களில் ஒரு மந்த்ரத்தை உதாஹரணமாகப் பாருங்கள்! (17-வது மந்த்ரம்.)

கர்ப்பமானது அக்ஷதமாகவும்(காயமற்றதாக),அங்கக் குறைவு இல்லாமலும், உயிருடனும் வெளிப்படவேண்டுமென்றும், கர்ப்பிணியும் ஜீவித்திருக்கவேண்டும் என்றும் ப்ரார்த்திக்கப்படுகிறது. கர்ப்பத்தை வெளியில் இழுக்க டாக்டர்கள் உபயோகிக்க வேண்டிய கருவிகளை நமது ஆயுர்வேதமும் கூறியுள்ளது. அவைகளுக்கு "ஆயமநீ" என்ற காரணப்பெயர் உண்டு. அந்தக் கருவிகளால் இழுத்தால் சிசுவுக்குச் சரீரத்தில் காயங்கள் ஏற்படலாம். ஆனால்

மந்த்ரசக்தி நிறைந்த இந்தத் தீர்த்த மஹிமையால் காயம்கூட ஏற்படாமல் உயிருள்ள கர்ப்பம் வெளிப்படுவதுடன் மாதாவுக்கும் அபாயமில்லையென்று ப்ரார்த்திக்கப்படுகிறது. கர்ப்பம் வெளிப்பட்ட பிறகு ஜராயு என்கிற நஞ்சுக் கொடி வெளிப்படாமல் ச்ரமமேற்பட்டால் அது வெளிப்படவும் ஒரு மந்த்ரம் அடுத்தபடி படிக்கப்பட்டுள்ளது. (மந்த்ரம் 18, 19.)

இம்மாதிரி அந்ந ப்ராசனம், சௌளம், நாமகரணம் முதலிய ஸம்ஸ்கார மந்த்ரங்களிலும் சிறந்த தத்வங்களும் ஹிதங்களும் அடங்கியிருப்பதை அறிந்து கொள்ளவேண்டியது ஆவச்யகம்.

## உபநயனத்திலுள்ள விசேஷங்கள்.

இனி உபநயனத்தில் சில உதாஹரணங்களைக் கவனிப்போம். நம் தேசத்திய ப்ராசீன வித்யாப்யாஸ முறையே மிக அதிசயிக்கத்தக்கது. உலகில் எங்கும் காணக்கூடாதது. வேதமும், வேதாங்கமான மற்ற வித்யைகளும் முற்றிலும் தைவத்தன்மை வாய்ந்தவை. அவைகளை அப்யஸிக்கவேண்டிய மாணவகனும் ஆசார்யாதீனனுயிருந்து குருகுலத்தில் தைவிக வாழ்க்கையான ப்ரம்ஹசர்யத்தை அநுஷ்டிக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது. வித்யாப்யாஸ கால நியமங்கள், ஆசார்ய சுச்ரூஷை போன்றவைகளுடன் மாணவகன் பல வர்ஷங்கள் வரையில் குருகுலவாஸம் செய்கையில் அவனுக்கு இன்றியமையாத ஆரோக்யம், ஆயுஸ், புஷ்டி, மேதை, கண், காது, வாக்கு முதலிய இந்த்ரியங்களின் ஸாமர்த்யம் ஆகிய ஸகல க்ஷேமங்களும் தைவாநுக்ரஹத்துடன் ஏற்படவேண்டுமென்று மந்த்ரங்களில் ப்ரார்த்திக்கப்படுகிறது. குருகுலத்திலிருந்து திரும்பும்வரையில் மாணவகனுக்குப் பற்பல பாதுகாப்புகளும் சொல்லப்படுகின்றன. வபநம், வஸ்த்ரதாரணம் போன்ற லௌகிகமாக நினைக்கப்படும் பற்பல கார்யங்கள்கூட தைவிகாம்சம் பொருந்திய கர்மாக்களாக விதிக்கப்பட்டுள்ளது முக்யமான விஷயம்.

## வபநகர்மாவில் க்ஷேம ப்ரார்த்தனை.

ஆரம்பத்தில் மாணவகன் வபநம் செய்துகொள்ளும்போது அதற்காக மந்த்ரங்கள் ஏற்பட்டுள்ளன. அவைகளில் மாணவகனின் க்ஷேமங்கள் ப்ரார்த்திக்கப்படுகின்றன. (ப்ர. 2, கண். 1, மங். 1.). வபநத்திற்கு முந்தி சிரஸ்ஸில் தடவவேண்டிய ஜலம் எப்படியிருக்கவேண்டும்? குளிர்ந்த ஜலத்தில் உஷ்ணமான ஜலத்தைவிட்டுக் கலந்து அந்த ஜலத்தால் கேசங்களை நனைக்கும்படி விதிக்கப்படுகிறது.

'உஷ்ணாஃ ஶீதாஸ்வாநீய'

என்று ஸூத்ரம் விதிக்கிறது. (ஆப. க்ரு. க-10. ஸூ-6.). வபநத்திற்கு முன் தடவவேண்டிய ஜலம் சீதம், உஷ்ணம் இரண்டும் கலந்த ஜலமாயிருக்கவேண்டியதுடன், சீத ஜலத்தில் உஷ்ண ஜலத்தைச் சேர்க்கவேண்டுமென்ற முறையும் கூறப்படுவதில் ஆரோக்ய ரீதியான தத்வம் அடங்கியுள்ளதாக நினைக்க வேண்டும். ஜலத்தைக் கேசத்தில் தடவ ஏற்பட்ட மந்த்ரம் கூறுவதென்ன? (மந்த்ரம் 2.)

"இந்த மாணவகன் நீண்டகாலம் உயிர் வாழவும், கஷ்டங்களை ஸஹிக்கும் சக்தியான வர்ச்சஸ் என்ற காந்தி ஏற்படவும், கண் இந்த்ரியமானது வீணாகாமல் நீண்டகாலம் ஸூர்யனைத் தர்சிக்கும் சக்தி பெற்றதாயும் இருக்கும்படி தேவதைகள் செய்யவேண்டும்'' என்று ப்ரார்த்திக்கப்படுகிறது. மற்ற வபந மந்த்ரங்களிலும் தீர்க்காயுஸ் முதலிய க்ஷேமங்கள் ப்ரார்த்திக்கப்படுவதைக் காணலாம்.

## வஸ்த்ரதாரண மந்த்ரம்.

வஸ்த்ரம் தரிப்பது ஒரு ஸாதாரண லௌகிக கார்யமென்று உலகில் நினைக்கப்படுகிறது. ஆனால் வைதிக மதமானது வஸ்த்ரதாரணத்திலும் தைவிகத் தன்மையைக் காட்டியுள்ளது. வேதமே இந்தத் தத்வத்தை வெளியிடுகிறதால் இதன் பெருமை வெளியாகிறது. வஸ்த்ரமானது ஸர்வ தேவதைகளின் ஸம்பந்தம் பெற்றதென்று ச்ருதி விவரிக்கிறது. யஜூர்வேதம் 6-ஆவது காண்டத்தில்

'𑌅𑌗𑍍𑌨𑍇𑌸𑍍𑌤𑍂𑌷𑌾𑌧𑌾𑌨𑌂 𑌵𑌾𑌯𑍋𑌰𑍍𑌵𑌾𑌤𑌪𑌾𑌨𑌂'

என்ற ச்ருதி வாக்யமானது வஸ்த்ர நிர்மாணத்திற்கான நூல், தறி, மற்ற ஸாதனங்கள் யாவற்றுக்கும் அக்னிமுதலிய ஒவ்வொரு தேவதா ஸம்பந்தத்தைச் சொல்லிக் கடைசியில்

'𑌤𑌦𑍍𑌵𑌾 𑌏𑌤𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌤𑍍𑌯𑌂 𑌯𑌦𑍍𑌵𑌾𑌸𑌃'

என்பதால் வஸ்த்ரமானது ஸகல தேவதா ஸம்பந்தம் உள்ளதென்று கூறிற்று. இங்கு மந்த்ரப்ரச்நத்திலும் (ப்ர. 2, கண். 2, மந். 3.) அதற்கு உரிய தேவதைகள் பஞ்சுக்கொட்டையடித்துப் பாடம் செய்தல், நூலாக நூற்றல், வஸ்த்ரமாக நெய்தல், தறியிலிருந்து அறுத்து எடுத்தல், நுனி, கரைகள் போன்ற வேலைசெய்தல், முதலிய வேலைகளைச் செய்ததாயும், தேவர்கள் யாவரும் சேர்ந்து வஸ்த்ர மென்கிற வ்யாஜத்தால் மாணவகனைச் சுற்றிக் கொள்ளுவதாயும், ஆயுஷ்மானாக வஸ்த்ரத்தை தரித்துக்கொள்ளவேண்டும் என்று மந்த்ரம் கூறுகிறது. இந்த வஸ்த்ரதாரணம் காரணமாக நூறு வர்ஷம் ஜீவித்து நல்ல தேஜஸ்ஸுடன் விளங்கவேண்டு மென்றும் ப்ரார்த்திக்கப்படுகிறது. இம்மாதிரி இன்னும் பலவித ப்ரார்த்தனைகள் உண்டு.

## முஞ்ஜைப்புல் மேகலை தரிப்பது.

மாணவகனுக்கு முஞ்ஜைபுல்லால் செய்யப்பட்ட மேகலை இடுப்பில் கட்டப்படுகிறது. குருகுலவாஸம் முடியும் வரையில் அதைத் தரிக்கவேண்டும். குருகுலவாஸத்தில் மாணவனுக்கு ஆரோக்ய நிமித்தமாக இது ஒரு காப்பு என்று நினைக்கவேண்டும். முஞ்ஜைப்புல் என்கிற ஓஷதியானது நல்ல ஆரோக்யசக்தி வாய்ந்ததென்று வைத்யநூலால் அறியப்படுகிறது. அந்த ஓஷதியின் சக்தியும் ரஸமும் மாணவகனின் சரீரத்தில் நரம்பு வழியாக ஊறி அதனால் மாணவகனுக்கு க்ஷேமம் ஏற்படுவதாக மந்த்ரத்தின் கருத்தாகத் தெரிகிறது. (ப்ர-2. கண்-2. மந்-9.)

முஞ்ஜைப்புல்லால் செய்யப்பட்ட மேகலை (கயிறு) பிறருடைய துஷ்ட வார்த்தை, சாபம், நிந்தை இவைகளை வராமல் தடுத்து, சரீரத்தைப் பரிசுத்த மாக்கி, முக்யமாக ப்ராணன் அபானம் என்ற ஜீவனுக்கு மிகுந்த பலத்தைக் கொடுத்து, தேவர்களின் ப்ரீதி ஏற்பட வேண்டுமென்று கருத்து.

மாணவகனுடைய ப்ராண அபானங்களுக்கு முஞ்ஜைப்புல் ஔஷதியானது மிகுந்த பலத்தைக்கொடுப்பதாக மந்த்ரம் கூறுவது கவனிக்கத்தக்கது. முஞ்ஜையின் மஹிமை வர்ணிக்கப்படுகையில் முஞ்ஜையானது யக்ஷ, ரக்ஷஸ், பிசாசங்களைக் கொல்லுவதாயும், எதிரிகளின் தீங்குகளை ஸமாளிக்கும் சக்தியுள்ளதென்றும் சொல்லி மேகலை தரிப்பதால் அபாயமின்றி வாழ்வான் என்றும் கூறப்பட்டுள்ளது. வித்யாப்யாஸகாலத்தில் இது எவ்வளவு சிறந்த பாதுகாப்பு என்பதைக் கவனிக்கவேண்டும். இதன் பிறகு மாணவகனை ஆசார்யன் புண்ய தீர்த்தத்தால் ப்ரோக்ஷிப்பதும், மாணவகனின் கையைப் பிடித்து ஆசீர்வதிப்பதும், மாணவகனை அக்னி, ஸோமன், ம்ருத்யு, யமன், அந்தகன், வ்யாதிகளின் தேவதை ஆகியவர்களிடம் பாதுகாப்புக்காக ஆசார்யன் ஒப்புவிப்பதும், ஆசார்ய உபதேசம், ஆசார்யனின் கேள்வி, சிஷ்யனின் பதில் போன்ற கார்யங்களில் உபயோகிக்கும் மந்த்ரங்களின் அதிசய அர்த்தங்களையும் அறியவேண்டும்.

## உபநயந ஹோம மந்த்ரங்கள்.

உபநயன ஹோம மந்த்ரங்களிலும் மாணவக ஸம்ரக்ஷணார்த்தமாகப் பலவித ப்ரார்த்தனைகள் அடங்கியுள்ளன. (ப்ர-2. கண்-4. மந்-4.)

அக்னிதேவன் அதிகமாக ஆயுஸ்ஸைக் கொடுக்கட்டும். அக்னி மிக வன்மையான சரீரபுஷ்டியைக் கொடுக்கவேண்டும், இந்த்ரதேவன் காற்றுத்தேவனுடன் கூடி (மருத்) வெய்யில், காற்று, மழை, பனி, குளிர் போன்ற ஒவ்வொரு ருது காலத்தை யனுஸரித்து புஷ்டியைக் கொடுக்கவேண்டுமென்று மந்த்ரத்தில் ப்ரார்த்தனை காணப்படுகிறது. குருகுலவாஸத்தில் வித்யாப்யாஸத்திற்குத் தேவையான சரீர புஷ்டியும், "ருதுதா" என்பதால் ருதுக்களுக்கு ஏற்றபடி மாணவனுக்குச் சரீர நிலைமை மாறுதல் நேரக்கூடுமாதலால் அதனாலும் அவனுக்குக் கஷ்டம் நேரிடாமல் பாதுகாப்புக் கோரப்படுவது இதில் விசேஷமாகும்.

## மாணவகனுக்கு மேதை அதிகரிக்க ப்ராத்தனை.

வித்யாப்யாஸ காலத்தில் மேதை என்ற அறிவு அதிகம் தேவை. அது உயர்ந்ததாயும் இருக்கவேண்டியது ஆவச்யகம். இதை ஒரு ஹோம மந்த்ரத்தில் ப்ரார்த்திக்கப்படுகிறது. (ப்ர-2. கண்-4. மந்-5.)

அங்கிரஸ் தேவர்கள் மேதையைக் கொடுக்கவேண்டும். அதுபோல், ஸப்தருஷிகள், ப்ரஜாபதி என்ற ப்ரம்ஹா, அக்னிபகவான் ஆகியவர்களும் மேதையைக் கொடுக்கவேண்டும். மேற்கண்ட தேவதைகள் ஒவ்வொருவரும்

குறிப்பிட்ட ஒருவகையில் விசேஷ மேதை படைத்தவர்களாதலால் அவரவர்களுடைய மேதா சக்தி யாவற்றும் தனக்கு ஏற்படும்படி மாணவகன் ப்ரார்த்திக்கிறுன்.

அடுத்த மந்த்ரத்திலும் இது காணப்படுகிறது (6-வது மந்த்ரம்). அப்ஸரஸ்தேவதைகளிடம் உள்ள விசேஷ மேதா சக்தியும், கந்தவர்களிடமிருக்கும் கீர்த்தி பெற்ற மேதா சக்தியும், பொதுவாக தேவதைகளின் மேதா சக்தியும், மனிதர்களிடம் உள்ள பற்பலவகை மேதா சக்தியும் ஏற்பட வேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது. வித்யாப்யாஸகாலத்தில் ஆயுஸ், மேதை, சரீரபுஷ்டி இவை ஆவச்யகங்களல்லவா?

## பலாசதண்ட தாரண தத்வம்.

மாணவகன் ப்ரம்ஹசர்யம் முடியும் வரையில் பலாசஸமித்துத் தண்டத்தை எப்போதும் தரிக்கும்படி விதியுள்ளது. அந்தத் தண்டத்தைத் தரிக்க உபயோகிக்கும் மந்த்ரமும் அதிசயமானது. (ப்ர-2. கண்-5. மங்-1.). வேதவித்யாப்யாஸகாலத்தில் முக்யமாகக் காது இந்த்ரியம் நல்ல நிலைமையில் இருக்கவேண்டும். அதில் எவ்விதக் கோளாறும் இருக்கக்கூடாது. ஸமித்து தண்டம் தரிப்பது காது இந்த்ரிய சக்தியைப் பாதுகாத்து அதிகரிக்கச் செய்யுமென்று மந்த்ரம் கூறுகிறது.

ச்ரோத்ர இந்த்ரியத்தின் சக்தி குன்ருமலும், அது அதிகரிக்கும்படியும் செய்ய ப்ரார்த்திக்கப்படுகிறது.

'𑌦𑍇𑌵𑌾 𑌵𑍈 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌦𑌨𑍍𑌤, 𑌤𑌤𑍍𑌪𑌰𑍍𑌣 𑌉𑌪𑌾𑌶𑍃
𑌣𑍋𑌤𑍍 𑌸𑍁𑌶𑍍𑌰𑌵𑌾 𑌵𑍈 𑌨𑌾𑌮'

என்கிற ச்ருதியில், தேவர்கள் ப்ரம்ஹவிஷயமான சர்ச்சை செய்தனர். பலாச மரமானது அந்தச் சர்ச்சையைத் தன் காதினுல் ஒட்டுக்கேட்டது. ஏனெனில் அதற்கு "ஸுச்ரவஸ்" என்ற மஹிமையிருக்கிறது. மற்ருெரு ச்ருதியிலும் பலாசத்தை ஸ்துதி செய்கையில்

'𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌂 𑌵𑌦𑌤𑌾𑌂 𑌯𑌤𑍍 𑌉𑌪𑌾𑌶𑍃𑌣𑍋𑌃
𑌸𑍁𑌶𑍍𑌰𑌵𑌾 𑌵𑍈 𑌶𑍍𑌰𑍁𑌤𑍋𑌽𑌸𑌿'

என்பதால் பலாசத்திற்கு "ஸுச்ரவஸ்" (நல்ல காது) என்ற சக்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. காது ரோகத்திற்குப் பலாசத்தின்பால், கஷாயம் இவை குணமென்று அநுபவ வைத்யமுறையில் உள்ளது. ஆகையால், மாணவகனுக்குப் பலாசதண்ட தாரணத்தால் ச்ரோத்ரேந்த்ரிய சக்தி வலுக்கிறதாக நினைக்கவேண்டும்.

## வாக்குச் சக்தி அதிகரிக்கும்.

மேலும் பொதுவாகத் தண்டத்தைத் தரிப்பதால் மாணவகனின் வாக்குப் பலமும் அதிகரிப்பதாகத் தெரிகிறது.

'𑌵𑌾𑌗𑍍𑌵𑍈 𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯𑍋𑌽𑌪𑌾𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑍍 𑌯𑌜𑍍𑌞𑌾𑌯𑌾𑌤𑌿𑌷𑍍𑌠𑌮𑌾𑌨𑌾 𑌸𑌾 𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑍀𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 𑌸𑍈𑌷𑌾 𑌵𑌾𑌗𑍍 𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑌿𑌷𑍁 𑌵𑌦𑌤𑌿 𑌯𑌾 𑌦𑍁𑌨𑍍𑌦𑍁𑌭𑍌 𑌯𑌾 𑌤𑍂𑌣𑌵𑍇 𑌯𑌾 𑌵𑍀𑌣𑌾𑌯𑌾𑌂 𑌯𑌦𑍍𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌦𑌣𑍍𑌡𑌂 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 𑌵𑌾𑌚𑌮𑍇𑌵𑌾𑌵𑌰𑍁𑌨𑍍𑌧𑍇'

வாக்கு என்ற தேவதையானது தேவர்களிடமிருந்து மறைந்து வ்ருக்ஷங்களில் புகுந்தது. துந்துபி, வீணை, தூணவம் முதலிய மர வாத்யங்களில் கேட்கப் படும் வாக்கு அதுதான். ஆகையால் வ்ருக்ஷ தண்டத்தைத் தரிப்பதால் வாக்கின் சக்தியைப் பெறுகிறுன் என்று ச்ருதியில் காணப்படுவதும் இங்குக் கவனிக்கத்தக்க விஷயமாகும்.

## ஸமிதாதானம் அபம்ருத்யு பரிஹாரம்.

மாணவகன் ப்ரம்ஹசர்யம் முடியும் வரையில் ப்ரதிதினமும் "ஸமிதா தானம்" என்கிற அக்நி சுச்ரூஷை செய்யும்படி விதிக்கப்படுகிறது. அதில் சொல்லப்படும் மந்த்ரங்களும் மிக உயர்ந்த க்ஷேமங்களைக் கோருகின்றன. (ப்ர 2, கண் 6, மந் 2.)

ஸமிதாதானத்தினுல் அக்னி எப்படி ஜ்வலிக்கிறதோ, அதுபோல் மாண வகனை ஆயுஸ், வர்ச்சஸ், த்ரவ்ய லாபம், மேதை, ப்ரஜை, பசுக்கள், ப்ரம்ஹ தேஜஸ், அந்நஸம்ருத்தி இவைகளால் ஜ்வலிக்கிறவனுகச் செய்யவேண்டும் என்றும் இதுபோன்ற பலவித க்ஷேம ப்ரார்த்தனைகளும் அடங்கியுள்ளன.

ஸமிதாதானமானது மாணவகனின் அபம்ருத்யு பரிஹார கர்மா என்றும் போதாயனர் ச்ருதி ப்ரமாணத்தைக் காட்டி வற்புறுத்தியுள்ளார்.

ப்ரம்ஹசாரீ எந்தத் தினத்தில் ஸமிதாதானம் செய்யாமல் விட்டுவிடு கிருனே அது அவனுடைய ஆயுஸ்ஸைக் குறைத்துக்கொண்டதாகும். ஆதலால் ப்ரம்ஹசாரீ ஸமிதாதானம் செய்யவேண்டும். ஸமிதாதானம் செய்யாத இரவில் ம்ருத்யு மாணவகனைப் பிடிக்கலாம் என்று ப்ரம்ஹாவின் வரம். ஜனங் களை ம்ருத்யு வசமாக்கிய ப்ரம்ஹாவானவர், ப்ரம்ஹசாரிகளைமட்டும் ம்ருத்யு விடம் கொடுக்க மறுத்தார். அவர்களையும் தன்னிடம் ஒப்புவிக்கும்படி ம்ருத்யு ப்ரம்ஹாவைக்கேட்டான். ஸமிதாதானம் செய்யாத ராத்ரியில் ப்ரம்ஹ சாரிகளை நீ பிடிக்கலாமென்று ப்ரம்ஹா வரம். ஆகையால் ப்ரம்ஹசாரீ நித்ய மாக ஸமிதாதானம் செய்துவரவேண்டும், என்று ச்ருதி விதிக்கிறது.

'𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑍈 𑌮𑍃𑌤𑍍𑌯𑌵𑍇 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌚𑍍𑌛𑌤𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑌮𑍇𑌵 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌯𑌚𑍍𑌛𑌤𑍍 । 𑌸𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 । 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌮𑌹𑍍𑌯𑌮𑍇𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌭𑌾𑌗𑌃 𑌇𑌤𑌿 । 𑌯𑌾𑌮𑍇𑌵 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌂 𑌸𑌮𑌿𑌧𑌂 𑌨𑌾𑌹𑌰𑌾𑌤𑌾 𑌇𑌤𑌿 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍀 𑌯𑌾𑌂 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌂 𑌸𑌮𑌿𑌧𑌂 𑌨𑌾𑌹𑌰𑌤𑍍𑌯𑌾𑌯𑍁𑌷 𑌏𑌵 𑌤𑌾𑌮𑌵𑌦𑌾𑌯 𑌵𑌸𑌤𑌿 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍀 𑌸𑌮𑌿𑌧𑌮𑌾𑌹𑌰𑍇𑌦𑌿𑌤𑌿 ॥

புரா ஜக்³ராஹ வை ம்ருத்யு: ஹிம்ஸயந் ப்³ரஹ்மசாரிணம் ।
அக்³நிஸ்தம் மோக்ஷயாமாஸ தஸ்மாத்³வஹ்நிமர்சயேத் ஸதா³ ॥
ப்³ரஹ்மசாரீ யதா² க்ருஷ்ண ஶுஶ்ரூஷ்யாக்³ ஸதீ³யம் நஹி ।
க்³ருஹீயாத்தம் ததா² ம்ருத்யு: ஶுஶ்ரூஷ்யாக்³ ஸதீ³யஸ்து த: ॥

என்று ஹாரீதருஷியும் கூறியுள்ளார். ஒரு காலத்தில் ப்ரம்ஹசாரிகளைப் பிடித்து ம்ருத்யு ஹிம்ஸித்தான். அக்நி ம்ருத்யுவைத் துரத்தி ப்ரம்ஹசாரியை ரக்ஷித்தான். ஆகையால் அக்நியை ப்ரதிதினம் பூஜிக்கவேண்டும்.

இன்னுமிதுபோல் உபநயன மந்த்ரங்கள் பலவற்றில் அடங்கியுள்ள விசேஷங்களைப் படித்து அறியவும்.

## விவாஹ மந்த்ர விசேஷங்கள்.

வைதிக மதத்தில் விவாஹமானது மிக உயர்ந்த கர்மாவாகும். நமது விவாஹ முறையில் அடங்கியுள்ள சிறந்த தத்வங்களும், விசால நோக்கங்களும், குடும்பத்திற்கும், லோகத்திற்கும் மிக ஹிதகரமானவை. விவாஹ மந்த்ரங்களில் இந்த விசேஷங்கள் புதையல்போல் அடங்கியுள்ளன.

தம்பதி வாழ்க்கையானது தர்ம கார்யங்களான யஜ்ஞாதிகளை அநுஷ்டிக்கவும், சுத்தமான ப்ரஜா ஸந்ததியை (தொடர்ச்சியை) உத்தேசித்தும் செய்யப்படவேண்டுமென்பது நமது மத விதியாகும். யாகங்கள், அக்நி ஹோத்ர, ஔபாஸநாதிகள், வைச்வதேவ பஞ்ச யஜ்ஞாதிகள்போன்ற தர்மங்களைத் தம்பதிகள் சேர்ந்து செய்து தேவர்களை ப்ரீதி செய்து ஆத்ம ஹிதம் பெறுவதுடன், அதன்மூலம் மழை, ஸஸ்ய வ்ருத்தி, அந்ந ஸம்ருத்தி உலகில் ஏற்பட்டு, சராசர ப்ராணிகள் க்ஷேமம் யாவற்றுக்கும் இந்த விவாஹ ஸம்பந்தம் மூல காரணமாயிருக்கிறது. இதற்கு ஆவச்யகமான வதூ-வரர்களுடைய க்ஷேமங்களும், பசு, புத்ர, தன தான்யாதி ஸம்பத்துக்களும், ஆயுராரோக்யாதிகளும் விவாஹ மந்த்ரங்களில் ப்ரார்த்திக்கப்படுகின்றன. தம்பதிகளுக்கு இன்றியமையாத மன ஒற்றுமை, ஆழ்ந்த ப்ரீதி, ஸ்நேஹம் முதலியவைகளும் வேண்டப்படுகின்றன. நமது ஸமூஹ தம்பதி வாழ்க்கையானது முற்றிலும் தைவிக வாழ்க்கையாக அமைந்திருப்பது உலகில் எந்த மதத்திலும் காணப்படாத உயர்வு என்பதை நவீந நாகரிகர்கள்கூடப் புகழாமலிருக்கமுடியவில்லை.

## கந்யகைக்கு அசுபலக்ஷண பரிஹாரம்.

முதலில் கந்யகையை வரிக்க ப்ராம்ஹண தூதர்களை அனுப்பும் (வரப்ரேஷணம்) மந்த்ரத்தில் (முதல் ப்ரச்னம், முதல் கண்டம், முதல் மந்த்ரம்) "இந்த இருவருடைய விவாஹ ஸம்பந்தத்தை இந்த்ரனும் ஆமோதிக்கிறான். ஏனெனில் இந்தத் தம்பதிகள் சேர்ந்து செய்யப்போகும் யாகங்களில் ஸோமரஸம் என்ற ஆஹாரம் தனக்குக் கிடைக்கப்போவதை இந்த்ரன் அறிந்துள்ளான்" என்று சொல்லுகிறது. இதனால் விவாஹ நோக்கமானது தர்ம கார்யார்த்தமென்பது விளக்கப்பட்டது. முதல்முதலாகக் கந்யகையை வரன்

பார்க்கும்போது ஜபிக்கவேண்டிய மந்த்ரம் சொல்லுவதாவது, (முதல் ப்ரச்னம், முதல் கண்டம், 4-ஆவது மந்த்ரம்.) "முதல் முதலாகக் கந்யகை பார்க்கும் போது க்ரூரமான பார்வையில்லாமல் சாந்தமான பார்வையுள்ளவளாயும், அதன் நிமித்தமாக வரனை பதியான தனக்குக் கெடுதி செய்யாதவளாயும் விளங்கவேண்டுமென்றும், நல்ல மனஸ், நல்லெண்ணமுள்ளவளாயும், நல்ல அழகுள்ளவளாயும் இருக்கவேண்டுமென்றும், மேலும் ஜீவனுள்ள குழந்தைகளைப் பெற்றெடுக்கவும், யாக,யஜ்ஞாதி தேவபூஜைகள் செய்வதன்மூலம் தேவர்களிடம் ப்ரீதியுள்ளவளாயுமிருந்து க்ருஹத்திலுள்ள இரண்டுகால் ப்ராணிகளுக்கும் (மனிதர்) நான்கு கால் ப்ராணிகளாகிய பசு முதலியவைகளுக்கும் ஹிதம் செய்கிறவளாக விளங்கவேண்டும்'' என்றும் ப்ரார்த்திக்கப்படுகிறது.

இதில் மனிதன் க்ருஹஸ்த வாழ்க்கையில் விரும்பக்கூடிய ஸகல ஹிதங்களும் அடங்கியிருப்பதைப் பார்க்கவும்.

இங்கு "அகோர சக்ஷு:'' என்பதில் கோரம் என்பது அமங்களமென்றும் அர்த்தமுள்ளது. வதூவின் கண் பார்வை அமங்களமாயில்லாமல் மங்களத்துடன் இருக்கவேண்டும் என்று ப்ரார்த்திப்பதின் தத்வம் கவனிக்கத் தக்கது.

சில ஸ்த்ரீகளுக்கு அமங்களமான அவலக்ஷணமான சின்னங்கள் இருக்கக் கூடும். அத்தகைய கந்யகைகளை விவாஹம் செய்தால் குடும்பத்திற்குக் கேடு ஏற்படும். ஆகையால்தான் ஸூத்ரகாரர்கள் கந்யகையின் சுப லக்ஷணம், துர்லக்ஷணம் இவைகளைப் பரீக்ஷித்துப் பார்க்கும் "ருத்தி பரீக்ஷை'' என்ற முறையை விதித்துள்ளார்கள். கந்யகைக்கு அசுபலக்ஷணமிருந்தால் அதை நிவ்ருத்தி செய்து சுபலக்ஷணமாகச் செய்ய ஒருமந்த்ரம் முன் வந்தது (முதல் ப்ரச்னம், முதல் கண்டம், 5-ஆவது மந்த்ரம்). கந்யகையின் இரண்டு புருவமத்தியில் தர்ப்பத்தால் மந்த்ரத்தைக்கொண்டு துடைத்துத் தர்ப்பத்தை எறியவேண்டும்.

இதற்கு முன்மந்த்ரத்தில் (3-ஆவது மந்த்ரம்) மேலும் விரிவாக இந்த விஷயம் சொல்லப்படுகிறது.

கந்யகை வீட்டில் நுழைந்ததும், அசுபலக்ஷணம் காரணமாக ப்ராதாவோ, பதியோ, புத்ரனோ மரிக்காமல் இருக்கும்படி அவளுக்குச் சுபலக்ஷணம் ஏற்பட வேண்டுமென்று தேவதைகளிடம் ப்ரார்த்திக்கப் படுகிறது. ப்ராதாவுக்குக் (பதியின்) கெடுதி, நாசம் ஏற்படாமல் செய்யக்கூடிய சுபலக்ஷணத்தை வருண தேவன் கொடுக்கவேண்டும், அதுபோலப் பதிக்குக் கேடுநேராத சுபசின்ஹத்தை ப்ருஹஸ்பதி கொடுக்கவேண்டும், புத்ரனுக்குக் கெடுதி நேராத சுபலக்ஷணத்தை இந்த்ரன் கொடுக்கவேண்டுமென்று பரமதயையால் அந்த மந்தரம் கூறுகிறது.

## நுகத்தடி அபிஷேக தத்வம்.

கந்யகையின் சிரஸ்ஸில் நுகத்தடியை வைத்து அதன் த்வாரத்தின் வழியாகப் புண்ய தீர்த்தங்களைக்கொண்டு கந்யகைக்கு சுப அபிஷேகம் செய்யும்படி மந்த்ரம் கூறுகிறது. இது அவளுக்கு ஸர்வவிதமான ரோகங்களையும்

முக்யமாகத் தோல் ஸம்பந்தமுள்ள ரோகங்களையும் போக்கி, ஸூர்யனைப் போன்ற தேஜஸ் உள்ளவளாகச் செய்கிறது. (முதல் ப்ரச்னம், 1-ஆவது கண்டம், 9-ஆவது மந்த்ரம்)

அபாலா என்ற கந்யகை சொரி சிரங்கு குஷ்டம் பிடித்தவள். இந்த்ரனுக்கு ஸோமரஸத்தைக் கொடுத்தாள். அதனால் த்ருப்தியடைந்து இந்த்ரன் அவளை வண்டி நுகத்தடி த்வாரத்தில் வைத்து மூன்று தடவை அபிஷேகம் செய்து, ரோகத்தை நீக்கி, நல்ல ஸூர்யதேஜஸ்ஸைக் கொடுத்தான். அது போல் கந்யகைக்கும் நுகத்தடி அபிஷேகம் ரோகங்களை நீக்க வேண்டுமென்று இந்த்ரனைப் ப்ரார்த்திக்கிறது. அபாலா கதை ருக்வேதத்தில் காணப்படுகிறது.

இந்த நுகத்தடி அபிஷேக மந்த்ரங்கள் அதிசயமான பல தத்வங்கள் கொண்டவை.

## பாணிக்ரஹணத்தில் உறுதிமொழி

பாணிக்ரஹணம், ஸப்தபதீ கர்மாக்களிலும் மந்த்ரங்கள் பல விசேஷங்களை வெளியிடுகின்றன.

க்ருஹஸ்த தர்மம் அநுஷ்டித்து, க்ருஹ கார்யங்களைச் செய்ய உதவியாயும் லோக ஹிதம் செய்யவும் முன்வந்துள்ள வரனுக்குத் தேவதைகளே பெண்ணைக்கொடுத்து அருளுகிறார்கள். நல்ல ப்ரஜை ஜநிக்க, கைபிடித்து ஏற்கிறதாக மந்த்ரம் சொல்லுகிறது. தம்பதிகளின் சேர்க்கையானது தைவத்தன்மை வாய்ந்தது. பகன், அர்யமா, ஸவிதா முதலிய தேவர்கள் கந்யகையைக் கொடுத்தார்கள் என்று மந்த்ரம் கூறுகிறது. (முதல் ப்ரச்னம், 3ஆவது கண்டம், 3-6 மந்த்ரங்கள்). மனுவும், பார்யையை, "தேவர்களால் கொடுக்கப்பட்டவள்" என்று கூறுகிறார்.

தேவதத்தாம் பதிர்பார்யாம் விந்ததே நேச்சயாத்மந: ।
தாம் ஸாத்வீம் பிப்ருயாந்நித்யம் தேவாநாம் ப்ரியமாசரந் ॥

வ்யாக்யானத்தில் இந்த மந்த்ரமே குல்லூக பட்டரால் உதாஹரிக்கப்படுகிறது. ஆகையால் மனுவே இந்தப் பாணிக்ரஹண மந்த்ரத்திற்கு இந்த ச்லோகத்தினால் விளக்கம் கூறுகிறதாக ஏற்படுகிறது. பாணிக்ரஹண காலத்தில் வரன் செய்துகொடுக்கும் ஒரு உறுதிமொழி மந்த்ரமாகவே இதை மனு நினைக்கிறார். "தேவர்களால் அருளப்பட்ட இந்தப் பார்யையைப் பர்த்தாவானவன் அன்புடன் போஷிக்கவேண்டும். இந்தப் பார்யையைக் கொடுத்த தேவர்களுக்கு அதுவே ப்ரீதி செய்வதாகும்" என்று மனு கூறுவதால் வரன் இந்த மந்த்ரத்தால் அந்த ப்ரதிஜ்ஞையையும் செய்துகொடுக்கிறான். "கைபிடித்த இந்தப்பெண்ணை ஒருநாளும் கைவிடாமல் போஷித்து வருவேன்" என்றும் உறுதி கூறுகிறான்.

ஸப்தபதீ மந்த்ரங்களில் தம்பதிகளுடைய இணையற்ற ஸ்நேஹம், மன—ஒற்றுமை, நல்லெண்ணம், குடும்ப நிர்வாஹ ஸங்கேதம் முதலிய சிறந்த தத்வங்கள் அடங்கியுள்ளன. (முதல் ப்ரச்னம், 3ஆவது கண்டம், 7-8 மந்த்ரங்கள்).

விவாஹ ஹோமமந்த்ரங்கள், லாஜஹோம மந்த்ரங்கள் இவைகளில் தம் பதிகளின் க்ஷேமங்கள் பெரும்பாலும் ப்ரார்த்திக்கப்படுகின்றன.

## ஸ்த்ரீயே க்ருஹ நிர்வாக அதிகாரி.

வைதிக மதம் ஸ்த்ரீகளை அடிமையாக்கி ஸ்வதந்த்ரமின்றி வைத்திருப்பதாக நவீநகாலத்திய மூடப்பேச்சுக்கு, ப்ரவிச்ய ஹோம ஸமயத்தில் கூறப்படும் ஒரு மந்த்ரம் தகுந்த பதில் கொடுப்பதாகிறது. (முதல் ப்ரச்னம், 6ஆவது கண்டம், 6-7 மந்த்ரங்கள்).

குடும்பத்தில் மாமனர், மாமியார், நாத்தனர், மைத்துனர்கள் ஆகிய எல்லோருக்கும் வது ராணியாக, யஜமானியாக, விளங்கவேண்டும் என்று மந்த்ரம் கூறுகிறது. குடும்ப ஸ்வராஜ்யத்தில் பார்யையே தலைவியாக அதாவது நிர்வாக அதிகாரியாக வைக்கப்பட்டிருக்கிருள். மனுவும்,

𑌅𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇 𑌚𑍈𑌨𑌾𑌂 𑌵𑍍𑌯𑌯𑍇 𑌚𑍈𑌵 𑌨𑌿𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌶𑍌𑌚𑍇 𑌧𑌰𑍍𑌮𑍇𑌽𑌨𑍍𑌨𑌪𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌪𑌾𑌰𑌿𑌣𑌾𑌹𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑍇𑌕𑍍𑌷𑌣𑍇 ॥

குடும்ப தன வரவு செலவு, ஸுகாதாரம், தர்ம கார்யங்கள், சமையல், க்ருஹத்தின் பாத்ரம் பண்டம், தான்யாதிகள் ஆகியவைகளுக்குப் பார்யையே யஜமானியாக இருக்கவேண்டும். '𑌪𑌤𑍍𑌨𑍀 𑌹𑌿 𑌪𑌾𑌰𑌿𑌣𑌾𑌹𑍍𑌯𑌸𑍍𑌯𑍇𑌶𑍇' என்ற ச்ருதியும் இதை உறுதிசெய்துள்ளது. ஸ்த்ரீகளுக்குப் புருஷனுக்கு ஸமமாகவும் அல்லது அதிகமாயும் மஹிமை கொடுத்துள்ளது உலகில் வைதிக மதம் ஒன்றுதான்.

## பார்யையின் கடமைகள்.

ப்ரவிச்ய ஹோம ஸமயத்தில் வதூவுக்குத் தனது க்ருஹத்தை வரன் காட்டுவதும், க்ருஹத்தில் பசு, பால் தயிர், ப்ரஜை, தனம் ஆகியவை வ்ருத்தியடையும்படி ப்ரார்த்திப்பதும், அங்கே பல மந்த்ரங்களில் அற்புதமாக காணக்கூடியவை. (முதல் ப்ரச்னம், 9ஆவது கண்டம், 4ஆவது மந்த்ரம்).

குடும்ப வாழ்க்கையில் பார்யையின் கடமைகளைச் சுருக்கமாகப் பர்த்தா அவளுக்கு நியமிக்கிருன்.

இவ்வாறு விவாஹ மந்த்ரங்களில் பல விடங்களில் உயர்ந்த தத்வங்கள் நிறைந்து விளங்குகின்றன. சிறந்த மேதா விலாஸம் பெற்ற, விசால நோக்கமுள்ள ஆஸ்திகர்கள் மந்த்ரங்களை நன்கு ஆராய்ந்தால் மிக உன்னதமான தத்வ ஹிதங்களைக் காணமுடியும்.

## க்ஷயரோக சாந்தி.

இந்த மந்த்ர ப்ரச்நத்தில் உபநயந விவாஹாதி ஸம்ஸ்காரங்களைப்போல் க்ருஹ நிர்மாணம், ப்ரவேசம், ஸர்ப்ப பலி, ஈசாநபலி, மாஸி ச்ராத்தம் போன்றவையும், சிற்சில காம்ய கர்ம சாந்தி மந்த்ரங்களும் படிக்கப்பட்டுள்ளன. அவைகளிலும் விசேஷ அர்த்தங்களைக் காணலாம்.

முக்யமாக வ்யாதிகள், குறிப்பாக ராஜ யக்ஷ்மா என்ற க்ஷயரோகம், இவைகளுக்கும் சாந்தி மந்த்ரங்கள் காணப்படுகின்றன. முதலாவது ப்ரச்னம், 18-ஆவது கண்டம், மந்த்ரங்களில் பார்யையின் க்ஷயரோக நிவ்ருத்தி ப்ரார்த்திக்கப்படுகிறது.

எலும்புகள், நரம்புகள், உள்மாம்ஸ அவயங்கள், கண், காது, மூக்கு முதலிய ஸகல இடங்களிலும் பரவியுள்ள யக்ஷ்ம ரோகத்தைப் போக்க, தாமரை இலை கிழங்குகளால் புண்ய தீர்த்தத்தைக் கொண்டு ப்ரோக்ஷிக்கும்படி மந்த்ரம் விதிக்கிறது. இதில் உள்ள அர்த்தத்தையும் யாவரும் அறிவது அவச்யம்.

## மந்த்ர ஸித்தியும் யோக ஸித்தியும்.

நமது மந்த்ரங்களின் மஹிமை தற்கால விஜ்ஞானிகளுக்கும் எட்டாத அபூர்வ கௌரவம் வாய்ந்தவை. மந்த்ர த்ரஷ்டாக்களான நமது மஹர்ஷிகளுக்குத்தான் அது தெரியும். அவர்கள் பரம கருணையால் நமக்கு அந்த மந்த்ர நிதிகளை அருளியிருக்கிறார்கள். மந்த்ரத்தை யதாவத்தாக உச்சரிப்பது ஓர் யோகம், என்று சொல்லக்கூடியது. மந்த்ரங்களின் ஸ்வர-அக்ஷர அமைப்பு, அவைகள் உத்பத்தியாகும் ஸ்தானங்கள், உச்சாரண காலத்தில் உள் நரம்புகளிலும் வெளி இந்த்ரியங்களிலும் ஏற்படும் நிலைமை, இவைகளைக் கவனித்தால் இதை ஒரு யோகமென நினைக்கவேண்டும்.

இந்த மந்த்ரோச்சாரண யோகத்தில் ஒருவன் ஸித்தியடைந்துவிட்டால் அவனுக்கு நினைத்ததெல்லாம் கைகூடுமென்றும், தைவிக சக்தி யேற்படுமென்றும் ஆபஸ்தம்ப போதாயனாதி மஹர்ஷிகள் கூறுகிறார்கள். ஆபஸ்தம்பர்,

ஏஷோ யஜ்ஞு மநஸா வாசா சக்ஷுஷா வா ஸங்கல்ப யந்து ப்ராயஶ்சித்தாநி வா ஸம்பாதி தத்தைவ தத் ஸம்பத்யேதேதி ஶ்ருதி ॥

"வேதம் கற்றவர்கள் மனதாலும், வாக்காலும், கண்களாலும் எதைச் செய்ய விரும்பினாலும் அது அப்படியே பலிக்கிறது", என்றார். மற்றொருவிடத்திலும் ஆபஸ்தம்பர் ஊர்த்வரேதஸ்களான தபஸ்விகளைப்போல் வேதாத்யயனாதி தர்ம நிஷ்டனான க்ருஹஸ்தனும் நினைத்ததைச் செய்யும் சக்தியைப்பெறுவதாகச் சொன்னார்.

ஊர்த்வரேதஸஸ் தபஸி ஸித்தா பவந்தி । யதா வர்ஷம் ப்ரஜாநாம் ச க்ஷேமம் ச ஸம்பந்நம் உத்பாதயதா ॥

ஆச்ரம ஸம்ஸ்காரங்களை மந்த்ரபூர்வகமாகப் பெற்று ஸித்தியடைந்த க்ருஹஸ்தனும் ஸங்கல்ப ஸித்தியுள்ளவனாகி மழை பெய்வித்தல், ஸந்ததி உண்டாக அநுக்ரஹித்தல், கண்ணுக்கெட்டாததையும் பார்த்தல் போன்ற சக்திகள் பெறுவதாக ப்ரதிஜ்ஞை செய்துள்ளார். மனுவும் வேதோச்சாரணமானது தபஸ் என்று பறைசாற்றுகிறார்.

𑌆 𑌹 𑌏𑌵 𑌸 𑌨𑌖𑌾𑌗𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌤𑌪𑍍𑌯𑌤𑍇 𑌤𑌪𑌃 ।
𑌯𑌃 𑌸𑍍𑌰𑌗𑍍𑌵𑍍𑌯𑌪𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌽𑌧𑍀𑌤𑍇 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑍋𑌽𑌨𑍍𑌵𑌹𑌮𑍍 ॥

வேதத்தை உச்சரிப்பதானது நியமக் குறைவுள்ளதாயிருப்பினும்கூட அது பரம உத்க்ருஷ்டமான ஓர் தபஸ். அந்தத் தபஸ் சக்தியானது நகசிகா பர்யந்த ஸர்வ அவயங்களில் பரவி நிற்கிறது, என்று மநு சொல்லுவதால் வேதோச்சாரணம் ஒரு யோகமென்பது உறுதிப்படுகிறது.

இவ்வளவு உயர்வுள்ள வேத மந்த்ரங்களைக்கொண்டு செய்யப்படும் நமது உபநயந விவாஹாதி ஸம்ஸ்கார கர்மாக்களின் மஹிமைகளைப்பற்றி ஸந்தேஹிக்க வேண்டுமா? அவைகளின் பெருமை அளவற்றது.

## ஜாக்ரதை வேண்டும்.

ஸாதாரண லௌகிக ச்லோகங்களைப்போல் வேத மந்த்ரங்களை நினைத்து விடக்கூடாது. வேதார்த்தங்கள் எளிதில் தெரியக்கூடியவையல்ல. மிகவும் கூடமான உள்தாத்பர்யங்கள் கொண்டவை. மேலெழுந்தவாரியாகப் படித்து விட்டு, ரஸமில்லையென்றோ, ஸந்தர்ப்பத்திற்கு ஒட்டவில்லையென்றோ, எதையோ அநாவச்யகமாகப் பேசுகிறதென்றோ வேதார்த்தத்தை அலக்ஷ்யம் செய்யக்கூடாது. அப்படிச் செய்பவன் பாக்யமிழந்தவன். ஆகையால் இந்த மந்த்ர ப்ரச்னத்தைப் படிப்பவர்கள் ஜாக்ரதையுடன் படித்து, தத்வமறிய முயற்சிக்கவேண்டும்.

ஹரதத்தபாஷ்யத்தை யனுஸரித்து இதற்குப் பதம் பதமாக அர்த்தமெழுதாவிட்டாலும் கூடிய வரையில் மந்த்ர பதங்களை அனுஸரித்து, தாத்பர்யார்த்தமே இங்கு எழுதப்பட்டிருக்கிறது. இதைப் படித்து எல்லோரும் ச்ரேயஸ்ஸைப் பெறுவார்களாக.

இப்படிக்கு,

**அக்நிஹோத்ரம் கோபால தேசிகாசார்யார்.**

# யாஜுஷ மந்த்ரப்ரச்னத்தின்

## விஷய ஸூசிகை.

ஶ்ரீ: வாஸுதேவாய நம: ॥

# யாஜுஷமந்த்ரப்ரச்னம், ஏகாக்நிகாண்டம்.

(விவாஹாதி மந்த்ரங்களுக்கு ஹரதத்த பாஷ்யாநுஸாரியான தமிழ் அர்த்தத்துடன் கூடியது.)

---

## முதல் ப்ரச்னம் — முதல் கண்டம்.

---

விவாஹ கர்மாவில் வரப்ரேஷண காலத்தில் ஜபிக்கவேண்டிய மந்த்ரம். (ஆ. க்ரு. ஸூ. படலம் 2. கண்டம்- 4. ஸூத்ரம் 2-ல் விஹிதமான மந்த்ரம்.) இந்த மந்த்ரம், அடுத்த மந்த்ரம் இரண்டிணுலும் வரர்களை அனுப்பவேண்டும்.

ஹரி: ஓம் ॥

ப்ரஸுக்மந்தா தியஸாநஸ்ய ஸக்ஷணி வரேபிர்வராம் அபி ஷு ப்ரஸீதத । அஸ்மாகமிந்த்ர உபயம் ஜுஜோஷதி யத்ஸௌம்யஸ்யாந்தஸோ புபோததி ॥ 1 ॥

[மந்த்ரப்ரஶ்நத்தில் படிக்கப்பட்டுள்ள மந்த்ரங்களை வரிசை க்ரமமாகக் குறிப்பிட்டு ஆபஸ்தம்பர் க்ருஹ்யஸூத்ரத்தில் மந்த்ரங்களின் உபயோகத்தைக் காட்டியுள்ளார். அந்த ஸூத்ரவரிசைப் படியே அந்தந்த ஸூத்ரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மந்த்ரங்களுக்கு இங்கு அர்த்தம் எழுதப்படுகிறது.]

இந்த வரப்ரேஷண கார்யத்தில் உபகரிக்க முன்வந்த ஹே! ஸுஹ்ருத்துக்களே! நீங்கள் இந்தக் கார்யத்திற்காக வேகமாகச் செல்லக்கூடிய நல்லநடையுள்ளவர்கள். ஆகையால் நீங்கள் மனதால் நினைத்த க்ஷணத்திலேயே நல்ல மார்க்கங்களின் வழியாக கந்யா பிதாக்கள் முதலியவர்களை ஜாக்ரதையாகப்போய் அடையுங்கள். அந்தக்கந்யகை, நான் ஆகிய இருவருடைய விவாஹச்சேர்க்கையில்

இந்த்ரதேவனும் ச்ரத்தையுடன் கலந்து அநுக்ரஹிக்கிறான். அவனுக்கும் இந்த விவாஹச்சேர்க்கை இஷ்டமானது. ஏனெனில் விவாஹத்திற்குப் பிறகு நாங்கள் இருவரும் சேர்ந்து செய்யப் போகிற ஸோமயாகத்தில் இந்த்ரனுக்கு ஸோமரஸமாகிற அந்நம் (ஆஹாரம்) கிடைக்கப் போகிற தென்கிற நிச்சயமான நம்பிக்கையை இந்த்ரன் அறிந்து கொண்டிருக்கிறான். 'இந்தத் தம்பதிகள் என்னை (இந்த்ரனை) நிச்சயமாக யாகம்செய்து பூஜிப்பார்கள்' என்று அறிந்துள்ளான்.

[ "வரன்" என்றால் வரிக்கிறவன் என்று இங்கு அர்த்தம். கந்யகையால் வரிக்கப்படுகிற ஜாமாதாவும் "வரன்" என்று வ்யவஹரிக்கப்படுகிறான்.]

(படலம்-2. கண்டம்-4. இரண்டாவது ஸூத்ரத்தால் விஹிதமான மந்த்ரம்)

[ ப்ராம்ஹணர்கள் செல்லும் மார்க்கத்தில் அவர்களுக்கு எல்லா ஸௌகர்யங்களும் உண்டாகவேண்டுமென்று தேவதைகளைப்பற்றி ப்ரார்த்தனை.]

അനൃക്ഷരാ ഋജവഃ സന്തു പന്ഥാ യേഭിഃ സഖായോ യന്തി നോ വരേയം । സമര്യമാ സംഭഗോ നോ നിനീയാത് സംജാസ്പത്യഗ്ം സുയമമസ്തു ദേവാഃ ॥ ௨ ॥

ஹே! தேவர்களே! இந்த வரப்ரேஷண கார்யத்தில் உதவி செய்ய முன்வந்துள்ள இந்த நமது ஸூஹ்ருத்துக்கள், எந்த வழிகளால் கந்யாபிதாவின் ஸமீபம் போகிறார்களோ, அந்த வழிகள் முள்ளு, கல் முதலிய தடையின்றி ருஜுவானவைகளாக இருக்கும்படி நீங்கள் செய்யவேண்டும். அர்யமா, பகன் ஆகிய தேவர்கள், நாங்கள் இருவரும் தம்பதிகளாகச் சேர்வதைப் பூர்த்திசெய்துவைக்க வேண்டும்.

எங்கள் இருவருடைய தாம்பத்ய ஸம்பந்தமானது நன்கு சேர்க்கப்பட்டதாக விளங்கவேண்டும்.

(ப-2. க-4. ஸூ-3. கந்யகையைப் பார்த்து வரன் ஜபிப்பது.)

അഭ്രാതൃഘ്നീം വരുണാപതിഘ്നീം ബൃഹസ്പതേ ।
ഇന്ദ്രാപുത്രഘ്നീം ലക്ഷ്മ്യം താമസ്യൈ സവിതസ്സുവ ॥ ௩ ॥

ஹே! வருணதேவனே! நீர் இந்த கந்யகையிடம் ப்ராதாவை நாசம் செய்யக்கூடாத (ப்ராதாவைக் காப்பாற்றக்கூடிய) லக்ஷ்மியைக் (சுபலக்ஷணத்தை) கொடுப்பீராக. ஹே! ப்ருஹஸ்பதியே! நீர் இவளிடம் பர்த்தாவைக் கொல்ல முடியாத லக்ஷ்மியைக் கொடுப்பீராக. ஹே! இந்த்ரதேவனே! நீர் இந்த வதூவிடம் புத்ரனை நாசமாக்கக்கூடாத லக்ஷ்மியைக் கொடுப்பீராக. ஹே! ஸவித்ருதேவனே! நீர் வேறு பல லக்ஷ்மிகளையும் கொடுப்பீராக.

[ இந்தக் கந்யகையிடம், ப்ராதா, பர்த்தா, புத்ரன் ஆகியவர்களைக் கொல்லக்கூடிய அவலக்ஷணங்களிருந்தால் அவைகளைப் போக்கி, சுபலக்ஷணங்கள் உண்டாகும்படி செய்யவேண்டுமென்று வரன் ப்ரார்த்தனை பண்ணுகிறான்.]

(ப-2. க-4. ஸூ-4.) (கந்யகையின் ஒவ்வொரு அவயவங்களையும் வரன் பார்க்கும் மந்த்ரம்)

அகோரசக்ஷுரபதிக்ந்யேதி ஶிவா பதிப்ய: ஸுமநா: ஸுவர்சா: | ஜீவஸூர்தேவகாமா ஸ்யோநா ஶந்நோ பவ த்விபதே ஶம் சதுஷ்பதே || ௪ ||

ஹே! வதூ! நீ கோரமில்லாத சாந்தமான கண் உள்ளவளாக விளங்கவும். பர்த்தாவை ஹிம்ஸிக்காதவளாயும், மைத்துனன் பர்த்தா முதலியவர்களுக்கு க்ஷேமகாரிணியாகவும், நல்ல மனதுள்ளவளாயும், நல்ல தேஜஸ் உள்ளவளாயும் விளங்குவாயாக. மேலும், உயிருள்ள குழந்தையைப் பெறுகிறவளாயும், தேவதைகளை ஆராதிப்பதில் ஆஸ்தையுள்ளவளாகவும், ப்ரசஸ்தையாயுமிருப்பாயாக. நம் க்ருஹத்திலுள்ள மனிதர்களுக்கும் த்விபாத், சதுஷ்பாத்தான ஆடு, மாடு முதலிய நாலுகால் ப்ராணிகளுக்கும் க்ஷேமம் செய்கிறவளாகவும் இருப்பாயாக.

(ப-2. க-4. ஸூ-5.) (கந்யகையிடம் அவலக்ஷண பரிஹார மந்த்ரம்.)

இதமஹம் யா த்வயி பதிக்ந்யலக்ஷ்மீஸ்தாம் நிர்திஶாமி || ௫ ||

ஏ! வதூவே! உன்னிடம், பர்த்தாவைக் கொல்லக்கூடிய அலக்ஷ்மீயானது (அவலக்ஷணமானது) இருந்தால் அதை இந்தத் தர்ப்பத்தால் துடைத்து நிரஸனம் செய்கிறேன். அந்த அவலக்ஷணம் விலகும்படி செய்கிறேன்.

(ப-2. க-4. ஸூ-6.) (கன்யகையின் பிரிவினால் வருந்துகிற வர்களை ஆறுதல் கூறுவது.)

𑌜𑍀𑌵𑌾𑌂 𑌰𑍁𑌦𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿 𑌮𑌯𑌨𑍍𑌤𑍇 𑌅𑌧𑍍𑌵𑌰𑍇 𑌦𑍀𑌰𑍍𑌘𑌾𑌮𑌨𑍁 𑌪𑍍𑌰𑌸𑌿𑌤𑌿𑌂 𑌦𑍀𑌧𑍀𑌯𑍁𑌰𑍍𑌨𑌰𑌃 ! 𑌵𑌾𑌮𑌂 𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑍋 𑌯 𑌇𑌦𑌂 𑌸𑌮𑍇𑌰𑌿𑌰𑍇 𑌮𑌯𑌃 𑌪𑌤𑌿𑌭𑍍𑌯𑍋 𑌜𑌨𑌯𑌃 𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌜𑍇 ॥ ௬ ॥

மர்த்தாவின் க்ருஹத்திற்குப் போகும் இந்தக் கந்யகையைப் பார்த்து வியோகம் ஸஹியாத மாதா பிதா முதலிய பந்துக்கள் ரோதனம் செய்கிறார்கள். கந்யகை ஜீவித்திருக்கையிலேயே அவளை யுத்தேசித்து அழுவது ஸந்தோஷ ஸமயத்தில் துக்கப்படுவ தென்கிற மாறுபட்ட கார்யம்; அதைச் செய்கிறார்கள். இந்த விவாஹமானது ஹிம்ஸையற்ற ஸந்தோஷ கார்யமல்லவா? ஆகை யால் பந்து ஜநங்கள், ரோதனத்தைவிட்டு, இந்தத் தம்பதிகளுக்கு நீண்ட காலமிருக்கக் கூடிய ஸ்நேஹத்தை ப்ரார்த்திக்கட்டும். ஏனெனில் இந்தப் பந்துக்கள்தான் இந்த விவாஹத்தில் ப்ரார்த் திக்கச் செய்தார்கள். இந்த விவாஹம் எத்தகையது? ஸந்ததி மூல மாகப் பித்ருக்களுக்குக் கொண்டாடத்தக்கது, கந்யாபதிக்கும் ஸுகத்தைக் கொடுப்பது, கந்யகையின் ஆலிங்கனம் முதலியவை களுக்கு ஹேதுவானது. ஆகையால் இவ்வளவு ப்ரயோஜனமுள்ள இந்த விவாஹத்தை ஏற்பாடு செய்த கந்யாபந்துக்கள் ஸந்தோஷப் படவேண்டியிருக்க, ஏன் வருத்தப்படவேண்டும்? வருத்தத்தை விட்டுவிடவும்.

(ப-2. க-4. ஸூ-7.) (கந்யகையின் அபிஷேகார்த்தமாகத் தீர்த்தம் கொண்டுவர அனுப்புவது.)

𑌵𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑍍𑌕𑍍𑌰𑍂𑌰𑌮𑍁𑌦𑌚𑌨𑍍𑌤𑍍𑌵𑌾𑌪 𑌆𑌸𑍍𑌮𑍈 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌸𑍍𑌸𑍍𑌨𑌪𑌨𑌂 𑌹𑌰𑌨𑍍𑌤𑍁 । 𑌅𑌵𑍀𑌰𑌘𑍍𑌨𑍀𑌰𑍁𑌦𑌚𑌨𑍍𑌤𑍍𑌵𑌾𑌪𑌃 ॥ ௭ ॥

கந்யகைக்கு ஆஸேசனம் செய்ய க்ரஹிக்கப்படும் இந்தத் தீர்த்தத்திலிருந்து க்ரூரமான கெடுதியுண்டாக்கக்கூடியதான அம்ச மானது வெளிப்படட்டும். இந்த வதூவின் பொருட்டு ப்ராம்ஹ ணர்கள் இந்தச் சுத்த தீர்த்தத்தை எடுத்து வரட்டும். இந்தத் தீர்த் தங்கள், க்ரூரம் நிவ்ருத்தியாகி, இந்த வதூவுக்குப் பிறக்கும் பிள்ளை களை ஹிம்ஸிக்காதவைகளாயும் இருக்கட்டும்.

(ப-2. க-1. ஸூ-8. கந்யகையின் சிரஸ்ஸில் தர்ப்பப் பிரிமணையை, கலவடை, வைப்பது.)

𑌅𑌰𑍍𑌯𑌮𑍍𑌣𑍋 𑌅𑌗𑍍𑌨𑌿𑌂 𑌪𑌰𑌿𑌯𑌨𑍍𑌤𑍁 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑌾𑌂

𑌶𑍍𑌵𑌶𑍍𑌰𑍍𑌵𑍋 𑌦𑍇𑌵𑌰𑌾𑌶𑍍𑌚 ॥ ௮ ॥

ஸூர்யனுடைய அநுக்ரஹத்தை முன்னிட்டு, இந்தக் கந்யகைக்கு இப்போது செய்யப்படும் இந்தச் சுபகார்யத்தைத் தர்சிப்பதற்காக என்னுடையவும், வதூவினுடையவும் மாமனார், மாமியார் மைத்துனர்கள் எல்லோரும் இந்த விவாஹாக்நியைச் சுற்றிச் சீக்ரமாக வந்து நின்று பார்க்கட்டும்.

[இந்த ஸமயம் மேற்கண்ட பந்துக்கள் முதலியவர்கள் எல்லோரும் வந்து அதைப்பார்க்க வேண்டுமென்று கருத்து.]

(ஷை ஸூ-8. கந்யகையின் சிரஸ்ஸில் நுகத்தடியை வைக்கும் மந்த்ரம்.)

𑌖𑍇𑌽𑌨𑌸𑌃 𑌖𑍇𑌰𑌥𑌃 𑌖𑍇𑌯𑍁𑌗𑌸𑍍𑌯 𑌶𑌚𑍀𑌪𑌤𑍇 ।

𑌅𑌪𑌾𑌲𑌾𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰 𑌤𑍍𑌰𑌿𑌃 𑌪𑍂𑌤𑍍𑌵𑍍𑌯𑌕𑍃𑌣𑍋𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑌤𑍍𑌵𑌚𑌮𑍍 ॥ ௯ ॥

சசீபதியான ஏ! இந்த்ரனே! நீ 'அபாலா' என்ற கந்யகைக்கு ஏற்பட்டிருந்த சொரி, சிரங்கு முதலிய தோல் தோஷங்களை, வண்டி, ரதம், நுகத்தடி இவைகளின் த்வாரம் வழியாக தீர்த்தத்தைச் சேர்த்து நீக்கி, அதனால் அவளைப் பரிசுத்தமாக்கி, ஸூர்யனுக்கு ஸமமான தேஜஸ் உள்ளவளாகச் செய்தாயே, அது போல் இந்தக் கந்யகையையும் நுகத்தடி த்வாரம் வழியாக விடப்படும் இந்தத் தீர்த்தத்தால் சொரி சிரங்கு முதலிய தோஷமற்றவளாக்கி ஸூர்ய தேஜஸ்ஸுடன் விளங்கச் செய்யவேண்டும்.

[அபாலை என்கிற கந்யகை சொரி சிரங்குள்ளவளாயிருந்ததால் ஒருவரும் அவளை விவாஹம் செய்துகொள்ள ஸம்மதிக்கவில்லை. அவள் இந்த்ரனை யஜிக்க விரும்பினாள். நதியில் இறங்கிய அவள் ப்ரவாஹத்தால் இழுக்கப்பட்டுப் போகும்பொழுது நதியில் மிதந்துவந்த ஸோமலதையை எடுத்துக் கடித்து, அந்த ஸோமரஸத்தால் இந்த்ரனைப் பூஜித்தாள். அவன் த்ருப்தியடைந்து அவளை வண்டி, ரதம், நுகத்தடி த்வார தீர்த்தத்தால் மூன்று தடவை நனைத்து, சரீர தோஷத்தைப் போக்கி ஸூர்ய தேஜஸ்ஸுள்ள வளாகச் செய்தான் என்பது ச்ருதியிலுள்ள ஆக்யாயிகை.]

(ஷ ஸ-ு-8. நகத்தடியில் ஹிரண்யத்தை வைக்கும் மந்த்ரம்.)

ஶமெ ஹிர்ண்யஂ ஶமு ஸந்நாவஶமுஸ்து யெயீ ஶம்வஹத்ய ஶஂ
யாஹஸ்ய த்ருக் । ஶஂத ஆப்ஶதவவித்ரா ஸ்ரவந்து யாவஶந்த்வா ஶம்
ஸஂஸ்ஸூஜஸு ॥ ௧௦ ॥

ஏ! வதூவே! உன் சிரஸ்ஸில் தீர்த்தஸேசனத்திற்காக வைக்கப் படும் இந்த ஸ்வர்ணமானது உனக்கு ஸுகத்தை, க்ஷேமத்தைக் கொடுக்கட்டும். இந்த ஹிரண்யத்துடன் ஸம்பந்தப்பட்டு விழு கின்ற இந்தத் தீர்த்தங்களும் உனக்கு ஸுகத்தைத் தரட்டும். இந்த நுகத்தடி, அதிலுள்ள த்வாரம் இவைகளும் உனக்கு ஸுகத் தையளிக்கட்டும். எல்லாவற்றையும் சுத்திசெய்யும் சக்திபெற்ற புண்ய தீர்த்தங்களும் உனக்கு க்ஷேமத்தைக் கொடுக்கவேண்டும். இம்மாதிரி நுகத்தடி தீர்த்தத்தால் நீ சுத்தியடைந்தபிறகு உனது பதியான என்னுடன் உன் சரீரத்தைக் கலந்துகொள்வாயாக.

முதல் கண்டம் முற்றிற்று.

---

## இரண்டாவது கண்டம்.

---

(ஷ ஸ-ு-8. அபிஷேக மந்த்ரம்-முதலாவது.)

ஹிர்ண்யவர்ணாஶ்ஶுசயஃ பாவகாஃ யாஸ்வஜாதஃ ஸவிதா
யாஸ்வக்நிஃ । ஶஂத ஆபஶ்ஶிவா வித்தா ஸூதாஹி ஷ்வா தேவ
ஸவிதா வ்னாது ॥ ௧ ॥

வதூவின் அபிஷேகார்த்தமான இந்தத் தீர்த்த ஜலங்கள் ஹிரண்யத்தின் (தங்கம்) வர்ணம் போன்ற வர்ணமுள்ளவை. ஸ்வ யம் சுத்தங்கள், பிறரைச் சுத்தமாக்குகின்றவை. இத்தீர்த்தங்கள் பாபத்தைப்போக்கிப் பரவுகின்றன. மேலும் இந்தத் தீர்த்தங்களில் வேறுபல பரிசுத்த தீர்த்தங்களும் கலந்து பரவியுள்ளன. இவ்வளவு மஹிமையுள்ள இந்தத் தீர்த்தங்களால் ஏ! வதூவே! உன்னை ஸவிதா வானதேவன் பரிசுத்தி செய்யட்டும்.

(ஷ ஸூ-8. அபிஷேக மந்த்ரம்-இரண்டாவது.)

ஹிரண்யவர்ணா: ஶுசய: பாவகா யாஸு ஜாத: கஶ்யபோ யாஸ்விந்த்ர: । யா அக்நிம் கர்ப்பம் ததிரே ஸுவர்ணாஸ்தா ந ஆப: ஶꣳ ஸ்யோநா பவந்து ॥ ௨ ॥

மேலும் ஸ்வர்ண வர்ணமுள்ளவையும், சுத்தங்களும், சுத்திகரங்களுமான இந்தத் தீர்த்தங்களில்தான் கச்யபன் எனப்படுகிற ஸூர்யன் உண்டானுன். அக்நியும் இவைகளில்தான் தோன்றினுன். அக்நியை எந்தத் தீர்த்தங்கள் கர்ப்பத்தில் தரித்திருக்கின்றனவோ, வைத்யுதாக்நி (மின்னல் அக்நி) ஜலத்திலிருந்துதான் உண்டாகிறது. அத்தகைய சோபன வர்ணமுள்ள இந்தத் தீர்த்தங்கள் உனக்கு இங்கு ஸுககரங்களாயும், பரலோகத்தில் ஸுககரங்களாயும் ஆகட்டும்.

ஸூர்யனைக் கச்யபன் என்று இங்குச் சொல்லப்படுகிறது. உலகத்தைச் சுற்றிப் பார்க்கிறவன் என்று அர்த்தம். "பச்யக" என்ற பதமானது "கச்யப" என்று மாறியதாக வேதமே வ்யாக்யாநம் செய்துள்ளது.

(ஷ ஸூ-8. அபிஷேக மந்த்ரம்-மூன்றுவது.)

யாஸாꣳ ராஜா வருணோ யாதி மத்யே ஸத்யாந்ருதே அவபஶ்யஞ்ஜநாநாம் । யா அக்நிம் கர்ப்பம் ததிரே ஸுவர்ணாஸ்தா ந ஆப: ஶꣳ ஸ்யோநா பவந்து ॥ ௩ ॥

எந்த இந்தத் தீர்த்தங்களின் ராஜாவான தேவதையான வருண பகவான், ப்ரஜைகளின் ஸத்யாஸத்யங்களைக் கவனித்துக் கொண்டு தீர்த்தங்களின் மத்யத்தில் வஸிக்கிருனே, அந்தத் தீர்த்தங்கள். (மந்த்ரத்தின் உத்தரார்த்தத்தின் அர்த்தம் முன் மந்த்ரத்தில் போல்).

(ஷ ஸூ-8. அபிஷேக மந்த்ரம்-நான்காவது.)

யாஸாம் தேவா திவி க்ருண்வந்தி பக்ஷம் யா அந்தரிக்ஷே பஹுதா பவந்தி । யா ப்ருதிவீம் பயஸோந்தந்தி ஶுக்ராஸ்தா ந ஆப: ஶꣳ ஸ்யோநா பவந்து ॥ ௪ ॥

எந்த இந்தப் பரிசுத்த தீர்த்தத்தைத் தேவலோகத்தில் தேவர்கள் ஆஹாரமாக உபயோகிக்கிறார்களோ, எந்தத் தீர்த்தங்கள் அந்தரிக்ஷலோகத்தில் (மேகத்தில்) பஹுவிதமாகச் சூழ்ந்து நிற்கின்றனவோ, அத்தகைய தீர்த்தங்கள். (மந்த்ரத்தின் பின்பாதியின் அர்த்தம் முன்போல்).

(ஆப ஸூ-ம்-8. அபிஷேக மந்த்ரம்-ஐந்தாவது.)

ஶிவேந மா சக்ஷுஷா பஶ்யதாப ஶ்ஶிவயா தநுவோப ஸ்ப்ருஶத த்வங்மே । க்ருதஶ்சுதஶ்ஶுசயோ யா: பாவகாஸ்தா ந ஆப ஶ்ஶக்ம் ஸ்யோநா பவந்து ॥ ௫ ॥

ஏ! வதூவே! இந்த அபிஷேக தீர்த்தங்கள், க்ஷேமகரமான கண்ணால் உன்னைப்பார்த்து அநுக்ரஹிக்கட்டும். க்ஷேமகரமான தங்கள் சரீரத்தால் உனது சரீரத்தோல்களை ஸ்பர்சிக்கட்டும். நெய் போன்ற தாரையைப் பெருகவிடுகின்ற இந்தப் பரிசுத்தமான தீர்த்தங்கள் உனக்கு மங்களகரங்களாக ஆகட்டும்.

(ஆப ஸூ-ம்-8. கந்யகையின் புதிய வஸ்த்ர தாரணத்தில் மந்த்ரம்.)

பரி த்வா கிர்வணோ கிர இமா பவந்து விஶ்வத: ।
வ்ருத்தாயுமநு வ்ருத்தயோ ஜுஷ்டா பவந்து ஜுஷ்டய: ॥ ௬ ॥

ஏ! இந்த்ர தேவனே! (இந்த வதூ தரிக்கும் நூதன வஸ்த்ரமானது எப்படி அவளைச் சுற்றியிருக்கிறதோ அதுபோல்) இந்த ஸமயத்தில், ஸ்தோத்ரத்திற்கு அர்ஹனான உன்னைச்சுற்றி எனது இந்த ப்ரார்த்தனாவார்த்தைகளும் நிற்க வேண்டும். நீண்டவைகளும், உனக்கு ஏற்றவைகளுமான என்னுடைய ஸ்தோத்ர வாக்குகள் பெரியோர்களைக் கௌரவிப்பவனான உனக்கு ஏற்றவைகளாக இருக்கட்டும்.

(ஆப ஸூ-ம்-8. கந்யகைக்கு யோக்த்ரம் (தர்ப்பக்கயிறு) கட்டும் மந்த்ரம்.)

ஆஶாஸாநா ஸௌமநஸம் ப்ரஜாக்ம் ஸௌபாக்யந் தநூம் ।
அக்நேரநுவ்ரதா பூத்வா ஸந்நஹ்யே ஸுக்ருதாய கம் ॥ ௭ ॥

இந்த வதூவானவள், தனக்கு நல்ல மனதையும், நல்ல ப்ரஜையையும், நல்ல ஐச்வர்யத்தையும், அழகுள்ள சரீரத்தையும் வேண்டிக்கொண்டு அக்நிபகவானை அண்டிநிற்கிறாள். இவளை இந்தத் தர்ப்பக்கயிற்றால் இந்த விவாஹ சுபகார்யத்திற்காக க்ஷேமகரமாகக் கட்டுகிறேன்.

(ப-2. க-4. ஸூ-9.) (கந்யகையை விவாஹாக்நியின் ஸமீபத்திற்கு அழைக்க மந்த்ரம்.)

பூஷா த்வேதோ நயது ஹஸ்தக்ருஹ்யாஶ்விநௌ த்வா ப்ரவஹதாம் ரதேந । க்ருஹாந் கச்ச க்ருஹபத்நீ யதாஸோ வஶிநீ த்வம் விததமாவதாஸி ॥ ௮ ॥

ஏ! வதூவே! அக்நிஸமீபம் சென்று நாம் விவாஹம் செய்துகொண்டபின், பூஷா என்ற தேவதை உன்னை இவ்விடமிருந்து கையைப் பிடித்துக்கொண்டும், அச்விநீதேவதைகள் ரதத்தின் மூலமாகவும் அழைத்துக்கொண்டு போவார்கள், என் க்ருஹத்திற்கு. என் க்ருஹத்தை வந்து அடைவாயாக. அங்கு க்ருஹத்திற்கு ஈச்வரியாக (யஜமானியாக)வும், ஸ்வாதந்த்ரியமுள்ளவளாயும் எப்படியிருப்பாயோ அப்படியிருக்கவும். பிறகு நாம் செய்ய வேண்டிய யஜ்ஞாதிகர்மாவைப்பற்றியும் ஆலோசனை சொல்வாயாக.

இரண்டாவது கண்டம் முற்றிற்று.

---

## மூன்றாவது கண்டம்.

---

(ப-2. க-4. ஸூ-10.) (கந்யகையை அபிமந்த்ரணம் செய்யும் முதல் மந்த்ரம்.)

ஸோம꞉ ப்ரதமோ விவிதே கந்தர்வோ விவித உத்தர꞉ ।
த்ருதீயோ அக்நிஷ்டே பதிஸ்துரீயஸ்தே மநுஷ்யஜா꞉ ॥ ௧ ॥

ஏ! வதூவே! உன்னை முதலில் ஸோமதேவன் அடைந்தான். இரண்டாவதாக கந்தர்வன் (விச்வாவஸு என்பவன்) அடைந்தான். அக்நிதேவன் உனக்கு மூன்றாவதான பதியாக இருந்தான். மனித

குலத்தியவனுன நான் இப்போது உனக்கு நான்காவது பதியாக இருக்கிறேன்.

[ஸோமன், கந்தர்வன், அக்நி ஆகிய மூன்று தேவர்களும் வரிசைக்ரமமாக கந்யகைகளே குணம், அழகு, தேஜஸ் இவைகளேக் கொடுத்து வ்ருத்தி செய்து, பிறகு மனிதர்களிடம் பார்யையாகக் கொடுக்கிறுர்களென்று ச்ருதி.]

(ஷை ஸூ-10.) (கந்யாபிமந்த்ரணத்தில் இரண்டாவது மந்த்ரம்.)

𑌸𑍋𑌮𑍋 𑌦𑌦𑌦𑍍𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾𑌯 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑍋 𑌦𑌦𑌦𑌗𑍍𑌨𑌯𑍇 ।

𑌰𑌯𑌿𑌂 𑌚 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚𑌾𑌦𑌾𑌦𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌮𑌹𑍍𑌯𑌮𑌥𑍋 𑌇𑌮𑌾𑌮𑍍 ॥ ௨ ॥

இந்தக் கந்யகையை முதலில் ஸோமன் அநுக்ரஹித்து, கந்தர்வனிடம் கொடுத்தான் கந்தர்வன் (விச்வாவஸு) பிறகு அக்நியிடம் இவளே ஒப்புவித்தான். இப்போது அந்த அக்நிதேவன் இந்தக் கந்யகையையும், தனங்களேயும், புத்ர ஸந்தானத்தையும் எனக்குக் கொடுக்கவேண்டும். கொடுக்கும்படி அக்நியை ப்ரார்த்திக்கிறேன்.

(ப-2. க-4. 14-வது ஸூத்ரம்.) (பாணிக்ரஹணமந்த்ரம் நான்கில் முதல் மந்த்ரம்.)

𑌗𑍃𑌭𑍍𑌣𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌸𑍁𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌯 𑌹𑌸𑍍𑌤𑌂 𑌮𑌯𑌾 𑌪𑌤𑍍𑌯𑌾 𑌜𑌰𑌦𑌷𑍍𑌟𑌿𑌰𑍍
𑌯𑌥𑌾𑌸𑌃 । 𑌭𑌗𑍋 𑌅𑌰𑍍𑌯𑌮𑌾 𑌸𑌵𑌿𑌤𑌾 𑌪𑍁𑌰𑌂𑌧𑌿𑌰𑍍𑌮𑌹𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌾𑌦𑍁𑌰𑍍
𑌗𑌾𑌰𑍍𑌹𑌪𑌤𑍍𑌯𑌾𑌯 𑌦𑍇𑌵𑌾𑌃 ॥ ௩ ॥

ஏ! வதூவே! நான் உனது பாணியை (கை) க்ரஹணம் செய்கிறேன். (பிடிக்கிறேன்.) நம்மிருவருக்கும் எல்லா விதத்திலும் சிறந்த ப்ரஜைகள் உண்டாவதற்காக. பதியாகிய என்னேடு நீ சேர்ந்து வாழ்ந்து கிழத்தனம் அடையும் வயது வரையில் ஸுகிப்பாயாக. பகன், அர்யமா, ஸவிதா, இந்த்ரன் ஆகிய தேவர்கள் க்ருஹஸ்தாச்ரமத்தை நான் நடத்துவதற்காக உன்னே எனக்குக் கொடுத்து அநுக்ரஹித்தார்கள்.

(ஷை 14-வது ஸூத்ரம்.) (பாணிக்ரஹண மந்த்ரம் இரண்டாவது.)

தேஹ பூர்வே ஜநாஸோ யத்ர பூர்வவஹோ ஹிதா: ।

மூர்த்⁴ந்வாந் யத்ர ஸௌப்⁴ரவ: பூர்வோ தே³வேப்⁴ய ஆதபத் ॥

மேற்கண்ட தேவதைகளான பகன், அர்யமா, ஸவிதா முதலான, முன்னோர்களான ஜனங்கள் இந்த விவாஹ கர்மாவையும் க்ருஹஸ்த தர்மங்களையும் ஏற்படுத்தி, தாங்களும் அந்தத்தர்மங்களை அநுஷ்டித்தார்கள். மேலும் தேவர்களுள் சிரஸ் ஸ்தானமாயுள்ள அக்நியும், தேவர்களில் முந்தியவனான ஸூர்யனும் எந்தத் தர்மங்களில், அதாவது விவாஹ தர்மங்களில் ஸம்பந்தப்பட்டார்களோ. (ஸூப்ரூ=அதிதி. அவள் புத்ரன் ஸௌப்ரவன்.)

(ஷை ஸூ-14.) (பாணிக்ரஹண மந்த்ரம் மூன்றாவது.)

ஸரஸ்வதி ப்ரேத³மவ ஸுப⁴கே³ வாஜிநீவதி ।

தாம் த்வா விஶ்வஸ்ய பூ⁴தஸ்ய ப்ரகா³யாமஸ்யக்³ரத: ॥ ௫ ॥

சுபமான அழகுள்ளவளும், அன்னத்தைக் கொடுப்பவளுமாகிய ஏ! ஸரஸ்வதிதேவியே! நீயும் இந்த பாணிக்ரஹணத்தை ரக்ஷிப்பாயாக. உன்னை நாங்கள் ஸகல ப்ராணிகளின் எதிரில் விசேஷமாக ஸ்துதிசெய்கிறோம்.

(ஷை ஸூ-14.) (பாணிக்ரஹண மந்த்ரம் நான்காவது.)

ய ஏதி ப்ரதி³ஶ: ஸர்வா தி³ஶோऽநு பவமாந: ।

ஹிரண்யஹஸ்த ஐரம்ம: ஸ த்வா மந்மநஸம் க்ருணோது ॥ ௬ ॥

எந்த வாயுதேவன், திக்குகள் உபதிக்குகள் எங்கும் தடையின்றி ஸஞ்சரிக்கிறானோ, அன்னத்தைக் கொடுக்கும் அக்நியின் தோழனும், ஹிரண்யத்தைக் கையில் தரிப்பவனுமாகிய அந்த வாயு, ஏ! வதுவே! உன்னை என்னிடம் உறுதியான மனஸ்(ப்ரீதி) உள்ளவளாகச் செய்யட்டும்.

(ஷை 15-வது ஸூத்ரம்.) (ஸப்தபதீ மந்த்ரம்.)

ஏகமிஷே விஷ்ணுஸ்த்வாந்வேது த்³வே ஊர்ஜே த்ரீணி

வ்ரதாய சத்வாரி மாயோப⁴வாய பஞ்ச பஶுப்⁴ய: ஷட்³ருதுப்⁴ய:

𑌸𑌪𑍍𑌤 𑌸𑌪𑍍𑌤𑌭𑍍𑌯𑍋 𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌭𑍍𑌯𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌵𑍇𑌤𑍁 ॥ ௭ ॥

இந்த ஸப்தபதியில், ஏழு காலடி வைப்பதில், ஒவ்வொரு அடியிலும் விஷ்ணுதேவன் கூடவே வரவேண்டும். முதல் அடி வைப்பால் நமக்கு அன்னஸம்ருத்தி ஏற்படவேண்டும். இரண்டாவது அடி வைப்பானது பலத்தின் அபிவ்ருத்தியாவதற்கு ஹேதுவாக வேண்டும். மூன்ருவது, வ்ரதானுஷ்டானங்கள் வ்ருத்தியாகக் காரணமாகவேண்டும். நான்காவது அடிவைப்பானது ஸகல ஸுகாநுபவத்திற்கும் ஹேதுவாகவேண்டும். ஐந்தாவது அடிவைப்பினுல் நம் க்ருஹத்திலுள்ள ஆடு, மாடு முதலிய பசுக்களின் க்ஷேமம் ஏற்பட வேண்டும். ஆருவது பத விந்யாஸத்தால் மழை, ஸஸ்யம், புஷ்ப பலாதிகள் இவைகளுக்கு ஆதாரங்களான ஆறு ருதுக்களின் ப்ரீதி யேற்படவேண்டும். ஏழாவது அடிவைப்பால் ஏழுவிதமான ருத்விக்குகளால் பூர்த்தியாகிற (யஜ்ஞங்கள்) யாகங்கள் ஸித்திக்க வேண்டும். நாம் இருவரும் யஜ்ஞம் செய்யவேண்டு மென்றபடி. ஸப்த பதங்களிலும் விஷ்ணு கூடவே வந்து கீழ்ச்சொன்ன பலன்களை ஸித்திக்கச் செய்யவேண்டும்.

(ஷ ஸூ-16.) (ஸப்தபதீ மந்த்ராங்கள்.)

𑌸𑌖𑌾 𑌸𑌪𑍍𑌤𑌪𑌦𑌾 𑌭𑌵 𑌸𑌖𑌾𑌯𑍌 𑌸𑌪𑍍𑌤𑌪𑌦𑌾 𑌬𑌭𑍂𑌵 𑌸𑌖𑍍𑌯𑌂 𑌤𑍇 𑌗𑌮𑍇𑌯𑌂 𑌸𑌖𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍇 𑌮𑌾 𑌯𑍋𑌷𑌂 𑌸𑌖𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑍇 𑌮𑌾 𑌯𑍋𑌷𑍍𑌠𑌾𑌃 𑌸𑌮𑌯𑌾𑌵 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌾𑌵𑌹𑍈 𑌸𑌂𑌪𑍍𑌰𑌿𑌯𑍌 𑌰𑍋𑌚𑌿𑌷𑍍𑌣𑍂 𑌸𑍁𑌮𑌨𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑍌 ! 𑌇𑌷𑌮𑍂𑌰𑍍𑌜𑌮𑌭𑌿 𑌸𑌂𑌵𑌸𑌾𑌨𑍌 𑌸𑌂 𑌨𑍌 𑌮𑌨𑌾𑌂𑌸𑌿 𑌸𑌂 𑌵𑍍𑌰𑌤𑌾 𑌸𑌮𑍁 𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌾𑌕𑌰𑌮𑍍 ! 𑌸𑌾 𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯𑌮𑍂𑌹𑌮𑌮𑍂𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 𑌸𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌦𑍍𑌯𑍌𑌰𑌹𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌤𑍍𑌵𑌂 𑌰𑍇𑌤𑍋𑌽𑌹𑌂 𑌰𑍇𑌤𑍋𑌭𑍃𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌮𑌨𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 𑌵𑌾𑌕𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌾𑌮𑌾𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 𑌋𑌕𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌾 𑌮𑌾𑌮𑌨𑍁𑌵𑍍𑌰𑌤𑌾 𑌭𑌵 𑌪𑍁𑌂𑌸𑍇 𑌪𑍁𑌂𑌸𑍇 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯 𑌵𑍇𑌤𑍍𑌤𑌵𑍈 𑌶𑍍𑌰𑌿𑌯𑍈 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯 𑌵𑍇𑌤𑍍𑌤𑌵𑌾 𑌏𑌹𑌿 𑌸𑍂𑌨𑍃𑌤𑍇 ॥ ௮ ॥

ஏ! வதூவே! ஏழு காலடிவைத்த நீ எனக்கு ஸகியாக ஆகிவிட்டாய். நாம் இருவரும் இந்த ஸப்தபதத்தால் பரஸ்பரம்

ஸகாக்களாகிவிட்டோம். ஆகையால் உன்னுடைய ஸகித்வத்தை நான் அடைந்தேன். இந்த உனது ஸகித்வத்திலிருந்து நழுவமாட்டேன். நீ எனது ஸகித்வத்திலிருந்து நழுவாமலிருப்பாயாக. இனி நாம் இருவரும் சேர்ந்து வாழ்வோம், செய்யவேண்டியவைகளைக் கலந்து ஆலோசிப்போம். பரஸ்பரம் ப்ரீதியுள்ளவர்களாயும், அதனால் விளங்குகிறவர்களாயும். பரஸ்பரம் நல்ல மனது உள்ளவர்களாகவும் சேர்ந்து வாழ்வோம். அந்நம் சரீரபலம் இவைகளை இருவரும் சேர்ந்து அனுபவிப்பவர்களாயும் வாழ்வோம். நம் இருவருடைய மனதுகளையும் கலந்தவைகளாகச் செய்கிறேன். நாம் செய்யவேண்டிய வ்ரதங்களையும் கலந்து செய்கிறேன். பாஹ்ய இந்த்ரியங்களையும் பரஸ்பரம் ஸமமாக இருக்கும்படி செய்வேன். நீ ருக்காக இருக்கிறாய். நான் ஸாமமாயிருக்கிறேன். (இதுவே ஆதரவால் திருப்பிச்சொல்லப்படுகிறது). நான் தேவலோகமான ஆகாசமாயிருக்கிறேன். நீ ப்ருதிவி (பூமி) யாயிருக்கிறாய். த்யாவா ப்ருதிவிகள்போல் பிரியக் கூடாதவர்கள். நான் ரேதஸ் இந்த்ரியமாயிருக்கிறேன். அதற்கு ஆதாரமாயிருக்கிறேன். நீ அதைத் தரிப்பவளாயிருக்கிறாய். (ஸந்ததியை வ்ருத்தி செய்வோமென்று கருத்து). நான் மனஸ்ஸாக இருக்கிறேன். நீ வாக்காக இருப்பாயாக. (மனதால் நினைத்ததையே வாய் சொல்லும்). நான் ஸாம வேதமாயிருக்கிறேன். நீ ருக்காக இருப்பாயாக. (ருக்கை ஆதாரமாகக் கொண்டுதான் ஸாமகானம் செய்யமுடியும்) ஆகையால் நீ என்னை அனுஸரித்து அநுகூலமாயிருக்கவும். ஏனெனில் புருஷப் பிள்ளையை அடைவதற்காகவும், லக்ஷ்மியும், புத்ரனும் உண்டாவதற்கும். ஏ! ஸூந்ருதே! ப்ரியமான வாக்குள்ள வதூவே! வருவாயாக.

மூன்றாவது கண்டம் முற்றிற்று.

## நான்காவது கண்டம்.

(ஆ. க்ரு. ஸூ. க-5. ஸூ-1.) (விவாஹ ஹோம மந்த்ரங்கள் பதினாறு. அவைகளில் முதல் மூன்று.)

ஸோமாய ஜநிவிதெ ஸ்வாஹா ॥ க ॥ மஹவ–ாய ஜநிவிதெ ஸ்வாஹா ॥ உ ॥ சுஹ்பெ ஜநிவிதெ ஸ்வாஹா ॥ ஈ ॥

இந்தக் கந்யகையை முதலில் அடைந்த ஸோமதேவனுக்கு இந்த ஹோமம் செய்கிறேன். இரண்டாவதாக கந்தர்வனுக்கும், மூன்றாவதாக அக்நிக்கும் இந்த ஹோமம் செய்கிறேன்.

[ஸோமன், கந்தர்வன், அக்நி ஆகிய தேவர்கள் கந்யகையை ரக்ஷித்து இந்த வரனிடம் கொடுத்ததால் அவர்களுக்கு முதலில் த்ருப்திக்காக ஹோமம்.]

(4-வது ஹோம மந்த்ரம்.)

𑌕𑌨𑍍𑌯𑌲𑌾 𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑍋 𑌯𑌤𑍀 𑌪𑌤𑌿𑌲𑍋𑌕𑌮𑌵 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌮𑌦𑌾𑌸𑍍𑌥𑌾
𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ ௪ ॥

இந்தக் கந்யலே (கன்யகை) பித்ரு குலத்திலிருந்து பர்த்தாவின் க்ருஹத்திற்குப் போகிறவளாய்க்கொண்டு, ஏற்கனவேயிருந்த கந்யா தீக்ஷையை இப்போது விட்டு நீங்கிவிட்டாள். (என்று அக்நியைக் குறித்துச் சொல்லுவது.)

(5-வது ஹோம மந்த்ரம்)

𑌪𑍍𑌰𑍇𑌤𑍋 𑌮𑍁𑌞𑍍𑌚𑌾𑌤𑌿 𑌨𑌾𑌮𑍁𑌤𑌃 𑌸𑍁𑌬𑌦𑍍𑌧𑌾𑌮𑌮𑍁𑌤𑌸𑍍𑌕𑌰𑌤𑍍 ।
𑌯𑌥𑍇𑌯𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰 𑌮𑍀𑌢𑍍𑌵𑌃 𑌸𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑌾 𑌸𑍁𑌭𑌗𑌾𑌸𑌤𑌿 ॥ ௫ ॥

பூமியை மழையால் நனைக்கிற ஏ! இந்த்ரதேவனே! இந்தக் கந்யகையைப் பித்ரு குலத்திலிருந்து விடுவிப்பாயாக. ஆனால் பர்த்ரு குலமான இங்கிருந்து இவளை விடுவிக்கக்கூடாது. அதற்குப் பதிலாக இவளைப் பதி குலத்தில் நன்கு ஊன்றியவளாக நீ செய்யவும். பதி குலத்தில் நன்கு ஊன்றி இவள் நல்ல புத்ரனையும் நல்ல ஐஶ்வர்யத்தையும் எப்படி அடைவாளோ அவ்விதம் நீ செய்வாயாக.

(6-வது ஹோம மந்த்ரம்.)

𑌇𑌮𑌾𑌂 𑌤𑍍𑌵𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰 𑌮𑍀𑌢𑍍𑌵𑌃 𑌸𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌂 𑌸𑍁𑌭𑌗𑌾𑌂 𑌕𑍃𑌣𑍁 ।
𑌦𑌶𑌾𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑌾𑌧𑍇𑌹𑌿 𑌪𑌤𑌿𑌮𑍇𑌕𑌾𑌦𑌶𑌂 𑌕𑍃𑌧𑌿 ॥ ௬ ॥

மழை பொழியும் ஏ இந்த்ரதேவனே! இந்த வதூவை நல்ல புத்ரவதியாயும் நல்ல ஐஶ்வர்யமுள்ளவளாயும் செய்வாயாக. இவளிடம் பத்துப் பிள்ளைகள் பிறந்து நிலைக்கச் செய்யவும். பர்த்தாவைப் பதினோராவது பிள்ளையாகவும் செய்யவும் (பிள்ளைகளைப் போல் அபிமானிக்கவும்.

(7-வது ஹோம-மந்த்ரம்)

𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍇𑌤𑍁 𑌪𑍍𑌰𑌥𑌮𑍋 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑍋𑌽𑌸𑍍𑌯𑍈 𑌪𑍍𑌰𑌜𑌾𑌂
𑌮𑍁𑌞𑍍𑌚𑌤𑍁 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌶𑌾𑌤𑍍 । 𑌤𑌦𑌯𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌵𑌰𑍁𑌣𑍋𑌽𑌨𑍁𑌮𑌨𑍍𑌯𑌤𑌾𑌂
𑌯𑌥𑍇𑌯𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌪𑍌𑌤𑍍𑌰𑌮𑌘𑌂 𑌨 𑌰𑍋𑌦𑌾𑌤𑍍 ॥ ௭ ॥

தேவர்களுக்குள் முதல்வனை அக்நிதேவன் இந்த விவாஹ ஸமயத்தில் இவ்விடம் வரவேண்டும். அந்த அக்நி இந்த வதூவினுடைய ப்ரஜையை, ம்ருத்யுபாசம் இருந்தால் அதைப் போக்கி அதிலிருந்து விடுவிக்கவேண்டும். (அகால மரணம்). அந்தமாதிரி அக்நி செய்யும் கார்யத்தை ராஜாவான இந்த வருணதேவனும் (வருண பாச அதிகாரீ) அனுமதிக்கவேண்டும். எவ்வாறு இந்த வதூவானவள் புத்ராதிகள் ஸம்பந்தமான வ்யஸன நிமித்தம் துக்கப்படாமல் இருப்பாளோ.

(8-வது ஹோம மந்த்ரம்)

𑌇𑌮𑌾𑌮𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯𑌤𑌾𑌂 𑌗𑌾𑌰𑍍𑌹𑌪𑌤𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌮𑌸𑍍𑌯𑍈 𑌨𑌯𑌤𑍁
𑌦𑍀𑌰𑍍𑌘𑌮𑌾𑌯𑍁𑌃 । 𑌅𑌶𑍂𑌨𑍍𑌯𑍋𑌪𑌸𑍍𑌥𑌾 𑌜𑍀𑌵𑌤𑌾𑌮𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾𑌤𑌾 𑌪𑍌𑌤𑍍𑌰
𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌭𑌿 𑌪𑍍𑌰𑌬𑍁𑌧𑍍𑌯𑌤𑌾𑌮𑌿𑌯𑌮𑍍 ॥ ௮ ॥

இந்த வதூவை, இந்த விவாஹாக்நிதேவன் க்ருஹபதியுடன் இருந்துகொண்டு காப்பாற்றிவரவேண்டும். அத்துடன் இவளுடைய ப்ரஜைகளையும் தீர்க்காயுஸ்ஸாக நீடித்திருக்கச் செய்யவேண்டும். இந்த வதூவானவள், தனது மடியில் பிள்ளையில்லாமல் சூன்யமாயிராமல் செய்யவும். எப்போதும் மடியில் ப்ரஜையுள்ளவளாக இருக்கவேண்டும்.

மேலும் இவள், ப்ரஜைகள் நீண்ட காலம் ஜீவித்து இருந்து அவைகளுக்கு மாதாவாக விளங்கவும். (ப்ரஜா மரண க்லேசம் இன்றி) ஒவ்வொரு நாளும் தூங்கி எழுந்திருக்கும்போது இவள் தனது பிள்ளைகள் ஸம்பந்தமான ஆனந்தத்துடனேயே கண் விழிப்பவளாக இருக்கவும் வேண்டும்.

(9-வது ஹோம-மந்த்ரம்.)

𑌮𑌾 𑌤𑍇 𑌗𑍃𑌹𑍇 𑌨𑌿𑌶𑌿 𑌘𑍋𑌷 𑌉𑌤𑍍𑌥𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌤𑍍𑌵𑌦𑍍𑌰𑍁𑌦𑌤𑍍𑌯

ஸம்விஶந்து। உபஸ்தம் விகேஶ்யோ ருவத்யோ ஜீவபத்நீ பதி

லோகே விராஜ பஶ்யந்தீ ப்ரஜாம் ஸுமனஸ்யமானா: ॥ ௯ ॥

ஹே! வதூவே! உன்னுடைய க்ருஹத்தில் ராத்ரிகாலத்தில் அழுகைச் சப்தம் உண்டாகும் நிலைமை ஏற்படவேண்டாம். அழுகைச் சப்தம் செய்கிறவர்கள் உன்னைச் சேர்ந்தவர்களாயிராமல் வேறு இடத்தில் இருக்கட்டும். நீயும் அவிழ்ந்த கேசத்துடன் உரஸ்ஸில் தாடனம் செய்யும் நிலைமையை அடையவேண்டாம். (எந்த வித துக்கமும் ஏற்படக்கூடாது.) நீ ஜீவித்துள்ள பர்த்தாவுடன் பதி க்ருஹத்தில் விளங்குவாயாக. நல்ல மனதுள்ள புத்ர பௌத்ராதி ப்ரஜைகளைப் பார்த்துக்கொண்டும் விளங்குவாயாக. (பதி வியோகமோ புத்ரவியோகமோ உனக்கு ஏற்படவேண்டாம்.)

(10-வது ஹோம மந்த்ரம்.)

த்யௌஸ்தே ப்ருஷ்டம் ரக்ஷது வாயுரூரூ அஶ்விநௌ ச

ஸ்தநம் தயந்தம் ஸவிதாபிரக்ஷது। ஆவாஸஸ: பரிதாநாத்

ப்ருஹஸ்பதி விஶ்வேதேவா அபிரக்ஷந்து பஶ்சாத் ॥ ௧௦ ॥

ஹே! வதூ! உன்னுடைய சரீரத்தின் பின் பாகத்தை ஆகாசம் (த்யௌ:) ரக்ஷிக்கவேண்டும். துடைகளை வாயு ரக்ஷிக்கவேண்டும். ஸ்தனங்களை அஶ்விநீ தேவர்கள் காப்பாற்றட்டும். உன்னுடைய குழந்தையை ஸவிதாதேவன் ரக்ஷிக்கவேண்டும். மேலும் இந்த விவாஹத்தில் இவளைப் புதிய வஸ்த்ரம் தரிக்கும் வரையில் ப்ருஹஸ்பதி தேவனும், அதற்குப் பிறகு விச்வேதேவர்களும் ரக்ஷிக்க வேண்டும்.

(11-வது ஹோம-மந்த்ரம்.)

அப்ரஜஸ்தாம் பௌத்ரம்ருத்யும் பாப்மாநமுத வாகம் ।

ஶீர்ஷ்ண: ஸ்ரஜமிவோந்முச்ய த்விஷத்ப்ய: ப்ரதிமுஞ்சாமி பாஶம் ॥

ஹே! வதூவே! உன்னிடம், பிள்ளையில்லாமை (மலடி) என்ற தோஷமிருந்தாலும், புத்ரனை நாசம் செய்யக்கூடிய தோஷமிருந்தாலும், அது நிமித்தமான வேறு வ்யஸனம் இருந்தாலும், அந்தத் தோஷங்களை உன்னிடமிருந்து நீக்கி, நமது சத்ருக்களிடம் அந்தப்

பாசத்தைப் போடுகிறேன். வாடிய புஷ்பத்தைத் தலையிலிருந்து எடுத்து வேறு இடத்தில் மாட்டுவதுபோல்.

(12-வது ஹோம மந்த்ரம்)

இமம் மே வருண ஶ்ருதீ ஹவமத்யா ச ம்ருடய । த்வாமவஸ்யுராசகே ॥ ௧௨ ॥

ஹே! வருணதேவனே! இந்த விவாஹ தர்மத்தில் என்னுடைய ஆஹ்வாநம், அல்லது ப்ரார்த்தனையைக் காதுகொடுத்துக் கேட்பீராக. என் ப்ரார்த்தனைப்படி உடனேயே ஸுகத்தைக் கொடுக்கவேண்டும். எனது ரக்ஷணத்தை விரும்பி உம்மை நெருங்கி ஸ்துதி செய்கிறேன்.

(13-வது ஹோம மந்த்ரம்)

தத்வா யாமி ப்ரஹ்மணா வந்தமானஸ்ததாஶாஸ்தே யஜமானோ ஹவிர்பி: । அஹேடமானோ வருணேஹ போத்யுருஶꣳஸ மா ந ஆயு: ப்ரமோஷீ: ॥ ௧௩ ॥

ஹே! வருணதேவனே! எல்லோராலும், ஸ்துதிக்கப்படுகிறவரே! நான் இந்தக் கர்மாவில் உம்மை வேத மந்த்ரத்தால் நமஸ்கரிப்பவனும், இந்த ஹவிஸ்ஸுகளால் யாகம்செய்து பூஜிப்பவனுமிருந்துகொண்டு, கீழே சொல்லிய க்ஷேமங்களை அபேக்ஷிக்கின்றேன். ஆகையால் நீர் கோபதாபமில்லாதவராகி இந்தக் கர்மாவில் நான் சொல்லும் ப்ரார்த்தனையைக் கவனிக்கவேண்டும். எங்களுடைய ஆயுளைக் குறைக்காமலும் இருக்க ப்ரார்த்திக்கிறோம்.

(14-வது ஹோம மந்த்ரம்)

த்வந்நோ அக்னே வருணஸ்ய வித்வான் தேவஸ்ய ஹேடோ(அ)வயாஸிஸீஷ்டா: । யஜிஷ்டோ வஹ்நிதம: ஶோஶுசானோ விஶ்வா த்வேஷாꣳஸி ப்ரமுமுக்த்யஸ்மத் ॥ ௧௪ ॥

ஹே! அக்னிதேவனே! நீர் எல்லாவற்றையும் அறிந்தவர். தேவனான வருணனுக்கு எங்களிடம் கோபமிருந்தால் அதை நீர்

போக்கடிக்கவேண்டும். மேலும் நீர் விசேஷமாக யஜிப்பவர். ஹவிஸ்ஸுகளை வஹித்துக்கொண்டுபோகிறவர். மிகவும் தேஜஸ்ஸால் ப்ரகாசிப்பவர். ஆகையால் எங்களிடமிருந்து எல்லாவித த்வேஷ கார்யங்களையும் விடுவிக்கவேண்டும். சத்ருக்கள் செய்யும் த்வேஷ கார்யங்களை என்னிடமிருந்து விலக்குவீராக.

(15-வது ஹோம மந்த்ரம்)

ஸ த்வந்நோ அக்3நேவமோ ப4வோதீ நேதி3ஷ்டோ2 அஸ்யா உஷஸோ வ்யுஷ்டௌ | அவ யக்ஷ்வ நோ வருணꣳ ரராணோ வீஹி ம்ருடீ3கꣳ ஸுஹவோ ந ஏதி4 || ௧௫ ||

தேவர்களுள் மூலஸ்தானமாயுள்ள ஏ! அக்நியே! நீர் எங்களுக்கு ரக்ஷகராக, இந்த விடியற்காலையில் (எப்பொழுதும்) ஸந்நிஹிதராக இருக்கவேண்டும். பாசத்தை வீசுகிற வருணனைக் கீழ்ப்பட்டவராகச் செய்யவேண்டும். எங்களுக்கு இஷ்ட காமங்களைக் கொடுப்பவராயிருந்துகொண்டு ருசியுள்ள இந்த ஹவிஸ்ஸைப் புஜிக்கவும். எங்களால் எப்போதும் நன்கு அழைக்கப்பட்டவராயிருக்கவும்.

(16-வது ஹோம மந்த்ரம்)

த்வமக்3நே அயாஸ்யயா ஸந்மநஸா ஹித: | அயா ஸந் ஹவ்யமூஹிஷேऽயா நோ தே4ஹி பே4ஷஜம் || ௧௬ ||

ஏ! அக்நிதேவனே! நீர் இந்தக் கார்யத்தை முன்னிட்டு இவ்விடம் வந்தவராயிருக்கிறீர். பக்தர்களால் அடையக்கூடியவர். எங்கள் மனதால் த்யானிக்கப்படுகிறீர். எங்களுடைய இந்த ஹவிஸ்ஸை வஹித்துச் செல்லும். எங்களுக்கு ஔஷத ரூபமான க்ஷேமத்தைக் கொடுக்கவும். "அயா" என்பது எல்லாவிடத்திலும் ஒரே விதமான அர்த்தமுள்ளது. "ஸமீபத்தில் வந்திருப்பவரே" என்று அர்த்தம்.

**நான்காவது கண்டம் முற்றிற்று.**

## ஐந்தாவது கண்டம்.

---

(ஆப. க்ரு. ஸூ. க-5. ஸூ-2. வதூவானவள் பாராங் கல்லை மிதிக்கும் மந்த்ரம்)

ஆதிஷ்டேமமஶ்மாநமஶ்மேவ த்வꣳ ஸ்திரா பவ । அபிதிஷ்ட

ப்ருதந்யத ஸ்ஸஹஸ்வ ப்ருதநாயத: ॥ க ॥

ஏ! வது! நீ இந்தப் பாராங்கல்லில் ஏறி நிற்கவும். அப்படி நிற்கிற நீ இந்தக் கல்லைப்போல் உறுதியாக த்ருடமாக ஆக வேண்டும். உன்னைச் சண்டைக்கு விவாதத்திற்கு இழுப்பவர்களை எதிர்த்து நிற்கத் திறமையுள்ளவளாக ஆகவேண்டும். சண்டையிடுவோரைப் பொறுமையுடன் ஜயிப்பாயாக.

(ஆப. க்ரு. ஸூ. க-5. ஸூ-5. லாஜஹோம மந்த்ரம், முதலாவது)

இயம் நார்யுபப்ரூதே அக்நாவாவபந்திகா ।

தீர்க்காயுரஸ்து மே பதிர்ஜீவாது ஶரதஶ்ஶதம் ॥ உ ॥

ஏ! அக்நியே! லாஜத்தை (பொரி) ஹோமம் செய்கிறவளான இந்தக் கல்யாணப்பெண் உம்மை அண்டி வேண்டுகிறாள். எப்படி? இந்த என்னுடைய பதியானவன் தீர்க்காயுஸ்ஸாக இருக்கவேண்டும். அதாவது நூறு வர்ஷகாலம் ஜீவித்திருக்க வேண்டும், என்று.

(ஆப. க்ரு. ஸூ. க-5. ஸூ-6. அக்நிப்ரதக்ஷிண மந்த்ரம் 1.)

துப்யமக்ரே பர்யவஹந் ஸூர்யாம் வஹதுநா ஸஹ ।

புந: பதிப்யோ ஜாயாம் தா அக்நே ப்ரஜயா ஸஹ ॥ ங ॥

ஹே! அக்நிதேவனே! முன்காலத்தில் தேவர்கள் உம்மிடம் விவாஹாதிஷ்டான தேவதையாகிய ஸூர்யா என்கிற சக்தியை அவளுக்கான விவாஹச் சீர்களுடன் உம்மிடம் கொடுத்தார்கள். இப்போது, நீர் அந்தச் சக்தியின் பலத்தைக் கொண்டு இந்தப் பார்யையை என் போன்ற பதிகளுக்கு அறு

க்ரஹித்துக் கொடுக்கவேண்டும். பிறகு இவளிடம் பிறக்கப் போகும் ப்ரஜையையும் அநுக்ரஹித்துக் கொடுக்கவும். (ஸூர்யா = ஸூர்யனின் பெண்.)

(ஷை மந்த்ரம், இரண்டாவது)

புநஃ பத்நீமக்நிரதாதாயுஷா ஸஹ வர்சஸா ।
தீர்காயுரஸ்யா யஃ பதிர்ஜீவாதி ஶரதஶ்ஶதம் ॥ ௪ ॥

(மேற்கண்ட மந்த்ரத்தில் உள்ள ப்ரார்த்தனையே மறுபடி இந்த மந்த்ரத்திலும் ஆதராதிசயத்தால் செய்யப்படுகிறது.)

அக்நியானவர் இப்போது இந்தப் பத்நியை ஆயுஸ், வர்ச்சஸ் இரண்டுடன் சேர்த்து எனக்குக் கொடுத்தருளட்டும். இந்தப் பத்நியின் பதியானவன் தீர்க்காயுஸ்ஸாக நூறுவர்ஷம் நிலைத்து ஜீவித்திருக்கவேண்டும்.

(ஷை மந்த்ரம், மூன்றாவது)

விஶ்வா உத த்வயா வயம் தாரா உதந்யா இவ ।
அதிகாஹேமஹி த்விஷஃ ॥ ௫ ॥

ஹே! அக்நிதேவனே! உம்மால் உமது அருளால் நாங்கள் எங்களுடைய த்வேஷிகளை எதிர்த்து, தாண்டி விடும்படி செய்யவும். மழையால் ஏற்பட்ட ப்ரவாஹத்தை (ஆடு மாடுகள்) ஸுலபமாகத் தாண்டுவதுபோல் நாங்களும் எதிரிகளைத் தாண்டி நிற்போமாக.

க்ருதிஶ்சேதி த்வாப்யாம் ॥ ௬ ॥

இந்த மந்த்ரமும் இதன் அர்த்தமும் மேலே சொல்லப் பட்டது.

(ஆப. க்ரு. ஸூ. க-5. ஸூ-7. லாஜஹோம மந்த்ரம் 2 ஆவது.)

இயம் நார்யுபப்ரூதே அக்நௌ லாஜானாவபந்திகா । தீர்காயுரஸ்து மே பதிர்ஜீவாதி ஶரதஶ்ஶதம் ॥ ௭ ॥

முன் காலத்தில் கந்யகைகள் லாஜஹோமத்தால் அர்யம (தானம் கொடுப்பவன்) தேவனை (அக்நியை அல்லது ஸூர்யனை) யாகம் செய்து பூஜித்து, அதனால் நல்ல பதிகளை அடைந்தது போல் இந்தக் கந்யகையும் செய்கிறாள். ஆகையால் அஹிம்ஸகனான அந்த அர்யமதேவன் இந்தக் கந்யகையைப் பித்ரு குலத்திலிருந்து விடுவித்து, பதிகுலத்தில் சாச்வதமாகக் கட்டப்பட்டவளாகச் செய்யட்டும். பதிகுலத்திலிருந்து நழுவாமலிருக்கும்படி செய்யட்டும்.

(முன்போல் ப்ரதக்ஷிண மந்த்ரங்கள்)

துப்யமக்ரெ பர்யவஹந் ஸூர்யாஂ வஹதுநா ஸஹ புந: பதிப்யோ ஜாயா விஶ்வா உத
த்வயா வயஂ தாரா உதந்யா இவ ॥ அ ॥

இதிலுள்ள நான்கு மந்த்ரங்களும் அவைகளின் அர்த்தமும் மேலே சொல்லியது போல்.

(ஆப. க்ரு. ஸூ. க-5. ஸூ-10. லாஜஹோம மந்த்ரம் 3 ஆவது.)

த்வமர்யமா பவஸி யத்கநீநாஂ நாம ஸ்வதாவந்த்ஸ்வர்யஂ பிபர்ஷி । அஞ்ஜந்தி வ்ருக்ஷஂ ஸுதிதந்ந கோபிர்யத்தம்பதீ ஸமநஸா க்ருணோஷி ॥ கூ ॥

ஹே! அக்நியே! நீரே விவாஹ கந்யகைகளுக்குத் தாதாவாக (கொடுப்பவராக) இருக்கிறீர். கந்யகைகளை தானம் செய்கிறவர் நீர்தான். ஏனெனில் அந்தக் கந்யகைகளுடைய அன்ன ஸம்ருத்தியுள்ளதும் ஸ்வர்க்க ஸாதனமுமான க்ஷேமத்தை நீரே பரித்து, புஷ்டியாக்குகிறீர். நன்கு ஸ்தாபிக்க மரத்தை ஜலத்தால் எப்படி நனைத்து வளர்ப்பார்களோ அது போல் பசுக்களின் த்ரவ்யங்களான பால் நெய் முதலிய ஹவிஸ்ஸுகளால் உம்மை த்ருப்திசெய்து வைக்கிறார்கள். இந்தத் தம்பதிகளை நீரும் பரஸ்பரம் நல்ல மனதுள்ளவர்களாகச் செய்கிறீர்.

துப்யமக்ரெ பர்யவஹந் ஸூர்யாஂ வஹதுநா ஸஹ புந: பதிப்யோ ஜாயா விஶ்வா
உத த்வயா வயஂ ॥ கO ॥

இந்த மூன்று மந்த்ரங்களும் அர்த்தமும் முன்போல்.

(ஆப. க்ரு. ஸூ. க-5. ஸூ-12)

[வதுவின் இடுப்பில் கட்டப்பட்ட தர்ப்பக்கயிற்றை அவிழ்க்க மந்த்ரம் 2.]

ப்ர த்வா முஞ்சாமி வருணஸ்ய பாசாத் யேந த்வாபத்நாத் ஸவிதா ஸுகேத: । தாதுஸ்ச யோநௌ ஸுக்ருதஸ்ய லோகே ஸ்யோநந்தே ஸஹ பத்யா கரோமி ॥ கக ॥

ஹே! வது! உன்னை, இந்த யோக்த்ரத்தை (இடுப்புக்கயிறு) நீக்குவது மூலம் வருணபாசத்திலிருந்து விடுவிக்கிறேன். எந்த யோக்த்ரபாசத்தால் நல்லெண்ணமுள்ள ஸவித்ருதேவன் சற்று முன் விவாஹ ஆரம்பத்தில் இடுப்பில் கட்டினாரோ அந்தப் பாசத்தை அவிழ்த்து விடுகிறேன். இந்தக் கார்யத்தின் மூலமாக உன்னை ப்ரம்ஹாவின் உத்பத்தி ஸ்தானமான புண்யலோகத்தில் பர்த்தாவாகிய என்னுடன் சேரச்செய்கிறேன்.

இமம் விஷ்யாமி வருணஸ்ய பாசம் யமபத்நீத ஸவிதா ஸுசேவ: । தாதுஸ்ச யோநௌ ஸுக்ருதஸ்ய லோகேऽரிஷ்டாம் த்வா ஸஹ பத்யா க்ருணோமி ॥ க௨ ॥

ஹே! வது! ஸவிதாவான தேவன் நல்ல எண்ணத்துடன் உனக்கு எந்த யோக்த்ரத்தைக் கட்டினாரோ, அதை வருண பாசமாக விடுவிக்கிறேன். புண்யலோகமான ப்ரம்ஹலோகத்தில் என்னுடன் உன்னையும் பயமில்லாதவளாக வஸிக்கச்செய்கிறேன்.

(ஆப. க்ரு. ஸூ, க-5. ஸூ-20. ப்ராயஸ்சித்த ஹோம மந்த்ரம்)

அயாஸ்சாக்நேऽஸ்யநபிஸஸ்தீஸ்ச ஸத்யமித்த்வமயா அஸி । அயஸா மநஸா த்ருதோऽயஸா ஹவ்யமூஹிஷேऽயா நோ தேஹி பேஷஜம் ॥ கங ॥

ஹே! அக்நியே! நீர் பக்தர்களால் அடையக்கூடியவராயிருக்கிறீர். அபவாதம் அல்லது தோஷம் அற்றவராக விளங்கு

கிறீர். உண்மையாகவே நீர் பக்தப்ரியர். உம்மை அண்டியவனால், மனதால் தரிக்கப்படுகிறீர். த்யானிக்கப்படுகிறீர். பக்தர்களிடம் செல்லுவதான உமது மனதால் இந்த ஹவிஸ்ஸைத் தேவர்களிடம் சேர்க்கவும். அத்தகைய நீர் எங்களுக்கு க்ஷேமமாகிய ஔஷதத்தைக் கொடுக்கவும்.

## ஐந்தாவது கண்டம் முற்றிற்று.

---

## ஆருவது கண்டம்.

---

(ஆப. க்ரு. ஸூ. க-5, ஸூ-21. ப்ரவிச்ய ஹோமத்திற்காக வரன் க்ருஹத்திற்குப் புறப்பட வண்டி கட்ட மந்த்ரம்.)

𑌸𑌤𑍍𑌯𑍇𑌨𑍋𑌤𑍍𑌤𑌭𑌿𑌤𑌾 𑌭𑍂𑌮𑌿𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑍇𑌣𑍋𑌤𑍍𑌤𑌭𑌿𑌤𑌾 𑌦𑍍𑌯𑍌𑌃 ।

𑌋𑌤𑍇𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌦𑌿𑌵𑌿 𑌸𑍋𑌮𑍋 𑌅𑌧𑌿𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 ॥ ௧ ॥

பூமியானது மனோவாக்குக்காயங்களின் ஸத்யத்தால் கட்டுப்பட்டு நிற்கிறது. ஆகாசமானது ஸூர்யனால் கட்டுப்பட்டு நிலைத்திருக்கிறது. ஆதித்யர்கள் ஸூர்ய தேவதைகள் யஜ்ஞத்தால் தரித்து நிற்கிறார்கள். தேவலோகத்தில் ஸோமன் நிலைத்திருக்கிறான். (இவைகளைப் போல் இந்த ரதம் (வண்டி) நமக்குக் கட்டுப்பட்டு நிற்கவேண்டும்.)

(ஆப. க்ரு. ஸூ. க-5. ஸூ-22. வண்டியில் மாடுகளைக் கட்டும் மந்த்ரம்.)

𑌯𑍁𑌞𑍍𑌜𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌧𑍍𑌨𑌮𑌰𑍁𑌷𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌂 𑌪𑌰𑌿𑌤𑌸𑍍𑌥𑍁𑌷𑌃 ।

𑌰𑍋𑌚𑌨𑍍𑌤𑍇 𑌰𑍋𑌚𑌨𑌾 𑌦𑌿𑌵𑌿 ॥ ௨ ॥

தம்பதிகளின் யாத்ரைக்காக ஏற்பட்ட ரதம், அல்லது வண்டியில், மிகப் பெரியதாயும், நன்றாக நடக்கக்கூடியதாயும், மேடு பள்ளம் முதலியதைச் சுற்றி ஒழுங்காகப் போகக்கூடியதாயுமுள்ள மாடு அல்லது குதிரையை அந்த மனிதர்கள் நன்கு கட்டவேண்டும்.

இந்தச் சுப கார்யத்தில் ஸம்பந்தப்பட்ட அந்த வண்டிக்காரர்களும் ஆகாசத்தில் நக்ஷத்ரம் விளங்குவது போல் வெகு காலம் விளங்குவார்கள்.

(அதற்காக மற்றொரு மந்த்ரம்.)

யொமெயொமெ தவஸ்ஹரம் வாஜெவாஜெ ஹவாமஹெ।

ஸவாய இந்த்ரமூதயெ ॥ ௩ ॥

இந்தமாதிரி சுப யாத்ரைக்காக ரதம் அல்லது வண்டியை ஸம்யோஜனம் செய்யும் ஒவ்வொரு ஸமயத்திலும், வேறு ஒவ்வொரு கார்யத்திலும் க்ஷேமகாரியான இந்த்ர தேவனை ரக்ஷண கார்யத்திற்காக ஸ்துதி செய்கிற நாங்கள் அழைக்கிறோம்.

(ஆப. க்ரு. ஸூ. க-5. ஸூ-23. வதூவானவள் வண்டியில் ஏறும்போது வரன் சொல்லும் 4-மந்த்ரங்களில் முதலாவது மந்த்ரம்.)

ஸுகிம்ஶுகம் ஶல்மலிம் விஶ்வரூபம் ஹிரண்யவர்ணம் ஸுவ்ருதம் ஸுசக்ரம்। ஆரோஹ வத்ஸ்ருதஸ்ய லோகம் ஸ்யொநம் பத்யே வஹதும் க்ருணுஷ்வ ॥ ௪ ॥

ஹே! வது! இந்த ரதமானது கிம்சுகமரம், சல்மலி மரம் இவைகளால் நன்கு செய்யப்பட்டதும், அதனாலேயே பல வர்ணமுடையதும், ஸ்வர்ணம் போல் ப்ரகாசிப்பதும், நன்கு ஓடக்கூடியதும், நல்ல சக்ரமுள்ளதாயுமிருக்கிறது. இந்த ரதத்தில் நீ ஏறவும். இந்த சுப யாத்ரை காரணமாகப் பர்த்தாவான எனக்குத் தீர்க்காயுஸ்ஸாயிருக்கும் ஸ்தானத்தைக் கொடுக்கவும். மேலும் பித்ரு குலத்தில் உனக்குக் கிடைத்த வஸ்த்ர ஆபரணாதி சீர்களை இந்த ரதத்தில் வைத்து எனக்கு ஸுககரமாயிருக்கும்படி ரக்ஷிப்பாயாக.

(ஷை இரண்டாவது மந்த்ரம்.)

உத்தர ஆரோஹந்தீ வ்யஸ்யந்தீ வ்ருதந்யதஃ। மூர்தானம் பத்யுராரோஹ ப்ரஜயா च விராட்ப்வ ॥ ௫ ॥

ஹே! வது! நீ இந்தச் சிறந்த உயர்ந்த ரதத்தில் ஏறவும். அப்படியேறி உனது எதிரிகளாகிய சத்ருக்களை நிரஸனம் செய்து, உனது பர்த்தாவின் சிரஸ்ஸில் ஏறுகிறவளாகி (பர்த்தாவால் சிரஸ்ஸால் ச்லாகிக்கும்படியாக) நீ இருந்தும், நல்ல

ப்ரஜா ஸந்ததி பெற்றும் அதனால் விளங்குவாயாக. விராட் சந்தஸ் பத்து அக்ஷரமுள்ளது போல் நீயும் பத்து ப்ரஜைகளுள்ளவளாக வாழவும்.

(ஷை மூன்றாவது மந்த்ரம்.)

ஸம்ராஜ்ஞீ ஶ்வஶுரே பவ ஸம்ராஜ்ஞீ ஶ்வஶ்ர்வாம் பவ ।
நநாந்தரி ஸம்ராஜ்ஞீ பவ ஸம்ராஜ்ஞீ அதி தேவ்ருஷு ॥ ௩ ॥

ஏ! வது! நீ பதிக்ருஹத்தில் ப்ரதானமாயிருந்து, மாமனார், மாமியார்கள், நாத்தனார், பதியின் ஸஹோதரர்களான தேவரர்கள் ஆகியவர்களுக்கும் யஜமானியாக விளங்கவும்.

(ஷை நான்காவது மந்த்ரம்.)

ஸ்னுஷாணாம் ஶ்வஶுராணாம் ப்ரஜாயாஶ்ச தனஸ்ய ச ।
பதீனாஞ்ச தேவ்ருணாஞ்ச ஸஜாதானாம் விராட்பவ ॥ எ ॥

ஏ! வது! மேலும் நீ எனது க்ருஹத்திலுள்ள ஸ்னுஷைகள் (மருமகள்கள்), மாமனார், அவருடைய ஸஹோதரர்களான மாமனார்கள், ப்ரஜை, தனம், பர்த்தா, அவனுக்கு ஸமமானவர்கள், மைத்துனர்கள், மற்றும் க்ருஹத்தில் கூட வஸிப்பவர்கள் ஆகியவர்களுக்கும் யஜமானியாக விளங்கவும்.

(ஆப. க்ரு. ஸூ. க-5. ஸூ-24. வண்டிப் பாதையில் வர்ண நூல்களைப் பரப்பும் மந்த்ரம்.)

நீலலோஹிதே பவத꞉ க்ருத்யாஸக்திர் வ்யஜ்யதே ।
ஏதந்தே அஸ்யா ஜ்ஞாதய꞉ பதிர் பந்தேஷு பத்யதே ॥

இந்த ரத மார்க்கத்தில் ரதத்தின் சக்ரங்களின் கீழ் விரிக்கப்பட்ட ஸூத்ரம் (கயிறு) ஒன்று நீலமாயும், மற்றொன்று சிவப்பாயும் இருக்கின்றன. இந்த நூல்களை இவ்வாறு விரிப்பதன் மூலம், பிறரால் நம் மீது ஏவிவிடப்பட்ட பிசாசு, துர்த்தேவதை இவைகளின் நிரஸனம் நிச்சயமாக ஏற்படுகிறது. ஆகையால் அந்த அரிஷ்டம் நீங்கி இந்த வதூவின் பிதா முதலிய பந்துக்கள் க்ஷேமமடைகிறார்கள். பர்த்தாவாகிய நானும் இவளுடைய ஸ்நேஹ பந்தங்களில் கட்டுப்படுகிறேன்.

(ஆப. க்ரு. ஸூ. க-5. ஸூ-25. வண்டியில் யாத்ரை செய்ய மந்த்ரங்கள்-முதலாவது மந்த்ரம்)

யெ வஃவஶ்ருவூம் வஹதும் யக்ஷ்மா யந்தி ஜநாம் அநு |

புநஸ்தாந் யஜ்ஞியா தெவா நயந்து யத ஆகதா꞉ ‖ கூ ‖

இந்த யாத்ரை போகும்போது இந்த வதூவுக்குப் பித்ரு குலத்தில் கிடைத்த ஸந்தோஷகரமான வஸ்த்ர ஆபரணாதி சீர்களைத் திருடர் முதலிய துஷ்டர்கள் ஜனங்களின் எதிரில் அபஹரித்துக்கொண்டு போனால், அந்த த்ரவ்யங்களை யாக தேவதைகள் மறுபடி திருப்பி அபஹரித்து, அந்த த்ரவ்யங்கள் எங்கு இருந்தனவோ அங்கே கொண்டுபோய் வைக்கவேண்டும்.

(யாத்ரா மந்த்ரம் இரண்டாவது)

மா விதந் பரிபந்திநொ ய ஆஸீதந்தி தம்பதீ |

ஸுகெபிர் துர்கமதீதாமப த்ராந்த்வராதய꞉ ‖ கo ‖

இந்த யாத்ரையில் வழியில் சத்ருக்கள் திருடர்கள் வந்து தம்பதிகளை நெருங்கினால், அந்தத் திருடர்கள் தம்பதிகளைத் தொடமுடியாமல் போகவேண்டும். தம்பதிகளாகிய நாங்களும் நல்ல வழியின் மூலமாகத் துர்க்கமான இடத்தைத் தாண்டிப் போவோம். வழியில் வரும் சத்ருக்கள் விலகி ஓடவேண்டும்.

(யாத்ரா மந்த்ரம் மூன்றாவது.)

ஸுகம் பந்தாநமாருக்ஷமரிஷ்டம் ஸ்வஸ்திவாஹநம் |

யஸ்மிந் வீரொ ந ரிஷ்யத்யந்யேஷாம் விந்ததெ வஸு ‖கக‖

சூன்யமல்லாததும், மாடு குதிரை முதலிய வாஹனங்கள் ச்ரமப்படாமல் க்ஷேமமடையக்கூடியதும், நன்கு தடையின்றிப் போகக்கூடியதுமான மார்க்கத்தை ஏறி வந்துவிட்டேன். எந்த மார்க்கத்தில் நமது புத்ராதிகள், அல்லது ரக்ஷகர்கள், ச்ரமப்படமாட்டார்களோ, சோராதிகளால் பிறருடைய, சத்ருக்களுடைய, த்ரவ்யத்தை நம்மவர் (காவற்காரர்) அடைவரோ அத்தகைய மார்க்கத்தை அடைந்தேன்.

ஆறுவது கண்டம் முற்றிற்று.

## ஏழாவது கண்டம்.

(ஆப. க்ரு. ஸூ. க-5 ஸூ-26. புண்ய தீர்த்தம், நாற் சந்தி இவைகளைத் தாண்டுகையில் மந்த்ரம்)

தா ஈந்ஹவாநா ஈந்ஷா ஊரோண க்ஷயந்தம் ரயிம் ஊஹ
வீரம் வசஸ்யவே। க்ருதம் தீர்ஷ்டம் ஸூஹ்வாணம் ஷூஹ
ஷதீ ஷாணம் வ்யேஷா ஈவ்ஊஈந்திம் ஹதஷ ॥ க ॥

ஏ! அச்விநீ தேவர்களே! நீங்கள் ஒவ்வொரு மனிதர்களுடையவும் க்ருஹத்தில் ஸ்துதி செய்யப்படுகிறவர்கள். ஆகையால் உங்களை ஸ்தோத்ரம் செய்கிற எனக்கும் பணத்தையும், பத்துப் பிள்ளைகளையும் கொடுங்கள். ஏ! ஜலதேவதைகளான அச்விநிகளே! மேலும் இந்த வழியிலுள்ள ஜலத்தை (நதீ முதலியவை) நாங்கள் நன்கு ச்ரமமின்றித் தாண்டும்படி நீங்கள் செய்ய ப்ரார்த்திக்கிறேன். மேலும் வழியிலுள்ள தடையான ஸ்தாணுவையும் (துர்த்தேவதை, கட்டை) திருடர் முதலிய துர்ப்புத்தியுள்ளவர்களையும் நீங்கள் துரத்தியடிக்கவேண்டும்.

(ஆப. க்ரு. ஸூ. க-6. ஸூ-1. ஓடத்தில் ஏறவேண்டியிருந்தால் மந்த்ரம்)

அயந்நோ ஈஹ்யா: வாரஷ ஷவிந்தஷ அநவதி:।
வீரா நஷதரா ஷவ ஈவந்தாயாகாய வந்தவெ ॥ உ ॥

இந்த மரக்கலமாகிய ஓடமானது இந்தப் பெரிய நதியின் கரையை க்ஷேமமாகத் தாண்டிக்கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். ஏ! நதியே! நீயும் நாங்கள் நன்கு ஸௌகர்யமாகத் தாண்ட அநுகூலமாயிருப்பாயாக. அதன் மூலம் எங்களுக்குத் தீர்க்காயுஸ்ஸும், தேஜஸ்ஸும் ஏற்படவேண்டும்.

(ஆப. க்ரு. ஸூ. க-6. ஸூ-3. நதியைத் தாண்டியபிறகு ஜபிக்கும் மந்த்ரம்)

அஸ்ய வாரெ நிரஜயஸ்ய ஜீவா ஜ்யோதிரஶீஈஹி।
ஈஹ்யா ஜ ஈந்ஸ்வஸ்தயெ ॥ ந ॥

தாண்டவேண்டியதான இந்த நதியின் கரையில் உயிருடன் வந்து சேர்ந்து விட்டோம். அபயத்தை அடைவோம். இந்த்ர தேவனும் நமக்கு மஹத்தான க்ஷேமத்தைக் கொடுப்பவனுகட்டும்.

(ஆப. க்ரு. ஸூ. க-6. ஸூ-4. ச்மசானுதிகளைத் தாண்டும் போதும், பாத்ரங்கள் உடைந்தாலும் செய்யவேண்டியஹோமம். 6-மந்த்ரங்களில்-1-ஆவது மந்த்ரம்)

யத்3ய தே விஹ்வலிஸ்ருதிஷ்ஃ வாரா ஜத்ரஹ்ரு க்ஷுதஃ ।
ஸந்தாதா ஸந்தி4ம் மேவா வாரோவஸ நிஷ்க்ருதா விஹ்ரு
தம் வாநஃ ॥ ச ॥

எந்த இந்த்ரதேவன், உடைந்துபோன யஜ்ஞபாத்ரத்தை ஒட்டவைக்கும் த்ரவ்யமில்லாமலும், அல்லது அரக்கு முதலிய ஒட்டவைக்கும் வஸ்துவால் ஒட்டுவதற்கு முன்பாகவும், தனது யோகசக்தியால் அந்த உடைந்த இடத்தில் ஸந்தியை மீண்டும் (ஸந்தானம்) ஒட்டவைக்கிருனே, அல்லது அடியோடு வீணுகப் போன பாத்ரத்தை மறுபடி முன்போல் உத்பத்தி செய்து கொடுக்கிருனே அப்படிப்பட்ட பஹுதநவானுன இந்த்ரதேவனுக்கு இந்த ஹோமம் செய்கிறேன்.

(இரண்டாவது ஹோம மந்த்ரம்.)

ஐஷாமேஹ்ரு வாரூஷுமஸ் ஸநிம் மொப்ஸுமஹ்வம் ஹவ்
மாநாய ஸாய । ஸ்யாஞ் ஸூஞ்ந ஸூநயோ விஜாவாமேஹ்ரு ஸா
தே ஸாமதிஹ்க்ஷவஷே । ரு ॥

ஹே! அக்நிதேவனே! இந்த ஹோமத்தைச்செய்து உன்னை அழைக்கும் எனக்கு மிக உயர்ந்த அந்நத்தையும், பசுவாகிற த்ரவ்யத்தையும் சாச்வதமாயிருக்கும்படி கொடுத்து அருள்வாயாக. ஏ! அக்நிதேவனே! அதுமட்டுமன்று. எனக்கு ஸந்ததி வ்ருத்திகாரியான புத்ரன் பௌத்ரன் ஆகியவர்களும் உண்டாக வேண்டும். இம்மாதிரி பக்தர்களுக்கு அநுக்ரஹம் செய்கிற உனது நல்ல எண்ணமானது என்னிடமும் உண்டாக வேண்டும்.

(ஹோம மந்த்ரங்கள்)

ஊ௨ம் ஜெ வரு—ண ॥ ௬ ॥ தத்வா யாமி ॥ ௭ ॥ த்வன்னோ அக்நே ॥ ௮ ॥ ஸத்வன்னோ அக்நே ॥ ௯ ॥ த்வமக்நே அயாஸி ॥ ௰ ॥

(மேற்கண்ட ஐந்து மந்த்ரங்களையும் அவைகளின் அர்த்தங்களையும் 4-ஆவது கண்டத்தில் 17-18 ஆம் பக்கங்களில் பார்க்கவும்)

(ஆப. க்ரு. ஸூ. க-6. ஸூ-5. தேவதைகள் வஸிக்கும் மரங்கள், பால் உள்ள மரங்கள் முதலியவைகளைத் தாண்டும் போது சொல்லும் மந்த்ரம்)

யே கந்தர்வா அப்ஸரஸஸ்ச தேவீரேஷு வ்ருக்ஷேஷு வாநஸ்பத்யேஷ்வாஸதே । ஸிவாஸ்தே அஸ்யை வத்வை பவந்து மா ஹிம்ஸிஷு வஹதும் உஹ்யமாநாம் ॥ ௧௧ ॥

இந்த மார்க்கத்தில் உள்ள வனஸ்பதி என்கிற ஆல், அத்தி, அரசு முதலிய வ்ருக்ஷங்களில் வஸித்து வருகிற கந்தர்வ தேவதைகளும் அப்ஸரஸ்ஸு தேவிகளும் இந்த மணமகளுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பவர்களாக இருக்கட்டும். இவளுக்கு பித்ரு க்ருஹத்தில் கிடைத்த வஸ்த்ராபரண தனதான்யாதி சீர்களையும், கொண்டுபோகப்படுமிவளையும், அந்தத்தேவர்கள் ஹிம்ஸிக்காமல் காக்கவேண்டும்.

(ஷ இரண்டாவது மந்த்ரம்.)

யா ஓஷதயோ யா நத்யோ யாநி க்ஷேத்ராணி யா வநா ।
தே த்வா வது ப்ரஜாவதீம் ப்ரத்வே முஞ்சந்த்வம்ஹஸ: ॥

ஏ! வது! இந்த ப்ரயாண ஸமயத்தில் வழியில் எந்த ஓஷதிகள், எந்த நதிகள், எந்தத்தரைப்ரதேசங்கள், எந்தக் காடுகள் உன்னால் தாண்டி வரப்பட்டனவோ அவை யெல்லாம் உன்னை அநுக்ரஹித்து, புத்ரவதீயாகச் செய்யட்டும், உன்னிடமிருக்கும் தோஷத்தையும் நீக்கட்டும்.

(ஆப. க்ரு. ஸூ. க-6. ஸூ-6. வரனுடைய க்ருஹத்தை வதூவுக்குக் காட்டும் மந்த்ரம்.)

ஸாங்காஶயந் வஹதும் ப்ரஹ்மணா க்ருஹைரகோரேண
சக்ஷுஷா மைத்ரேண । பர்யாணத்தம் விஶ்வரூபம் யத
ஸ்யாஸ்ஸ்யோநம் பதிப்யஸ்ஸவிதா க்ருணோது தத் ॥ ௧௩ ॥

இந்த வதூவுக்கு என்னுடைய க்ருஹங்களைக் காட்டுகிறேன். கோரமில்லாததும், ஸௌம்யமானதுமான கண்ணால் இவள் அந்த க்ருஹத்தைப் பார்க்கும்படி காட்டுகிறேன். மேலும் பித்ரு குலத்திலிருந்து இவள் கொண்டுவந்துள்ள வஸ்த்ராபரண, தனதான்யாதி சீர் த்ரவ்யங்களையும் மந்த்ர கோஷத்துடன் அந்த எனது க்ருஹங்களோடு சேர்த்துக் காட்டுகிறேன். அத்துடன் பந்து மித்ரர் முதலியவர்களால் விவாஹ காலத்தில் இவளுக்குக் கொடுக்கப்பட்ட நாநாவித ஆபரண வஸ்த்ராதி வஸ்துக்களையும் ஸவிதாதேவன் எனக்கும் என் ப்ராதா முதலிய க்ருஹபதிகளுக்கும் க்ஷேமகரமாகச் செய்யவேண்டும்.

(ஆப. க்ரு. ஸூ. க-6. ஸூ-7. வண்டிமாடுகளை அவிழ்த்து விடும் மந்த்ரம்.)

ஆவாமகந் ஸுமதிர்வாஜிநீவஸூ ந்யஶ்விநா ஹ்ருத்ஸு
காமா அயம்ஸத । அபூதம் கோபா மிதுநா ஶுபஸ்பதீ
ப்ரியா அர்யம்ணோ துர்யாம் அஶீமஹி ॥ ௧௪ ॥

ஹவிஸ்ஸுகளாலும், ஸ்தோத்ரங்களாலும் நிறைந்தவர்களான ஹே! அஶ்விநீதேவர்களே! உங்களுடைய அனுக்ரஹ ரூபமான ஸத்புத்தியானது எங்களுக்குக் கிடைத்தது. அதனால் எங்கள் மனங்களில் உள்ள காமங்களும், இஷ்டங்களும் எங்களுக்கு நிச்சயமாகக் கிடைத்தன. தீர்த்தம் அன்னம் இவைகளுக்கு அதிபதிகளாயுள்ள நீங்கள் பிரியாத இரட்டையாக இருந்துகொண்டு வழியில் எங்களுக்கு ரக்ஷகர்களாக இருந்தீர்கள். இதனால் ஸூர்யாதிகளுடைய ப்ரீதியைப் பெற்று நாங்கள் இந்த எனது க்ருஹத்தில் ப்ரவேசிக்கிறோம்.

(௸ இரண்டாவது மந்த்ரம்.)

அயம் நோ தேவஸ்ஸவிதா ப்ருஹஸ்பதிரிந்த்ராக்நீ மித்ராவருணா ஸ்வஸ்தயே । த்வஷ்டா விஷ்ணு: ப்ரஜயா ஸம்ரராண: காம ஆயாதம் காமாய த்வா விமுஞ்சது ॥ ௧௬ ॥

இந்த வண்டி அல்லது ரதத்தை இழுத்துவந்தவ! காளையே! நீ எங்களுடைய இஷ்டப்படி இவ்விடம் வந்தாய். இனி உன்னை இந்த வண்டியிலிருந்து தேவர்களான ஸூர்யன், ப்ருஹஸ்பதி, இந்த்ராக்நீ, மித்ராவருணர்கள், த்வஷ்டா, விஷ்ணு ஆகியவர்கள் க்ஷேமமாக விடுவிக்கவேண்டும். நீ குழந்தைகுட்டிகளுடன் விளங்குவாயாக.

ஏழாவது கண்டம் முற்றிற்று.

---

## எட்டாவது கண்டம்.

---

(ஆப. க்ரு. ஸூ. க-6. ஸூ-8. காளைமாட்டுத் தோலைப் பரப்பி அதன் மூலம் க்ருஹத்தில் ப்ரவேசிக்க மந்த்ரம்.)

ஶர்ம வர்மேதமாஹராஸ்யை நார்யா உபஸ்த்ரே ।
ஸிநீவாலி ப்ரஜாயதாமியம் பகஸ்ய ஸுமதாவஸத் ॥

இந்த வதூ உட்காருவதற்காகக் காளைமாட்டின் தோலைக் கொண்டுவரவும். அது இவளுக்கு ஸுககரமாயும், சரீரப் பாதுகாப்பாகவுமிருக்கும். இந்த ஸமயத்தில் ஸினீவாலி தேவதையே! நீ இவளை அநுக்ரஹிப்பாயாக. இவள் நல்ல ப்ரஜையைப் பெறட்டும். அதுபோல் பகதேவதை (ஸூர்யன்) யின் அநுக்ரஹத்தினால் அவனுடைய நல்லெண்ணமும் இந்த வதூவுக்கு ஏற்படட்டும். (சதுர்த்தசியுடன் கூடிய அமாவாஸ்யை ஸினீவாலீ)

(ஆப. க்ரு. ஸூ. க-6. ஸூ-8. க்ருஹப்ரவேச மந்த்ரம், பெண் சொல்லவேண்டியது.)

க்ருஹாந் பத்ராந் ஸுமநஸ: ப்ரபத்யே(அ)வீரக்நீ வீரவத

𑌸𑍁𑌵𑍀𑌰𑌾𑌨𑍍 । 𑌇𑌰𑌾𑌂 𑌵𑌹𑌤𑍋 𑌘𑍃𑌤𑌮𑍁𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾𑌸𑍍𑌤𑍇𑌷𑍍𑌵𑌹𑌂
𑌸𑍁𑌮𑌨𑌾𑌸𑍍𑌸𑌂𑌵𑌿𑌶𑌾𑌮𑌿 ॥ ௨ ॥

வதூவாகிய நான் இந்தப் பதி க்ருஹத்திற்குள் ப்ரவேசிக்கிறேன். இந்த க்ருஹம் மனோஹரமாய் மங்களகரமாயிருக்கிறது. க்ருஹத்தில் வஸிப்பவர்கள் நல்ல மனஸ் படைத்தவர்களாயிருக்கிறார்கள். இந்த க்ருஹமானது புத்ராதிகளுக்கு ஆபத்துச் செய்யாததாக விளங்குவதுடன், புத்ர பௌத்ர தேவாதிகள் நிறைந்ததாயுமிருக்கிறது. ரக்ஷகர்கள் நல்லவர்களாயுள்ளதாயுமிருக்கிறது. இந்த வீடு பூர்ணமான அந்நம் உள்ளதாயும், அதிதி போஜனாதிகளில் நெய் அதிகமாக வர்ஷிப்பதாயுமிருக்கிறது. இவ்வளவு சிறப்பான இந்த க்ருஹத்தில் நான் நல்ல மனதுடன் ப்ரவேசித்து உட்காருகிறேன்.

(ஆப. க்ரு. ஸூ. க-6 ஸூ-10. க்ருஹப்ரவேச ஹோம மந்த்ரங்கள் 13. முதலாவது மந்த்ரம்.)

𑌆𑌗𑌨𑍍𑌗𑍋𑌷𑍍𑌠𑌂 𑌮𑌹𑌿𑌷𑍀 𑌗𑍋𑌭𑌿𑌰𑌶𑍍𑌵𑍈𑌰𑌾𑌯𑍁𑌷𑍍𑌮𑌤𑍍𑌪𑌤𑍍𑌨𑍀 𑌪𑍍𑌰
𑌜𑌯𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌵𑌿𑌤𑍍 । 𑌬𑌹𑍍𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌂 𑌜𑌨𑌯𑌨𑍍𑌤𑍀 𑌸𑍁𑌰𑌤𑍍𑌨𑍇𑌮𑌮𑌗𑍍𑌨𑌿𑌂
𑌶𑌤𑌹𑌿𑌮𑌾𑌸𑍍𑌸𑌪𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ ௩ ॥

என்னுடைய யஜமானையாகிய இந்த வதூ, இந்த க்ருஹத்தை வந்தடைந்தாள். தனது பித்ரு க்ருஹத்தில் கிடைத்த பசுக்கள், அச்வங்கள் முதலிய தனங்களுடன் வந்தாள். தீர்க்காயுஷ்மானான தனது பதியுடன் கூடியவள். உசிதமான காலத்தில் ப்ரஜையைப் பெற்று அதனால் ஸ்வர்க்காதி நல்ல லோகத்தைப் பெறுகிறவள். ஆகையால் இவள் அநேக ப்ரஜைகளைப் பெற்றும், நல்ல ஸம்பத்துடன் கூடியுமிருந்துகொண்டு இந்த ஔபாஸன அக்நியை நூறுவர்ஷ காலம் வரையில் பூஜித்துவரவேண்டும்.

(ஷை இரண்டாவது மந்த்ரம்)

𑌅𑌯𑌮𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌗𑍃𑌹𑌪𑌤𑌿𑌸𑍍𑌸𑍁𑌸𑌂𑌸𑌤𑍍𑌪𑍁𑌷𑍍𑌟𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 ।
𑌯𑌥𑌾 𑌭𑌗𑌸𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌦𑌦𑌦𑍍𑌰𑌯𑌿𑌂 𑌪𑍁𑌷𑍍𑌟𑍀𑌰𑌥𑍋 𑌪𑍍𑌰𑌜𑌾𑌂 ॥

இந்த ஔபாஸனுக்னி தேவன் எனது இந்த க்ருஹத்திற்கு அதிபதி, ரக்ஷகன். இந்த க்ருஹத்தால் இவன் சோபன க்ருஹமுள்ளவனுகிருன். க்ருஹத்திலிருப்பவர்களுக்கு புஷ்டியை வ்ருத்தி செய்கிறவன். இந்த ஔபாஸனுக்னிதேவன் பகன் என்ற தேவதைக்கு வரப்ரஸாதம் செய்தது போல் எங்களுக்கும் தனம், புஷ்டி, மேலும் ப்ரஜை இவைகளைக் கொடுக்கவேண்டும்.

(மூன்ருவது மந்த்ரம்)

ப்ரஜாய்ா குஹ்யாம ப்ரஜாவத ஐந்ராக்நீ ஶ்ர்ம யச்ச்தம் ।
யதைநயோ ந-ப்ருஜீயாதா உஹயொஜீவ்தொ: ப்ரஜா ॥

ஏ! ப்ரஜாபதியான தேவனே! நீ இந்தத் தம்பதிகளாகிய எங்களுடைய ப்ரஜைகளுக்கு ஸௌக்யத்தைக் (க்ஷேமத்தை) கொடுக்கவேண்டும். ஏ! இந்த்ராக்னி தேவர்களே! நீங்களும் இவர்களுக்குப் பிறக்கும் ப்ரஜைக்கு க்ஷேமத்தைக் கொடுங்கள். இந்தத் தம்பதிகளான இரண்டு பேர்களும் தீர்க்காயுஸ்ஸாக ஜீவித்திருக்கையில் இவர்களுடைய ப்ரஜை எப்படி மரணமின்றி ஜீவித்திருக்குமோ அப்படி நீங்கள் அநுக்ரஹிக்கவும்.

(நான்காவது மந்த்ரம்.)

தெந ஹ-மெதெந ஹவிஷாஜ்ய ஶாவ்யாயதாம வ-ந்: ।
ஜாயாம யாஶ்வா குவாக்ஷ ஷுாம ரஸெநாபிவர்த்தாம் ॥

இப்போது ஹோமம் செய்யப்படுகிற அந்தப் பெரிய ஹவிஸ்ஸால் இந்த நான் அடிக்கடி வ்ருத்தியடையவேண்டும். மேலும் இந்த எனக்குத் தேவதைகள் எவளைப் பார்யையாக வஹிக்கச் செய்தார்களோ அந்த ஜாயையையும் நெய், தயிர், பால் முதலிய ரஸத்தால் ஸம்ருத்தியுள்ளவளாகச் செய்யவேண்டும்.

(ஐந்தாவது மந்த்ரம்.)

ஈஹிவர்த்தாம வய்ஸாஹி ராஷ்ட்ரேண வர்த்தாம் ।
ரயா ஸஹஸ்ரவொஷஸௌ ஷுாஶநவெக்ஷிதஸ ॥ எ ॥

மேலும் இந்த வதூவரனவள் க்ருஹ, ஆராம, க்ஷேத்ராதி

ராஷ்ட்ரத்தினுலும், பால் முதலிய ரஸ த்ரவ்யத்தாலும் ஸம்ருத்தியடைந்தவளாக இருக்கவேண்டும். பந்து மித்ராதிகளாகிய பலபேர்களைப் போஷிக்கவேண்டியஅளவுக்குத் தன ஸம்ருத்தியுள்ளவளாயுமிருக்கவேண்டும். இந்தத் தம்பதிகள் வெளியாரிடமிருந்து உதவி எதையும் அபேக்ஷித்து நிற்காதவர்களாயிருக்கவேண்டும். பூர்ணகாமர்களாயிருக்கவேண்டும்.

(ஆருவது மந்த்ரம்.)

ஐ௦ஹைவஸ்தம் ஊவியௌஷ்ட௦ விஸ்வஊயாவ்யூஹ்ருதம் ।
ஊஹ்யா ஐ௦ஸ்ருஸ்வஸ்யெ ॥ ௬ ॥

இந்தத் தம்பதிகளாகிய எங்கள் இருவருடையவும் இரு அந்தராத்மாக்களான தேவர்களே! நீங்கள் இருவரும் இந்த க்ருஹத்திலேயே ஸ்திரமாக வஸிக்கவேண்டும். பிரிந்து போகக் கூடாது. சாஸ்த்ரப்படி ஏற்பட்டுள்ள ஸகல ஆயுஸ்ஸையும் அடைந்து அனுபவியுங்கள். மேற்கண்ட மஹத்தான க்ஷேமத்தைக் கொடுத்து அநுக்ரஹிக்க இந்த்ர தேவனும் க்ருபையைச் செய்யவேண்டும்.

(ஏழாவது மந்த்ரம்.)

யூவெயி வௌஷ்யா ஊயி ஊஹ்யஷாஊஸ்பஹஸ்தி: ।
ஊயா வத்யா வூஜாவதீ ஸஞ்வ ஶரஊஸ்ருதம் ॥ ௭ ॥

ஹே! வது! நீ என்னுல் போஷிக்கத்தக்கவளாகையால் என்னிடம் ஸ்திரமாக இருப்பாயாக. இதற்காகவே ப்ருஹஸ்பதி உன்னை எனக்குக் கொடுத்தருளினர். ஆகையால் பதியாகிய என்னுடன் வாழ்ந்து ப்ரஜாவதியாக வெகுகாலம் ஜீவித்திருப்பாயாக.

(எட்டாவது மந்த்ரம்.)

க்வஷ்டா ஜாயாஊஜநய த்வஷ்டாஊஸ்யெ க்வா௦ வதிம் ।
க்வஷ்டா ஸஹஸ்ரஊயம்ஷி தீவஊயா: க்ருணோத வாம் ॥

இந்த ஜாயையை (பார்யையை) த்வஷ்டா என்கிற தேவனே உத்பத்தி செய்தார். இந்தப் பார்யையின் பொருட்டு உன்னைப்

பதியாகவும் த்வஷ்டாவே ஏற்படுத்தினுர். ஏ! எனது அந்த ராத்மாவே! ஆகையால் அந்த த்வஷ்டா தேவனே தம்பதிகளான உங்கள் இருவருக்கும் அந்தராத்மாக்களுக்கும் வெகு தனங்களேயும், அதற்குமேல் நீண்ட ஆயுஸ்ஸையும் கொடுக்க வேண்டும்.

ஐ௨ம் ஜெ் வாரு௱ண ॥ அ ॥ தத்ஸூாயாதி ॥ கூ ॥ கூவஷெ்ாகு௱ஜெ ॥ ॥ க௦ ॥ வகூவஷெ்ா கு௱ஜெ ॥ கக ॥ கூஃஜெ௱ கயாவி ॥ க௨ ॥

(மேற்கண்ட ஐந்து மந்த்ரங்களேயும் அவைகளின் அர்த்தங்களேயும் 4-ஆவது கண்டத்தில் 17-18 ஆம் பக்கங்களில் பார்க்கவும்)

**எட்டாவது கண்டம் முற்றிற்று.**

---

## ஒன்பதாவது கண்டம்.

---

(ஆப. க்ரு. ஸூ. க-6. ஸூ-10. தோலின்மேல் தம்பதிகள் உட்காருவதற்கு மந்த்ரம்.)

ஐஹ ராவஃ வூஜாயஷ் திஹாஸ்்ா ஐஹ வ௱ரு௱ஷாஃ ।
ஐஹொ ஸஹஸ்ரு உக்ஷிணொ ாயஷொஷொ நிஷீதத௱ ॥

இந்த க்ருஹத்திலுள்ள ஹே! பசுக்களே! நீங்கள் மேன்மேலும் கன்றுபோடுங்கள். அதுபோல் ஹே! குதிரைகளே! நீங்களும் ஸந்ததியை வ்ருத்தி செய்யுங்கள். இந்த க்ருஹத்தில் உள்ள மனிதர்களே! ஸந்ததி வ்ருத்தியைச் செய்யுங்கள். மேலும் இந்த க்ருஹத்தில் ஆயிரக்கணக்கில் தானம் அல்லது தக்ஷிணே கொடுக்கக்கூடிய அளவுக்குத் தனவ்ருத்தியும் ஏற்பட வேண்டும்.

(ஆப. க்ரு. ஸூ. க-6. ஸூ-11. வதூவின் மடியில் ஒரு பாலகனே உட்காரச்செய்ய மந்த்ரம்.)

ஸொஜெநாஷிதூா ஐஷிந ஸொஜெந வ்யுவீ ஷூஜா ।
கயொ நக்ஷத்ராணா ஜெஷா உ௱வஷெ ஸொஉ குயீதஃ ॥

ஸோமதேவனால் தேவதைகள் பலிஷ்டர்களாகின்றனர். அந்த ஸோமனால் பூமியும் த்ருடமாயிருக்கிறது. இந்த ஸோமன் நக்ஷத்ரங்களின் மத்தியில் எப்படி இருந்து விளங்குகிறானோ, அதுபோல் இந்தப் பாலகனும் ஸோமனைப்போல் எல்லாவிதத்திலும் விளங்கி, உன் மடியில் உட்காரக்கடவான்.

(அந்தப் பாலகனுக்குப் பழங்களைக் கொடுக்கும் மந்த்ரம்.)

ப்ரஸ்வஸ்த: ப்ரேயம் ப்ரஜயா புவநே ஶோஶுசேஷ்ட || ௩ ||

ஏ! பழங்களே! நீங்கள் ப்ரஸவிக்கும் சக்திவாய்ந்தவைகளாயிருக்கிறீர்கள். ஆகையால் இந்த வதூவும் ப்ரஜைகளைப் பெற்று உலகில் ப்ரஸவிக்கட்டும்.

(ஆப. ஸூ. க-6. ஸூ-11. ஜபிக்கும் மந்த்ரங்கள் 2.)

இஹ ப்ரியம் ப்ரஜயா தே ஸம்ருத்⁴யதாமஸ்மிந் க்³ருஹே கா³ர்ஹபத்யாய ஜாக்³ருஹி | ஏநா பத்யா தநுவம் ஸம்ஸ்ருஜஸ்வாதா² ஜிவ்ரீ வித³த²மாவதா³ஸி || ௪ ||

ஏ! வது! உனக்கு இந்த க்ருஹத்தில், அல்லது இந்த லோகத்தில் ப்ரீதியானது இந்த ப்ரஜையால் ஸம்ருத்தியாகக் கிடைக்கட்டும். மேலும் இந்த க்ருஹத்தில் நீ க்ருஹத்திற்கு யஜமானியாகி விளங்குவாயாக. மேலும் இந்தப் பர்த்தாவாகிய என்னுடன் காம ஸுகங்களை அனுபவிக்கவேண்டி, சரீரத்தைக் கலந்துகொள்ளவும். இவ்வாறு ப்ரஜை, ஸம்பத், காமஸுகம், தர்மகார்யம் இவைகளை உனக்குக் கிழத்தனம் ஏற்படும்வரை நீண்டகாலம் அனுபவித்தவளாக இருந்து, பிறகு உன் கீழ் ஸந்ததிகளுக்கும் யஜ்ஞாதி தர்மகார்யங்களைச் செய்யவேண்டிய ப்ரகாரத்தை நீ செய்ததுபோல் உபதேசிப்பாயாக.

ஸுமங்க³லீரியம் வதூ⁴ரிமாம் ஸமேத பஶ்யத |
ஸௌபா⁴க்³யமஸ்யை த³த்த்வா யாதா²ஸ்தம் விபரேதந || ௫ ||

விவாஹத்தைப் பார்க்கவும், அநுக்ரஹிக்கவும் வந்துள்ள ஸ்த்ரீபுருஷர்களான பெரியோர்களைப் பார்த்து ப்ரார்த்தனை. ஏ! பெரியோர்களே! இந்த வதூவானவள் சுபமான மங்கள

முள்ளவளாயிருக்கிறாள். நீங்கள் எல்லோரும் வந்து கூடிப் பார்த்து அநுக்ரஹியுங்கள். இவளுக்கு மேலும் மேலும் ஸௌபாக்யம் ஏற்பட அருள் கொடுத்துவிட்டுப் பிறகு உங்கள் க்ருஹங்களுக்குச் செல்லுங்கள்.

(ஆப. க்ரு. ஸூ. க-6. ஸூ-12. த்ருவநக்ஷத்ரத்தைப் பார்க்கும் மந்த்ரம்.)

த்ருவக்ஷிதிர் த்ருவயோனிர் த்ருவமஸி த்ருவதஸ்ஸ்திதம் ।
த்வம் நக்ஷத்ராணாம் மேத்யஸி ஸமா பாஹி ப்ருதன்யத꞉ ॥ சு ॥

ஏ! த்ருவநக்ஷத்ர தேவனே! நீ ஸ்திரமான வஸதியுள்ளவன். சாச்வதமான உத்பத்தியுள்ளவன். நீயும் ஸ்திரமாயிருப்பதுடன் மற்ற நக்ஷத்ரங்களும் ஸ்திரமாயிருக்க நீ ஹேதுவாகிறாய். நீ மற்ற நக்ஷத்ரங்கள் சுற்றிவருகையில் அவைகளுக்கு முளைபோல் (மாடு கட்டும் முளை) இருக்கிறாய். இவ்வளவு ஸ்திரத் தன்மை பொருந்திய நீ என்னை விரோதிக்கும் எனது எதிரியிடமிருந்து காப்பாற்றுவாயாக.

(அருந்ததீ நக்ஷத்ரத்தைப் பார்க்கும் மந்த்ரம்.)

ஸப்தர்ஷய꞉ ப்ரதமாம் க்ருத்திகாநாமருந்ததீம் । யத்ரு
வதாம் ஹ நின்யுஷ்ஷட்க்ருத்திகா முக்யயோகம் வஹந்தீயமஸ்மாக
மேதத்வஷ்டமீ ॥ எ ॥

காச்யபாதிகளான ஸப்தருஷிகள் தங்கள் பார்யைகளான ஏழு க்ருத்திகைகளுள் ஏழாமவளான அருந்ததீ என்பவளையே பதிவ்ரதா குணம் காரணமாக முதலாமவளாக (முக்யஸ்தையாக) ஏற்படுத்தினார்கள். அவர்கள் அந்தமாதிரி அருந்ததியையே ஸ்திரமாக வைத்த காரணத்தால் மற்ற ஆறு க்ருத்திகைகளும் அருந்ததியை முக்யஸ்தையாக அங்கீகரித்தனர். அந்த அருந்ததீ போல் இந்த வதூவும் எனக்கு எட்டாவது க்ருத்திகையான அருந்ததியாக ப்ரகாசிக்கவேண்டும், பதிவ்ரதா குணத்தால். நானும் ஸப்தருஷிகளுக்கு எட்டாமவனாக ஆகவேண்டும்.

(ஆப. க்ரு. ஸூ. க-8. ஸூ-2. உபாகர்மாவிலும், உத்ஸர்ஜன கர்மாவிலும் தேவதையான ஸதஸஸ்பதி மந்த்ரம்.)

𑌸𑌦𑌸𑌸𑍍𑌪𑌤𑌿𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑍍𑌯𑌮𑍍 ।

𑌸𑌨𑌿𑌂 𑌮𑍇𑌧𑌾𑌮𑌯𑌾𑌸𑌿𑌷𑌮𑍍 ॥ ௮ ॥

[விவாஹ ப்ரயோக மத்யத்தில் இந்த மந்த்ரம் படிக்கப் படுகிறது. காரணம் தெரியவில்லை.]

ஸதஸஸ்பதி, யஜ்ஞபதி என்கிற தேவதை, அல்லது அக்னி தேவதை, அவன் இந்த்ரனுக்கு ப்ரீதிபாத்ரமாகியவன், மிக உயர்ந்தவன், பக்தர்களால் வேண்டப்பட்டவன். அந்த ஸத ஸஸ்பதியை நான் தனத்தையும், மேதையையும் கொடுக்கும்படி யாசிக்கிறேன்.

(ஆப. க்ரு. ஸூ. க-8. ஸூ-5. அக்னியில் ஸமித்தைச் சேர்க்க மந்த்ரம்.)

𑌉𑌦𑍍𑌦𑍀𑌪𑍍𑌯𑌸𑍍𑌵 𑌜𑌾𑌤𑌵𑍇𑌦𑍋𑌽𑌪𑌘𑍍𑌨𑌨𑍍𑌨𑌿𑌰𑍃𑌤𑌿𑌂 𑌮𑌮 ।

𑌪𑌶𑍂𑌂𑌶𑍍𑌚 𑌮𑌹𑍍𑌯𑌮𑌾𑌵𑌹 𑌜𑍀𑌵𑌨𑌂 𑌚 𑌦𑌿𑌶𑍋 𑌦𑌶 ॥ ௯ ॥

ஏ! அக்நிதேவனே! எனது எதிரியாக இருப்பவனை நிர ஸனம் செய்து நீ ஜ்வலித்து விளங்கவும். எனக்கு இஷ்ட காம்யங்களான பசு முதலியவைகளைக் கொடுப்பாயாக. ஜீவ நத்தையும் கொடுப்பாயாக. பத்துத் திக்குகளையும் எனக்கு வச மாகச் செய்யவும். ஸ்வாதீனமாக ஜீவிக்க.

(இரண்டாவது மந்த்ரம்.)

𑌮𑌾 𑌨𑍋 𑌹𑌿𑌂𑌸𑍀𑌜𑍍𑌜𑌾𑌤𑌵𑍇𑌦𑍋 𑌗𑌾𑌮𑌶𑍍𑌵𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌜𑌗𑌤𑍍 ।

𑌅𑌬𑌿𑌭𑍍𑌰𑌦𑌗𑍍𑌨 𑌆𑌗𑌹𑌿 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌮𑌾 𑌪𑌰𑌿𑌪𑌾𑌤𑌯 ॥ ௧௦ ॥

ஏ! ஜாதவேத: அக்நியே! என்னுடைய பசு, குதிரை, மனி தர்கள் ஆகியவைகளை நீ ஹிம்ஸிக்காதே. என்னுடைய மற்ற ஜங்கம ப்ராணிகளையும் ஹிம்ஸிக்காதே. எனது எதிரிகளுக்கு நீ ஹவிஸ்ஸை வஹிப்பதை விட்டு, என் ஹவிஸ்ஸை வஹிக்க வருவாயாக. அவ்வாறு செய்து எனக்கு ஸம்பத்தை எங்கும் சேர்த்துவைத்து வ்ருத்திசெய்வாயாக.

(ஆப. க்ரு. க-8. ஸூ-10. நான்காவது நாள் அபரராத்ரி யில் தண்ட உத்தாபன மந்த்ரம் முதலாவது.

உதீர்ஷ்வாதோ விஶ்வாவஸோ நமஸேடாமஹே த்வா |
அந்யாமிச்ச ப்ரபர்வ்யம் ஸஞ்ஜாயாம் பத்யா ஸ்ருஜ || ௧ ||

ஹே! விஶ்வாவஸு தேவனே! இந்தத் தண்டத்தில் ஸான்னித்யம் அடைந்திருந்த நீ இந்த விவாஹம் முடிந்துவிட்டதால் இனி இந்தச் சயநத்திலிருந்து வெளிப்படுவாயாக. உன்னை வதூவரர்களாகிய நாங்கள் நமஸ்காரத்தினால் யாசிக்கின்றோம். சிறு வயதுள்ள வேறு ஒரு கந்யகையை நீ அடைய விரும்புவாயாக. இந்த வதூவை இனி அவளுடைய பர்த்தாவோடு சேர்த்து வைப்பாயாக.

(இரண்டாவது மந்த்ரம்)

உதீர்ஷ்வாத: பதிவதீ ஹ்யேஷா விஶ்வாவஸும் நமோபி:
கீர்பிரீட்டே | அந்யாமிச்ச பித்ருஷதம் வ்யக்தாம் ஸ தே பாகோ
ஜநுஷா தஸ்ய வித்தி || ௨ ||

ஹே! விச்வாவஸுவே! இனி இந்தப் படுக்கையிலிருந்து எழுந்திருப்பாயாக. இந்த வதூவானவள் பர்த்தா உள்ளவளாக ஆகிவிட்டாள். உன்னை நமஸ்காரத்தினாலும் ஸ்தோத்ரங்களாலும் ப்ரார்த்திக்கிறேன். ஆகையால் நீ வேறு கந்யகையை, அதாவது விவாஹமாகாமல் தகப்பனார் க்ருஹத்தில் வஸிப்பவளை, கந்யாதானம் செய்யப்படாதவளை, அடையவிரும்புவாயாக. அதல்லவோ பிறப்பினால் உனக்கு ஏற்பட்ட பாகம். அதை அடையவும்.

(ஆப. க்ரு. க-8. ஸூ-10. ப்ராயஶ்சித்த ஹோம மந்த்ரம், முதலாவது)

அக்நே ப்ராயஶ்சித்தே த்வம் தேவானாம் ப்ராயஶ்சித்திரஸி ப்ரா
ஹ்மணஸ்த்வா நாதகாம: ப்ரபத்யே யாஸ்யை பதிக்நீ தநூ:
ப்ரஜாக்நீ பஶுக்நீ லக்ஷ்மிக்நீ ஜாரக்நீமஸ்யை தாம் க்ருணோமி
ஸ்வாஹா || ௩ ||

ஏ! அக்நிதேவனே! நீ ப்ராயஶ்சித்தியா யிருக்கிறாய். அதாவது நான் செய்த கர்மாவில் ஏற்பட்ட தோஷங்களை ஸமாதானம் செய்கிறவனாயிருக்கிறாய். ஆகையால் தேவர்களுள் உன்னை ப்ராயஶ்சித்தியாக ஏற்படுத்தியுள்ளார்கள். ஆதலால் இந்த விவாஹ கார்யம் செய்துகொண்ட ப்ராம்ஹணனாகிய நான் நாதனை விரும்பி உன்னைச் சரணமடைகிறேன். மேலும் இந்த என்னுடைய பார்யையான வதூவிடம் பர்த்தாவைக் கொல்லக் கூடிய அவலக்ஷணமோ, அல்லது ப்ரஜைகளை, பசுக்களை, ஸம்பத்தை நாசமாக்கக்கூடிய சரீர அவலக்ஷணமோ இருக்குமானால் இவளின் அந்தத் தோஷத்தை ஜாரனை நாசமாக்கக் கூடியதாகச் செய்கிறேன். இந்த ப்ரார்த்தனையை முன்னிட்டும் உன்னைச் சரணமடைகிறேன்.

(மேலும் மூன்று மந்த்ரங்கள்.)

வாயோ ப்ராயஶ்சித்தே ஸூர்ய ப்ராயஶ்சித்தே ப்ரஜாபதே ப்ராயஶ்சித்தே த்வம் தேவாநாம் ப்ராயஶ்சித்திரஸி ப்ராஹ்மணஸ்த்வா நாதகாம உபதாவாமி யாஸ்யை பதிக்னீ தநூ: ப்ரஜாக்னீ பஶுக்னீ லக்ஷ்மீக்னீ ஜாரக்னீ தாமஸ்யா அபஜஹி ஸ்வாஹா ॥

வாயு, ஆதித்யன், ப்ரஜாபதி என்ற மூன்று தேவதைகளை உத்தேசித்துத் தனித்தனியான ஹோமமந்த்ரங்கள். அர்த்தம் முதல் மந்த்ரத்தில் சொல்லியது போலவே.

(நான்காவது மந்த்ரம்.)

ப்ரஸவஶ்சோபயாமஶ்ச காடஶ்சார்ணவஶ்ச தர்ணஸிஶ்ச த்ரவிணஞ்ச பகஶ்சாந்தரிக்ஷஞ்ச ஸிந்துஶ்ச ஸமுத்ரஶ்ச ஸரஸ்வாம்ஶ்ச விஶ்வவ்யசாஶ்ச தே யம் த்விஷ்மோ யஶ்ச நோ த்வேஷ்டி தமேஷாம் ஜம்பே தத்ம: ஸ்வாஹா ॥ ௫ ॥

இந்த எனது விவாஹத்தால் அஸூயையைப்பட்டு எவர்கள் எங்களை த்வேஷிக்கிறார்களோ, அல்லது எவனை அவனுடைய அஸூயையை காரணமாக நாங்கள் த்வேஷிக்கிறோமோ அந்த

விரோதியை இந்த மந்த்ரத்தில் கூறப்படும் தேவதைகளின் பற்களில் சிக்கவைக்க ப்ரார்த்திக்கிறோம். ப்ரஸவன் என்ற தேவதை, உலகத்துக்கு அநுஜ்ஞையிடுகிறவன், பூமி, லிங்க ரூபம் தரிக்கும் ருத்ரன் (காட:) ஜலமுள்ள மடுக்களில் வஸிக்கும் தேவதை, க்ருஹதேவதை, பணம் அல்லது பலத்தின் அதிஷ்டான தேவதை, பகதேவதை, ஆகாசம், நதீ, ஸமுத்ரம், ஸரஸ்வான் என்ற தேவதை, இந்த்ரன் ஆகிய இவர்களுக்கு இந்த ஹோமம் செய்யப்படுகிறது.

(ஐந்தாவது மந்த்ரம்.)

மதுஶ்ச மாதவஶ்ச ஶுக்ரஶ்ச ஶுசிஶ்ச நபஶ்ச நபஸ்யஶ்சேஷஶ்சோர்ஜஶ்ச ஸஹஶ்ச ஸஹஸ்யஶ்ச தபஶ்ச தபஸ்யஶ்ச தேயம் த்விஷ்மோ யஶ்ச நோ த்வேஷ்டி தமேஷாம் ஜம்பே தத்ம: ஸ்வாஹா ॥ ௬ ॥

மேலும் ஆறு ருதுக்களின் தேவதைகளும், பன்னிரண்டு மாதங்களின் அதிஷ்டான தேவதைகளுமான மது, மாதவாதி தேவர்களும் எனது விரோதியை நிரஸிக்கவேண்டி அவர்களின் பற்களில் அவனைச் சிக்கவைக்கிறோம். மது, மாதவன் வஸந்தம் (சித்திரை, வைகாசி), ஶுக்ரன், சுசி க்ரீஷ்மம் (ஆனி, ஆடி), நபஸ், நபஸ்யன் வர்ஷருது, (ஆவணி, புரட்டாசி), இஷம், ஊர்ஜம் சரத்ருது (ஐப்பசி, கார்த்திகை), ஸஹம், ஸஹஸ்யம் ஹேமந்தருது (மார்கழி, தை), தபம், தபஸ்யம் சிசிருது (மாசி, பங்குனி), இந்த ருது மாஸ அதிஷ்டான தேவதைகளுக்கு இந்த ஹோமம் செய்யப்படுகிறது.

(ஆறாவது மந்த்ரம்.)

சித்தஞ்ச சித்திஶ்சாகூதஞ்சாகூதிஶ்சாதீதஞ்சாதீதிஶ்ச விஜ்ஞாதஞ்ச விஜ்ஞானஞ்ச நாம ச க்ரதுஶ்ச தர்ஶஶ்ச பௌர்ணமாஸஶ்ச தேயம் த்விஷ்மோ யஶ்ச நோ த்வேஷ்டி தமேஷாம் ஜம்பே தத்ம: ஸ்வாஹா ॥ ௭ ॥

மேலும் இந்த மந்த்ரத்தில் கூறப்பட்டுள்ள தேவதைகளும் எனது விரோதியை நிரஸிக்கவேண்டி அவர்களின் பற்களில் அவனைச் சிக்கவைக்கிறேன்.

அந்த:கரணம் அதன் க்ரியாசக்தி, அபிப்ராயம், அதன் விஷயம், அத்யாபனம், அத்யயனம், அறிவு, அறியவேண்டியது, நாமரூபங்கள், தர்சபூர்ணமாஸ யாகங்கள், இவைகளின் அதிஷ்டான தேவதைகளுக்கு இந்த ஹோமம் செய்யப்படுகிறது.

ஹு-ஸ்வாஹா ஹுவஸ்ஸ்வாஹா ஸுவஸ்ஸ்வாஹோம் ஸ்வாஹா ॥ அ ॥

பூ:, புவ:, ஸுவ: என்பது, ப்ருதிவீ முதலிய மூன்று லோகங்கள். இந்த மூன்றுலோக தேவதைகளுக்கு இந்த ஹோமம். ஓம் என்பது ப்ரப்ரம்ஹம்.

## பத்தாவது கண்டம் முற்றிற்று.

---

## பதினோராவது கண்டம்.

---

(ஆப. க்ரு. க-6. ஸு-10. வரனை வது பார்க்கும் மந்த்ரம்)

அவஶ்யம் த்வா மநஸா சேகிதாநம் தபஸோ ஜாதம் தபஸோ விபூதம் । இஹ ப்ரஜாமிஹ ரயிம் ரராணஃ ப்ரஜாயஸ்வ ப்ரஜயா புத்ரகாம ॥ க ॥

ஹிர்ண்யவண–ா ஶுசய: வாவகா+தா௩ கூவஶு௵

ஸெ்யா௩ா ஹவஜு ॥ கூ + சக ॥

மேற்படி மந்த்ரங்களையும், அர்த்தங்களையும் முதல் ப்ரச்னம் 2-ஆது கண்டம் 8-ஆம் பக்கம் பார்க்க. இந்த்ரன் = மேகம்.

(ஆப. க்ரு. க-12. ஸூ-6. தந்த தாவன மந்த்ரம்.)

சுஷாஜ்யாய வ்யூஹஸ்வம் தீவ–ாயமஷ ஜோஷோ ஹூ

யாவஸு। ஸொமொ ராஜாமய ஊமஹ்யூஜெ ஊவம் ஹுவெக்ஷ்யதி

ஹமெ௩ ஸஹ வவஸா ॥ கஉ ॥

ஏ! தந்தங்களே! நீங்கள் பற்களில் ஏற்படும் அசுத்த அழுக்குகளிலிருந்து விடுபடுங்கள். சுத்தமாகுங்கள். ஏனெனில் நீங்கள் சுத்தமாவதால் அந்நம் சாப்பிட அர்ஹதை ஏற்படுகிறது. இந்தத் தந்ததாவன கார்யத்தால் நான் அந்நாஹாரம் சாப்பிட்டு, தீர்க்காயுஸ்ஸாக இருக்கவேண்டும். இந்த ஸோம ராஜன் (காஷ்டமானது) இங்கு வந்துள்ளான். அவன் ஸௌபாக்யம், அழகு, தேஜஸ் இவைகளுடன் எனது முகத்தில் வாயில் பல் தேய்க்க ப்ரவேசிக்கப் போகிறான். இந்தக் காஷ்டமானது ஸோமராஜாவினால் அநுப்ரவேசம் செய்யப்பட்டு தேவஸான்னித்யமுள்ளது. (வ்ருக்ஷங்களுக்கு ஸோமன் ராஜா.)

(ஆப. க்ரு. க-12. ஸூ-8. புதுவஸ்த்ர தாரண மந்த்ரம்.)

ஸொமஸ்ய தநூரஸி தநுவம் மெ வாஹி ஸ்வாமா

தநூ ராவிஶ ॥ கங ॥

ஏ! வஸ்த்ரமே! நீ ஸோமதேவதையின் சரீரமாக விளங்குகிறாய். எனது சரீரத்தை ரக்ஷிக்கவேண்டும். நீயும் எனது சரீரமாகவே இருந்து என்னிடம் வரவேண்டும்.

(ஆப. க்ரு. க-12. ஸூ-8. சந்தனம் பூசிக்கொள்ளுமுன் அதைத் தேவதைகளுக்கு அர்ப்பணம் செய்ய மந்த்ரங்கள் மூன்று.)

நமோ க்ரஹாய சாபிக்ரஹாய ச நமஶ் ஶாகஜஞ்ஜபாப்யாம்

நமஸ்தாப்யோ தேவதாப்யோ யா அபிக்ராஹிணீ: ॥ கச ॥

க்ரஹ, அபிக்ரஹ என்கிற இரு தேவதைகளுக்கும் நமஸ்காரம். இதுபோல் ஶாக, ஜஞ்ஜப என்ற தேவதைகளுக்கும் நமஸ்காரம். மேலும், சந்தனம் பூசிக்கொள்ளும் ஸமயத்தில் ஸமீபத்தில் வருகிற மற்றத் தேவதைகளையும் நமஸ்கரித்துச் சந்தனப்ரதானம் செய்கிறேன், என்று கருத்து.

(ஆப. க்ரு. க-12. ஸூ-8. சந்தனம் பூசிக்கொள்ள மந்த்ரம்.)

அப்ஸரஸ்ஸு ச யோ கந்தோ கந்தர்வேஷு ச யத்யஶ: । தைவ்யோ

யோ மானுஷோ கந்தஸ் ஸ மா கந்தஸ் ஸுரபிர் ஜுஷதாம் ॥

அப்ஸரஸ் ஸ்த்ரீகளிடம் எந்த வாஸனையோ, கந்தர்வர்களிடமும் கீர்த்தியுள்ள எந்தக் கந்தமிருக்கிறதோ, மேலும், தேவதைகள் ஸம்பந்தமாயும், மனிதர்கள் ஸம்பந்தமாயும் அதாவது அவர்களால் அநுபவிக்கப்படுகிறதாயுள்ள எந்த வாஸனையோ, சந்தனமோ, அந்த வாஸனையெல்லாம் என்னிடம் வந்துசேரவேண்டும்.

(ஆப. க்ரு. க-12. ஸூ-8. ஸ்வர்ணமயமான மணியை ஜலத்தில் அலசும் மந்த்ரம்.)

இயமோஷதே த்ராயமாணா ஸஹமானா ஸரஸ்வதீ ।

ஸா மா ஹிரண்யவர்சஸம் ப்ரஹ்மவர்சஸினம் மா கரோது ॥

இந்த ஸ்வர்ணமணியானது பூமிபோல் ஓஷதிகளை ரக்ஷிப்பதாயும், கார்யங்களில் சக்தியுள்ளதாயும், பலமுள்ளதாயு மிருக்கிறது. இந்த ஸ்வர்ணமணியானது என்னைத் தங்கம் போன்ற தேஜஸ் உள்ளவனையும், ப்ரம்ஹவர்ச்சஸமுள்ளவனையும் செய்யட்டும்.

(ஆப. க்ரு. க-12. ஸூ-8. ஸ்வர்ணமணியைக் கழுத்தில் தரிக்க மந்த்ரம்.)

[illegible] ஸ்யோ வா ஶோ வத்தி
ஷ்ட்வ தீர்க்காயுத்வாய ஶதஶாரதாய । ஶதம் ஶரத்ப்ய ஆயு
ஷே வர்ச்சஸே ஜீவாத்வை புண்யாய ॥ ௧௭ ॥

ஏ! ஸ்வர்ணமணியே! நீ ம்ருத்யுபாசம் போலில்லாமல் சுபகரமாயிருக்கவேண்டும். உன்னைத் தரிப்பதால் எனது உடலை ஹிம்ஸிக்கவேண்டாம். மங்களகரமாக நீ என்னிடம் வரவேண்டும். நூறு வர்ஷத்துக்கு மேற்கொண்ட தீர்க்காயுஸ்ஸும் தேஜஸ்ஸும், ஜீவனமும், புண்யமும் எனக்கு இதனால் ஏற்படவும்.

(ஆப. க்ரு. க-12. ஸூ-8.)

ரேவதீஸ்த்வா வ்யக்ஷ்ணந்க்ருத்திகா: ॥ ௧௮ ॥

மேற்படி ஆறு மந்த்ரங்களையும், மந்த்ரங்களின் அர்த்தங்களையும் இரண்டாவது ப்ரச்னம் இரண்டாவது கண்டம் 63, 64, 65-ஆம் பக்கங்களில் பார்க்க.

ஏழாவது கண்டம் முற்றிற்று.

## எட்டாவது கண்டம்.

(ஆப. க்ரு. க-12. ஸூ-9. ஹோம மந்த்ரங்கள்.)

ஆயுஷ்யம் வர்சஸ்யம் ஸுவீர்யம் ராயஸ்போஷமௌத்
பிதம் । இதம் ஹிரண்யம் ஜைத்ர்யாயாவிஶதாந்மாம் ॥ ௧ ॥

இந்த ஹிரண்யமானது ஆயுர்ஹிதம், தேஜஸ்கரம், வீர்யமுடையது, தனத்தைக் கொடுப்பது, யசஸ்ஸைக் கொடுப்பதுமாம். இது ஜயஹேதுவாக என்னிடம் ஸம்பந்தப்படவேண்டும். நான் தரிக்கவேண்டும்.

(ஹிரண்யஸ்துதி மந்த்ரம்.)

உச்சைர்வாதி ப்ருதநாஜி ஸத்ராஸாஹம் தநஞ்ஜயம் । ஸ
ர்வாஸ்ஸமக்ரா ருத்தயோ ஹிரண்யேஸ்மிந்த்ஸமாஹிதா: ॥ ௨ ॥

நான் தரிக்கும் இந்த ஹிரண்யமானது. பெருமை சொல்லிக் கொள்வதற்காகியது. சத்ருவை வெல்லக்கூடியது. ஸத்யமாய் சத்ருக்களை ஜயிக்கக்கூடியது. சத்ருதனத்தையும் ஜயிக்கக் கூடியது. இவை போன்ற ஸகல ஸம்ருத்திகளும் இந்த ஹிரண்யத்தில் ஊன்றி வைக்கப்பட்டிருக்கின்றன.

ஶுநஂ ஹிரண்யஸ்ய பிதுரிவ நாம க்ருஹ்ணாமி।
தம் மா ஹிரண்யவர்சஸம் பூருஷு ப்ரியம் குரு ॥

இந்த ஹிரண்யத்தின் சுபமான நாமாவை நான் க்ரஹிக்கிறேன். பிதாவினுடைய பெயரைப் பிள்ளை க்ரஹிப்பதுபோல். ஹிரண்யமே! என்னை ஹிரண்யம்போல் ஜ்வலிக்கும் தேஜஸ் உள்ளவனும், ஸகல மனிதர்களிடமும் ப்ரியமுள்ளவனும் செய்வாயாக.

(ஹிரண்யதாரண மந்த்ரங்கள்.)

ப்ரியம் மா தேவேஷு குரு ப்ரியம் மா ப்ரஹ்மணே குரு। ப்ரியம் விஶ்யேஷு ஶூத்ரேஷு ப்ரியம் ராஜஸு மா குரு ॥ ௭ ॥

தேவர்கள், ப்ராம்ஹணர்கள், வைச்யர்கள், சூத்ரர்கள், ராஜாக்கள் ஆகிய ஒவ்வொருவருக்கும் என்னை ப்ரீதியுள்ளவனாகச் செய்யவும். அவர்கள் என்னிடம் ப்ரீதிவைக்கச் செய்யவும்.

யா திரஶ்சீ நிபத்யஸே அஹம் விதரணீ இதி।
தாம் த்வா க்ருதஸ்ய தாரயா யஜே ஸம்ராதனீமஹம் ॥ ௫ ॥

ஸம்ராதநீ என்கிற .தேவதையை நான் இந்த நெய்தாரையால் ஹோமம் செய்து பூஜிக்கிறேன். ஏ ஸம்ராதநீ தேவதையே! பூமிதேவியே! "எல்லா உலகத்திற்கும் ப்ரஜைகளுக்கும் நானே தாரணத்தைச் செய்கிறவள்", என்று நீ நினைத்துக் குறுக்காகப் படுத்துக்கொண்டிருக்கிறாய்.

ஸம்ராதந்யை தேவ்யை ஸ்வாஹா ப்ரஸாதந்யை தேவ்யை ஸ்வாஹா ॥ ௬ ॥

ஸம்ராதநீ (பூமி), ப்ரஸாதநீ (வாக்கு) அவர்களுக்கு இந்த ஹோமத்தைச் செய்கிறேன்.

ஸ ஓ்ராஜ்ஞு விராஜ்ஞாஹிஸ்ரீ ய-ராவ்நொ ஒ்ரஹெ।

லக்ஷ்மீ ராஷ்ட்ரஸ்ய யாமுவெதயாமா ஸஂஸ்ருஜாமஸி॥

நன்றாய் ப்ரகாசிப்பவனும், வெகுவிதமாய் ப்ரகாசிப்பவனுமான என்னை, எனது க்ருஹத்தில் அபிமுகமாயுள்ள லக்ஷ்மி எதுவோ அத்துடனும், ராஜ்யத்தின் முகத்திலுள்ள லக்ஷ்மி எதுவோ அத்துடனும் சேர்த்துக்கொள்ளுகிறேன்.

(ஆப. க்ரு. க-12 ஸூ-௯-11. புஷ்பமாலையைத் தரிக்கும் மந்த்ரங்கள்.)

ஶுஹிகெ ஶிர ஆரொஹ ஶொஹயஂதீ முவம் மம।

முவஂஹி மம ஶொஹய ஹூயாஂஸஞ்சு ஹஂ கூரு॥

ஏ சுபமான மாலையே! எனது சிரஸ்ஸில் ஏறுவாயாக. எனது முகத்தைச் சோபிக்கச் செய்பவளாய். எனது முகத்தைச் சோபிக்கச்செய். எனக்கு அதிகமான பாக்யத்தையும் செய்வாயாக.

யாமாஹர ஜமதக்நிஃ ஶ்ரத்தாயை காமயாநெந்த்ரு।

ஊமாஞாமஹி நஹெ்ர ஹஂ ஹமெந ஸஹ வர்சஸா ॥ கூ ॥

எந்த மாலையை ஜமதக்நிருஷியானவர் ஆசை கொண்ட ச்ரத்தாதேவிக்குப் போட்டாரோ, அந்த மாலையை நானும் சிரஸ்ஸில் கட்டிக்கொள்ளுகிறேன். ஸௌபாக்யம் தேஜஸ் இவைகளுடன்.

(ஆப. க்ரு. க-12 ஸூ-௯-11. கண்ணில் மை இட்டுக்கொள்ள மந்த்ரம்.)

யதாஞ்நம் த்ரைககு஦ம் ஜாதம் ஹிமவத உபரி।

தெந வாமாஞ்ஜெ தெஜஸெ வர்சஸெ ஹகாய ௨ ॥ கஂ ॥

த்ரிககுத் என்கிற மலையிலும், ஹிமவத் பர்வதத்தின் மேலும் உண்டாகியதான மையால், நேத்ரங்களை உங்களைப் பூசுகிறேன். தேஜஸ், வர்ச்சஸ், பாக்யம் இவைகள் உண்டாக வேண்டி.

## எட்டாவது கண்டம் முற்றிற்று.

---

## ஒன்பதாவது கண்டம்.

---

𑌮𑌯𑌿 𑌪𑌰𑍍𑌵𑌤𑌪𑍂𑌰𑍁𑌷𑌂 𑌮𑌯𑌿 𑌪𑌰𑍍𑌵𑌤𑌵𑌰𑍍𑌚𑌸𑌂 𑌮𑌯𑌿 𑌪𑌰𑍍𑌵𑌤𑌭𑍇𑌷𑌜𑌂 𑌮𑌯𑌿 𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌯𑍁𑌷𑌮𑍍 ॥ ௧ ॥

என்னிடம் பர்வதத்தின் பௌருஷம் உண்டாக வேண்டும். பர்வதத்தின் காந்தி, பர்வதத்தின் ஆரோக்யம், பர்வதத்தின் தீர்க்காயுஸ் ஆகியவை என்னிடம் உண்டாக வேண்டும்.

(ஆப. க்ரு. க-12. ஸூ-11. மாணவகன் கண்ணாடியைப் பார்க்க மந்த்ரம்.)

𑌯𑌨𑍍𑌮𑍇 𑌵𑌰𑍍𑌚𑌃 𑌪𑌰𑌾𑌗𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍁𑌪𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ।
𑌇𑌦𑌂 𑌤𑌤𑍍𑌪𑍁𑌨𑌰𑌾𑌦𑌦𑍇 𑌦𑍀𑌰𑍍𑌘𑌾𑌯𑍁𑌤𑍍𑌵𑌾𑌯 𑌵𑌰𑍍𑌚𑌸𑍇 ॥ ௨ ॥

ப்ரம்ஹசர்ய நியம க்லேசத்தால் எனது எந்தத் தேஜஸ் (சக்தி) குறைந்து போய் மறுபடி கண்ணாடியிலுள்ள என்னிடம் வருகிறதோ, அந்த இந்தத் தேஜஸ்ஸை நான் மறுபடி க்ரஹிக்கின்றேன். தீர்க்காயுஸ், வர்ச்சஸ் இவை ஏற்பட வேண்டியதற்கு.

(ஆப. க்ரு. க-12. ஸூ-11. பாதரக்ஷைகளைத் தரிக்க மந்த்ரம்.)

𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑍇 𑌸𑍍𑌥𑍋 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑌾 𑌮𑌾 𑌸𑌂𑌤𑌾𑌪𑍍𑌤𑌮𑍍 ॥ ௩ ॥

ஏ! பாதரக்ஷைகளே! நீங்கள் தேவதைகளுக்கும் நடக்க யோக்யமானவைகள். உங்களை நான் தரிக்கிறேன். (புண் முள் முதலியவைகளால்) என்னை ஸந்தாபம் அடையச் செய்யாதீர்கள்.

(ஆப. க்ரு. க-12. ஸூ-11. குடையைத் தரிக்க மந்த்ரம்.)

ப்ரஜாபதேஶ்ஶரணமஸி ப்ரஹ்மணஶ்சதிர்விஶ்வஜநஸ்ய சா

யாஸி ஸர்வதோ மா பாஹி ॥ ௪ ॥

ஏ! குடையே! ப்ரஜாபதி தேவனுக்கு நீ வீடு போல் இருக்கிறாய். ப்ரம்ஹத்திற்கு மேற் கூரைபோல் இருக்கிறாய். ஸகல ஜனங்களுக்கும் நிழலாக இருக்கிறாய். என்னை எல்லா விடத்திலும் காப்பாற்றுவாயாக.

(ஆப. க்ரு. க-12. ஸூ11. (கழி) தண்ட தாரண மந்த்ரம்.)

தேவஸ்ய த்வா ஸவிது꞉ ப்ரஸவேஶ்விநோர் பாஹு

ப்யாம் பூஷ்ணோ ஹஸ்தாப்யாமாததே இந்த்ரஸ்ய

வஜ்ரோஸி வார்த்ரக்ந꞉ ஶர்ம மே பவ யத்பாபம் தந்நிவாரய ॥ ௫ ॥

இந்தத் தண்டத்தை ஸவித்ரு தேவதையின் அனுஜ்ஞையால் நான் தரிக்கிறேன். அஶ்விநி தேவர்கள் ஸாந்நித்யமடைந்த இந்தக் கைகளால் எடுக்கிறேன். பூஷா என்ற ஸூர்ய தேவதையின் ஸாந்நித்யமுள்ள நுனிக்கைகளால் தரிக்கிறேன். ஶ்வா முதலிய சத்ருவை நிரஸிக்க. நீ இந்த்ரனுக்கு வஜ்ராயுதம் போல் சத்ருக்களைக் கொல்பவனாக எனக்குக்ஷேமத்தைக் கொடு. பாபஜந்துக்களை விரட்டி விடு.

(ஆப. க்ரு. க-12.ஸூ13. திக்குகளின் உபஸ்தான மந்த்ரம்.)

தேவீ꞉ ஷடுர்வீருரு ண꞉ க்ருணோத விஶ்வே தேவாஸ

இஹ வீரயத்வம் । மாஹாஸ்மஹி ப்ரஜயா மா தநூபிர்மா ரதாம

த்விஷதே ஸோம ராஜந் ॥ ௬ ॥

ஏ! ஆறு திக் தேவிகளே! நீங்கள் எனக்கு விஸ்தாரமான ஸம்பத்தை அனுக்ரஹிக்கவும். திக் அதிபதிகளான எல்லாத் தேவர்களே! இந்தக் கர்மாவில் என்னை வீர்யமுள்ளவனாக அல்லது புத்ரவானாகச் செய்யுங்கள்.

இரண்டாவது மந்த்ரத்தால் நக்ஷத்ரங்கள், சந்த்ரன் இவர்களுக்கு உபஸ்தானம். நக்ஷத்ராதிபதியான ஹே! ஸோமனே! நாங்கள் ப்ரஜையினால் குறைவுள்ளவராக ஆகாதிருக்க வேண்டும்.

புத்ரனில்லாத குறை எங்களுக்கு வேண்டாம். அதுபோல் எங்களது சரீரங்களாலும் நாங்கள் குறைவை அடையக்கூடாது. எமது எதிரிக்கு நாங்கள் வசப்பட்டவராக இருக்கக்கூடாது.

(ஆப. க்ரு. க-13. ஸூ-3. மதுபர்க்க பூஜா-- ஆஸநமந்த்ரம்.)

ராஷ்ட்ரப்ருத³ஸ்யாசார்யாஸந்தீ³ மா மத்³யோஷம் ராஷ்ட்ரப்ரு
த³ஸி ஸம்ராடா³ஸந்தீ³ மா மத்³யோஷம் ராஷ்ட்ரப்ருத³ஸ்யதி⁴பத்ந்யா
ஸந்தீ³ மா மத்³யோஷம் ॥ எ ॥

மேற்படி மந்த்ரத்தின் அர்த்தத்தை இரண்டாவது ப்ரச்நம் நான்காவது கண்டம் 73-ஆவது பக்கம் பார்க்கவும்.

அடுத்த இரண்டு மந்த்ரங்களின் அர்த்தமும் அதுபோலவே.

அபிஷிக்தனை க்ஷத்ரியனின் ஆஸனம் ஸம்ராடாஸந்தீ, மண்டலாதிபதியான க்ஷத்ரியனின் ஆஸனம் அதிபத்ந்யாஸந்தீ எனப்படும்.

(ஆப. க்ரு. க-13. ஸூ-5. பாத்ய ஜல அபிமந்த்ரண மந்த்ரம்.)

விராஜோ தோ³ஹோ(அ)ஸி விராஜோ தோ³ஹமஶீய ।
மயி பாத்³யாயை விராஜோ தோ³ஹ: ॥ அ ॥

இந்த மதுபர்க்க கர்மாவில், பாதப்ரக்ஷாளணார்த்தம் ஏற்பட்ட இந்தத் தீர்த்தங்கள் எனது சத்ருக்களை நாசமாக்க வேண்டும். நான் இந்தக் குலத்தில் ப்ரம்ஹவர்ச்சஸம் உள்ளவனாக இருக்க இவை உதவ வேண்டும்.

(ஆப. க்ரு. க-13. ஸூ-6. ஆத்ம ஸ்பர்சன மந்த்ரம்.)

மயி மஹோ மயி யஶோ மயீந்த்³ரியம் வீர்யம் ॥ கூ ॥

ப்ராம்ஹணன் எனது பாதத்தைத் தொட்டு ப்ரக்ஷாளம் செய்த அபசாரத்தால் எனக்குக் கெடுதல் எதுவும் நேரக் கூடாது. பூஜை, யஶஸ் கண் முதலிய இந்த்ரியம், சக்தி ஆகியவை என்னிடம் ஸ்திரப்பட்டிருக்க வேண்டுகிறேன்.

(ஆப. க்ரு. க-13. ஸூ-8. அர்க்ய தீர்த்தத்தை அபிமந்த்ரிக்கும் மந்த்ரம்.)

ஸோமநு யஶஸா வர்ச்சஸா ஸம்ஸ்ருஜ பயஸா தேஜ
ஸா ச । தம் மா ப்ரியம் ப்ரஜாநாம் குர்வதிபதிம் பஶூ
நாம் ॥ ௧௦ ॥

ஏ! அர்க்ய தீர்த்தமே! நீ என்னிடம் வரவேண்டும். நீ என்னை அடைந்து, யஶஸ், வர்ச்சஸ், பயஸ், தேஜஸ் முதலிய க்ஷேமங்கள் என்னை அடையும்படி செய்யவும். மேலும் என்னை ப்ரஜைகளுக்கு ப்ரியனாயும், பசுக்களுக்கு அதிபதியாகவும் செய்யவும்.

(ஆப. க்ரு. க-13. ஸூ-9. அர்க்ய ஜலம் அஞ்ஜலியில் விடப்படும் பொழுது ஜபிக்கப்படும் மந்த்ரம்.)

விராஜோ தோஹோஸி விராஜோ தோஹமஶீய மயி
பத்யாய விராஜ ॥ ௧௧ ॥

ஏ! ஜலமே! நீ அன்னத்தின் பெருக்காக ஆகிறாய். ஆகையால் உன்னை வாங்குவதால் அன்னத்தின் பெருக்கை நான் அடையக் கடவேன். எனது புத்ரனையும் இவ்விதமாகிய வனாகச் செய்வாயாக.

(ஆப. க்ரு. க-13. ஸூ-10. மீதியுள்ள ஜலம் கீழ்ப் பக்கத்தில் விடப்படும் போது அநுமந்த்ரணம் செய்யும் மந்த்ரம்.)

ஸமுத்ரம் வ: ப்ரஹிணோமி ஸ்வாம் யோநிமபி க³ச்ச²த ।
அரிஷ்டா: ப்ரஜயா ஸர்வபாஸம் மா பராஸேசி மத்பய: ॥

ஏ! ஜலங்களே! உங்களை ஸமுத்ரத்தை அடைவிக்கிறேன். உங்களுக்குக் காரணமான ஸமுத்ரத்தை அடையுங்கள். உங்களது அனுக்ரஹத்தால் நான் ப்ரஜைகளால் குறைவற்றவனாவேன். என்னிடமிருந்து ஜலம் உபயோகார்ஹமல்லாததாய் ஆகவேண்டாம்.

## ஒன்பதாவது கண்டம் முற்றிற்று

## பத்தாவது கண்டம்.

(ஆப. க்ரு. க-13. ஸூ-11. மதுபர்க்கத்தை அபி மந்த்ரணம் செய்யும் மந்த்ரங்கள் இரண்டு.)

முதல் மந்த்ரம்.

𑌤𑍍𑌰𑌯𑍍𑌯𑍈 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑍈 𑌯𑌶𑍋𑌽𑌸𑌿 𑌯𑌶𑌸𑌾𑌂 𑌯𑌶𑍋𑌽𑌸𑌿
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌦𑍀𑌪𑍍𑌤𑌿𑌰𑌸𑌿 । 𑌤𑌂 𑌮𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌧𑌿
𑌪𑌤𑌿𑌂 𑌪𑌶𑍂𑌨𑌾𑌮𑍍 ॥ ௧ ॥

ஏ! மதுபர்க்கமே! நீ மூன்று வேதங்களின் யசஸ்ஸாயிருக்கிறாய். சிறந்த யசஸ்ஸாயிருக்கிறாய். கீர்த்திக்கும் கீர்த்தியாய் இருக்கிறாய். வேதத்தின் ப்ரகாசமாயிருக்கிறாய். மற்றது முன் மந்த்ரத்திலுள்ளது போல்.

இரண்டாவது மந்த்ரம்.

𑌶𑍍𑌰𑍀𑌰𑍍𑌮𑌾𑌭𑌜𑌿𑌤𑍍𑌯𑍇𑌷𑌾 ॥ ௨ ॥

மேற்படி மந்த்ரத்தின் அர்த்தத்தை இரண்டாவது ப்ரச்நம் ஒன்பதாவது கண்டம் 92-ஆம் பக்கம் பார்க்க.

(ஆப. க்ரு. க-13. ஸூ-12. மதுபர்க்க ப்ராசனத்திற்கு முன்னும் பின்னும் ஆசமன மந்த்ரங்கள்.

𑌅𑌮𑍃𑌤𑍋𑌪𑌸𑍍𑌤𑌰𑌣𑌮𑌸𑍍𑌯𑌮𑍃𑌤𑌾𑌪𑌿𑌧𑌾𑌨𑌮𑌸𑌿 ॥ ௩ ॥

தீர்த்தமே! அம்ருதமே! நீ உபஸ்தரணமாயிருக்கிறாய். சாப்பிடப்போகிற மதுபர்க்க ஹவிஸ்ஸுக்கு முன்னால் செய்யப்படும் உபஸ்தரணமாகிறாய். சாப்பிட்ட பின் அதற்கு அபிதானம் மூடிபோல் இருக்கிறாய். அம்ருதத்தால் செய்யப்படும் உபஸ்தரணம் என்றும் கூறலாம்.

(ஆப. க்ரு. க-13. ஸூ-13. மதுபர்க்க ப்ராசந மந்த்ரம்.)

𑌯𑌨𑍍𑌮𑌧𑍁𑌨𑍋 𑌮𑌧𑌵𑍍𑌯𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌰𑍂𑌪𑌮𑌨𑍍𑌨𑌾𑌦𑍍𑌯𑌂 𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑍍 । 𑌤𑍇𑌨𑌾
𑌹𑌂 𑌮𑌧𑍁𑌨𑍋 𑌮𑌧𑌵𑍍𑌯𑍇𑌨 𑌪𑌰𑌮𑍇𑌣 𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌨𑍍𑌨𑌾𑌦𑍍𑌯𑍇𑌨 𑌵𑍀𑌰𑍍𑌯𑍇𑌣
𑌪𑌰𑌮𑍋𑌽𑌨𑍍𑌨𑌾𑌦𑍋 𑌮𑌧𑌵𑍍𑌯𑍋𑌽𑌸𑌾𑌨𑌿 । ௪ ॥

இந்த மதுபர்க்கமானது சிறந்த தேனிலிருந்து உண்டாக்கப் பட்டதாயும், தேன் நிறைந்ததாயும், அதனால் ச்ரேஷ்டமான அந்நமாயும், வீர்யமுள்ளதாயுமிருக்கிறது. இப்படிச் சிறந்த மதவ்யமாயும், உத்தம அந்நாத்யமாயும், வீர்யமாயுமுள்ள அதனால் நானும், உயர்ந்த அன்னம் புஜிக்கிறவனாயும், மதுபர்க்க பூஜார்ஹதை யுள்ளவனாயும் ஆகவேண்டும்.

(ஆப. க்ரு. க-13. ஸூ-16. மதுபர்க்கப் பசுவை அபி மந்த்ரணம் செய்ய மந்த்ரம்.)

கௌரஸ்யபஹதபாப்மா(அ)பபாப்மானஞ்ஜஹி மமசாமுஷ்ய ச ॥

ஏ! பசுவே! நீ பாபங்கள் தோஷங்கள் அற்றதாக விளங்குகிறாய். ஆகையால் என்னுடையவும், இந்தத்தானம் செய்கிறவனுடையவும் பாபத்தைப் போக்குவாயாக.

(ஆப. க்ரு. க-13. ஸூ-16. பசு வபாஹோம மந்த்ரம்.)

அக்நி: ப்ராஶ்நாது ப்ரதமஸ்ஸ ஹி வேத யதா ஹவி: ।
அரிஷ்டமஸ்மாகம் க்ருண்வந் ப்ராஹ்மணோ ப்ராஹ்மணேப்ய: ॥

இந்த வபாஹவிஸ்ஸை அக்நிபகவான் முதலில் சாப்பிடட்டும். ஏனெனில் ஹவிஸ் ஸரியானதா என்று அவனே அறியக் கூடியவன். ப்ராம்ஹணர்களுக்கும் ப்ராம்ஹணனான, அவ்வளவு உயர்ந்தவனான அக்நிதேவன் எமக்குக் குறைவு ஏற்படாமல் க்ஷேமத்தை செய்பவனாய்ச் சாப்பிடவேண்டும்.

(ஆப. க்ரு. க-13. ஸூ-17. மதுபர்க்கப் பசுவை வதம் செய்யாமல் விட்டு விட மந்த்ரம்.)

யஜ்ஞோ வர்த்ததாம் யஜ்ஞஸ்ய வ்ருத்திமநு வர்த்தஸ்வ திர
ஸ்வதிதம் மா கர்வர்த்ததோ(அ)ஸ்மான் மநுஷ்யேஷு ஸூ
பாஸஸ ॥ எ ॥

இந்தப் பசுவை வதம் செய்யாமல் விட்டு விடுவதால் இந்த மதுபர்க்க யஜ்ஞத்திற்குக் குறைவு ஏற்படாமல் இது வ்ருத்தியடைய (பூர்த்தி யடைய) வேண்டும். யஜ்ஞம் பூர்த்தியாவதை யனுஸரித்து, பசுவே! நீயும் வ்ருத்தியடைவாயாக. நீ மதுபர்க்கப்

பூஜார்ஹமாயிருக்கிறாய். என்னையும் பூஜ்யனாகச் செய். உன்னால் நானும் மனிதர்களுள் கௌரவிக்கத் தக்கவனாக ஆக வேண்டும்.

மாதா ருத்ராணாம் துஹிதா வஸூனாம் ஸ்வஸாதித்யானாமம்ருதஸ்ய நாபி: । ப்ரணுவோசம் சிகிதுஷே ஜனாய மாகாமனாகாமதிதிம் வதிஷ்ட ॥ அ ॥

வதம் செய்யப்படாமல் விடுவிக்கப்படும் இந்தப் பசுவானது தேனுவாகப் பால் கொடுக்கிறதாக ஆகப் போகிறது. இந்தப் பசு, ருத்ர தேவதைகளுக்கு மாதா. வஸுதேவர்களுக்குப் பெண். ஆதித்யர்களுக்கு ஸஹோதரீ. அம்ருதமென்கிற யாகத்திற்கு நாபி (கொப்பூழ்) போல் மர்மஸ்தானமாயிருக்கிறது. ஆகையால் இதை அறிந்த ஜனங்களுக்கு நான் சொல்லுகிறேன். எதை? குற்றமற்றதும் பூமிக்கு ஸமமானதுமான இந்தப் பசுவைக் கொல்ல வேண்டாம்.

பிபதூதகம் த்ருணான்யத்து । ஓமுத்ஸ்ருஜத ॥ கூ ॥

ஆகையால் இந்தப் பசு ஜலத்தைப் பானம் செய்து, புற்களைத் தின்று கொண்டு வாழட்டும். இதைஅவிழ்த்து விட்டு விடுங்கள்.

(ஆப. க்ரு. க-13. ஸூ-18. மதுபர்க்காங்க அன்னப்ராசன மந்த்ரங்கள்.)

பூதம் ॥ கூ ॥

அன்னம் பக்வமாகி ஸித்தமாயிருக்கிறது.

ஸா விராண் மாக்ஷாயி தஸ்யாஸ்தேசீய த்ஷ ஊர்ஜம் ॥

இந்த அந்நமானது விராட்டாக, அதாவது பலவித குணமுள்ளதாக இருக்கிறது. இது நமக்குக் குறைவுபடக்கூடாது. வ்ருத்தியாக வேண்டும். அன்னமே! உன்னை நான் ப்ராசனம் செய்கிறேன். என்னிடம் நீ பலத்தைத் தருவாயாக.

ஓம் கல்பயத ॥ கo ॥

ஆதலால் இந்த அன்னத்தை எனக்குக் கொடுங்கள்.

பத்தாவது கண்டம் முற்றிற்று.

## பதினோராவது கண்டம்.

(ஆப. க்ரு. க-14. ஸூ-2. ஸீமந்த ஹோம மந்த்ரங்கள் எட்டு.)

(முதலாவது மந்த்ரம்.)

தாதா ததாது நோ ரயிமீஶாநோ ஜகதஸ்பதி꞉ ।
ஸ ந꞉ பூர்ணேந வாவநத் ॥ க ॥

ஜகத்திற்குப் பதியும் பாஸ்கரனுமான ப்ரம்ஹதேவன் நமக்குப் பூர்ணமாக ஸம்பத்தைக் கொடுக்க வேண்டும். அவன் பூர்ணமான இஷ்ட காமத்தால் என்னைச்சேர்த்து வைக்கட்டும்.

(இரண்டாவது மந்த்ரம்.)

தாதா ப்ரஜாயா உத ராய ஈஶே தாதேதம் விஶ்வம் புவநம் ஜஜாந । தாதா புத்ரம் யஜமாநாய தாதா தஸ்மா உ ஹவ்யம் க்ருதவத்விதேம ॥ உ ॥

அந்த ப்ரம்ஹதேவன் ப்ரஜை, தனம் இவைகளுக்கு அதிபதி. அவனே இந்த உலகத்தை உத்பத்தி செய்தவன். அவன் இந்த ஸீமந்த ஹோமம் செய்கிற யஜமானனுக்குப் புத்ரனைக் கொடுக்கிறவன். ஆகையால் அந்த ப்ரம்ஹதேவனுக்கு நெய் நிறைந்த ஹவிஸ்ஸைக் கொடுக்கிறேன். ஹோமம் செய்கிறேன்.

(மூன்றாவது மந்த்ரம்.)

தாதா ததாது நோ ரயிம் ப்ராசீம் ஜீவாதுமக்ஷிதாம் ।
வயம் தேவஸ்ய தீமஹி ஸுமதிம் ஸத்யராதஸ꞉ ॥ ங ॥

மேலும் அந்த ப்ரம்ஹதேவன் நமக்குப் பரம்பரையாக ஏற்பட்டதும், குறைவற்றதும், ஜீவனத்திற்குப் போதுமானதுமான த்ரவ்யஸம்பத்தைக் கொடுக்க வேண்டும். ஸத்யத்தைத் தனமாகக்கொண்ட அந்தத் தேவனுடைய அநுக்ரஹபுத்தியை நாம் த்யானம் செய்கிறோம்.

(நான்காவது மந்த்ரம்.)

யாதா ஃஷாத ூ ஷாஶூ ஷெ வஃஸூ ௰மி ஃபூஜாகாமாய ஈஶா
ஷெ ஷ ூரொணெ । தமெஷூ ஜெவா சுஶீதா ஹஂவ்யதாம
விஶ்வெ ஜெவாஸொ சுஜீ திஷூஜொஷாஃ ॥ ச ॥

இந்தத் தர்ம பத்நியிடம் ஸம்பந்தப்பட்டுப் புத்ரனை விரும்புகிற, ஹவிஸ்ஸைக் கொடுக்கிற எனக்கு அந்த ப்ரம்ஹதேவன் புத்ரர்களாகிய தனங்களைக் கொடுக்கவேண்டும். அதுமட்டுமன்றி அம்ருத ஸ்வரூபிகளான மற்றத் தேவர்களும், விச்வே தேவர்களும், என்னிடம் ஸமான ப்ரீதியுள்ள அதிதிதேவியும் புத்ரஸம்பத்தைத் தானம் செய்யவேண்டும்.

(ஐந்தாவது மந்த்ரம்.)

யஸ்மா ஹூஷா கீஶிணா உந்ராநொ ஃஷத்யூம் உதெத்யா
ஜொஹவீதி । ஜாதவெஜொ யஶொ சுஹூாஸு யெஹி ஃபூஜா
ஹிரஷெ சுஶீதகவிஶ்யாழ ॥ ரு ॥

ஏ ! ஜாதவேதஸ்ஸே—அக்நி தேவனே ! எந்த மர்த்யனை நான் அமர்த்யனை உன்னை ஸ்தோத்ரம் நிறைந்த மனதால் இங்கு அழைத்து ஹோமம் செய்கிறேனோ அத்தகைய என்னிடம் கீர்த்தியைக் கொடுப்பாயாக. ப்ரஜைகள் பிறந்து அவைகளால் நானும் அம்ருதத்வத்தை, நாசமற்ற தன்மையை, அடைவேனாகவும். ப்ராஜா ஸந்ததி நீடிப்பதால் அம்ருதத்வம் (இறக்காமை) ஏற்படும்.

(ஆறாவது மந்த்ரம்.)

யஸ்மெ குவ ஸூகூதெ ஜாதவெஜ உவொாகூமெஹ கூணா
வஸ்யாநழ । சுஶ்விநவ ஸவாதிணா வீரவநமொாஜஹவ
ரயிஷஶதெ ஸஸி ॥ சூ ॥

ஏ ! ஜாதவேதஸ்தேவனே ! அக்நியே ! எந்த மனிதன் இம்மாதிரி நல்ல முறையில் ஹோமம் செய்கிறானோ, எவனுக்கு நீ

ஸுககரமான லோகத்தைக் கொடுக்கிருயோ, அவன், அச்வம், புத்ரன், பௌத்ரன் பசு முதலியவை நிறைந்த க்ஷேமகரமான ஸம்பத்தை மங்களமாய் அடைகிருன்.

(ஏழாவது மந்த்ரம்.)

ஸுவஸூது ஸவஸொசவதூநு காகாதயஃ।

ந க்வாஜித்ராதிவூதெ ॥ எ ॥

பலிஷ்டனுன ஸவஸ் என்ற தேவனின் ஸத்புத்ரனுன அக்நியே! இஷ்டகாமங்களேப் பூர்த்தி செய்யும் சக்திகள் உன்னிடம் இருக்கின்றன. ஏ இந்த்ரனே! அக்நியே! ஆகையால் உன்னே எந்தத் தேவதையும் அதிகரிக்கமுடியாது. எனக்குப் பலிஷ்ட புத்ர காமனேயைப் பூர்த்திசெய்வாயாக.

(எட்டாவது மந்த்ரம்.)

உக்ஷ உக்ஷெ வொசெ ஜந்ஃ ஜொஷ நீயெநீயெ ஜவா நஸ ஸுதாஸஃ। யதீ ஸவாயஃ விதரம் ந வாதூாஷ்ஸெந ஷூவா சுவெ ஹவ்ஜெ ॥ அ ॥

இந்த்ரதேவனே இந்த ஹோமத்தால் த்ருப்தி செய்விக்கப் படுகிறது. ஏனெனில், யாகங்களில் ஒவ்வொரு சஸ்த்ரமென்கிற ஸ்துதியிலும், அதன் முடிவிலும், பிழியப்பட்ட ஸோமரஸமானது இந்த்ரனே த்ருப்தனுய் செய்யவேண்டும் அவன் தனம் வாய்ந்தவனுகையால். புத்ரர்கள் பிதாவை வேண்டிக்கொள்ளுவது போல். ஸமமான (எதிரியால்) தீமை ஏற்பட்டவர்களும் ஸமமான பலமுள்ளவர்களுமானவர்கள் அவைகளே நீக்கி ரக்ஷிக்க இந்த்ரனேயே ஹோமம் செய்கிருர்களன்றே?

(ஆப. க்ரு. க-14. ஸு-3. ஸீமந்த உந்நயன மந்த்ரங்கள்)

ராகாஜஹஂ ஸுஹவாஂ ஸுஷ்டுதீஹுவெ ஶ்ருணோது நஸுஹகா பொய்தநா। ஸீவ்யுவ்ஸூவ்யா ஜஹ்ஷூநயா ஜதாது வீரஂ ஶதஜாய ஊக்யுஂ ॥ கூ ॥

அழைக்கத்தக்க ராகா என்ற பௌர்ணமாஸீ தேவதையை இந்தச் சுபமான ஸ்துதியால் நான் அழைக்கிறேன். ஸௌபாக்யமுள்ள அவள் எனது ஆஹ்வானத்தைக் காது கொடுத்துக் கேட்கவேண்டும். பிறகு என்னுடைய ப்ரார்த்தனையைத் தனது புத்தியால் அறிந்துகொள்ளவேண்டும். இந்த ஸீமந்த கர்மாவில் கர்மலோபமாகிற (மந்த்ரம்) பொத்தல் ஏற்படாமல் ஊசி போன்ற தனது புத்தியால் மூடி ரக்ஷிக்க வேண்டும். எல்லோராலும் ப்ரசம்ஸை செய்யக்கூடியவனும், தானதர்ம நிரதனுமிருக்கும் புத்ரனை அநுக்ரஹிக்கவேண்டும்.

യാസ്തേ രാകേ സുമതയഃ സുപേശസോ യാഭിർദദാസി
ദാശുഷേ വസൂനി। താഭിർനോ അദ്യ സുമനാ ഉപാ
ഗഹി സഹസ്രപോഷം സുഭഗേ രരാണാ ॥ ௧௦ ॥

ஹே! ராகே! பௌர்ணமாஸியே! தகுதிவாய்ந்த குணம் உள்ள உனது எந்த அநுக்ரஹ புத்திகளால் இந்த யஜமானனாகிய எனக்கு நீ தனதி ஸம்பத்துகளைக் கொடுக்கிறாயோ, அந்தப் புத்திகளால் நல்ல மனஸ்ஸுடன் இப்போதே இவ்விடம் ஸாந்நித்யமடையவேண்டும். ஸௌபாக்யசாலியான நீ எனக்குப் பலவித இஷ்டங்களைக் கொடுப்பவளாக இருக்க வேண்டும்.

(ஆப. க்ரு. க-14 ஸூ-5. வீணா கான மந்த்ரம்—யமுனாதீர வாஸிகளுக்கு மட்டும்.)

യൗഗന്ധരിരേവ നോ രാജേതി സാല്വീരവാദിഷുഃ ।
വിവൃത്തചക്രാ ആസീനാസ്തീരേണ യമുനേ തവ ॥ ௧௧ ॥

ஏ! யமுனா நதியே! உனது கரையில் உட்கார்ந்து ஸால்வ தேச ஜனங்கள், தேசத்தைச் சுற்றிப் பார்த்தபின் யுகந்தர ராஜனின் புத்ரன்தான் தங்களுக்கு உரிய அரசன், என்று கானம் செய்து சொல்லுகிறார்கள். வீணையில் ராஜஸ்துதி.

(ஆப. க்ரு. க-14. ஸூ-5. எல்லோருக்கும் பொதுவான வீணா கான மந்த்ரம்.)

ஸோமமேவ நோ ராஜேத்யாஹுர் ப்ராஹ்மணீஃ ப்ரஜாஃ।

விவ்ருத்தசக்ரா ஆஸீநாஸ்தீரேணாஸௌ தவ ॥ கஉ ॥

எல்லாத் தேசத்தையும் சுற்றிப் பார்த்த பின் ப்ராம்ஹண ப்ரஜைகள், இந்தப் பெயருள்ள நதியே! உனது கரையில் உட்கார்ந்து, ஸோம தேவதைதான் தமக்கு ராஜா என்று சொன்னார்கள். வீணா கானத்தில் ஸோமராஜ ஸ்துதி.

(ஆப. க்ரு. க-14. ஸூ-11.)

பும்ஸுவநமஸி ॥ கங ॥

கர்ப்பிணியின் நாஸிகையில் பிழியப்படும் ரஸமானது "புருஷக்குழந்தையைப் பிறப்பிக்கும் சக்திவாய்ந்திருக்கிறாய்" என்று ஸ்துதிக்கப்படுகிறது.

(ஆப. க்ரு. க-14 ஸூ-14. சீக்ரப்ரஸவத்திற்கு மந்த்ரம்)

தஶாஹம் தஶபிரபிம்ருஶாமி தஶமாஸ்யாய ஸூதவே ॥

நான் இந்தப் பத்துவிரல்களாலும் உன்னை அபிமர்சனம் (ஸ்பர்சம்) செய்கிறேன். பத்தாவது மாதத்தில் சீக்ரமாகவே புருஷ ப்ரஜையை ப்ரஸவிக்க.

(இரண்டாவது மந்த்ரம்.)

(கர்ப்பிணிக்குத் தீர்த்த ப்ரோக்ஷண மந்த்ரம்.)

யதைவ ஸோமஃ பவதே யதா ஸமுத்ர ஏஜதி। ஏவந்தே கர்ப ஏஜது ஸஹ ஜராயுணா நிஷ்க்ரம்ய ப்ருத்விஷு ஆயுஷி ப்ரஹ்மவர்சஸி யஶஸி வீர்யேऽந்நாத்யே ॥ கரு ॥

யாகத்தில் ஸோமலதையானது ரஸமாக ஸ்ரவிப்பதுபோலவும், ஸமுத்ரமானது காற்றினால் அசைவதுபோலவும், உனது கர்ப்பமானது இந்த மந்த்ர தீர்த்த ப்ரோக்ஷணத்தால் அசைந்து கொடுக்கட்டும், சலிக்கட்டும். பிறகு ஜராயுவுடன் (சிசுவைச் சுற்றி நிற்கும் பை) கர்ப்பம் ஸுகமாக வெளிப்பட்டு, ஆயுஸ், ப்ரம்ஹவர்ச்சஸம், யசஸ், வீர்யம், அன்ன ஸம்ருத்தி இவைகளுடன் சேர்ந்து இருக்கவேண்டும்.

தஶ மாஸாஞ்சஶயாநோ தாத்ரா ஹி ததா²க்ருதம் ।
ஐது க³ர்போ⁴ அக்ஷிதோ ஜீவோ ஜீவந்த்யா: ॥ கசு ॥

இந்த உனது கர்ப்பமானது பத்து மாஸம் வயிற்றில் படுத்திருக்கிறது. அந்தமாதிரி பத்து மாஸம் இருக்கும்படி ப்ரம்ஹாவினால்தான் செய்யப்பட்டிருக்கிறது. அதை மீறமுடியாது. பத்து மாதம் ஆகிவிட்டதால் கர்ப்பமானது ஜீவித்திருக்கும் நிலைமையில், நீயும் ஜீவித்திருக்கும்படி குறைவில்லாமல் காயமின்றி வெளிப்பட்டு வர ப்ரார்த்திக்கிறேன்.

(ப்ரோக்ஷண மந்த்ரம்.)

ஆயஜ்ஞீயஃயத மஹ்யமாவோ தேவீஸ்ஸரஸ்வதீ: ।
ஐது க³ர்போ⁴ அக்ஷிதோ ஜீவோ ஜீவந்த்யா: ॥ கஎ ॥

ஸரஸ்வதீ நதீ முதலிய புண்ய தீர்த்தம் போன்ற ஏ தீர்த்த தேவதைகளே! நீங்கள், கர்ப்பத்தை வெளியில் இழுக்கும் சக்தியுள்ளவர்கள். ஆகையால் இந்தக் கர்ப்பத்தை வெளியில் கொண்டு வாருங்கள். ஜீவ தசையிலுள்ளபடி கர்ப்பமும் தாயாரும் இருக்கும்படி அக்ஷதமாக, காயமின்றி வெளியில் வரட்டும்.

(ஆப. க்ரு. க-14. ஸூ-15. ஜராயு என்கிற நஞ்சு விழ மந்த்ரம்.)

திலதே³வ பத்³யஸ்வ ந மாம்ஸமஸி நோ த³லம் । ஸ்த²வித்ர்யவ
பத்³யஸ்வ ந மாம்ஸேஷு ந ஸ்நாவஸு ந ப³த்³த⁴மஸி மஜ்ஜஸு ॥
நிரைது ப்ருஸ்²நி ஶேவலம் ஶுநே ஜராய்வத்தவே ॥

ஜராயு என்கிற கர்ப்பத்தைச் சுற்றிய தோலை 'திலதா' என்று சொல்லுகிறார்கள். ஏ! திலதே! நீ ஸுகமாக வெளிப்பட்டு வரவும். நீ மாம்ஸமல்ல, வயிறும் அல்ல. மாம்ஸங்களிலோ, நரம்புகளிலோ, மஜ்ஜா என்ற மாம்ஸ ரஸத்திலோ நீ ஸம்பந்தப்படவில்லை. ஆகையால் நீ ஸ்துலமாகவே பாக்கியில்லாமலே வெளிப்பட்டு வரவேண்டும்.

ஸ்வல்பமான ஜராயுவானது ஸுகமாக வெளிப்படட்டும். ஶ்வா அதைப் புஜிக்கட்டும்.

பதினோராவது கண்டம் முற்றிற்று.

---

## பன்னிரண்டாவது கண்டம்.

---

(ஆப. க்ரு. க-15. ஸூ-1. பிறந்தவுடன் சிசுவைப் பிதா ஸ்பர்சிக்க 11 மந்த்ரங்கள்.)

(முதல் மந்த்ரம்.)

திவஸ்பரி ப்ரத²மம் ஜஜ்ஞே அக்³நிரஸ்மத்³ த்³விதீயம் பரிஜாதவே-

தா³: । த்ருதீயமப்ஸு ந்ருமணா அஜஸ்ரமிந்தா⁴ந ஏநம் ஜரதே

ஸ்வாதீ⁴: ॥ க ॥

ஜாதவேதஸ் என்கிற அக்னி பகவான் முதலில் தேவலோகத்திலிருந்து தோன்றினார். ஸூர்யன் அல்லது மின்னல் ரூபமாக. இரண்டாவதாக யாகாதிகள் செய்யும் நம்மிடமிருந்து தோன்றினார். மூன்றாவதாக ஸமுத்ர ஜலத்தில் படபாக்னி ரூபமாகஅவதரித்தார். மனிதர்களிடம் அநுக்ரஹ எண்ணம் கொண்டவர். இந்த அக்னிதேவனை நல்ல புத்தியுள்ள மனிதன் எப்போதும் ஜ்வலிக்கச் செய்து ஸ்துதி செய்கிறான். (துர்ப்புத்தியுள்ளவன் இப்படிச் செய்வதில்லை.)

(இரண்டாவது மந்த்ரம்.)

வித்³மா தே அக்³நே த்ரேதா⁴ த்ரயாணி வித்³மா தே ஸத⁴ விப்⁴ரு-

தம் புரூத்ரா । வித்³மா தே நாம பரமம் கு³ஹா யத்³வித்³மா த-

முத்ஸம் யத ஆஜக³ந்த² ॥ உ ॥

ஹே! அக்னிதேவனே! உம்முடைய மூன்றுவிதமான ரூபம் அக்னி, வாயு, ஆதித்யன் என்பவை. பூமி, ஆகாசம், தேவலோகம் இவைகளில் நீர் ப்ரஸித்தமாயிருப்பதை நாங்கள் அறிவோம். உம்முடைய ஸ்தானங்கள் கார்ஹபத்ய ஆஹவநீய தக்ஷிணாக்னி ரூபமாகப் பிரித்து வைக்கப்பட்டிருப்பதையும் நாங்

கள் அறிந்துள்ளோம். மேலும் உம்முடைய ரஹஸ்யமான அறியக்கூடாதவையான பெயர்களையும் நாங்கள் அறிந்துள்ளோம். (ஸஹஸோயஹோ) இத்யாதி ரஹஸ்ய நாமங்கள் பல. நீர் எந்த இடத்திலிருந்து வெளிவந்தீரோ அந்தத் தீர்த்த ஸ்தானத்தையும் நாங்கள் அறிவோம். இவ்வாறாக உமது மஹிமைகளை உணர்வோம்.

(மூன்றாவது மந்த்ரம்.)

𑌸𑌮𑌦𑍍𑌰𑍇 𑌤𑍍𑌵𑌾 𑌨𑍃𑌮𑌣𑌾 𑌅𑌪𑍍𑌸𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑍍𑌨𑍃𑌚𑌕𑍍𑌷𑌾 𑌈𑌧𑍇 𑌦𑌿𑌵𑍋
𑌅𑌗𑍍𑌨 𑌊𑌧𑌨𑍍 । 𑌤𑍃𑌤𑍀𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾 𑌰𑌜𑌸𑌿 𑌤𑌸𑍍𑌥𑌿𑌵𑌾𑌂𑌸𑌮𑍃𑌤𑌸𑍍𑌯
𑌯𑍋𑌨𑍌 𑌮𑌹𑌿𑌷𑌾 𑌅𑌹𑌿𑌨𑍍𑌵𑌨𑍍 ॥ ௩ ॥

ஹே! அக்நி தேவனே! ஸமுத்ர மத்தியில் இருக்கிற உம்மை, மனிதர்களை அநுக்ரஹிக்கும் நோக்கமுள்ள வருணன் வ்ருத்தி செய்கிறான். தேவலோகத்திற்கு ஊதஸ் (பால் சுரக்கும் மடி) போன்ற மேக மண்டலத்தில் மின்னல் ரூபமாக வஸிக்கும் உம்மை, மனிதர்களை மேற்பார்வையிடும் ஸூர்ய பகவான் வ்ருத்தி செய்கிறான். மூன்றாவதாயும், ஸத்யத்திற்குக்காரணமுமான அந்தரிக்ஷலோகத்தில் வஸிக்கும் உம்மை ஞானிகளாகிய பெரியோர்கள் அறிந்து கொண்டுள்ளார்கள்.

(நான்காவது மந்த்ரம்—காட்டில் விளங்கும் அக்நிரூபம் ப்ரசம்ஸிக்கப்படுகிறது.)

𑌅𑌕𑍍𑌰𑌨𑍍𑌦𑌦𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑍍𑌤𑌨𑌯𑌨𑍍𑌨𑌿𑌵 𑌦𑍍𑌯𑍌𑌃 𑌕𑍍𑌷𑌾𑌮𑌾 𑌰𑍇𑌰𑌿𑌹𑌦𑍍𑌵𑍀𑌰𑍁𑌧𑌃 𑌸𑌮𑌞𑍍-
𑌜𑌨𑍍 । 𑌸𑌦𑍍𑌯𑍋 𑌜𑌜𑍍𑌞𑌾𑌨𑍋 𑌵𑌿 𑌹𑍀𑌮𑌿𑌦𑍍𑌧𑍋 𑌅𑌖𑍍𑌯𑌦𑌾 𑌰𑍋𑌦𑌸𑍀
𑌭𑌾𑌨𑍁𑌨𑌾 𑌭𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌃 ॥ ௪ ॥

இந்த அக்நிதேவன் வர்ஷிக்கும் மேகம்போல் காட்டுப் பூமியில் பரவி, காட்டிலுள்ள செடி கொடிகளைச் சாப்பிடும் ருசி கொண்டு தஹித்துச் சப்தத்துடன் காணப்படுகிறான்.

காட்டுத்தீயாகிய அக்நிதேவன் காட்டில் சீக்ரமாகப் பரவி வெகு தூரத்திலுள்ளவர்களும் தர்சிக்கும்படி த்யாவா ப்ருதிவி மத்தியில் தமது காந்தியால் நான்கு திக்கிலும் ப்ரகாசிக்கிறார்.

(ஐந்தாவது மந்த்ரம்)

உஶிக்பாவகோ அரதிஸ் ஸுமேதா மர்த்யேஷ்வக்நிரம்ருதோ நிதாயி । இயர்தி தூமம் அருஷம் பரிப்ரதுச்சுக்ரேண ஶோசிஷா த்யாமிநக்ஷந் ॥ ௫ ॥

இந்த அக்நிதேவர் ஆசைப் படத்தக்கவர், பரிசுத்தி செய்கிறவர். ஸஞ்சரிப்பவர். நல்ல ப்ரஜ்ஞை அநுக்ரஹ எண்ணமுள்ளவர். இவர் ஜனங்களைப் பாதுகாக்க, கார்ஹபத்யாதி ரூபமாக ஜனங்களிடையில் அமர்த்யராக சாச்வதராக இருக்க நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இப்படி, கார்ஹபத்யாதி ரூபமாக இருந்துகொண்டு ஜ்வலிக்கையில் மிகப்பெரியதாக (தூமத்தை)ப்புகையை உண்டாக்குகிறார். அந்தப் புகைமூலம் மேகத்தையும் மழையையும் உண்டாக்கி பூமிலோகத்தையும் பரிக்கிறார். தேவலோகத்தையும் தமது உயர்முகமான தேஜஸ்ஸால் ப்ரவேசித்து அங்கும் ஹிதம் செய்கிறார்.

(ஆறுவது மந்த்ரம்)

விஶ்வஸ்ய கேதுர்புவனஸ்ய கர்ப ஆரோதஸீ அப்ருணாஜ்ஜாயமாந: । வீடுஞ்சிதத்ரிமபிநத்பராயஞ்ஜநா யதக்நிமயஜந்த பஞ்ச ॥ ௬ ॥

இந்த அக்நிதேவன் உலகத்திற்கு த்வஜம் போலிருக்கிறார். ப்ராணிஸமூஹமான புவனத்திற்குக் கர்ப்பம் போலிருக்கிறார். வைச்வாநராக்நியாய் இருந்து கொண்டிருக்கிறார்.

உதயமாகும்போதே தமது தேஜஸ்ஸால் த்யாவா ப்ருதிவிகளை வ்யாபிக்கிறார். இந்தத் தேவனை ஐந்து ஜனங்கள் மந்த்ரங்களைச் சொல்லி யாகம் செய்கிறார்கள். அதனால் இவர் அந்த ஹவிஸ்ஸைத் தேவலோகத்திற்குக் கொண்டு சேர்க்கும்போது நடுவில் மஹா பலிஷ்டமான மலைகள் இருந்தாலுங்கூட அவைகளை உடைத்துக்கொண்டு செல்லுகிறார். நிஷாத பஞ்சமர்களான நான்கு வர்ணங்கள் ஐந்து ஜனங்களாம்.

(ஏழாவது மந்த்ரம்)

ஸ்ரீணாஃ௨ஷாரொ யுஶெணொ ரயீணாம் ஃநீஷாணாம் ஷூா

வ்லுணஸ்ஹொஃமொவாஃ। வஸொஹ ஸூநுஹஸஹஸொ ஜுஹா

ரராஜா விஹாதூஸ்ரு உஷஸாமியாநஃ ॥ ௭ ॥

இந்த அக்னி தேவன் ஸம்பத்துக்களுக்கு உத்பத்திகாரணம். தனங்களுக்குத் தாரணகர்த்தா. நல்ல விஷயங்களைக்ரஹிக்கக் கூடிய புத்திகளுக்கும் உத்பத்திக்காரணம். நல்ல புத்தியைக் கொடுப்பவன். ஸோமலதையைப் பாதுகாக்கிறவன். மிகவும் ப்ரசஸ்தன். ஸஹஸ் என்கிற பலத்தின் புத்ரனுகிறுன். ஜலத்தில் ப்ரகாசிப்பவன். இந்த அக்னிதேவன் ஒவ்வொரு உஷ:காலத்திலும் காலை வேளைக்கு முன் அக்னி ஹோத்ரிகளால் ஜ்வலிக்கச் செய்யப்பட்டு விளங்குகிறுன். அக்நி ஹோத்ரத்தில் காலையில் ப்ரகாசிக்கிறுன்.

(எட்டாவது மந்த்ரம்.)

யஸ்ஹ ஜுஹு கூணவ்ஹஹுரொவெZவஸவம் ஜெவ வுரத

வஞஃஹை । வூதஷ்ய வூதராம் வஸெூா ஜுஹாஹிநூஃஹொ ஜெவ

ஹஸதம் யவிஷ்ட ॥ ௮ ॥

ஹே! தேவ! அக்நியே! எந்த யஜமானன் உனக்கு இப்போது க்ருதம் (நெய்) சேர்ந்த அபூபத்தைப் புரோடாசாதி ஹவிஸ்ஸை ஸமர்ப்பிக்கிறுனே அந்தத் தேவபக்தனுக்கு நீ மிகவும் அதிகமான பணம், யசஸ் முதலியவை ஏற்படும்படி செய்ய வேண்டும். ஏ! யுவாவான அக்நியே! மங்களகரமான தேஜஸ் உள்ள தேவனே!

(ஒன்பதாவது மந்த்ரம்.)

கூ தம் ஹஜவஸளஶ்ரவஸெஷ்ஹ உகூஃக்ஷ கூஹஜ ஶவஸூ

ஃரநெ। விூயஸூவெல விூயொ ஜுஹாஹவாதூஜாதெந

ஹிநஃ ஃஜநீமெகெவஃ ॥ க ॥

மேற்கண்ட சரு புரோடாசாதி அந்நங்கள் நிறைந்த யாகம் செய்கையில் யாகங்களில் உக்தமெனப்படும் சஸ்த்ர ஸ்தோத்ரம் சொல்லும் போதெல்லாம் அந்த யஜமானனை ஏ! அக்நியே! நீ அநுக்ரஹம் செய்ய அடைவாயாக. அந்த யஜமானன் உனது அருளால் ஸூர்யனுக்கு ப்ரீதிபாத்ரமாயும் அக்நிக்கு ப்ரீதி பாத்ரமாயும் ஆகவேண்டும். மேலும், பிறந்ததும் பிறக்கப் போவதுமான புத்ராதிகளால் அவன் விளங்கவேண்டும்.

(பத்தாவது மந்த்ரம்.)

𑌤𑍍𑌵𑌾𑌮𑌗𑍍𑌨𑍇 𑌯𑌜𑌮𑌾𑌨𑌾 𑌅𑌨𑍁 𑌦𑍍𑌯𑍂𑌨𑍍 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌵𑌸𑍂𑌨𑌿 𑌦𑌧𑌿𑌰𑍇
𑌵𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 । 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌸𑌹 𑌦𑍍𑌰𑌵𑌿𑌣𑌮𑌿𑌚𑍍𑌛𑌮𑌾𑌨𑌾 𑌵𑍍𑌰𑌜𑌂𑌗𑍋𑌮𑌨𑍍𑌤𑌮𑍁
𑌶𑌿𑌜𑍋 𑌵𑌿𑌵𑌵𑍍𑌰𑍁𑌃 ॥ ௧௦ ॥

ஏ! அக்நியே! உன்னை அநுதினமும் யஜிக்கும் புருஷர்கள் விரும்பத்தக்கவைகளும் ஏராளமுமான தனங்களை அடைகிறார்கள். அக்நியாகிய உன்னை முன்னிட்டுக்கொண்டு தேவர்கள், அங்கிரஸ் முதலிய ப்ராஜ்ஞர்கள் ஆகியவர்கள் கெட்டுப்போன பசுமாடுகளைத் தேடமுயற்சித்து, அந்தப் பசுக்கள் இருந்த மாட்டுக்கொட்டிலைத் திறந்து பசுக்களை அடைந்தார்களல்லவா?

(பதினொன்றாவது மந்த்ரம்.)

𑌦𑍃𑌶𑌾𑌨𑍋 𑌰𑍁𑌕𑍍𑌮 𑌉𑌰𑍍𑌵𑌿𑌯𑌾 𑌵𑍍𑌯𑌦𑍍𑌯𑍌𑌦𑍍𑌦𑍁𑌰𑍍𑌮𑌰𑍍𑌷𑌮𑌾𑌯𑍁𑌃
𑌶𑍍𑌰𑌿𑌯𑍇 𑌰𑍁𑌚𑌾𑌨𑌃 । 𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑌮𑍃𑌤𑍋 𑌅𑌭𑌵𑌦𑍍𑌵𑌯𑍋𑌭𑌿𑌰𑍍𑌯𑌦𑍇𑌨𑌂
𑌦𑍍𑌯𑍌𑌰𑍍𑌜𑌨𑌯𑌤𑍍𑌸𑍁𑌰𑍇𑌤𑌾𑌃 ॥ ௧௧ ॥

இந்த அக்நியானவன், வெகு தூரத்திலிருப்பவர்களாலும் பார்க்கக்கூடியவன். மிகுந்த தேஜஸ்ஸால் அவமதிக்க முடியாத காந்தியால் ப்ராணிகளின் ஆயுஸ், ஸம்பத் இவைகளைக் காக்க விளங்குகிறான். இந்த அக்நி ஹவிஸ்ஸாகிற அந்நங்களால் அம்ருதனாக ஆகிவிட்டான். மழையை வர்ஷிக்கும் த்யுலோக தேவதை இந்த அக்நியை லோக க்ஷேமார்த்தமாக உற்பத்தி செய்தாள்.

[இந்த "திவஸ்பரி" என்கிற அநுவாகமானது அக்நிசயன யாகத்தில் புதிதாக உண்டான உகா அக்நியை ஸ்துதிக்க ஏற்பட்

டது. அந்த அக்னியைச் சிசுவாக வேதம் வர்ணிக்கிறது. அந்த மந்த்ரங்களைப் புதிதாகப் பிறந்த குழந்தை விஷயத்திலும் தேவதா ப்ரார்த்தனா ரூபமாக ஜபிக்கும்படி ஸூத்ரகாரர் விதிக்கிறார்.]

(ஆப. க்ரு. க-15, ஸூ-1. சிசுவை மடியில் வைக்க மந்த்ரம்.)

𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌹𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌯𑌾𑌸𑌮𑍇𑌧𑌮𑌾𑌨𑌃 𑌸𑍍𑌵𑍇 𑌗𑍃𑌹𑍇 ॥

இந்தக் குமாரனிடம் நான் பலவிதமான க்ஷேமங்களை அபீஷ்டங்களை வ்ருத்திசெய்து அடைவேன். குடும்பத்தில் ஸௌகர்யமாக இருந்துகொண்டு இவன் மூலம் ஸகல க்ஷேமங்களையும் பெறுவேன், என்று ப்ரார்த்தனை.

(ஆப. க்ரு. க-15. ஸூ. 1. புத்ரனை அபிமந்த்ரணம் செய்யும் மந்த்ரம்.)

𑌅𑌙𑍍𑌗𑌾𑌦𑌙𑍍𑌗𑌾𑌤𑍍𑌸𑌂𑌭𑌵𑌸𑌿 𑌹𑍃𑌦𑌯𑌾𑌦𑌧𑌿𑌜𑌾𑌯𑌸𑍇 ।

𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑍈 𑌪𑍁𑌤𑍍𑌰𑌨𑌾𑌮𑌾𑌸𑌿 𑌸 𑌜𑍀𑌵 𑌶𑌰𑌦𑌃 𑌶𑌤𑌮𑍍 ॥ கஎ ॥

ஏ! புத்ரனே! நீ எனது ஒவ்வொரு அங்கத்திலிருந்தும் உற்பத்தியாகிறாய். எல்லாவற்றிற்கும் அதிஷ்டானமாகிற ஹ்ருதயத்திலிருந்தும் விசேஷமாக ஸம்பந்தப்பட்டுப்பிறக்கிறாய். ஆகையால் என் முன்பாக இருக்கும் நீ வேறு அல்ல. நானே தான். புத்ரன் என்ற பெயரால் நானாகவே (பிதாவாகவே) நீ காணப்படுகிறாய். சரீர அமைப்பு, ரூபம், குணம் ஆகிய எல்லாவற்றாலும் புத்ரன் பிதாவைப்போலவே இருப்பது இயற்கையாகியதால் அபேதம் கூறப்படுகிறது.

(ஆப. க்ரு. க-15. ஸூ-1. உச்சி மோக்க மந்த்ரம்.)

𑌅𑌶𑍍𑌮𑌾 𑌭𑌵 𑌪𑌰𑌶𑍁𑌰𑍍𑌭𑌵 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑍃𑌤𑌂 𑌭𑌵 ।

𑌪𑌶𑍂𑌨𑌾𑌂 𑌤𑍍𑌵𑌾 𑌹𑌿𑌙𑍍𑌕𑌾𑌰𑍇𑌣𑌾𑌭𑌿𑌜𑌿𑌘𑍍𑌰𑌾𑌮𑌿 ॥ கஅ ॥

ஏ! புத்ரனே! நீ கல்லுப்போலக் கெட்டியாயும் ஸ்திரமாயும் இருக்கவேண்டும். பரசு ஆயுதம்போல் பிறர் சீண்ட முடியாமல் பலிஷ்டனாயிருக்கவேண்டும். அழுக்குப்படாத தங்கம்போல் விளங்கவேண்டும். பசுக்கள் ஹிங்காரம் செய்து தனது கன்றை உச்சியில் மோப்பதுபோல் நானும் உனது உச்சியை மோந்து பார்க்கிறேன்.

(ஆப. க்ரு. க-15. ஸூ-௪-4. நெய் தேன் கலந்து சிசுவுக்கு ப்ராசனம் செய்விக்க மந்த்ரங்கள் நான்கு-முதலாவது மந்த்ரம்.)

மேயாங்தே தேவஸ்ஸவிதா மேயாம் தேவீ ஸரஸ்வதீ।

மேயாங்தே அஶ்விநௌ தேவாவாதத்தாம் புஷ்கரஸ்ரஜா॥

ஏ! புத்ரனே! உனக்குத் தேவனான ஸூர்யன் மேதையைக் கொடுத்து அநுக்ரஹிக்கட்டும். தேவியான ஸரஸ்வதியும், தாமரைப்பூமாலை தரித்த அச்விநீ தேவர்களும் அவரவர்களிடமுள்ள மேதா சக்தியை உனக்கு அளித்து அருளவேண்டும்.

(இரண்டாவது மூன்றாவது மந்த்ரங்கள்.)

த்வயி மேயாம் த்வயி ப்ரஜாம் த்வய்யக்நிஸ்தேஜோ ததாது।

த்வயி மேயாம் த்வயி ப்ரஜாம் த்வயீந்த்ர இந்த்ரியம் ததாது॥ கரு॥

உன்னிடம் முக்யமாக அக்நிதேவன் மேதை, புத்ர ஸந்தானம், ஸஹிக்கும் தேஜஸ் இவைகளைக் கொடுத்தருளட்டும். அதுபோல் தேவேந்த்ரனும் தனது மேதை, ப்ரஜை, இந்த்ரியம் ஆகியவைகளை உன்னிடம் கொடுக்கட்டும்.

(நான்காவது மந்த்ரம்.)

த்வயி மேயாம் த்வயி ப்ரஜாம் த்வயி ஸூர்யோ ப்ராஜோ ததாது॥ கசு॥

அதுபோல் ஸூர்ய தேவனும் உன்னிடம் தனது மேதா சக்தி, ப்ரஜை, தேஹகாந்தி இவைகளைத் தரட்டும்.

(ஆப. க்ரு. க-15. ஸூ-௪-4. சிசுவுக்கு ஸ்நானம் செய்து வைக்க ஐந்து மந்த்ரங்கள்-முதலாவது மந்த்ரம்.)

க்ஷேத்ரியை த்வா நிர்ருத்யை த்வா த்ருஹோ முஞ்சாமி வருணஸ்ய பாஶாத்। அநாகஸம் ப்ரஹ்மணே த்வா கரோமி ஶிவே தே த்யாவாப்ருதிவீ உபே இமே॥ கசா॥

ஏ! புத்ரனே! இந்த ஸ்நாந மூலமாக உன்னைச் சிகித்ஸை செய்ய முடியாத வ்யாதியிலிருந்து விடுவிக்கிறேன். ரக்ஷஸ்,

பிசாசாதி தேவதையான நிர்ருதி தேவதையினிடமுமிருந்தும் விடுவிக்கிறேன். உனக்கு எதிராக த்ரோஹம் செய்கிறவனிடமிருந்தும், வருணபாசம் என்ற ஆபத்திலிருந்தும் உன்னை விடுவிக்கிறேன். மேற்கண்ட ஆபத்துக்கள் உனக்கு ஏற்படவேண்டாம். மேலும் உன்னை வேதாத்யயனம் செய்ய அர்ஹதை ஏற்படும்படி பாபமற்றவனாகச் செய்கிறேன். இந்த ஆகாசம், பூமி இரண்டும் உனக்கு க்ஷேமத்தைக் கொடுப்பவையாக இருக்க வேண்டும்.

(இரண்டாவது மந்த்ரம்.)

𑌶𑌂 𑌤𑍇𑌽𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌸𑌹𑌾𑌦𑍍𑌭𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌶𑌂 𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌸𑌹𑍌𑌷𑌧𑍀𑌭𑌿𑌃 । 𑌶𑌮𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌂 𑌸𑌹 𑌵𑌾𑌤𑍇𑌨 𑌤𑍇 𑌶𑌂 𑌤𑍇 𑌚𑌤𑌸𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌦𑌿𑌶𑍋 𑌭𑌵𑌨𑍍𑌤𑍁 ॥ ௧௭ ॥

ஏ! சிசுவே! இந்த ஸ்நானத்தில் அக்நிதேவன் ஜலத்துடன் சேர்ந்து உனக்கு ஸுகத்தைச் செய்யட்டும். ஆகாசம், பூமி இரண்டும் ஓஷதிகளுடன் சேர்ந்து ஸுகமளிக்கட்டும். அந்தரிக்ஷமானது காற்றுடன் கலந்து உனக்கு ஸுகத்தைக் கொடுக்கட்டும். ப்ரதான திக்குகள் நான்கும் உனக்கு ஸுகத்தைக் கொடுப்பவைகளாக ஆகவேண்டும்.

(மூன்றாவது மந்த்ரம்.)

𑌯𑌾 𑌦𑍈𑌵𑍀𑌶𑍍𑌚𑌤𑌸𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌦𑌿𑌶𑍋 𑌵𑌾𑌤𑌪𑌤𑍍𑌨𑍀𑌰𑌭𑌿 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋 𑌵𑌿𑌚𑌷𑍍𑌟𑍇 । 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌤𑍍𑌵𑌾 𑌜𑌰𑌸 𑌆𑌦𑌧𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌕𑍍𑌷𑍍𑌮 𑌏𑌤𑍁 𑌨𑌿𑌰𑍃𑌤𑌿𑌂 𑌪𑌰𑌾𑌚𑍈𑌃 ॥ ௧௮ ॥

இந்த நான்கு திக்குகள் எவ்வளவு காலம் நீடித்திருக்குமோ அவ்வளவு காலம்வரையில் நீ ஸ்திரமாயிருக்கும்படி ஸ்தாபிக்கிறேன். அந்தத் திக்குகள் காற்றை ரக்ஷகனாகக் கொண்டவை. ஸூர்யன் அவைகளை மேற்பார்வையிடுகிறான். இந்த்ராதி தேவ ஸம்பந்தம் பெற்றவை. இந்தத் திக்குகள் மஹிமையால் உனக்கு எவ்வித வ்யாதியும் ஏற்படாமலும், ஏற்பட்ட வ்யாதியானது

திருப்பிச்சென்று நிர்ருதியிடம் போகவும் உன்னைப் பாதுகாத்து வைக்கிறேன்.

(நான்காவது மந்த்ரம்.)

சுமோவி யக்ஷ்மாதூஷிதாசுவ்மெதேஷ்யு தூஹ: வாஸாணி
ஸீஷ்வெத்யு வொசுமோவி । சுஹா சுவ்திஷ் சுவிசுஸ்யோநா சுவ்யு
ஹூர்லெஜ்ரு ஸ்யக்ஷ்ருதஸ்யு வொகெ ॥ ௧௯ ॥

இவ்வாறு சுபஸ்நானம் செய்து வைத்த காரணமாக இந்தப் புத்ரன் வ்யாதியிலிருந்து விடுபட்டான். பாபம், த்ரோஹம், வருணபாசம், ரக்ஷஸ், பிசாசம் இவைகளிலிருந்தும் விடுபட்டான். தாரித்ர்யத்தையும் உதறினன். ஸௌபகத்தையும் பெற்றான். புண்யமான ஸுக்ருத லோகத்திலும் இருக்கிறான்.

(ஐந்தாவது மந்த்ரம்.)

ஸூர்ய ஸ்ப்ருதம் தமஸோ க்ராஹ்யா யத்தேவா சுமுஞ்சு
ஸ்ருஜந்வ்யேநஸ: । ஏவமஹமிமம் க்ஷேத்ரியாஜ்ஜாமிசம்ஸாத்த்ரு
ஹோ ஜீவாமி வருணஸ்ய பாசாத் ॥ ௨௦ ॥

ஒரு காலத்தில் ஸூர்யன், இருட்டினாலும் க்ரஹணீ ரோகத்தினாலும் வ்யாபிக்கப்பட்டிருந்ததைத் தேவர்கள் நீக்கி, தோஷத்திலிருந்து அவனை விடுவித்தார்கள். அதுபோல் இந்தப் புத்ரனை நான் ஸ்த்ரீ பந்துக்களின் சாபத்திலிருந்தும், பருஷவாக்யத்திலிருந்தும், வருணபாசத்திலிருந்தும் விடுவிக்கிறேன்.

(சிசுவை, தயிர்கலந்த நெய்யைச் சாப்பிடச்செய்ய மந்த்ரம்)

ஹூம்ஸ்வாஹா ஹூம்ஸ்வாஹா ஹூம்ஸ்வாஹோம்ஸ்வாஹா ॥

மேற்படி மந்த்ரத்தின் அர்த்தத்தை முதல் ப்ரச்னம் பத்தாவது கண்டம் 42-ஆவது பக்கம் பார்க்க.

பன்னிரண்டாவது கண்டம் முற்றிற்று.

## பதின்மூன்றாவது கண்டம்.

(ஆப. க்ரு. க-15. ஸூ-5. தாயாரின் மடியில் சிசுவை விட மந்த்ரம.)

𑌮𑌾 𑌤𑍇 𑌕𑍁𑌮𑌾𑌰𑌂 𑌰𑌕𑍍𑌷𑍋 𑌵𑌧𑍀𑌨𑍍𑌮𑌾 𑌧𑍇𑌨𑍁𑌰𑌤𑍍𑌯𑌾𑌸𑌾𑌰𑌿𑌣𑍀 ।
𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌧𑌨𑌸𑍍𑌯 𑌭𑍂𑌯𑌾 𑌏𑌧𑌮𑌾𑌨𑌾 𑌸𑍍𑌵𑍇 𑌗𑍃𑌹𑍇 ॥ ௧ ॥

உன்னுடைய இந்தக் குமாரனை ரக்ஷஸ், பிசாசம் இவை கொல்லாமலிருக்கவேண்டும். வேகமாக ஓடும் மாடு முதலிய ப்ராணியும் ஹிம்ஸிக்கவேண்டாம். இந்தக் குழந்தையை நீ மடியில் வைத்துக்கொள்ளும் நல்லகாலம் நிமித்தமாக நீயும், புத்ரன், பசு முதலிய தனத்திற்கு ப்ரியமாகி உன் க்ருஹத்தில் மேல்மேல் வ்ருத்தியடைந்து விளங்குவாயாக.

(ஆப. க்ரு. க-15. ஸூ-5. தாய்ப்பால் கொடுக்க மந்த்ரம்)

𑌅𑌯𑌂 𑌕𑍁𑌮𑌾𑌰𑍋 𑌜𑌰𑌾𑌂 𑌧𑌯𑌤𑍁 𑌦𑍀𑌰𑍍𑌘𑌮𑌾𑌯𑍁𑌃 ।
𑌯𑌸𑍍𑌮𑍈 𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌤𑌨 𑌪𑍍𑌰𑌪𑍍𑌯𑌾𑌯𑌾𑌯𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌚𑍋 𑌯𑌶𑍋 𑌬𑌲𑌮𑍍 ॥

இந்தக் குமாரன் தாய்ப்பால் சாப்பிடும் வ்யாஜத்தில் இந்தப் பால் மூலமாக நீண்ட கால வாழ்வையும், தீர்க்காயுஸ்ஸையும் பானம்செய்யட்டும். ஏ! ஸ்தனமே! இவனுக்குப் பாலைப் பெருக்க விடுவதன் காரணமாக ஆயுஸ், வர்ச்சஸ், யசஸ், பலம் ஆகியவைகளைப் பெருகவிடுவாயாக.

(ஆப. க்ரு. க-15. ஸூ-5. பூமியைத்தொட இரண்டு மந்த்ரங்கள்—முதலாவது மந்த்ரம் )

𑌯𑌦𑍍𑌭𑍂𑌮𑍇𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑌂 𑌦𑌿𑌵𑌿 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑌿 𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌤𑌦𑍁𑌰𑍍𑌵𑌿 𑌪𑌶𑍍𑌯𑌂 𑌮𑌾𑌹𑌂 𑌪𑍌𑌤𑍍𑌰𑌮𑌘𑌂 𑌰𑍁𑌦𑌮𑍍 ॥ ௨ ॥

பூமியினுடைய எந்த ஹ்ருதயமானது ஆகாசத்தில் சந்த்ரனிடம் ஸம்பந்தப்பட்டிருக்கிறதோ (சந்த்ரமண்டலத்தின் நடுவில் காணும் கறுப்பு பூமியின் சாயை என்று சிலர் எண்ணம்) ஏ பூமியே! சந்த்ரமண்டலத்தில் உள்ள அந்த உனது ஹ்ருதயத்தை நான் தர்சனம் செய்கிறேன். இந்தப் புத்ரன் ஸம்பந்தமாக

துக்கத்தைக்குறித்து ரோதனத்தை நான் அடையாமலிருக்க வேண்டும்.

(இரண்டாவது மந்த்ரம்.)

யதெ் ஸுஸீமெ ஹ்ருதயம் வெதாஹம் தத் ப்ரஜாபதௌ ।
வெதாம தஸ்ய தெ வயம் மாஹம் பௌத்ரமகம் ருதம் ॥

நல்ல எல்லைக்கரைகள் உள்ள பூமியே! உனது ஹ்ருதயமானது ப்ரஜைகளைக் காத்துவரும் அந்தச் சந்த்ரனிடம் இருப்பதை நான் நன்கு அறிகிறேன். அதன் மூலம் உன் மஹிமையையும் அறியக்கடவேன். உன் அருளால் இந்தப் புத்ரன் விஷயமான சோகத்தை நான் அடையக்கூடாது.

(ஆப. க்ரு. க-15. ஸூ-5. பூமியில் படுக்கவைத்த சிசுவை அபிமர்சனம் செய்ய மந்த்ரம்.)

நாமயதி ந ருததி யத்ர வயம் வதாமஸி யத்ர சாபி ம்ருசாமஸி ॥ ரு ॥

எந்தப் பூமியில் படுக்கவைத்து இவனை, மந்த்ரம் சொல்லி அபிமர்சனம் செய்கிறோமோ அவ்விடத்தில் இவன் வ்யாதியற்றவனாயும், சோகமற்றவனாயுமிருக்கவேண்டும்.

(ஆப. க்ரு. க-15. ஸூ-6. சிசுவின் சிரஸ்ஸின் ஸமீபத்தில் ஜல கும்பத்தை வைக்க மந்த்ரம்)

ஆபஸ்ஸுப்தெஷு ஜாக்ரத ரக்ஷாம்ஸி நிரிதோ நுதத்வம் ॥ சு ॥

ஏ! தீர்த்த தேவதைகளே! நாங்கள் தூங்கும்போதும் நீங்கள் விழித்திருங்கள். இந்த இடத்திலிருந்து, குழந்தையிடமிருந்து ரக்ஷஸ்ஸுகளை, பிசாசங்களைத் துரத்திவிடுங்கள்.

(ஆப. க்ரு. க-15. ஸூ-6. சிசுவுக்குப் பீடாபரிஹாரார்த்தமாக தனிடு ஹோம மந்த்ரங்கள் எட்டு—முதலாவது மந்த்ரம்.)

அயம் கலிம் பதயந்தம் ச்வாநமிவோத்வ்ருத்தம் ।
அஜாம் வாசிதாமிவ மருதஃ பர்யாத்வம் ஸ்வாஹா ॥ எ ॥

கலியென்கிற ஒரு பூதம் இந்தச் சிசுவை நோக்கி ஹிம்ஸிக்க வருகிறது; ஆகாரம் தின்ன ஆத்ரத்துடன் ஓடி வருகிற நாய் போல் அது வருகிறது. மருத் தேவதைகளே! நீங்கள் இந்தப் பூதத்தை நிரஸனம் செய்யுங்கள். துரத்துங்கள். தலை வேதனை யாகச் சத்தம்போடும் ஆட்டைத் துரத்துவதுபோல்.

(இரண்டாவது மந்த்ரம்.)

ஶண்டே³ரஶ்ஶண்டி³கேர உலூக²ல꞉ ।
ச்யவநோ நஶ்யதாதித꞉ ஸ்வாஹா ॥ ௮ ॥

ஷண்டன் என்பவன் ஒரு அஸுரன். அவனுக்கு மேற் பட்டவன் ஷண்டேரதன். ஷண்டனின் ஸேனாதிபதி சண்டி கேரன். மிகவும் துஷ்டனானவன் அல்லது உரலை ஆயுதமாகக் கொண்டவன் உலூகலன். கர்ப்பம், சிசு இவைகளை நழுவச் செய்கிற அஸுரன் ச்யவனன். ஆகிய இந்த நான்கு அஸு ரர்கள் யாவரும் இந்தவிடத்திலிருந்து நசிக்கவும், மறையட்டும்.

(மூன்றாவது மந்த்ரம்.)

ஆயஶ்ஶண்டோ³ மர்க உபவீர உலூக²ல꞉ ।
ச்யவநோ நஶ்யதாதித꞉ ஸ்வாஹா ॥ ௯ ॥

இரும்பு முகமுள்ளவன், சண்டன், மர்க்கன், உபவீரன். உலூகலன், ச்யவனன் ஆகிய ஆறு அஸுரர்கள் நசித்துப் போகட்டும்.

(நான்காவது மந்த்ரம்.)

கேஶிநீஶ்ஶ்வலோமிநீ꞉ க²ஜாபோ(அ)ஜோபகாஶிநீ꞉ ।
அபேத நஶ்யதாதித꞉ ஸ்வாஹா ॥ ௧௦ ॥

பிசாச ஸ்த்ரீகள். சரீரம் முழுவதும் கேசம் (ரோமம்) நிறைந்த பிசாசிகளே! உடம்பில் நாய்களின் ரோமம் போன்ற ரோமம் உள்ளவைகள், நொண்டிபோல் இருப்பவை, பெண் ஆடு போல் தோன்றுகிறவைகள் இத்யாதிகளான பிசாசிகளே! நீங்கள் விலகியிருங்கள். நசித்துப்போவீர்களாக, இவ்விடமிருந்து.

15

(ஐந்தாவது மந்த்ரம்)

விஶ்ரவஸ꞉ கௌபேரகா꞉ ரக்ஷோராஜேந ப்ரேஷிதா꞉ ।
க்3ராமம் ஸஜாநயோ க3ச்ச2ந்தீச்ச2ந்தோ(அ)பரிதா3க்ருதாந் ஸ்வாஹா ॥

குபேரன் அஸுர, ராக்ஷஸ யஜமானன். அவனால் அனுப்பப் பட்ட ரக்ஷஸ்ஸுகள், தங்கள் பார்யைகளான அஸுரிகளுடன் பூலோகத்தில் க்ராமங்களுக்கு, க்ரஹங்களுக்கு வந்து சுற்று கிறார்கள். அவர்கள் உபநயனம் செய்யப்படாத பாலகர்களைத் தின்ன விரும்பி வருகிறார்கள். அவர்களைக் கொல்லுவோம். ரக்ஷணத்திற்காகத் தேவதைகளிடம் மாணவகனை ஒப்புவிப்பது பரிதானம். அது உபநயநத்தில் செய்யப்படுகிறது. அந்தப் பரிதானம் செய்யப்படாதவர்கள் பாலர்கள்.

(ஆறுவது மந்த்ரம்.)

ஏதாந் க்4நதைதாந் க்3ருஹ்ணீதேத்யயம் ப்3ரஹ்மணஸ்புத꞉ ।
தாநக்3நி꞉ பர்யஸரத் தாநிந்த்3ரஸ்தாந் ப்3ருஹஸ்பதி꞉ । தாந
ஹம் வேத3 ப்3ராஹ்மண꞉ ப்ரம்ருஶத꞉ கூடத3ந்தாந் விகேஶாந்
லம்ப3நஸ்தநாந் ஸ்வாஹா ॥ ௪௨ ॥

நீண்ட பற்கள் உள்ளவர்களும், தலை விரித்தவர்களும், தொங்குகிற ஸ்தனமுள்ளவர்களுமான அந்தப் பிசாசாதிகள், நமது குழந்தைகளை இங்குமங்கும் தேடிப்பிடிக்க வருவதை ப்ராம்ஹணனாகிய நான் பார்க்கிறேன். இந்தப் பிசாசங்களை ப்ரம்ஹ புத்ரனான அக்நி, இந்த்ரன், ப்ருஹஸ்பதி ஆகிய தேவர்கள் பின் தொடர்ந்து துரத்தட்டும். துரத்தும்போது, "பிடியுங்கள், கொல்லுங்கள் இவர்களை" என்று கோஷம் செய்யட்டும்.

பதின்மூன்றுவது கண்டம் முற்றிற்று.

## பதினான்காவது கண்டம்.

(ஏழாவது மந்த்ரம்.)

நக்தஞ்சாரிண உரஸ்பேஶாஞ்சூலஹஸ்தான் கபாலபான் ।
பூர்வ ஏஷாம் பிதேத்யுச்சைஶ்ஶ்ராவ்யகர்ணகஃ ॥
மாதா ஜகந்யா ஸர்பதி க்ராமே விதுரமிச்சந்தீ ஸ்வாஹா ॥

மேற்கண்ட பிசாசங்கள் இரவில் ஸஞ்சரிப்பவைகள். மார்பில் ஜ்வலிக்கிற வஸ்துவைத் தரிப்பவர்கள். கையில் சூல ஆயுதம் தரிப்பவர்கள். மண்டையோட்டில் பானம் செய்கிறவர்கள். இவர்களின் பிதாவான கர்ணகன் என்ற பிசாசன் இவர்களுக்கு முந்தி வருகிறான். வரும்போது "இந்தக் குழந்தையைப் பிடியுங்கள், தின்னுங்கள்" என்று இரைச்சல் பெரிதாகப் போட்டுக்கொண்டு வருகிறான். இந்தப் பிசாசங்களின் தாயாரும் இந்தக் கூட்டத்திற்குப் பின்னால் வருகிறாள். க்ருஹங்களில் வ்யாதியுள்ள துர்ப்பலமான குழந்தைகளைப் பிடிக்க ஆசைப்பட்டு வருகிறாள். ஆகையால் இவர்களை அக்னி துரத்தவேண்டும்.

(காது இல்லாத போனாலும் வெகுதூரம் சப்தம் கேட்கக் கூடியவன் என்றும் அர்த்தமுண்டு.)

(எட்டாவது மந்த்ரம்.)

நிஶீதசாரிணீ ஸ்வஸா ஸந்தினா ப்ரேக்ஷதே குலம் । யா ஸ்வபந்தம் போதயதி யஸ்யை விஜாதாயாம் மனஃ । தாஸாம் த்வம் க்ருஷ்ணவர்த்மனே க்லோமானம் ஹ்ருதயம் யக்ருத் । அக்னே அக்ஷீணி நிர்தஹ ஸ்வாஹா ॥ ௮ ॥

மேற்கண்ட பிசாசங்களுக்கு ஸஹோதரியான பிசாசியும் இருக்கிறாள். அவள் பாதிராத்ரியிலேயே ஸஞ்சரிப்பவள். க்ருஹத்தின் ப்ரஸவ அறையின் கதவு இடுக்கு வழியாக உள்ளே இருப்பவர்களைப் பார்க்கின்றவள். எவள் தூங்குகிற குழந்தையையும் மற்றவர்களையும் பயமுறுத்தி விழிக்கச் செய்கிறவளோ,

எவளுக்கு முக்யமாக ப்ரஸவித்தவளை ஹிம்ஸிப்பதிலேயே எண்ணமோ, ஏ! க்ருஷ்ணவர்த்மாவான அக்நியே! அவர்களுடைய ஹ்ருதயத்தையும், கண்களையும், யக்ருத், க்லோமா என்ற மாம்ஸங்களையும் தஹிப்பாயாக, கொளுத்துவாயாக.

(ஆப. க்ரு. க-15. ஸூ-12. வெளியூரிலிருந்து திரும்பியதும் புத்ரனுக்கு அபிமந்த்ரணம், சிரஸ்ஸில் மோத்தல் இவைகளுக்கு மந்த்ரம்.)

அங்காதங்காத்ஸம்பவஸி ஹ்ருதயாததிஜாயஸே । வேதோ வை புத்ரநாமாஸி ஸஜீவ ஶரதஶ்ஶதம் ॥ ௪ ॥

ஆத்மா பவேத்யஷா ॥ ௫ ॥

மேற்படி மந்த்ரங்களின் அர்த்தங்களை இரண்டாவது ப்ரச்னம் 12-ஆவது கண்டம் 107-ஆம் பக்கம் பார்க்க.

(ஆப க்ரு. க-15. ஸூ-12. குமாரனின் காதில் ஜபிக்கும் மந்த்ரங்கள் ஐந்து.)

அக்நிராயுஷ்மாந்த்ஸ வநஸ்பதிபிராயுஷ்மாம்ஸ்தேந த்வாயுஷாயுஷ்மந்தம் கரோமி ॥ ௬ ॥

ஸோம ஆயுஷ்மாந்த்ஸ ஓஷதீபிராயுஷ்மாம்ஸ்தேந த்வாயுஷாயுஷ்மந்தம் கரோமி ॥ ௭ ॥

யஜ்ஞ ஆயுஷ்மாந்த்ஸ தக்ஷிணாபிராயுஷ்மாம்ஸ்தேந த்வாயுஷாயுஷ்மந்தம் கரோமி ॥ ௮ ॥

ப்ரஹ்மாயுஷ்மத்தத் ப்ராஹ்மணைராயுஷ்மத்தேந த்வாயுஷாயுஷ்மந்தம் கரோமி ॥ ௯ ॥

தேவா ஆயுஷ்மந்தஸ்தே(அ)ம்ருதேநாயுஷ்மந்தஸ்தேந த்வாயுஷாயுஷ்மந்தம் கரோமி ॥ ௧௦ ॥

அக்நியானவன் தீர்க்காயுஸ்ஸுள்ளவன். அவன் வனஸ்பதிகளால், வ்ருக்ஷங்களால் ஆயுஷ்மானுகிறான். அந்த அக்நியின்

தீர்க்காயுஸ்ஸால் குமாரனை உன்னையும் தீர்க்காயுஸ் உள்ளவனாகச் செய்கிறேன்.

(மற்ற நான்கு மந்த்ரங்களுக்கும் இதே அர்த்தம்.)

ஸோமன், சந்த்ரன் ஓஷதிகளால் ஆயுஷ்மானாகிறான். யஜ்ஞமானது தக்ஷிணைகளால் ஆயுஸ்ஸுள்ளதாகிறது. வேதமானது ப்ராம்ஹணர்களால் ஆயுஸ்ஸுடனிருக்கிறது. தேவர்கள் அம்ருதத்தால் ஆயுஸ்ஸுள்ளவர்களாகிறார்கள்.

(ஆப. க்ரு. க-15. ஸூ-13. வெளியூரிலிருந்து வந்ததும் பெண் குழந்தையை அபிமந்த்ரணம் செய்வது.)

ஸர்வஸ்மா தாத்மந: ஸம்பூதாஸி ஸா ஜீவ சரத: சதம் ॥

அர்த்தம் முன்போலவே.

(ஆப. க்ரு. க-16. ஸூ-1. அன்னப்ராசன மந்த்ரங்கள்.)

ஹிதம் த்வா ப்ரஜாபதே ரஸம் ப்ராசயாமி ச்ரியா ஸஹ ஓஷதய ஸஹ தீர்ணாய ஸஹ ஓஷதய ஸஹ ॥ கஉ ॥

ஸுவர்ணவர்ணம் ஸுரபிம் மதுமத் ரஸம் ப்ரஜாபதே ரஸம் ப்ராசயாமி ச்ரியா ஸஹ ஓஷதய ஸஹ தீர்ணாய ஸஹ ஓஷதய ஸஹ ॥ கங ॥

குமாரனே! இந்த அன்னத்தால் உன்னை தீர்த்தங்கள், ஓஷதிகள் ஆகியவைகளுடைய ரஸத்தை ஸாரத்தைச் சாப்பிடச் செய்கிறேன். அந்தத் தீர்த்தங்களும், ஓஷதிகளும் உனக்கு க்ஷேமகரங்களாயும் ஆரோக்ய ஹேதுக்களாயும் இருக்கவேண்டும்.

(மற்ற இரண்டு மந்த்ரங்களுக்கும் இதே அர்த்தம்.)

(ஆப. க்ரு. க-16. ஸூ-8.)

உக்ஷண்வாய வசாந்நாய ஸோமப்ருஷ்டாய வேதஸே ॥ கச ॥

மேற்கண்ட மந்த்ரங்களையும், மந்த்ரங்களின் அர்த்தத்தையும் இரண்டாவது ப்ரச்னம் முதல் கண்டம் 59-ஆம் பக்கம் பார்க்க.

**பதினான்காவது கண்டம் முற்றிற்று.**

## பதினைந்தாவது கண்டம்.

(ஆப. க்ரு. க-17, ஸூ-1. க்ருஹ நிர்மாணாதி மந்த்ரங்கள் 7.)

𑌯𑌦𑍍𑌭𑍂𑌮𑍇𑌃 𑌕𑍍𑌰𑍂𑌰𑌂 𑌤𑌦𑌿𑌤𑍋 𑌹𑌰𑌾𑌮𑌿 𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍀𑌂 𑌨𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌹𑌾𑌮𑌿 । 𑌇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌵𑌸𑌾𑌨𑌮𑌾𑌗𑌨𑍍𑌮 𑌦𑍇𑌵𑌾 𑌗𑍋𑌮𑌦𑌶𑍍𑌵𑌵𑌦𑌜𑌾𑌵𑌿𑌦𑍍𑌵𑌤𑍍 𑌸𑍂𑌨𑍃𑌤𑌾𑌵𑌦𑍍𑌬𑍃𑌹𑌤𑍍 ॥ ௧ ॥

இந்த க்ருஹத்தின் பூமியில் உள்ள முள் முதலிய க்ரூர வஸ்துக்களை இங்கிருந்து வெளியில் தள்ளுகிறேன். இதிலுள்ள அலக்ஷ்மியையும் வெளிப்படுத்துகிறேன். மிகவும் ப்ரசஸ்தமான இந்த இடத்திற்கு இப்போது வந்துள்ளோம். ஏ! வாஸ்து தேவதைகளே! உங்கள் அருளால் இந்த இடம் பசு, குதிரை, தனம் இவைகளால் நிரம்பியதாக விளங்கவேண்டும்.

(ஆப. க்ரு. க-17, ஸூ-3. ஸ்தலத்தை ஸ்பர்சிக்க)

𑌸𑍍𑌯𑍋𑌨𑌾 𑌪𑍃𑌥𑌿𑌵𑌿 𑌭𑌵𑌾𑌨𑍃𑌕𑍍𑌷𑌰𑌾 𑌨𑌿𑌵𑍇𑌶𑌨𑍀 ।
𑌯𑌚𑍍𑌛𑌾 𑌨𑌃 𑌶𑌰𑍍𑌮 𑌸𑌪𑍍𑌰𑌥𑌾𑌃 ॥ ௨ ॥

ஏ! ப்ருதிவி! பூமியே! ஸுகஸ்பர்சமுள்ளவளாக இருப்பாயாக. கல் முள் அற்றவளாயும் வஸிக்கத்தக்கவளாயுமிருந்துகொண்டு எங்களுக்கு ஸௌக்யத்தைக் கொடுப்பாயாக. நீ எங்கும் ப்ரஸித்தையானவள்.

(ஆப. க்ரு. க-17, ஸூ-3. வலதுபக்கம் தூண்வைக்க இரண்டு மந்த்ரங்கள்—முதலாவது மந்த்ரம்.)

𑌇𑌹𑍈𑌵 𑌤𑌿𑌷𑍍𑌠 𑌨𑌿𑌮𑌿𑌤𑌾 𑌤𑌿𑌲𑍍𑌵𑌿𑌲𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌰𑌾𑌵𑌤𑍀 ।
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍋𑌷𑌸𑍍𑌯 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑍀 𑌮𑌾 𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑌨𑍍𑌨𑌘𑌾𑌯𑌵𑌃 ॥ ௩ ॥

ஏ! ஸ்தாணு தேவதையே! இந்த இடத்தில் நாட்டப்பட்ட நீ இங்கேயே நீண்டகாலம் ஸ்திரமாயிருக்கவும். தச்சனால் செய்யப்பட்ட திலக அலங்காரத்துடன். இங்கு நின்று நீ எங்களுக்கு அந்நாதி ஸம்ருத்தி ஹேதுவாயிருக்கவும். இந்த க்ருஹத்தின் வாசற்படி மத்தியில் விளங்கும் உன்னை, பிறருக்குத் தீங்கு செய்கிறவர்கள் தாண்டி உள்ளே போகாமல் செய்யவும்.

(இரண்டாவது மந்த்ரம்)

ஆத்வா குமாரஸ்தருண ஆவத்ஸோ ஜகதை: ஸஹ |

ஆத்வா பரிஸ்ருத: கும்ப ஆ தத்ந: கலஶைரயன் || ௪ ||

ஏ! ஸ்தூணா தேவதையே! இந்த க்ருஹத்தில் குமாரர்கள், யுவா, குழந்தை, நடமாடுகிற குழந்தை ஆகியவர்கள் ஏற்பட்டு உன்னிடம் விளையாட்டிற்காகவும், சாய்ந்து ஸுகம் பெறவும், வேறு கார்யங்களுக்காகவும் வந்துகொண்டிருக்க வேண்டும். உனது அநுக்ரஹத்தால் இந்த க்ருஹத்தில் நெய்க்குடம் தயிர்க் குடம் ஆகிய ஸம்ருத்திகள் ஏற்படவேண்டும்.

(ஆப, க்ரு. க-17. ஸூ-5. மூங்கில் போடுகையில் ஜபிக்க.)

ஐதுந ஸ்தூணாவயிரோஹவம்ஶோர்த்வோ விராஜந்

அபஸேத ஶத்ரூந் || ரு ||

ஏ! வம்ச! அதாவது மூங்கிலே! இந்தக் கம்பங்களில் நீ ஏறி உட்காரு. நீ கெட்டியாக வளையாமல் விளங்கிக் கொண்டு உன்னுடைய சத்ருக்களையும் என்னுடைய சத்ருக்களையும் துரத்திவிடு.

(ஆப. க்ரு. க-17. ஸூ-6. தூண்களை அபிமந்த்ரணம் செய்ய.)

ப்ரஹ்ம ச தே க்ஷத்ரம் ச பூர்வே ஸ்தூணே அபி

ரக்ஷதாம் || ௬ ||

யஜ்ஞஶ்ச தக்ஷிணாஶ்ச தக்ஷிணே || ௭ ||

இஷஶ்சோர்ஜஶ்சாபரே || அ ||

மித்ரஶ்ச வருணஶ்சோத்தரே || கூ ||

தர்மஸ்தே ஸ்தூணா ராஜஶ்ரீஸ்தே ஸ்தூப: || க0 ||

ப்ரம்ஹம், க்ஷத்ரம் என்கிற இரண்டு சக்திகளும் கிழக்குப் பாகத்திலுள்ள தூண்களைக் காக்கட்டும். யாகமும், யாகதக்ஷிணை களும் தெற்குத் திக்குத் தூண்களையும், இஷம், ஊர்ஜம் என்கிற சரத்காலமாஸங்கள் மேற்குத் திக்குத் தூண்களையும், மித்ரன்,

வருணன் இருவரும் வடக்குத் திக்குத் தூண்களையும், பாது காத்துவரட்டும். க்ருஹமத்தியில் விளங்கும் ப்ரதான ஸ்தம்ப மானது தர்மஸ்வரூபமாயிருக்கிறது. இந்த க்ருஹத்தின் முக்ய மான மேற்கூரை மூங்கில் ஸரியாக விளங்குகிறது.

(ஆப. க்ரு. க-17. ஸூ-7. அக்நி எடுக்க மந்த்ரம்)

உத்³த்⁴ரியமாண உத்³த⁴ர பாப்மநோ மா யத³வித்³வாந் யச்ச வித்³வாக்ம்ஶ்சகார । அஹ்நா யதே³ந: க்ருதமஸ்தி பாபம் ராத்ரியா யதே³ந: க்ருதமஸ்தி பாபம் ஸர்வஸ்மாந்மோத்³த்⁴ருதோ முஞ்ச தஸ்மாத் ॥ கக ॥

ஏ! அக்நி தேவனே! என்னால் இந்த க்ருஹத்தில் உபயோ கிக்க எடுக்கப்படுகிற நீ, என்னால் தெரிந்தும், தெரியாமலும் செய்யப்பட்ட பாபத்திலிருந்து விடுவிக்கவேண்டும். மேலும் பகலில் செய்ததும் இரவில் செய்ததுமான ஸகல விதமான பாபத்திலிருந்தும் என்னை உத்தாரம் செய்யவேண்டும்.

(ஆப. க்ரு. க-17. ஸூ-7. க்ருஹத்தில் அக்னியை ஸ்தாபிக்க.)

இந்த்³ரஸ்ய க்³ருஹா வஸுமந்தோ வரூதி²நஸ்தாநஹம் ப்ரபத்³யே ஸஹ ப்ரஜயா பஶுபி⁴: ஸுமநஸ: ப்ரபத்³யே ॥ கஉ ॥

இந்த்ரனை, யஜமானனை என்னுடைய இந்தவீடு, தனம் நிரம்பியதாயும், பல அங்கணங்கள் அவயவங்கள் பொருந்திய தாயுமிருக்கிறது. இதில் நான் நல்ல மனதுடன் ப்ரவேசிக் கிறேன்.

(ஆப. க்ரு. க-17. ஸூ-7. அக்நியைப் பூமியில் வைக்க மந்த்ரம்)

அம்ருதாஹுதிமம்ருதாயாம் ஜுஹோம்யக்³நிம் ப்ருதி²வ்யாமம்ருதஸ்ய ஜித்யை । தயாऽநந்தம் காமமஹம் ஜயாநி ப்ரஜாபதிர்யம் ப்ரத²மோ ஜிகா³யாக்³நாவக்³நௌ ஸ்வாஹா ॥ கங ॥

அம்ருதத்வ ப்ராப்திஹேதுவான இந்த அக்நி ஸ்தாபன

மாகிற ஆஹுதியை அம்ருதையான ப்ருதிவியில் ஹோமம் செய்கிறேன். அம்ருதத்வத்தை ஜயிப்பதற்காக. இந்த ஆஹுதியால் நான் அனந்தமான இஷ்டத்தை ஜயிக்கவேண்டும். முதல்முதலாக ப்ரஜாபதிதேவன் எதை ஜயித்தானோ அதை நானும் ஜயிக்க விரும்பி இந்தப் பூமியில் இந்த அக்னியை ஹோமம் செய்கிறேன். வைக்கிறேன்.

(ஆப. க்ரு. க-17. ஸூ-9. நெல்லையும் யவத்தையும் பரப்பும் மந்த்ரம்.)

அன்னபதே அன்னஸ்ய நோ தேஹ்யனமீவஸ்ய ஶுஷ்மிண꞉ ।
ப்ரப்ரதாரம் தாரிஷ ஊர்ஜம் நோ தேஹி த்விபதே சதுஷ்பதே ॥ கச ॥

ஏ! அந்நபதிதேவனே! எங்களுக்கு, பலகரமாயும், ஆரோக்யகரமாயுமுள்ள அந்நத்தைக் கொடுப்பாயாக. அந்நத்தை ப்ரதானம் செய்கிறவனாக என்னை வ்ருத்தி செய்யவேண்டும். என்னுடைய நான்குகால் ப்ராணிகள், எனது பந்துமித்ராதிகள் இவர்களுக்கும் அன்னத்தை, அல்லது பலத்தைக் கொடுக்க வேண்டும்.

(ஆப. க்ரு. க-17. ஸூ-10. தீர்த்தத் தொட்டியில் தீர்த்தம் சேர்த்தல்.)

அரிஷ்டா அஸ்மாகம் வீரா ஸந்து மா பராஸேசி மே தனம் ॥

இந்த க்ருஹத்தில் நமது புத்ராதிகள் பிறரால் ஹிம்ஸிக்கப் படாதவர்களாக இருக்கவேண்டும். இந்தக் குடும்பத்தில் எனது தனமும் வீணைச் செலவு ஆகாமலிருக்கவேண்டும். வீணைச் சிந்தப்பட்ட ஜலம்போல் ஆகவேண்டாம்.

(ஆப. க்ரு. க-17. ஸூ-11. தீர்த்தபாண்டம் உடைந்தால் அபிமந்த்ரணம்.)

ஸமுத்ரம் வ꞉ ப்ரஹிணோம்யக்ஷிதா꞉ ஸ்வாம் யோனிமபிகச்சத । அரிஷ்டா அஸ்மாகம் வீரா மா பராஸேசி மத்தனம் ॥ கரு ॥

இந்த மண்பாண்டமானது உடைந்து அதன் ப்ரதிவீ பாகமானது பார்த்திவாம்சமானது, ப்ருதிவியை மீண்டும்

அடைந்துவிட்டது. இந்தப் பாண்டத்திலிருந்த தாய் போன்ற தான ஆகாச தத்வமானது, மாதாவான உத்பத்தி ஸ்தானமான ஆகாசத்திலேயே லயித்துவிட்டது. இந்தப் பாண்டம் உடைந்த அபசகுனம் காரணமாக நமக்குக் கெடுதி ஏற்படாமல் புத்ரர்களுடனும் பசுக்களுடனும் சேர்ந்து வ்ருத்தியடைந்து வாழ்வோம். நம்மை எவன் த்வேஷிக்கிறானோ (எதிரி) அவனே உடைந்து போகட்டும். இந்தப் பாண்டம் உடைந்ததாக வேண்டாம்.

(ஆப. க்ரு. க-17. ஸூ-12. க்ருஹப்ரவேச ஹோம மந்த்ரங்கள் நான்கு—முதலாவது மந்த்ரம்.)

வாஸ்தோஷ்பதே ப்ரதிஜாநீஹ்யஸ்மாந் ஸ்வாவேஶோ அநமீவோ பவா நஃ। யத்த்வேமஹே ப்ரதி தந்நோ ஜுஷஸ்வ ஶந்நஏதி த்விபதே ஶஞ்சதுஷ்பதே ॥ கசு ॥

ஏ! வாஸ்து தேவனே! க்ருஹதேவனே (இந்த க்ருஹத்தில் நாங்கள் வஸிக்க எங்களை அனுமதிக்கவும்.) எங்களை அறிந்து கொள்ளவும் நீ எனக்கு நன்கு அடையக்கூடியவனாயும் ஆரோக்ய காரியாயுமிருக்கவேண்டும். உன்னை நாங்கள் எதை வேண்டுகிறோமோ அந்த இஷ்டகாமமானது எங்களுக்குக் கிடைக்கும்படி செய்யவும். புத்ராதிகளான த்விபாத் ப்ராணிகளுக்கும், பசு முதலிய நான்கு கால் ப்ராணிகளுக்கும் க்ஷேமம் ஏற்படவேண்டும்.

(இரண்டாவது மந்த்ரம்)

வாஸ்தோஷ்பதே ஶக்மயா ஸஂஸதா தே ஸக்ஷீமஹி ரண்வயா காதுமத்யா। பாஹி க்ஷேம உத யோகே வரந்நோ யூயம் பாத ஸ்வஸ்திபிஸ்ஸதா நஃ ॥ கள ॥

ஏ! வாஸ்து தேவனே! ஸுககரமாயும், ரமிக்கத்தக்கதாயும், ஸந்மார்க்கத்தில் செல்லுவதாயுமுள்ள உனது ஸபையில் நாங்களும் சேர்ந்து கொள்ளுகிறோம். எங்களை யோக க்ஷேமங்களுடன் நன்றாகச் சேர்க்கவும். இல்லாதது கிடைப்பது யோகம்.

இருப்பதை ரக்ஷிப்பது க்ஷேமம். ஏ! தேவர்களே! நீங்கள் ஆசீர்வாதங்களால் எங்களை எப்போதும் பாதுகாருங்கள்.

(மூன்ருவது மந்த்ரம்.)

𑌵𑌾𑌸𑍍𑌤𑍋𑌷𑍍𑌪𑌤𑍇 𑌪𑍍𑌰𑌤𑌰𑌣𑍋 𑌨 𑌏𑌧𑌿 𑌗𑌯𑌸𑍍𑌫𑌾𑌨𑍋 𑌗𑍋𑌭𑌿𑌰𑌶𑍍𑌵𑍇𑌭𑌿𑌰𑌿𑌨𑍍𑌦𑍋 । 𑌅𑌜𑌰𑌾𑌸𑌸𑍍𑌤𑍇 𑌸𑌖𑍍𑌯𑍇 𑌸𑍍𑌯𑌾𑌮 𑌪𑌿𑌤𑍇𑌵 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌨𑍋 𑌜𑍁𑌷𑌸𑍍𑌵 ॥ ௧௮ ॥

ஏ! வாஸ்துதேவனே! நீ எங்களுக்கு வ்ருத்தியைக் கொடுப்பவனுக விளங்கவும். ஈச்வரனே! நீ எங்களுக்குப் பசு, அச்வம் முதலிய தனங்களால் ஸம்ருத்தி ஏற்படச் செய்பவும். உன்னுடைய உறவில் நாங்கள் குறைவற்றவர்களாக இருப்போம். பிதா புத்ரர்களை வாத்ஸல்யத்தால் பரிக்ரஹிப்பதுபோல் நீயும் எங்களைப் பரிக்ரஹித்துக் கொள்ளவும்.

(நான்காவது மந்த்ரம்.)

𑌅𑌮𑍀𑌵𑌹𑌾 𑌵𑌾𑌸𑍍𑌤𑍋𑌷𑍍𑌪𑌤𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌰𑍂𑌪𑌾𑌣𑍍𑌯𑌾𑌵𑌿𑌶𑌨𑍍 । 𑌸𑌖𑌾 𑌸𑍁𑌶𑍇𑌵 𑌏𑌧𑌿 𑌨𑌃 ॥ ௧௯ ॥

ஏ! வாஸ்துபுருஷனே! நீ வ்யாதிகளைச் சமனம் செய்யும் சக்தியுள்ளவன். அதற்காகப் பலவித உருவம் கொண்டவன். (மருந்து வைத்யன் எல்லாம் உனதுரூபம்). இந்த க்ருஹத்தில் எங்களுக்கு உயர்ந்த மித்ரனுக இருந்து விளங்குவாயாக.

𑌶𑌿𑌵𑌂 𑌶𑌿𑌵𑌮𑍍 ॥ ௨௦ ॥

இந்த க்ருஹம் மங்களமாக ஆகவேண்டும்.

பதினைந்தாவது கண்டம் முற்றிற்று.

## பதினுருவது கண்டம்.

(ஆப. க்ரு. க-18. ஸூ-1. ச்வக்ரஹத்தால் பீடிக்கப்பட்ட குமாரனுக்கு ப்ரோக்ஷண மந்த்ரங்கள் பதினென்று-முதலாவது மந்த்ரம்.)

கூர்குரிஹ ஸ்ம கூர்குரிஹ ஸ்ம கூர்குரோ வா பந்த: ।
உபஸ்ரிஷ்டாய ஸ்வாயஞ்சரீ த்ருதீயஸ்யா இதோ திவ: ॥ ௧ ॥

கூர்குர் என்று சப்திக்கிற ஸ்வா என்ன, வாலினால் பிறரைக் கட்டுகிற ஸ்வா என்ன, மேல் உலகமாகிய மூன்றாவது இடத்திலிருந்து வந்த ஸ்வா என்ன, இவைகளையும் விரட்டுங்கள்.

(இரண்டாவது மந்த்ரம்.)

ஔலபஸ்ச த்வாலம்பஸ்ச ஸ்வாஹா ப்ரஜாஸ்வேத: ஸ்யாம: ஸுயோ
ரூ உபலம்பக் ஸாரமேயோ ஹ யாவந்தி ஸமுத்ரமுகவா ஷ்வாநஸ ॥

ஔலபம் என்ற நாய், இதையும் தூரத்துங்கள். ரிஜி என்பதின் பிள்ளையான ஸ்வா, கறுப்பு, பொன்வர்ணம், அடிப்பக்கம் கறுத்த ரோமமுள்ளது, உலும்பலம், ஸாரமேயம் ஆகிய ஸ்வாக்களையும் அதட்டி இரைச்சல்போட்டுப் பயமுறுத்தி விரட்டுங்கள். அந்த மாதிரி விரட்டப்பட்டு அவைகள் ஆகாசத்தை நோக்கிக் கொண்டு எவ்வாறு ஓடுமோ அவ்வாறு செய்யுங்கள்.

(மூன்றாவது மந்த்ரம்.)

ஸுபிரண்யோ ஸுமஹிரண்யோ ஸுநா ஸுப்ரம் ஸாபீஸிண: ।
ஸாபீஸிண ஸ்ருஜ ஸ்ருஜ ஸுநக ஸ்ருஜேகவாத்ருஸ்ருஜ
ஸு ॥ ௩ ॥

ஸ்வாக்களில் முந்தியதான ஸாபீரிணம் என்பது வெள்ளி தங்கங்களால் ஆபரணம் தரிக்கிறது. ஏ! ஸாபீரிண! சுநக! ஸ்வாவே! இந்தக் குமாரனை விடு, விடு. ஸ்வாக்கூட்டத்தில் முக்யமானவனே! இவனை விட்டு விடு. "ச்சத்" (இது ஸ்வாவை விரட்டும் சத்தம்.)

(நான்காவது மந்த்ரம்.)

தத்ஸத்யம் யத்தே ஸரமா மாதா ஸீஸ: பிதா ஸ்யாமஶபலௌ ப்ராதரௌ த்ரா
ஸ்வாஸ்யவிஷாஸஸ்வம் ஸ்வாஸ்த்ரமே ஸுவிஸஹா (௩) இத்யவிஹர
ஹந்தி யந்தம் ஸ்ருணீஷே கௌமாரம் வாஹம் யந்தம் ஸ்ருண இத்ய
ஸ்வ: ॥ ௪ ॥

ஏ! ஸுபர்ணனே! முன்பு அஸுரர்கள் கொண்டு போன பசுக்களை அறிந்து பிடித்து வரும்படி இந்த்ரன் உன்னைக் கேட்டுக் கொண்டார். நீ, அந்தப் பசுக்களைப் பிடித்துக் கொண்டு வந்தாய். உன்னைப் பார்த்து "பசுக்களைக் கண்டு பிடித்தாயா" என்று இந்த்ரன் கேட்டார். "கண்டு பிடித்து இங்குக் கொண்டு வந்து விட்டேன்", என்று நீ பதில் சொன்னுயல்லவா? இந்த்ரன் வரம் கொடுப்பதாகச் சொன்னார். குமாரர்களைப் பீடிப்பதை நீ வரனாகக் கேட்டாய். இவையெல்லாம் இப்போது ஸத்யமாகியது.

(ஐந்தாவது மந்த்ரம்.)

விக்ருஹ்ய பாஹூ ஸமவஸ்ருஷ்டோ ஸகா ॥ ௫ ॥

நீ கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு நதியை, ஆகாசத்தைத் தாண்டி ஓடுகிறாய். ஆகாசத்தை நோக்கியவனாய்.

(ஆறாவது மந்த்ரம்.)

பி்ருஹஸ்பதிஷ்ட்வா ப்ருஷ்ணே ஸுநாதோபஸ்ஸுபர்ணி: ।
ஸுபர்ணி ஸ்ருஜ ஸ்ருஜ ஸுநக ஸ்ருஜேக்ஷ்வாத்யஸ்ருஜ
வஸ ॥ ௬ ॥

முன் போல் அர்த்தம்.

(ஏழாவது மந்த்ரம்.)

தஸ்யாஸ்த்வம் பத்னீ ஸரமா மாதா ரோஹிதஃ பிதா । ஸுஹீ
ஸகோ ஸரஸ்யகா க்ஷயாவத த்ருதீயஸ்யா உதோ திவ: ॥ ௭ ॥

ஸுபர்ணனே! உன்னுடைய தாய் ஸரமா என்பவள். ரோஹிதன் என்பவன் உன் பிதா. உன்னுடன் ஓடி வருகிற இவர்களும் உனக்கு ஸமமான ரஸமுள்ள மித்ரர்கள். நீங்கள் எல்லோரும் மூன்றாவது உலகமான தேவலோகத்திலிருந்து அதோமுகமாக இங்கு வருகிறீர்கள், குமாரர்களைப் பீடிக்க.

(எட்டாவது மந்த்ரம்.)

தேக்ஷ்ய ஸஸார தண்ஸ்ய தஸ்ய விதஸ்யாஜகாநஸ்ய
ரோஹிதஸ்ய । உஷாஹநாபோ மாதா ப்ருநாகரோஹவ:
பிதா ॥ ௮ ॥

உனது மித்ரர்கள் தேகன், ஸஸரமதண்டன், தூலன், விதூலன், அர்ஜுநன், லோஹிதன் என்று ஆறு பேர்கள். துலா என்ற பெயருள்ளவள் உங்கள் தாய். மந்தாககன் என்பவன் உங்கள் தகப்பன்.

(ஒன்பதாவது மந்த்ரம்.)

𑌸𑌂𑌤𑌕𑍍𑌷𑌾 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌵𑌶𑍀 𑌵𑍋 𑌨 𑌸𑍀𑌸𑌰𑍀𑌸𑌤 । 𑌇𑌹𑍈𑌵 𑌹𑌿
𑌸𑍀𑌸𑌰 𑌸𑌾𑌰𑌮𑍇𑌯 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌅𑌸𑍍𑌤𑍁 𑌸𑍀𑌸𑌰 ॥ ௯ ॥

இங்கு எங்களுடைய வேலைக்காரன் ஆயுத ஸஹிதமாக இருக்கிறான். உங்களைக் கொல்லுவான். ஆகையால் கிட்ட வாரீர்கள். ஸரமாபுத்ரனான ஸீஸரம என்பவனே! ஓடிப்போ. 'ச்சத்'. ஸீஸர என்பவனே! உனக்கு நமஸ்காரம் நீயும் ஓடிப்போ.

(பத்தாவது பதினொன்றாவது மந்த்ரங்கள்.)

𑌸𑌂𑌶𑍍𑌵𑌾 𑌵𑍃𑌷𑌣𑌃 𑌵𑌶𑍋 𑌨 𑌸𑍀𑌸𑌰𑍀𑌸𑌤 । 𑌇𑌹𑍈𑌵 𑌹𑌿
𑌸𑍀𑌸𑌰 𑌸𑌾𑌰𑌮𑍇𑌯 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌅𑌸𑍍𑌤𑍁 𑌸𑍀𑌸𑌰 । 𑌶𑍍𑌵𑌾 𑌨𑌹𑌿 𑌶𑍍𑌵𑌾 𑌰𑌕𑍍𑌷𑌃
𑌵𑌾𑌰𑌾𑌷𑌣𑍍𑌡𑌃 ॥ ௧௦ ॥

இங்கு எங்களுடைய மஹா பலிஷ்டங்களான குதிரைகளும் இருக்கின்றன. ஆகையால் இங்கு வாராதேயுங்கள். (பாக்கி முன் போல் அர்த்தம்.)

இங்கே வந்துள்ள ஶ்வாக்கள் உங்களில் ஒரு ஶ்வாவையே கொன்று தின்னட்டும். குமாரனை மனிதனைத் தின்ன வேண்டாம். ச்சத், ஓடிப்போ.

(ஆப. க்ரு. க-18. ஸூ-3. சங்க க்ரஹத்தால் பீடிக்கப் பட்ட குமாரனுக்கு சாந்திமந்த்ரங்கள் இரண்டு—முதலாவது மந்த்ரம்.)

𑌏𑌤𑍇 𑌤𑍇 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑍌 𑌤𑍇 𑌸𑌾 𑌨𑌭𑌸𑍍𑌤𑍇 𑌉𑌭𑍇 ।
𑌤𑍇 𑌸𑌹𑌮 𑌸𑌾𑌰𑌮𑍇𑌣 𑌅𑌸𑍍𑌮𑍈 𑌨𑌾𑌵𑌹𑍃𑌤𑍍𑌯𑍈 𑌦𑌦𑍍𑌯𑍈 ॥ ௧௧ ॥

இதோ இந்தக் குமாரனிடம் காணப்படும் சங்க க்ரஹங்களின் தாய்களான இருவரும் ஸமான வஸ்த்ரம் உடுத்தியவர்களாகக்

காணப்படுகிருர்கள். இந்த இருவரையும் நான் உரலில் போட்டுப் பலமுள்ளதான உலக்கையால் நசுக்குகிறேன்.

(இரண்டாவது மந்த்ரம்.)

ஹதஸ்ஸ்ரெஸா ஹதஸ்ஸ்ஜவிதா ஹதஸ்ஸ்ஜகாதாவ-ஃகஃ ।
சுவெ்ருஷாம் ஷுவதிஹூதஃ ॥ கஉ ॥

சங்கக்ரஹம் கொல்லப்பட்டது. சங்கக்ரஹத்தின் பிதாவும், ஹிம்ஸை செய்கிற சங்கனும், இவைகளின் தலைவனும் கொல்லப் பட்டார்கள்.

(ஆப. க்ரு. க-18. ஸூ-3. குமாரனின் சிரஸ்ஸில் தீர்த் தத்தைச் சேர்க்க மந்த்ரம்.)

ஐஷ்ஷிவெஃாயஃ ஷூவெ்ாயஷ்ஷ்வெ்ா ஊாதஸ்ஸ்ா । தெ தெ் ஷூாணாநு ஜ்ஷ்ஸிஷ்ருஷி ஊா ஸெஹஷீதஃ ஊஸிஷ்ருஷி ॥ கஙு ॥

போதர் என்கிற ருஷி (போதாயன கோத்ரீ), விழிப்பு, தூக்கம், ஸ்வப்நம், வாயு ஆகியவை உன்னுடைய பிராணன்களைக் காப்பாற்றப் போகின்றனர். ஆகையால் குமாரனே! பயப் படாதே. நீ மரிக்க மாட்டாய்.

(ஆப. க்ரு. க-18. ஸூ-6. ஸர்ப்பபலி மந்த்ரங்கள். கிம்சுக ஹோம மந்த்ரம்.)

ஜஹ்ஸா ஊஸ்கொ ஜஹ்ஸா விக்ஷஷிஜஃஹ்ஸாவ்ருஷாஹா ॥கச॥

மசகன், வித்ருஷ்டி, வ்யத்வான் ஆகிய ஸர்ப்பங்கள் அக்னி யால் புஜிக்கப்பட்டன. வித்ருஷ்டி பெண்பாம்பு.

ஜஹ்ஸா வ்ருஷெரா ஜஹ்ஸா ஊஸ்கொ ஜஹ்ஸா விக்ஷஷிஷ்ஷாஹா ॥
ஜஹ்ஸா விக்ஷஷி ஜஃஹ்ஸா வ்ருஷெரா ஜஹ்ஸா ஊஸ்கஷ்ஷாஹா॥

(2. 3. மந்த்ரங்கள். அர்த்தம் முன்போல்.)

**பதினுருவது கண்டம் முற்றிற்று.**

## பதினேழாவது கண்டம்.

(ஆப. க்ரு. க-18. ஸூ-7. ஸமித் ஹோம மந்த்ரங்கள் மூன்று—முதலாவது ஹோமமந்த்ரம்.)

இந்த்ர ஜஹி தந்தஶூகம் பக்ஷிணம் யஸ்ஸரீஸ்ருப: ।

தம்க்ஷ்ணவோ தஶோனவ: ஸர்வாம்ஸ்தானிந்த்ர ஜம்பய ஸ்வாஹா ॥

ஏ! இந்த்ரனே! எங்களை ஹிம்ஸிக்கும் இந்த ஸர்ப்பத்தை நாசம் செய்யும். இந்த ஸர்ப்பமானது பக்ஷம் இறக்கை யுள்ளது. ஓடிவருகிறது. எங்களைக் கடிக்கப் போவதாயும், கடிக்கிறதாயுமிருக்கையில் நீர் இந்த ஸர்ப்பங்கள் எல்லாவற்றையும் ஸ்தம்பிக்கச்செய்வீராக.

(இரண்டாவது ஹோம மந்த்ரம்.)

அக்நே ஜாதா ஸர்வ்யாஸ்தேவானாமஸி ஹோதா । ஸ விக்ஷ்ணோ ந்ரு

ப்ரேஷிதஸ்ஸ நோ ரக்ஷஸி ஸ்வாஹா ॥ ௨ ॥

ஏ! அக்நியே! நீயும் இந்த ஸர்ப்பத்தைக் கொன்று எங்களை ஹிம்ஸிக்காமல் செய்யவும்.

நீ மின்னல் ரூபமாக ஜலத்தில் உதித்தவன், ஸமுத்ரத்தில் வ்ருத்தியடைந்தவன். தேவதைகளின் கையில் உண்டானவன். இந்த்ரனால் ஏவப்பட்டவன். இவ்வளவு மஹிமை வாய்ந்த நீ எங்களை (ஸர்ப்பம்) ஹிம்ஸிக்காமல் இருக்கவும் (செய்யவும்).

(மூன்றாவது ஹோம மந்த்ரம்.)

த்ராணமஸி பரித்ராணமஸி பரியிரஸி । அக்நே

நஷ்ட்ராஸ்த்ராயஸே த்ருணை: பஶூந்தேந்ஸர்பான்

யஜ்ஞான் தேவான் ஸ்வய்யா வித்ரூன் ஸ்வாஹா ॥ ௩ ॥

ஏ! அக்நி தேவனே! நீ எங்களுக்கு ரக்ஷகனாயிருக்கிறாய். விசேஷ ரக்ஷகனாயுமிருக்கிறாய். அதற்காக எங்களைச் சுற்றி நிற்கிறாய். நீ அந்தத்தால் மனிதர்களைக் காப்பாற்றுகிறாய். புற்களால் பசுக்களைக் காக்கிறாய். புற்றுகளால் ஸர்ப்பங்களை ரக்ஷிக்கிறாய்.

யஜ்ஞத்தால் தேவர்களையும், ச்ராத்தத்தால் பித்ருக்களையும் தாங்குகிறாய். இவ்வளவு மஹிமையுள்ள நீ என்னையும் காப்பாற்றுவாயாக.

(ஆப. க்ரு. க-18. ஸூ-8. ஆஜ்ய ஹோம மந்த்ரங்கள். முதல் மந்த்ரம்.)

தஸ்மை த்வம் யதேதெளவாஸ்யாயாஞ்ச பௌர்ணமாஸ்யாஞ்ச விஷபயம் ஹரந்தி ஸர்பா உதரஸவிர்ண்: । தமேதே ஜோர தே க்ஷயி ஸம்விசந்தி க்ஷயி நக்ஷத்ரஸ்ய ஸஹ்ஸ்ரா வர்ஷாஹ்யா நஃ வஸ்திஹேஹி ॥ ச ॥

ஏ! ஸர்ப்பாதிபதியே! ஜனங்கள் உனக்கு அமாவாஸ்யையிலும் பௌர்ணமாஸியிலும் விஷ பய நிவ்ருத்திக்காகப் பலி போடுகிறார்கள். வயிற்றால் நகருகிற மற்ற உனது ஸகாக்களும் அந்தப் பலியை உன்னிடமிருந்து பெறுகின்றன. அதைப்பெற்று உன்னையே அண்டி நிற்கின்றனர். ஆகையால் உன் வசமிருக்கிற எங்களை அந்த ஸர்ப்பங்களிடம் ரக்ஷணத்திற்காக ஒப்புவிக்க வேண்டும். மழைக்காலத்திடமும் எங்களை ரக்ஷிக்க ஒப்புவிக்கவும். மழைக் காலத்தில் ஸர்ப்பங்கள் அதிகமாகையால் இந்த ப்ரார்த்தனை.

(இரண்டாவது ஹோமமந்த்ரம்.)

நமோ அஸ்து ஸர்பேப்யோ யே கே ச ப்ருதிவீமநு । யே அந்தரிக்ஷே யே திவி தேப்யஸ்ஸர்பேப்யோ நம: ॥ ரு ॥

பூமியில் எங்கெங்கும் உள்ள ஸர்ப்பங்களுக்கு நமஸ்காரம். அதுபோல் அந்தரிக்ஷம், த்யுலோகம் ஆகியவைகளில் இருக்கும் ஸர்ப்பங்களுக்கும் எனது நமஸ்காரம்.

(மூன்றாவது ஹோமமந்த்ரம்.)

யேஃதோ ரோசநே திவோ யே வா ஸூர்யஸ்ய ரச்மிஷு । யேஷாமப்ஸு ஸத: க்ருதம் தேப்யஸ்ஸர்பேப்யோ நம:॥

எந்த ஸர்ப்பங்கள் மேலே ப்ரகாசமாக விளங்குகிற பரலோகத்திலும், ஆகாச ஸம்பந்தமான இடத்திலும், ஸூர்ய

ரச்மிகளிலும், ஜலங்களிலும் ஸ்தானம் வைத்துக்கொண்டிருக்கின்றனவோ அந்த ஸர்ப்பங்களுக்கு நமஸ்காரம்.

(நான்காவது ஹோமமந்த்ரம்.)

யா இஷவோ யாதுதா⁴னானாம் யே வா வனஸ்பதீꣳரனு ।
யே வாவடேஷு ஶேரதே தேப்⁴ய ஸர்பேப்⁴யோ நம: ॥ ௭ ॥

எந்த ஸர்ப்பங்கள் ராக்ஷஸர்களுக்குப் பாணங்களாக இருக்கின்றனவோ, எவை வ்ருக்ஷங்களில் வஸிக்கின்றனவோ, எவை பூமியில் பொந்துக்களில் படுத்துக்கொண்டிருக்கின்றனவோ அந்த ஸர்ப்பங்களுக்கு நமஸ்காரம்.

(ஆப. க்ரு. க-18. ஸூ-10. ஸக்து பலி முதலிய பலியை ஸமர்ப்பிக்க மந்த்ரம்.)

நமோ அஸ்து ஸர்பேப்⁴ய: யே பார்தி²வா யே அந்தரிக்ஷ்யா யே தி³வ்யா யே தி³ஶ்யா: । தேப்⁴ய இமம் ப³லிꣳ ஹரிஷ்யாமி தேப்⁴ய இமம் ப³லிமுபாகரோமி ॥ ௮ ॥

ப்ருதிவியிலும், அந்தரிக்ஷம், திவம், திக்கு ஆகிய இடங்களிலும் எந்தெந்த ஸர்ப்பங்கள் வஸிக்கின்றனவோ, அவைகளுக்கு இந்தப் பலியைப் போடுகிறேன்.

(ஆப. க்ரு. க-18. ஸூ-12. உபஸ்தான மந்த்ரங்கள் 18.)

தக்ஷக வைஶாலேய த்⁴ருதராஷ்ட்ர ஐராவத ஸ்தே ஜீவா
ஸயி நஸ்த ஸ்ஸயீ ஸஹ்யா வர்ஷாஹ்யா ந: ஶ்ரியேஹி ॥

விசாலையின் புத்ரனான ஏ! தக்ஷகனே! "த்ருதராஷ்ட்ர ஐராவதன்" என்பவன் உனது ப்ராணன். உன்னிடமுள்ள எங்களை உன்னைச் சேர்ந்தவர்களான ஸர்ப்பங்களிடம் ரக்ஷணத்திற்காக ஒப்புவிக்கவேண்டும். அவைகளால் தீங்கு நேரிடக்கூடாது.

த்⁴ருதராஷ்ட்ர ஐராவத தக்ஷகஸ்தே வைஶாலேயோ
ஜீவாஸயி நஸ்தஸயி ஸஹ்யா வர்ஷாஹ்யா ந: ஶ்ரியேஹி ॥

த்ருதராஷ்ட்ரைராவதனே! தக்ஷகன் உனது ப்ராணன். (மற்ற அர்த்தம் முன்போல்)

அஹிம்ஸாதிபலஸ்தே ஜீவாக்ஷய் ரக்ஷதக்ஷய் ஸஹ ஹ்ரா
வசிஷ்டாஹ்ரா ந: வஹிஜஹி ॥ ௧௧ ॥

அஹிம்ஸன் என்ற ஸர்ப்பமே! அதிபலன் என்பவன் உனது ப்ராணன். (மற்றது முன்போல்).

அதிபலாஹிம்ஸஸ்தே ஜீவாக்ஷய் நக்ஷதக்ஷய் ஸஹ ஹ்ரா
வசிஷ்டாஹ்ரா ந: வஹிஜஹி ॥ ௧௨ ॥

அதிபலன் என்கிற ஸர்ப்பமே! அஹிம்ஸன் என்ற ஸர்ப்பம் உனது ப்ராணன். (மற்றது முன்போல்).

(ஸர்ப்பங்களிடம் ப்ரார்த்தனை.)

யெ ஊர்வம்ஷுகா: வாயீஹ்வாக்ஷாம்ஷுக்ஷித:வரோ மவ்ஹ்ய
திம் நிவேஶய । ஸதிவெ நஸ்மிந ஸதி ஊர்ணீநஸ்தே வோ
நேவிநஸாஹ்ருஹ்யப உஷ்மாநு ஹிநஸ்தாத ॥ ௧௩ ॥

ஏ! ஸர்ப்பராஜனே! கடிக்கக்கூடிய துஷ்ட ஸர்ப்பங்களை இந்தப் பூமியில் இருப்பவைகளை இந்த க்ருஹத்திலிருந்து வெகு தூரத்திற்குமேல் கொண்டுவிடவும். ஸர்ப்பங்களே! என் வீட்டில் குளம்புள்ள மாடு, குதிரை முதலிய ப்ராணிகள் இருக்கின்றன. அவைகள் உங்களை மிதித்து நசுக்கிவிடும். கையில் கழி ஏந்திய காவற்காரர்களும் என் க்ருஹத்தில் இருக்கிறார்கள். அவர்கள் உங்களைக் கொல்லக்கூடும். ஆனால் அவர்கள் உங்களை ஹிம்ஸிக்கவேண்டாம். நீங்கள் ஒதுங்கிப்போய்விடுங்கள். ஒதுங்கிப்போவதன் காரணமாக நீங்களும் எங்களை ஹிம்ஸிக்காதீர்கள். இருவரும் செய்துகொண்ட (ஒப்பந்தமிது.)

(திக் உபஸ்தான மந்த்ரங்கள்.)

ஸமீசீ நாமாஸி ப்ராசீ திகுஸ்யாஸ்தேऽக்நிரதிபதி ரஸி
தோ ரக்ஷிதா யமாயிவதி யஷ்ஸு ஶோவா தாஸ்யாஷஸ்தா

𑌨𑍋 𑌮𑍃𑌡𑌯𑌤𑌾𑌂 𑌤𑍇𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌮𑍋 𑌯𑌶𑍍𑌚 𑌨𑍋 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌤𑌂 𑌵𑌾𑌂
𑌜𑌂𑌭𑍇 𑌦𑌧𑌾𑌮𑌿 ॥ க௪ ॥

கிழக்குத் திக்தேவதையே! நீ ஸமீசீ என்ற பெயருள்ளவள். உனக்கு அக்னி அதிபதி. அஸிதன் என்ற ஸர்ப்பம் உனக்கு ரக்ஷகன். மேற்கண்ட அதிபதி, ரக்ஷகன் இருவருக்கும் நமஸ்காரம் செய்கிறேன். அவர்கள் எங்களைச் சுகிக்கச் செய்யட்டும். நாங்கள் எவனை எதிர்க்கிறோமோ, எங்களை எவன் த்வேஷிக்கிறானோ அவ்விரு சத்ருக்களையும் உங்களுடைய கடைப்பற்களில் திணிக்கிறோம். நசுக்குவதற்கு.

𑌓𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑍀 𑌨𑌾𑌮𑌾𑌸𑌿 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾 𑌦𑌿𑌕𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌽𑌧𑌿
𑌪𑌤𑌿𑌃 𑌪𑍃𑌦𑌾𑌕𑍂 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾+𑌦𑌧𑌾𑌮𑌿 ॥ கரு ॥

தக்ஷிண திக்தேவதையே! நீ ஓஜஸ்வினீ என்ற பெயருள்ளவள். உனக்கு இந்த்ரன் அதிபதி. ப்ருதாகு என்கிற ஸர்ப்பம் உனக்கு ரக்ஷகன். (மற்ற அர்த்தம் முன்போல்).

𑌪𑍍𑌰𑌾𑌚𑍀 𑌨𑌾𑌮𑌾𑌸𑌿 𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍀 𑌦𑌿𑌕𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌸𑍋𑌮𑍋𑌽𑌧𑌿
𑌪𑌤𑌿𑌸𑍍𑌸𑍍𑌵𑌜𑍋 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾+𑌦𑌧𑌾𑌮𑌿 ॥ கசு ॥

ப்ரதீசீ என்ற மேற்குத் திக்தேவதையே! உனக்கு ப்ராசீ என்று பெயர். ஸோமன் உனக்கு அதிபதி. ஸ்வஜன் என்ற ஸர்ப்பம் ரக்ஷகன். (மற்றது முன்போல்.)

𑌅𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌾 𑌨𑌾𑌮𑌾𑌸𑍍𑌯𑍁𑌦𑍀𑌚𑍀 𑌦𑌿𑌕𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌵𑌰𑍁𑌣𑍋𑌽𑌧𑌿
𑌪𑌤𑌿𑌸𑍍𑌤𑌿𑌰𑌶𑍍𑌚𑌰𑌾𑌜𑍀 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾+𑌦𑌧𑌾𑌮𑌿 ॥ கஎ ॥

வடக்குத் திக்தேவதையே! நீ அவஸ்தாவா என்ற பெயருள்ளவள். உனக்கு வருணன் அதிபதி. திரஸ்சராஜி என்ற ஸர்ப்பம் உனக்கு ரக்ஷகன். (மற்றது முன்போல்).

𑌅𑌧𑌿𑌪𑌤𑍍𑌨𑍀 𑌨𑌾𑌮𑌾𑌸𑌿 𑌬𑍃𑌹𑌤𑍀 𑌦𑌿𑌕𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿
𑌰𑌧𑌿𑌪𑌤𑌿𑌶𑍍𑌶𑍍𑌵𑌿𑌤𑍍𑌰𑍋 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 + 𑌦𑌧𑌾𑌮𑌿 ॥ கஅ ॥

ப்ருஹதீதிக் மேல் திக்தேவதையே! நீ அதிபத்நீ என்ற பெயருள்ளவளாக இருக்கிறாய். உனக்கு ப்ருஹஸ்பதி அதிபதி. ச்வித்ரன் என்ற ஸர்ப்பம் ரக்ஷகன். (மற்றது முன்போல்).

𑌵𑌶𑌿𑌨𑍀 𑌨𑌾𑌮𑌾𑌸𑍀𑌯𑌂 𑌦𑌿𑌕𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌯𑌮𑍋𑌽𑌧𑌿𑌪𑌤𑌿𑌃 𑌕𑌲𑍍𑌮𑌾𑌷𑌗𑍍𑌰𑍀𑌵𑍋 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 + 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 ॥ ௧௯ ॥

இந்தக் கீழ்திக்தேவதையே! நீ வசினீ என்ற பெயருள்ளவள். உனக்கு யமன் அதிபதி. கல்மாஷக்ரீவன் (கறுப்பு விஷக் கழுத்து)என்ற ஸர்ப்பம் உனக்கு ரக்ஷகன். (மற்றது முன்போல்).

𑌹𑍇𑌤𑌯𑍋 𑌨𑌾𑌮 𑌸𑍍𑌥 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑌃 𑌪𑍁𑌰𑍋 𑌗𑍃𑌹𑌾 𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌵 𑌇𑌷𑌵𑌃 𑌸𑌲𑌿𑌲𑍋 𑌵𑌾𑌤𑌨𑌾𑌮𑌂 𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑍋 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌨𑍋 𑌮𑍃𑌡𑌯𑌤 𑌤𑍇 𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌮𑍋 𑌯𑌶𑍍𑌚 𑌨𑍋 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌤𑌂 𑌵𑍋 𑌜𑌮𑍍𑌭𑍇 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 ॥ ௨௦ ॥

ஸர்ப்பங்களே! நீங்கள் ஹேதி என்ற பெயருள்ளவர்கள். உங்களுக்குக் கிழக்குப் பாகத்தில் வஸிக்குமிடம். அக்னி உங்களுக்குப் பாணங்கள். ஸலிலம் என்ற ஆகாச பாகமானது உங்களுக்குக் காற்றைக்(ஆஹாரத்தை) கொண்டுவந்து கொடுக்கிறது. மேற்கண்டவைகளுக்கு நமஸ்காரம். எங்களை ஸுகிக்கச் செய்யுங்கள். நாங்கள் த்வேஷிப்பவனையும், எங்களை த்வேஷிப்பவனையும் உங்களுடைய கடைப்பற்களில் வைக்கிறோம். நசுக்க.

𑌨𑌿𑌲𑌿𑌮𑍍𑌪𑌾 𑌨𑌾𑌮 𑌸𑍍𑌥 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑍋 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾 𑌗𑍃𑌹𑌾𑌃 𑌪𑌿𑌤𑌰𑍋 𑌵 𑌇𑌷𑌵𑌃 𑌸𑌗𑌰𑍋 𑌵𑌾𑌤𑌨𑌾𑌮𑌂 + 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 ॥ ௨௧ ॥

ஸர்ப்பங்களே! நீங்கள் நிலிம்பர் என்ற பெயருள்ளவர்கள். உங்களுக்குத் தெற்குப் பாகத்தில் இருப்பிடம். பித்ருக்கள் உங்களுக்குப் பாணங்கள். ஸகரம் என்ற ஆகாச பாகம் காற்றைக் கொடுக்கிறது. (மற்றது முன்போல்.)

𑌵𑌜𑍍𑌰𑌿𑌣𑍋 𑌨𑌾𑌮 𑌸𑍍𑌥 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑌃 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌗𑍃𑌹𑌾 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍋 𑌵 𑌇𑌷𑌵𑍋 𑌗𑌹𑍍𑌵𑌰𑍋 𑌵𑌾𑌤𑌨𑌾𑌮𑌂 + 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 ॥ ௨௨ ॥

ஸர்ப்பங்களே! நீங்கள் வஜ்ரிகள் என்ற பெயருள்ளவர்களா கின்றீர்கள். உங்களுக்கு மேற்குத் திக்கில் தங்குமிடம். ஸ்வப்நம் என்பது உங்களுக்குப் பாணங்கள். உங்களுக்குக் காற்றைக் கொடுப்பது கஹ்வரம் என்ற ஆகாசபாகம். (மற்றது முன் போல்.)

அவஸ்தாவானோ நாம ஸ்த தேஷாம் வ உதீசீ க்ருஹா ஆபோ வ இஷவஸ் ஸமுத்ரோ வாத நாமம் + ததாமி ॥ ௨௩ ॥

ஸர்ப்பங்களே! நீங்கள் அவஸ்தாவான்கள் என்ற பெயருள்ளவர்கள். உங்களுக்கு வடக்கில் வீடு. ஜலங்கள் உங்களுக்குப் பாணங்கள். காற்றுக் கொடுப்பது ஸமுத்ரம். (மற்றது முன்போல்.)

அதிபதயோ நாம ஸ்த தேஷாம் வ ஊர்த்வா க்ருஹா வர்ஷம் வ இஷவோ(அ)வஸ்வான் வாத நாமம் + ததாமி ॥ ௨௪ ॥

ஸர்ப்பங்களே! உங்களுக்கு அதிபதிகள் என்ற பெயரும் இருக்கிறது. உங்களுக்கு ஊர்த்வ ப்ரதேசத்தில் வஸிக்குமிடம். மழை உங்களுக்குப் பாணங்களாகும். அவஸ்வான் என்ற ஆகாச பாகமானது வாதத்தை (காற்றை) உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கிறது. (மற்றது முன்போல்).

க்ரவ்யா நாம ஸ்த பார்த்திவாஸ் தேஷாம் வ இஹ க்ருஹா அன்னம் வ இஷவோ நிமிஷோ வாத நாமம் + ததாமி ॥ ௨௫ ॥

இந்தப் பூமியில் இருக்கிற உங்களுக்கு க்ரவ்யர்கள் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. உங்களுக்கு இந்தப் பூமியிலேயே இருப்பிடம். அந்நமானது உங்களுக்குப் பாணங்கள். நிமிஷம் என்ற ஆகாசம் உங்களுக்கு ஆஹாரமான காற்றைக் கொண்டுவந்து கொடுக்கிறது. (மற்றது முன்போல்.)

(ஆப. க்ரு. க-18. ஸூ-12. க்ருஹ பரிஷேசன மந்த்ரங்கள் இரண்டு.)

சுவ்ஶ்வேதவக்ஷா ஜ்ஹி பத்ப்யாம் பூர்வேணாபரேண ச ।

ஸப்த ச மாநுஷீரிமாஸ்திஸ்ரஶ்ச ராஜபந்தவீ: ॥ உசு ॥

ஸர்ப்பாதிபதியான ச்வேத ஸர்ப்பமே! நீ இந்த க்ருஹத்தைவிட்டு ஓடுகையில் உன் முன் காலாலும், பின் காலாலும் ஊன்றிக்கொண்டு மற்ற ஸர்ப்பங்களை உனது காலால் நசுக்கு.

மனித ஜாதியைச் சேர்ந்த ஸர்ப்பங்கள் ஏழு விதம்:—ப்ராம்ஹண ஸர்ப்பம் மூன்று, வைச்ய ஸர்ப்பம் இரண்டு, சூத்ர ஸர்ப்பம் இரண்டு. இதைத்தவிர ராஜபந்து என்கிற க்ஷத்ரிய ஸர்ப்பங்கள் மூன்று. ஆக ஸர்ப்ப ஜாதிகள் பத்து. இவைகளை உன் காலால் நசுக்கு.

நவை ஶ்வேதஸ்யாத்யாசாரே ஹிஜஸ்ஸாந கஞ்சந ।

ஶ்வேதாய வைதர்வாய நமோ நமஶ்ஶ்வேதாய வைதர்வாய ॥

ஶ்வேதன் என்ற ஸர்ப்ப ராஜனுடைய தலைமையில் (ஆதிபத்யத்தில்) ஒரு ஸர்ப்பம்கூட ஒரு மனிதனையும் கடித்துக் கொன்றதில்லை. ஆகையால் விதர்வ புத்ரனை அந்த ச்வேதனென்கிற ஸர்ப்ப ராஜனுக்கு நமஸ்காரம். நமஸ்காரம்.

பதினேழாவது கண்டம் முற்றிற்று.

## பதினெட்டாவது கண்டம்.

(ஆப. க்ரு. க-19. ஸூ-7. ஆக்ரயணத்தில் ஹுத சேஷத்தை வைக்க மந்த்ரம்.)

ஹுதஶேஷஸ்யஸி ஹுதோஸ் ஶோஸ் ஶ்ரியம் மயி ॥ க ॥

ஏ! ஹவிஶ்ஶேஷமான ஓதனமே! நீ உன்னத ஸ்தானத்தில் இருக்கிறாய். எனக்கு உயர்ந்த ஸ்ரீயைக் கொடுப்பாயாக.

(ஆப. க்ரு. க-19. ஸூ-9. ஹேமந்த ப்ரத்யவரோஹணம்.)

ஹேமந்த ருதுவில் புதிய படுக்கையில் புதிய விரிப்பில் உட்கார மந்த்ரம்.

ப்ரத்யவரூடோ நோ ஹேமந்த: ॥ ௨ ॥

இந்த ஹேமந்தருதுவில் நாம் புது ஆஸ்தரணத்தில் ஏறுகிறோம்.

(ஆப. க்ரு. க-19. ஸூ-9. புது விரிப்பில் உட்கார மந்த்ரம்.)

ப்ரதி க்ஷத்ரே ப்ரதிதிஷ்டாமி ராஷ்ட்ரே ப்ரத்யஶ்வேஷு ப்ரதிதிஷ்டாமி கோஷு । ப்ரதி ப்ரஜாயாம் ப்ரதிதிஷ்டாமி பவ்யே ॥ ௩ ॥

இஹ த்ருதிரிஹ வித்ருதிரிஹ ரந்திரிஹ ரமதி: ॥ ௪ ॥

இந்தப் புது ஸம்ஸ்தரத்தில் உட்காரும் நான் க்ஷத்ரம், ராஜ்யம், அச்வம், பசு, ப்ரஜை, க்ஷேமம் ஆகிய ஒவ்வொன்றிலும் ப்ரதிஷ்டையை அடைந்தவனாகிறேன். இந்த ஆஸ்தரணத்தில் ப்ரீதி, தைர்யம், த்ருப்தி, புத்ராதிகளுடன் க்ரீடை இவைகள் ஏற்படவும்.

(ஆப. க்ரு. க-19. ஸூ-11 இந்த மந்த்ரத்தால் பூமியைத் தொடவும்.

ஸ்யோநா ப்ருதிவி ॥ ௫ ॥

மேற்படி மந்த்ரத்தின் அர்த்தத்தை இரண்டாவது ப்ரச்நம் பதினைந்தாவது கண்டம் 118-ஆம் பக்கத்தில் பார்க்கவும்.

(ஆப. க்ரு. க-19. ஸூ-11. பூமி ஸ்பர்ச மந்த்ரம்.)

பளித்தா பர்வதாநாம் கித்ரம் பிபர்ஷி ப்ருதிவி ।
ப்ர யா பூமிம் ப்ரவத்வதி மஹ்நா ஜிநோஷி மஹிநி ॥ ௬ ॥

ஏ! ப்ருதிவி! பூமியே! தயையுள்ளவளே! பெரியவளே! நீ மழை பெய்யும்படி மேகங்களுடைய இடைவெளியை உண்டாக்குகிறாய். உனது மஹிமையால் தேவர்களையும் மனிதர்களையும் த்ருப்தி செய்து வைக்கிறாய். (பூமியில் உண்டாகும் ஓஷதி முதலியவைகளால் தேவர்களை த்ருப்திசெய்துவைத்து அதன் மூலம் மேகங்கள் மழை பெய்யச் செய்யப்படுகின்றன என்று கருத்து.)

(ஆப. க்ரு. க-20. ஸூ-1. ஈசானபலி—ஆவாஹந மந்த்ரம்.)

ஆத்வா வஹந்து ஹரயஸ்ஸசேதஸஶ்வேதைரஶ்வைஸ்ஸஹ கேதுமத்பி: । வாதாஜிரைர்மம ஹவ்யாய ஶர்வ ॥ எ ॥

ஹே! ஶர்வ! ஈசான தேவனே! இந்த ஈஶாநபலி கர்மாவுக்காக உன்னைக் குதிரைகள் இங்குக் கொண்டுவந்து விடட்டும். குதிரையில் நீர் ஏறிவரவும். அந்தக் குதிரைகள் நல்ல மனதுள்ளவை. பச்சை வர்ணமுள்ளவை. அவைகள் தங்களுடன், த்வஜம் தரித்த வேறு பல வெள்ளைக் குதிரைகள் புடைசூழ வருகின்றன. அந்தக் குதிரைகளும் காற்றைப்போன்ற வேகமுள்ளவை. இவ்வாறாக எனது ஹவிஸ்ஸைப் பெற சர்வ தேவனே! வருவீராக.

(ஆப. க்ரு. க-20. ஸூ-4. ஓதன ஹவிஸ்ஸை நிவேதனம் செய்ய.)

உபஸ்ப்ருஶது மீடுவாந் மீடுஷே ஸ்வாஹோபஸ்ப்ருஶது மீடுஷீ மீடுஷ்யை ஸ்வாஹா ॥ அ ॥

ஜயந்தோபஸ்ப்ருஶ ஜயந்தாய ஸ்வாஹா ॥ கூ ॥

ஜகத்காரணமானவன் ருத்ரன். அவன் இதை ஸ்வீகரிக்கட்டும். ருத்ரபத்நியான மீடுஷியும் இதை உபஸ்பர்சம் செய்யட்டும். ஜயந்த! ஸ்கந்ததேவனே! நீயும் இதை உபஸ்பர்சிக்கவும். ஜயந்தனுக்கு இது உரியது.

(ஓதன ஹோம மந்த்ரங்கள்.)

பவாய தேவாய ஸ்வாஹா ஶர்வாய தேவாய ஸ்வாஹேஶாநாய தேவாய ஸ்வாஹா பஶுபதயே தேவாய ஸ்வாஹா ருத்ராய தேவாய ஸ்வாஹோக்ராய தேவாய ஸ்வாஹா பீமாய தேவாய ஸ்வாஹா மஹதே தேவாய ஸ்வாஹா ॥ க0 ॥

பவஸ்ய தேவஸ்ய பத்ந்யை ஸ்வாஹா ஶர்வஸ்ய தேவஸ்ய பத்ந்யை ஸ்வாஹேஶாநஸ்ய தேவஸ்ய பத்ந்யை ஸ்வாஹா பஶு—

பதேர் தே³வஸ்ய பத்ந்யை ஸ்வாஹா ருத்³ரஸ்ய தே³வஸ்ய பத்ந்யை ஸ்வாஹோக்³ரஸ்ய தே³வஸ்ய பத்ந்யை ஸ்வாஹா பீ⁴மஸ்ய தே³வஸ்ய பத்ந்யை ஸ்வாஹா மஹதோ தே³வஸ்ய பத்ந்யை ஸ்வாஹா ॥ ௧௧ ॥

ஜயந்தாய ஸ்வாஹா ॥ ௧௨ ॥

பவ தேவன், ஶர்வ தேவன், ஈசானன், பசுபதி, ருத்ரன், உக்ரன், பீமன், மஹாதேவன் ஆகிய நாமதேயங்கள் எட்டும் ஈசான தேவனின் பெயர்கள். அவர்களுக்கு ஹோமம் செய்கிறேன். அவர்களுடைய பத்நிகளுக்கும் ஹோமம் செய்கிறேன். கடைசியாக ஸ்கந்த தேவனுக்கும் ஹோமம் செய்கிறேன்.

இந்த எட்டு மூர்த்திகளும் முறையே அப்பு, பூமி, வாயு, அக்நி, ஸூர்யன், தீக்ஷிதன், ஆகாசம், சந்த்ரன் என்ற எட்டு மூர்த்திகள். இந்த மூர்த்திகளுக்கு அதிஷ்டான தேவதைகள் எட்டு. பவன்—ஸமஸ்த ஜகத்கர்த்தா. ஶர்வன்—ஸம்ஹார காரீ. ஈசானன்—ஸர்வேச்வரன். பசுபதி—இரண்டு கால், நான்கு கால் ப்ராணிகளுக்குப் பதி, ரக்ஷகன். ருத்ரன்—ஸம்ஹாரகாலத்தில் ரோதனம் செய்யப்பண்ணுகிறவன். உக்ரன்—ஒருவராலும் அவமதிக்கக்கூடாதவன். பீமன்—எல்லா ப்ராணிகளும் இவனிடமிருந்து பயப்பட ஹேதுவானவன். மஹாதேவன்—எல்லாத் தேவர்களையும்விடப் பெரியவன். என்று அர்த்தங்கள்.

(ஸ்விஷ்டக்ருத் ஹோம மந்த்ரம்.)

அக்³நயே ஸ்விஷ்டக்ருதே ஸுஹுதஹுத ஆஹுதீநாம் காமாநாம் ஸமர்த⁴யித்ரே ஸ்வாஹா ॥ ௧௩ ॥

செய்த ஹோமங்களை நன்றாகச் செய்யப்பட்டவைகளாக நிறைவேற்றி வைக்கிறவனும், இஷ்டகாமங்களை வ்ருத்திசெய்கிறவனுமாகிய ஸ்விஷ்டக்ருத் என்ற ருத்ர தேவனுக்கு இந்த ஹோமம் செய்கிறேன்.

(ஆப. க்ரு. க-20. ஸூ-5. உபஸ்தான மந்த்ரம்.)

ஸ்வஸ்தி ந꞉ பூர்ணமுக²꞉ பரிக்ராமது ॥ ௧௪ ॥

இந்த ஆஹுதிகளால் பூர்ணமான முகத்தையுடைய தேவன் எங்களுக்கு க்ஷேமம் ஏற்படும்படி எங்களிடையில் எப்போதும் ஸஞ்சரிக்கட்டும்.

(ஆப. க்ரு. க-20. ஸூ-5. தேவஸேனைகளுக்குப் பர்ணதான மந்த்ரங்கள்.)

𑌗𑍃𑌹𑌪𑍋𑌪𑌸𑍍𑌪𑍃𑌶 𑌗𑍃𑌹𑌪𑌾𑌯 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ ௧௫ ॥

𑌗𑍃𑌹𑌪𑍍𑌯𑍁𑌪𑌸𑍍𑌪𑍃𑌶 𑌗𑍃𑌹𑌪𑍍𑌯𑍈 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ ௧௬ ॥

𑌘𑍋𑌷𑌿𑌣 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑌤 𑌘𑍋𑌷𑌿𑌣𑍀𑌭𑍍𑌯𑌃𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ ௧௭ ॥

𑌶𑍍𑌵𑌾𑌸𑌿𑌨 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑌤 𑌶𑍍𑌵𑌾𑌸𑌿𑌨𑍀𑌭𑍍𑌯𑌃𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ ௧௮ ॥

𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌵𑌤 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑌤 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌵𑌤𑍀𑌭𑍍𑌯𑌃𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ ௧௯ ॥

𑌪𑍍𑌰𑌪𑍁𑌨𑍍𑌵𑌤 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑌤 𑌪𑍍𑌰𑌪𑍁𑌨𑍍𑌵𑌤𑍀𑌭𑍍𑌯𑌃𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ ௨௦ ॥

𑌸𑌮𑌶𑍍𑌨𑌤 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑌤 𑌸𑌮𑌶𑍍𑌨𑌤𑍀𑌭𑍍𑌯𑌃𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ ௨௧ ॥

𑌦𑍇𑌵𑌸𑍇𑌨𑌾 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑌤 𑌦𑍇𑌵𑌸𑍇𑌨𑌾𑌭𑍍𑌯𑌃𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥

𑌯𑌾 𑌆𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌯𑌾𑌶𑍍𑌚𑌾𑌨𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌦𑍇𑌵𑌸𑍇𑌨𑌾 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑌤 𑌦𑍇𑌵𑌸𑍇𑌨𑌾𑌭𑍍𑌯𑌃𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ ௨௩ ॥

𑌆𑌰𑌾𑌪𑍋𑌪𑌸𑍍𑌪𑍃𑌶 𑌆𑌰𑌾𑌪𑌾𑌯 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ ௨௪ ॥

𑌆𑌰𑌾𑌪𑍍𑌯𑍁𑌪𑌸𑍍𑌪𑍃𑌶 𑌆𑌰𑌾𑌪𑍍𑌯𑍈 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ ௨௫ ॥

𑌸𑌭𑌾𑌸𑌾𑌰𑌿𑌣 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑌤𑌾𑌸𑌭𑌾𑌸𑌾𑌰𑌿𑌣𑍀𑌭𑍍𑌯𑌃𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ ௨௬ ॥

𑌨𑌿𑌷𑌙𑍍𑌗𑌿𑌣𑍍𑌯𑍁𑌪𑌸𑍍𑌪𑍃𑌶 𑌨𑌿𑌷𑌙𑍍𑌗𑌿𑌣𑍇 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ॥ ௨௭ ॥

ஹே! க்ருஹரக்ஷண காரியான நந்தீச்வரகுமாரனே! இந்தப் பலியை நீ அங்கீகரிக்கவும். அந்த க்ருஹபனுக்கு இந்த ஹோமம். க்ருஹபீ—க்ருஹபனின் பத்நீ, (அர்த்தம் முன்

போல்). சப்தம் செய்துகொண்டிருப்பவர்கள் கோஷிகள். பெருமூச்சு விடுகிறவர்கள் ச்வாஸிகள்.

விசிந்வந்த:— தேடுகிறவர்கள். ப்ரபுந்வந்த:— சோதிப்பவர்கள். ஸமச்நந்த:— சேர்ந்து சாப்பிடுகிறவர்கள். ஏ! தேவஸேனைகளே! இந்தப் பலியைக் க்ரஹித்துக்கொள்ளுங்கள். இந்த மந்த்ர கணத்தில் சொல்லப்பட்டவர்களும், சொல்லப்படாதவர்களும். த்வாராபனே! த்வாரபாலகனே! த்வாராபி—அவனுடைய பத்நியே! அந்வாஸாரிகள் — தேவியின் அந்தப்புர பரிசாரிணீகள். நிஷங்கீ—ஜயந்தன். (எல்லாவற்றிற்கும் அர்த்தம் முதலில் சொல்லியபடி)

(ஆப. க்ரு. க-20 ஸூ-7. சிக்யத்தை (உறியை) வ்ருக்ஷத்தில் கட்ட மந்த்ரம்.)

நமோ நிஷங்கிண இஷுதிமதே ॥ உஅ ॥

அஸ்த்ரம், சஸ்த்ரம் வைத்துக்கொள்ள ஸாதனமான அம்பறாத்தூணீரமுள்ளவனை ருத்ரதேவனுக்கு நமஸ்காரம். இந்த மந்த்ரம் இவ்வளவு மட்டுமே. ருத்ரத்தில் படிக்கப்பட்ட க்ரமம் இல்லை.

ருத்ரமந்த்ரங்கள் வேறு இடத்தில் வ்யாக்யானம் செய்யப்பட்டுள்ளன (பாஷ்யம்).

(ஆப. க்ரு. க-20. ஸூ-16. க்ஷேத்ரபதியின் உபஸ்தான மந்த்ரங்கள் இரண்டு—முதலாவது மந்த்ரம்).

க்ஷேத்ரஸ்ய பதிநா வயம் ஹிதேநேவ ஜயாமஸி ।

காமஶ்வம் போஷயித்ந்வா ஸ நோ ம்ருடாதீத்ருஶே ॥ உகூ ॥

நாம் நமக்கு ஹிதனாகிய க்ஷேத்ரபதி தேவனால் எல்லாவற்றையும் ஜயிப்போம். அவன் நம்முடைய பசு, அச்வம் இவைகளை ரக்ஷிப்பவன். இந்த ஈசானபலி கர்மாவைச் செய்தபின் அவன் நமக்கு ஸுககாரியாக இருக்கிறான்.

(இரண்டாவது மந்த்ரம்)

க்ஷேத்ரஸ்ய பதே மதுமந்தமூர்மிம் தேநுரிவ பயோ

அஸ்மாஸு துக்ஷ்வ । மதுஶ்சுதம் க்ருதமிவ ஸுபூதம்ருதஸ்ய நஃ பதயோ ம்ருடயந்து ॥ ௨௦ ॥

ஏ! க்ஷேத்ரபதிதேவனே! நல்ல ருசியுள்ள க்ஷீரத்துடன் கூடிய பசுக்களின் கூட்டத்தை எங்களுக்குச் சுரப்பாயாக. பால் நிறைந்த பசு பாலைக்கொடுப்பது போல். மேலும் அந்தப் பசுக் கூட்டமானது, தேன் ருசியுள்ளதாயும், தேனைப் பெருகவிடுகிற தாயும், நல்ல பரிசுத்தமான நெய்போன்றதாயும் உள்ள பாலுடன் கூடியதாயிருக்கவேண்டும்.

மேலும் உன் அநுக்ரஹத்தால் யஜ்ஞபதிகளான அக்நி முதலிய தேவதைகளும் எங்களை ஸுகமாக இருக்கச் செய்ய வேண்டும்.

## பதினெட்டாவது கண்டம் முற்றிற்று.

---

## பத்தொன்பதாவது கண்டம்.

---

(ஆப. க்ரு. க-21. ஸூ-3. மாஸிச்ராத்தம் — ஹோம மந்த்ரங்கள். ஏழு—முதலாவது பித்ரு ஹோம மந்த்ரம்.)

யன்மே மாதா ப்ரலுலோப சரத்யனநுவ்ரதா । தன்மே ரேதஃ பிதா வ்ருங்க்தாமாபுரன்யோऽவபத்யதாமஸௌ ஸ்வாஹா ॥ ௧ ॥

என்னுடைய தாயார் தனது பர்த்தாவை அநுஸரிக்காமல் இருந்துகொண்டு மானஸிகமாக வேறு இடத்தில் ஆசை வைத்திருந்தால், அந்தத் தோஷத்தை எனது பிதா சுத்திசெய்யட்டும். வேறு ஒரு புருஷன் எவனும் இந்த ஹவிஸ்ஸைப் பெறமுடியாமல் விலகிப் போகட்டும். எனது பிதாவான இந்த நாமதேயமுள்ளவருக்கே இந்த ஹோமம் உரியது.

(பித்ரு ஹோம மந்த்ரம், இரண்டாவது.)

யாஸ்திஷ்டந்தி யா தாவந்தி யார்த்ரக்னீஃ பரிதஸ்து

ஷீ: । சுஹ்ரிவிஹ்வஸ்ய ஹதீர்ஹிரண்ணஸ்ய விதாஷ்யே ஸ்வ-

தெஹ ஸ்வாஹா ॥ உ ॥

மேலும், மனிதர்களுடைய ரஹஸ்ய, பஹிரங்க, நடவடிக்கைகளைக் கவனிக்க ஆகாசம், பூமி, ஜலம், திக்குகள் போன்ற பதினன்கு ஸாக்ஷிகளைப் பகவான் ஏற்படுத்தியுள்ளார். அவைகளுள், தீர்த்த மென்கிற ஸாக்ஷியைக்கொண்டு, என் மாதாவின் மானஸிக தோஷத்தை மறுத்து, இந்த ஹவிஸ் எனது உண்மைப் பிதாவுக்கே போய்ச் சேரவேண்டும் என்று ப்ரார்த்திக்கப் படுகிறது.

குளம் முதலியவைகளில் நிற்கிற தீர்த்தங்களென்ன, நதிகளில் ஓடும் தீர்த்தங்களென்ன, ஈரப்ரதேசத்தைச் சுற்றி நின்று உடைத்துத் தள்ளும் சிறிய தீர்த்தங்களென்ன, இந்த லோகாதாரங்களான தீர்த்ததேவதைகளை ஸாக்ஷியாகக் கொண்டு எனது இந்தப் பிதாவைத் தவிர மற்றொருவனை இந்த ஹவிஸ்ஸுக்குப் பாத்யமற்றவனாக ஒதுக்குகிறேன். ஆகையால் இந்த நாமதேயமுள்ள இந்தப் பிதாவுக்கே இந்த ஹவிஸ் உரியது.

(பிதாமஹ ஹோம மந்த்ரம்—முதலாவது)

யந்மெ விதாமஹீ ஸ்ரும்யொஹவ்ரதந்நவ்ரதா ।

தந்மெ ரெதஃ விதாமஹொ வ்ருங்க்தா மஹ ரந்யஸ்வவதூ

தாமஹெ ஸ்வாஹா ॥ ௩ ॥

பிதாமஹியைப் பற்றியும் மாதாவைப்போல் மந்த்ரம் மறுக்கிறது. (அர்த்தம் முன்போல்.)

(பிதாமஹ ஹோம மந்த்ரம் இரண்டாவது.)

சஞ்சஹ்யெ வவ்ஹெதெ ரஜஹாஹ்யா வரயிவ்யா । க்ஷி

தீஹ்ரி ரந்தாஹீ ரஹ்ரந்ய விதாமஹாஹ்யெ ஸ்வதெஹ

ஸ்வாஹா ॥ ச ॥

பர்வதங்கள், விஸ்தாரமாயுள்ள பூமி, தேச காலங்களால்

அந்தமில்லாதவைகளான இந்தத் திக்குகள், இந்த ஸாக்ஷிகளைக் கொண்டும் இந்தப் பெயருள்ள எனது ஸாக்ஷாத் பிதாமஹனைத் தவிர வேறு ஒருவனை ஒதுக்குகிறேன். அவன் உரியவனல்லன்.

(ப்ரபிதாமஹ ஹோமமந்த்ரம்—முதலாவது)

யதே³ ப்ரபிதாமஹீ ப்ரஸ்²ரோஹவாத்ருந்நவ்ரதா ।

தன்மே ரேத꞉ ப்ரபிதாமஹோ வ்ருங்க்தா மஹாதேரன்யாஸவ

ப்ருதாமமுஷ்மை ஸ்வாஹா ॥ ரு ॥

மாதா, பிதாமஹிகளுக்குப்போல் ப்ரபிதாமஹிக்கும் இதில் சுத்தி சொல்லப்படுகிறது. (அர்த்தம் முன்போல்)

(ப்ரபிதாமஹ ஹோமமந்த்ரம் இரண்டாவது)

சுதேஷ்டய ஸிதாஸி ரஹோராத்ரைஸ்து ஸாக்ஷிபி꞉ । சுஜு

மாஸைஸ்² மாஸேஸ்²வாஹ ரந்யம் ப்ரபிதாமஹாஷ்யை ஜமா

மெஷ்டே ஸ்வாஹா ॥ சு ॥

மற்ற ஸாக்ஷிகளான, ருதுக்கள், ராத்ரி பகல்கள், இவைகளின் ஸந்திகாலங்கள், அர்த்தமாஸம் (ஒரு பக்ஷமாகிற காலம்), மாஸம் ஆகிய ஸாக்ஷிதேவதைகளின் மூலமாயும் எனது ப்ரபிதாமஹீ சுத்தையானவள் என்று கூறி மற்றொருவன் இந்த ஹவிஸ்ஸுக்குப் பாத்யப் பட்டவனல்லன் என்று ஒதுக்குகிறேன். இந்தப் பெயருள்ள இந்த ப்ரபிதாமஹனுக்கே இது உரியது.

(ஏழாவது ஹோமமந்த்ரம்)

யே சேஹ பிதரோ யே ச நேஹ யாம்ஸ்²ச வித்³ம யாம் உ

ச ந ப்ரவித்³ம । அக்³நே தான் வேத்த² யதி³ தே ஜாதவேத³꞉ ஸ்தயா

ப்ரத்தம் ஸ்வதயா மத³ந்து ஸ்வாஹா ॥ எ ॥

ஏ! ஜாதவேதஸ்ஸே! அக்னிதேவனே! என்னுடைய மற்றப் பித்ருக்கள் இஹலோகத்தில் இருந்தாலும் அவர்களையும், இங்கு இல்லாதவர்களையும், நாங்கள் அறிந்தவர்களாயும், அறியாதவர்களாயும் இருக்கிற மற்ற பித்ருக்களையும் நீ அறிந்திருந்தால்

(அறிந்திருப்பாய்) அவர்களிடம் இந்த ஹவிஸ்ஸைச் சேர்ப்பிக்கவும். இந்த ச்ராத்தகர்ம ஹோமத்தால் அவர்களும் த்ருப்தியடையவேண்டும்.

(ஆப. க்ரு. க-21. ஸூ-4. ஆஜ்யஹோம மந்த்ரங்கள்)

ஸ்வாஹா பித்ரே பித்ரே ஸ்வாஹா ஸ்வாஹா பித்ரே பித்ரே ஸ்வாஹா ‖ அ ‖

ஸ்வதா ஸ்வாஹா அக்நயே கவ்யவாஹநாய ஸ்வதா ஸ்வாஹா ‖

பிதா, மற்றப்பித்ருக்கள், ச்ராத்த ஹவிஸ்ஸை வஹித்துக் கொண்டு போகிற கவ்யவாஹனனென்கிற அக்நி இவர்களுக்கு ஹோமம்.

(ஆப. க்ரு. க-21. ஸூ-6. அன்ன அபிமர்சன மந்த்ரம்) மூன்று மந்த்ரங்கள்—முதலாவது மந்த்ரம்.

ஏஷ தே தத மதுமாம் ஊர்மிஸ்ஸரஸ்வாந் யாவா நக்நிஶ்ச

ப்ருதிவீ ச தாவத்யஸ்ய மாத்ரா தாவதீமேதாம் மாத்ராம்

ததாமி யதாக்நிரக்ஷிதோऽநுபதஸ்த ஏவம் மஹ்யம் பித்ரே

அக்ஷிதோऽநுபதஸ்ஸ்வதாபவதாம் த்வம் ஸ்வதாம் தைஸ்ஸ

ஹோபஜீவர்க்ஷே மஹிமி ‖ கூ ‖

ஏ! தத! பிதாவே! இந்த அன்னமானது உனக்காக ஏற்பட்டது. இது மதுவோடு கூடியதாயும், பூர்ணமாயும், ஸ்வதாமந்த்ரத்துடன் கூடியதாயுமிருக்கிறது. அக்நி, பூமி இரண்டும் எவ்வளவு பரிமாணத்துடன் கூடியவைகளோ, அவ்வளவு பரிமாணம் உள்ளது இந்த அன்னம். அதன் மஹிமையால் இதை உனக்குக் கொடுக்கிறேன். ஹே! அன்னஹவிஸ்ஸே! அக்நியானவன் எப்படி குறைவற்றவனோ நாசமற்றவனோ, அதுபோல் நீயும் எனது பிதாவுக்குக் குறைவற்றதாயும், உபக்ஷயமற்றதாயும், பித்ருக்களுக்கு அன்னமாகவும் இருக்கவும். ஏ! பிதாவே! நீ இந்த

ஸ்வதையை ஹவிஸ்ஸை அந்த அக்நி முதலிய தேவதைகளுடன் அடையவும். உன்னுடைய மஹிமைக்கு ருக்குகள் காரணம்.

(இரண்டாவது மந்த்ரம்)

ஸாம தே பிதாமஹ ... வாயுர்மஹிமா ... ॥ ௨௦ ॥

ஏ! பிதாமஹனே! (மற்றவை முன்போல்). அக்நிக்குப்பதில் வாயு. "ஸாமங்கள் உனது மஹிமை", என்று விசேஷம்.

(மூன்றாவது மந்த்ரம்)

ஸாம தே ப்ரபிதாமஹ ... யஜூம்ஷி தே மஹிமா ॥ ௨௧ ॥

ப்ரபிதாமஹன், ஆதித்யன், ஸூர்யன், யஜுஸ்ஸுகள் மஹிமா என்பவை விசேஷம். (மற்றவை முன்போல்)

பத்தொன்பதாவது கண்டம் முற்றிற்று.

## இருபதாவது கண்டம்.

(ஆப. க்ரு. க-21. ஸூ-8. பாத்ரத்தில் அன்னத்தை ஸ்பர்சிக்கச் செய்ய மந்த்ரம்.)

வ்ருயிவீ தெ வாத்ரும் ஜ்ளார்வியாநம் ஸ்ரூஹ்மணஸ்ய
முகெ ஜுஹொமி ஸ்ராஹ்மணாநாம் த்வா ப்ராணாவாநயொ
ஜுஹொம்யக்ஷிதமஸி மைஷாம் க்ஷேஷ்டா அமுத்ராமுஷ்மி
லொகெ ॥ க ॥

ஏ! அன்னமே! உனக்கு ப்ருதிவியே பாத்ரமாகும். ஆகாசம் மூடியாகும். இந்த ப்ராம்ஹணனின் முகத்தில் உன்னை ஹோமம் செய்கிறேன். ப்ராம்ஹணர்களுடைய ப்ராணம், அபாநம் இவைகளிலும் ஹோமம் செய்கிறேன். நீ அக்ஷயமாயிருக்கிறாய். இந்த ப்ராம்ஹணர்களுக்குக் குறைவாக க்ஷயத்தை அடையாதே. பரலோகத்திலும், இவ்வுலகிலும்.

(ஆப. க்ரு. க-21. ஸூ-9. பிண்டதானத்தில் தர்ப்பங்களில் தீர்த்தம் சேர்க்க மந்த்ரங்கள்.)

மாஜல்யந்தாம் மெ பிதரோ மாஜல்யந்தாம் மெ பிதாமஹா
மாஜல்யந்தாம் மெ ப்ரபிதாமஹாஃ ॥ உ ॥

மாஜல்யந்தாம் மெ மாதரோ மாஜல்யந்தாம் மெ பிதாமஹ்யோ
மாஜல்யந்தாம் மெ ப்ரபிதாமஹ்யஃ ॥ ௩ ॥

தர்ப்பத்தில் சேர்க்கிற இந்தத் தீர்த்தத்தால் எனது பித்ருக்கள் சுத்தர்களாக ஆகட்டும். பிதாமஹன், ப்ரபிதாமஹன், மாதா, பிதாமஹீ, ப்ரபிதாமஹீ இவர்களும் சுத்தர்களாகட்டும்.

(ஆப. க்ரு. க-21. ஸூ-9. பிண்டதான மந்த்ரங்கள்.)

ஏதத்தெ ததாஸௌ யெ ச த்வாமநு ஏதத்தெ பிதாமஹா
ஸௌ யெ ச த்வாமநு ஏதத்தெ ப்ரபிதாமஹாஸௌ யெ ச த்வாமநு ॥

ஏதத்தெ மாதரஸௌ யாஶ்ச த்வாமநு ஏதத்தெ பிதாமஹ்
யஸௌ யாஶ்ச த்வாமநு ஏதத்தெ ப்ரபிதாமஹ்யஸௌ யாஶ்ச த்வாமநு ॥

மாஜல்யந்தாம் மெ பிதர உதெத்யதெ ॥ ௪ ॥

தத! பிதாவே! இந்தப் பிண்டம் உனக்கு உரியது. உன்னை அனுஸரித்து எவர்கள் ஜீவிக்கிறார்களோ அவர்களுக்கும். இவ்வாறு, பிதாமஹன், ப்ரபிதாமஹன், மாதா, பிதாமஹீ, ப்ரபிதாமஹீ ஆகியவர்களுக்கும் அர்த்தம் செய்யவும்.

(ஆப. க்ரு. க-21. ஸூ-9. உபஸ்தான மந்த்ரங்கள்.)

𑌯𑍇 𑌚 𑌵𑍋𑌽𑌤𑍍𑌰 𑌯𑍇 𑌚𑌾𑌸𑍍𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌶𑌂𑌸𑌨𑍍𑌤𑍇 𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌵𑍋
𑌽𑌤𑍍𑌰 𑌯𑌾𑌂𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌶𑌂𑌸𑌨𑍍𑌤𑍇 𑌤𑍇 𑌵𑌹𑌨𑍍𑌤𑌾𑌂 𑌤𑌾𑌂𑌶𑍍𑌚 𑌵𑌹
𑌨𑍍𑌤𑌾𑌂 𑌤𑍃𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑍁 𑌭𑌵𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍃𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑍁 𑌭𑌵𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑍃𑌪𑍍𑌯𑌤
𑌤𑍃𑌪𑍍𑌯𑌤 𑌤𑍃𑌪𑍍𑌯𑌤 ॥ ௭ ॥

பித்ருக்களே! இந்த ச்ராத்த கர்மாவில் உங்களை எவர்கள் அண்டி அன்னத்தை அபேக்ஷிக்கிறார்களோ, எங்களிடமும் அவ்வாறு எவர்கள் ஆசம்ஸிக்கிறார்களோ, அந்தப் புருஷர்களும், அந்த ஸ்த்ரீகளும் இந்த ச்ராத்த ஸ்வதையை அடையட்டும். நீங்கள் த்ருப்தியடையுங்கள், புருஷர்களும் ஸ்த்ரீகளும் த்ருப்தியையடையுங்கள்.

(ஆப. க்ரு. க-21. ஸூ-9. பிண்டபரிஷேசன மந்த்ரம்)

𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌨𑌭𑌿𑌤𑌰𑍍𑌪𑌯𑌨𑍍𑌤𑍀𑌰𑌾𑌪𑍋 𑌮𑌧𑍁𑌮𑌤𑍀
𑌰𑌿𑌮𑌾𑌃 । 𑌸𑍍𑌵𑌧𑌾𑌂 𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑍋 𑌅𑌮𑍃𑌤𑌂 𑌦𑍁𑌹𑌾𑌨𑌾 𑌆𑌪𑍋 𑌦𑍇
𑌵𑍀𑌰𑍁𑌭𑌯𑌾𑌂𑌸𑍍𑌤𑌰𑍍𑌪𑌯𑌨𑍍𑌤𑍁 ॥ ௮ ॥

𑌤𑍃𑌪𑍍𑌯𑌤 𑌤𑍃𑌪𑍍𑌯𑌤 𑌤𑍃𑌪𑍍𑌯𑌤 ॥ ௯ ॥

இந்தப் பரிஷேசன தீர்த்தங்கள் எங்களுடைய புத்ரன், பௌத்ரன் ஆகியவர்களை த்ருப்தி செய்து வைக்கிறவையாயும், மிகவும் ஸ்வாதுவாயும் இருக்கின்றன. எனது பித்ருக்களுக்கு ஸ்வதை என்கிற ச்ராத்த கர்மாவை அம்ருதத்தைக கறந்துகொடுக்கிற இந்த அப்தேவிகள், இந்தப் பிண்ட தேவதைகளான பிதா, மாதா இரு வர்க்கங்களையும் த்ருப்தி செய்து வைக்கவேண்டும். ஹே! பித்ருக்களே! த்ருப்தியடையுங்கள்.

(ஆப. க்ரு. க-21. ஸூ-9. ஹவிஶ்ஶேஷ ப்ராஶனமந்த்ரம்)

ப்ராணே நிவிஷ்டோ(அ)ம்ருதம் ஜுஹோமி ப்ரஹ்மணி ம ஆத்மா(அ)ம்ருதத்வாய ॥ ௧௦ ॥

ப்ராணன் முதலிய ஐந்து வாயுக்களில் அதிஷ்டானம் பெற்றவனும், பரமாத்மரூபனுமான நான், இந்த அம்ருதமான பித்ரு அன்னசேஷத்தை ப்ரம்ஹமாகிற பரமாத்மாவில் ஹோமம் செய்கிறேன். மரணமின்மையான அம்ருதத்வத்தை அடைய வேண்டி.

(ஆப. க்ரு. க-22. ஸூ-1. அஷ்டகாச்ராத்தம்—அபூப ஹோமமந்த்ரம்)

யாம் ஜநா: ப்ரதிநந்தந்தி ராத்ரிம் தேநுமிவாயதீம் ।
ஸம்வத்ஸரஸ்ய யா பத்நீ ஸா நோ அஸ்து ஸுமங்கலீ ஸ்வாஹா ॥

எந்த ஏகாஷ்டகையின் முதல் நாள் ராத்ரியை ஜனங்கள் மிக ஸந்தோஷத்துடன் எதிர் பார்க்கிறார்களோ, பால்கறக்க வரும் பசுவைப்போல் க்ஷேமத்தைக் கொடுக்க வருகிறபடியால், அந்த ஸம்வத்ஸரபத்நியான ஏகாஷ்டகை என்கிற தேவீ நமக்கு நல்ல மங்களங்களைக் கொடுப்பவளாக ஆகட்டும்.

(ஆப. க்ரு. க-22. ஸூ-4. வபாஹோமமந்த்ரம்)

வஹ வபாம் ஜாதவேத: பித்ருப்யோ யத்ரைநாந் வேத்த நிஹிதாந் பராகே । மேதஸ: குல்யா உப தாந் ஸ்ரவந்து ஸத்யா ஏஷாமாஶிஷ: ஸந்து காமைஸ் ஸ்வாஹா ॥ ௧௨ ॥

ஏ! ஜாதவேதஸ்ஸே! அக்நியே! இந்த வபை என்ற ஹவிஸ்ஸை எனது பித்ருக்களுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பாயாக. இந்தப் பித்ருக்கள் வெகுதூரமான இடத்தில் எங்கு வஸிக்கிறார்களென்பதை நீ அறிவாய். இந்த ஹவிஸ்ஸிலுள்ள மேதஸ் என்ற ஸாரத்தின் ப்ரவாஹங்கள் பித்ருக்களைக் குறித்து ப்ரவஹிக்கட்டும். அவர்களுக்குக் கிடைக்கட்டும். இப்படிச் செய்வதால் அந்தப் பித்ருக்களுடைய ஆசீர்வாதங்கள் ஸத்யங்களாக வேண்டும். எனது இஷ்டங்கள் என்னிடம் சேரவேண்டும்.

(ஆப. க்ரு. க-22. ஸூ-5.)
(மாம்ஸௌதன ஹோமமந்த்ரங்கள்)

யாம் ஜநா: ப்ரதிநந்தந்த்யேகாஷ்டா ॥ கங ॥

மேற்படி மந்த்ரத்தையும் அர்த்தத்தையும் இரண்டாவது ப்ரச்னம் இருபதாவது கண்டம் 148-ஆம் பக்கம் பார்க்கவும்.

உஷஸ்யேவ ஸா யா ப்ரதமா வ்யௌச்சதந்தரஸ்யாம் சரதி ப்ரவிஷ்டா। வதூர்ஜஜான நவகஜ்ஜநித்ரீ த்ரய ஏனாம் மஹிமான: ஸசந்தே ॥ கச ॥

இந்த ஏகாஷ்டகா என்கிற தேவியே உஷஸ் என்கிற அந்தத் தேவதையாகிறாள். இவள் ஸூர்யனுக்கு முன்பே வெளிப்பட்டு அந்த ஸூர்யகிரணங்களில் புகுந்து, இந்தப் பூமியில் ஸஞ்சரிக்கிறாள். புதிய பர்த்தாவிடம் புத்ர ஸந்தானத்தை உத்பத்தி செய்ய அபேக்ஷித்துப் போகிற வதூவாக இவள் ஆகிறாள். இவளை மூன்று பெரியதேவர்கள், அக்நி, அச்விநீ தேவர்கள் இரண்டு, ஆக மூன்றுபேர்கள் ஆச்ரயித்துள்ளார்கள். இவ்வளவு மஹிமையுள்ள உஷஸ் தேவதையே இந்த ஏகாஷ்டகா தேவதையும் என்று கருத்து.

(இரண்டாவது மந்த்ரம்.)

சந்தஸ்வதீ உஷஸா பேபிசானே ஸமானம் யோநிமனுஸஞ்சரந்தீ। ஸூர்யபத்நீ விசரத: ப்ரஜாநதீ கேதும் க்ருண்வானே அஜரே பூரிரேதஸா ॥ கரு ॥

உஷஸ் தேவதைகள் இரண்டுபேர்கள். அவர்கள் தங்களை ஸ்தோத்ரம் செய்யும் அநேக சந்தஸ்ஸுகளைப் பெற்றவர்கள். ப்ரகாசமாக விளங்குகிறவர்கள். இரண்டுபேருக்கும் உத்பத்தி ஸ்தானமான ஸூர்யனைப் பகலில் அநுப்ரவேசம் செய்கிறவர்கள். அந்த ஸூர்யனை ரக்ஷகனாகக் கொண்டவர்கள், அநேக விதமாக ஸஞ்சரிப்பவர்கள், ஞானம் பெற்றவர்கள். அந்த ஞானத்தை எல்லா லோகத்திற்கும் கொடுப்பவர்கள். உஷஸ் காலத்தில் எல்லா ப்ராணிகளும் விழித்துக் கொள்ளுகிறார்கள்,

அறிவு பெறுகிறார்கள் என்று கருத்து. மேலும் அந்த உஷஸ் ஸுகள் ஜரையற்றவர்கள். பலமான பனியைக் கொண்டவர்கள். இவ்வளவு மஹிமையுள்ளவர்கள் அந்த உஷஸ்ஸுகள். அந்த உஷஸ்ஸுகளும் இந்த ஏகாஷ்ட ரூபங்களாகிறார்கள்.

(மூன்றாவது மந்த்ரம்)

ஐதஸ்ய வஜ்ஞா உந்தி ஸ்ரு ஸூதா ஸ்துயோ வஜூாவெஸா
ஸுநாஜ்யோதிஷாஸ்ஸஹ: । ஷூஜாஸெகா ரக்ஷத்ய்ஜஜ ஸெகா
ஷுதஸெகா ரக்ஷதி ஜெவயஜநாம் ॥ கசு ॥

இந்த உஷஸ்ஸுகள் யஜ்ஞத்தை ரக்ஷிக்கவேண்டியதற்காக மூன்று உருவம் கொண்டார்கள். மிகவும் ப்ரகாசிக்கிற மூன்று அக்நிகள் தங்கள் ஜ்யோதிஸ்ஸால் இவர்களை அனுஸரிக்கிறார்கள். இந்த மூன்று உஷஸ் தேவதைகளில் ஒருத்தி இந்தக் கர்மாவைச் செய்து தேவர்களைக் குறித்து யாகம் செய்கிற யஜமானர்களுடைய ப்ரஜைகளைக் காப்பாற்றுகிறாள். மற்றொருத்தி அந்த யஜமானர்களுடைய பலத்தை ரக்ஷிக்கிறாள். மூன்றாவதான ஒருத்தி அவர்களுடைய வ்ரதத்தைப் பாதுகாக்கிறாள்.

(ஹோமமந்த்ரம்)

ஸகாஷ்டகாம் வ்யஶ்ரத ஜொஹ்ராநா உஹிம்ராவஸ்ஷ்ரத
வ்ஷ்யாவக । தஷ்ராஹணெர் திவஜத உநஜஸ்க்ஷயஉஜாஷ்டிநு
மொகெ ஷ்டிம் ஹுதா ஜெ விதஸ்ஸ்வாஹா ॥ கஎ ॥

ஏ! ப்ராம்ஹணர்களே! இந்த ஏகாஷ்டகா என்ற புண்ய கர்மாவைப் பாருங்கள். பித்ரு தேவர்களுக்கு இது மாம்ஸம், நெய், ஸ்வதா, மாஷம் முதலிய இவைகளுடன் கூடிய அன்னத்தை இந்த ஏகாஷ்டகை கறந்து கொடுக்கிறது. மேலும் அந்த அன்னமானது ப்ராம்ஹணர்களால் வெகு பரிசுத்தமாகச் செய்யப்பட்டது. இந்த அனந்தமான அக்ஷயமான அன்னமானது பரலோகத்தில் எனது பித்ருக்களுக்கு வ்ருத்தியைக் கொடுக்கட்டும். ப்ரீதியைக் கொடுக்கட்டும்.

(ஹோமமந்த்ரம்)

ஔலூகலா: ஸம்வாதிநோ க்ராவாணோ வொஷ்க்ருண்வந்த ஹவி: க்ருண்வ
ந்த: பரிவத்ஸரீணம் । ஏகாஷ்டகே ஸுப்ரஜா வீரவந்தோ
வயஸ்ஸ்யாம பதயோ ரயீணாம் ॥ கஅ ॥

ஏ! ஏகாஷ்டகா தேவதையே! உனக்காக இந்த அன்ன ஹவிஸ்ஸைச் செய்வதில், உரல், கல்லுரல், அம்மி முதலியவைகளான அசேதன வஸ்துக்களும் தங்களுடைய சப்தம் மூலமாக உத்ஸாஹத்தைக் காட்டின. (இடிப்பது அரைப்பது முதலிய ஸமயத்தில் சப்தம்). இந்த அன்ன ஹவிஸ்ஸானது ஒருவர்ஷத்திற்கு ஒருதடவை செய்யப்படுகிறது. அல்லது ஒருதடவை கொடுப்பதால் ஒருவர்ஷம் முடிய த்ருப்தியைக் கொடுக்கக் கூடியது. ஆகவே இந்த ஹவிஸ்ஸை ஸமர்ப்பிக்கும் நாங்கள், நல்ல ப்ரஜைகளுள்ளவர்களாயும், பௌத்ராதி பந்துக்கள் உள்ளவர்களாயும், தனங்களுக்கு யஜமானர்களாயும் ஆகவேண்டுமென ப்ரார்த்திக்கிறேன்.

(ஹோமமந்த்ரம்)

ஏகாஷ்டகா தபஸா தப்யமாநா ஸம்வத்ஸரஸ்ய பத்நீ
துதுஹே ப்ரபீநா । தம் தோஹமுபஜீவாத பிதரஸ்ஸஹ
ஸ்ரியா ரயிம் புஷ்டிம் நொகே ஸ்வாஹா ॥ ககூ ॥

ஏ! பித்ருக்களே! ஸம்வத்ஸரத்தின் பத்நியான, ரக்ஷகையான இந்த ஏகாஷ்டகா தேவியானவள் இந்த ச்ராத்தமாகிற தபஸ்ஸால் த்ருப்தி செய்யப்பட்டு வ்ருத்தியடைந்து இந்த நெய் முதலியவை கலந்த ஹவிஸ்ஸை உத்பத்தி செய்து கொடுக்கிறாள். ஏராள நெய் தாரை கலந்த அன்னஹவிஸ்ஸை நீங்களும் பரலோகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இருபதாவது கண்டம் முற்றிற்று.

## இருபத்தோராவது கண்டம்.

(ஆப. க்ரு. க-22. ஸூ-6. பிஷ்டான்ன ஹோமமந்த்ரம்.)

உக்²த்²யஶ்சாதிராத்ரஶ்ச ஸாத்³யஸ்க்ரஶ்ச²ந்த³ஸா ஸஹ । அபூப

ஹவிஷே தாஹுதே நமஸ்தே அஸ்து மாம்ஸஹவிஷே ஸ்வாஹா ॥ க ॥

ஏ! ஏகாஷ்டகா தேவதையே! நீ, உக்த்யம், அதிராத்ரம், ஸாத்யஸ்க்ரம் என்ற யாகம், சந்தோமங்கள் என்ற யாகங்கள் இவைகளின் ஸ்வரூபமாக விளங்குகிறாய். உனக்கு நமஸ்காரம்.

ஏ! அபூபஹவிஸ்ஸே! க்ருதஹவிஸ்ஸே! ருசியான மாம்ஸ ஆஹுதியே! உங்களுக்கும் நமஸ்காரம். (என்னை ஹிம்ஸிக்காதீர்கள்.)

(இதில் உள்ள எட்டு மந்த்ரங்கள் ஆஜ்யாஹுதி மந்த்ரங்கள்.)

ஸ்ருகவ்யா ப்ருதிவ்யக்³நினர்சா ஸ மயி காமம் நியுனக்து ஸ்வாஹா ॥

ஸோமோ வாயுனாந்தரிக்ஷேண ஸாம்நா ஸ மயி காமம் நியுனக்து ஸ்வாஹா ॥ உ ॥

த்³யௌராதி³த்யேன யஜுஷா ஸ மயி காமம் நியுனக்து ஸ்வாஹா ॥ ங ॥

ஜனத³க்³னிர்வாயுரோஹிரஸ மயி காமம் நியுனக்து ஸ்வாஹா ॥ ச ॥

ஸோமநாஜ்யாயாக்³னயே தே³வஜாதவேத³ ஸ்வாஹா ॥ ரு ॥

கேதவே மனவே ப்³ருஹ்மணே தே³வஜாதவே ஸ்வாஹா ॥ சூ ॥

ஸ்வதா⁴ ஸ்வாஹாக்³னயே கவ்யவாஹனாய ஸ்வதா⁴ ஸ்வாஹா ॥ எ ॥

ப்ருதிவீ, அக்நி, ருக்வேதம் இவைகளால் எனது மனதில் உண்டான இந்த இஷ்டத்தைப் பெற்று ஸ்திரப்படுத்திக்

கொள்ளுகிறேன். இது போல், வாயு, அந்தரிக்ஷம், ஸாமவேதம் இவைகளாலும் தேவலோகம், ஆதித்யன், யஜுஸ் இவைகளாலும், ஜநத் என்கிற நான்காவது வ்யாஹ்ருதி, அப்புகள், அதர்வ வேதம், அங்கிரஸ்ஸுகள் இவைகளாலும் எனது இஷ்டத்தைப் பெற்றுக்கொள்ளுகிறேன்.

மிகவும் விளங்குகிறவனும், தமஸ்ஸைப் போக்குகிறவனுமான ஜாதவேதஸ்ஸான அக்நி தேவனுக்கு இந்த ஹோமம் செய்கிறேன். ஜ்ஞாநியாயும், மந்த்ரஸ்வரூபியாயும், ப்ரம்ஹஸ்வரூபியாயும், தேவதைகளை அறிந்தவனுமான அக்நிக்கு இந்த ஹோமம், ஸ்வதாவுக்கு ஹோமம், கவ்யவாஹநாக்நிக்கும் ஹோமம் செய்கிறேன்.

(ஆப. க்ரு. க-22. ஸூ-12. அன்ன வஸ்த்ராதிகளை யாசிக்க ஜபிக்கும் மந்த்ரங்கள் ஏழு.)

𑌅𑌨𑍍𑌨𑌮𑌿𑌵 𑌤𑍇 𑌦𑍃𑌶𑍇 𑌭𑍂𑌯𑌾𑌸𑌂 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌿𑌵 𑌤𑍇 𑌦𑍃𑌶𑍇 𑌭𑍂𑌯𑌾𑌸𑌂 𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌿𑌵 𑌤𑍇 𑌦𑍃𑌶𑍇 𑌭𑍂𑌯𑌾𑌸𑌂 𑌮𑌨𑍋𑌰𑌥𑍇𑌵 𑌤𑍇 𑌦𑍃𑌶𑍇 𑌭𑍂𑌯𑌾𑌸𑌗𑍍𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑍇𑌵 𑌤𑍇 𑌦𑍃𑌶𑍇 𑌭𑍂𑌯𑌾𑌸𑌮𑍍 ॥ ௯ ॥

𑌸𑌂𑌸𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑍁 𑌦𑌿𑌶𑍋 𑌮𑌹𑍀𑌸𑍍𑌸𑌮𑌾𑌯𑌨𑍍𑌤𑍁 𑌸𑍂𑌨𑍃𑌤𑌾𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌕𑌾𑌮𑌾 𑌅𑌭𑌿𑌯𑌨𑍍𑌤𑍁 𑌮𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌅𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍁 𑌮𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ॥ ௧௦ ॥

𑌯𑌶𑍋𑌽𑌸𑌿 𑌯𑌶𑍋𑌽𑌹𑌂 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌭𑍂𑌯𑌾𑌸𑌮𑍌 ॥ ௧௧ ॥

உனது கண்ணுக்கு நான் அன்னம் போல் ப்ரீதிகரனாக இருக்க வேண்டும். (அன்னம் கொடுப்பவனைப் பார்த்துச் சொல்லும் மந்த்ரம்.) இது போல் வஸ்த்ரம், தனம், மனோரதம், ச்ரத்தை இவைகள் போலவும் என்று அர்த்தம்.

பெரிய விஸ்தாரமான திக்குகளும் எனக்கு ஹவிஸ்ஸான அன்னத்தை நன்றாக வர்ஷிக்கட்டும்.

ப்ரியமான வாக்குகளும் "ஸ்வாகதம்," இத்யாதிகளும் என்னிடம் எதிர் கொண்டு வர வேண்டும். ப்ரியங்களான எல்லா இஷ்ட

காமங்களும் என்னிடம் வந்து அடையட்டும். என்னிடம் வந்து சேரட்டும். அவைகள் ப்ரீதியடைந்து.

ஏ! தானம் கொடுப்பவரே! நீர் யஶஸ்ஸாக இருக்கிறீர், நானும் உம்மிடம் யஶஸ் உள்ளவனாக ஆகவேண்டும், இந்தத் தான மூலமாக.

(ஆப. க்ரு. க-22. ஸூ-13. தானத்தில் ரதம் கிடைத்தால் ஸ்பர்சிக்கும் மந்த்ரம்.)

சுஷா ந்யங்காவபிதோ ரதம் யௌ த்வாந்தம் வாதாக்ரமநு ஸ

ஞ்சரந்தௌ தூரேஹேதி ரிந்த்ரியாவாந் பதத்ரீ தே நோऽக்நய:

பப்ரய: பாரயந்து ॥ கஉ ॥

அழகிய சப்தமுள்ளதும், காற்றுப்போல் வேகமாகப்போகக் கூடியதுமான இந்த ரதத்தைச் சுற்றி ஸஞ்சரிக்கிற அங்கர்கள், ந்யங்கர்கள், தூரேஹேதி, பலிஷ்டனை பதத்ரீ (பறக்கும் சக்தியுள்ளவன்) ஆகிய சில பூதங்கள் இந்த ரதத்திற்கு அதிஷ்டான தேவதைகள். வேகமாகச் செல்லக்கூடிய அந்தப் பூதங்கள் எனது இஷ்ட காமங்களை ரக்ஷித்து, இந்த ரத மூலமாக என்னை நல்ல மார்க்கத்தின் கரையை அடையச் செய்யட்டும்.

(ஆப. க்ரு. க-22. ஸூ-14. ரதத்தில் ஏறவும், ப்ரயாணம் செய்யவும் இரண்டு மந்த்ரங்கள்.)

ஸ்வஸ்தி நோऽத்ய வநஸ்பதே ஸம்பாரய ॥ கரு ॥

ஸ்வயம் வாஜிந்தந்வம் கல்பயஸ்வ ஸ்வயம் யஜஸ்வ ।

ஸ்வயம் ஜுஷஸ்வ மஹிமா தே அந்யேந ந ஸந்நஶே ॥ கச ॥

மார்க்கங்களுக்கு அதிபதியான ஏ! ரதமே! என்னை க்ஷேமமாகப் போகவேண்டிய இடத்தில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். ஏ! அச்விநீ தேவர்களே! இந்த ரதம் உங்களுடையது. வழியில் ஸுக துக்கங்களில் இது ஒடிந்து போக வேண்டாம். உத்ஸாஹத்தால் ஸுகார்த்தமாக வேகமாக ஓட்டுகையில் ஓடியலாம். கஷ்டமின்றி க்ஷேமமாகப் போகட்டும். எதிரே வரும் எதிரிகளை தூரத்தியடித்துக் கொண்டு செல்லட்டும்.

(ஆப. க்ரு. க-22. ஸூ-15. தானத்தில் குதிரை கிடைத்தால் அதில் ஏற மந்த்ரங்கள்,)

அஶ்வோ(அ)ஸி ஹயோ(அ)ஸ்யத்யோ(அ)ஸி நரோ(அ)ஸ்யர்வா(அ)ஸி ஸப்திரஸி வாஜ்யஸி வ்ருஷா(அ)ஸி ந்ருமணா அஸி யயுர்நாமாஸ்யாதித்யானாம் பத்வா(அ)ன்விஹி ॥ ௧௫ ॥

ஏ! குதிரையே! நீ அச்வமாகிருய். வழியில் வ்யாபரித்துச் செல்லக் கூடியவன். வேகமாகப் போகக் கூடியவன். ஆடிக் கொண்டுபோகிறவன். வாஜீ, அர்வா, வ்ருஷா, ஸப்தி என்ற இந்தப் பெயருள்ளவன். சத்ருவைத் துரத்தும் மனதுள்ளவன். யயு என்கிற அச்வமேதக் குதிரை போலிருக்கிருய். அதிதி புத்ரர்களான தேவர்களுடைய வாஹனமாகிய தேவாஶ்வத்தை அனுஸரிப்பாயாக.

(ஆப. க்ரு. க-22. ஸூ-16. தானத்தில் யானை கிடைத்தால் ஏறும் மந்த்ரம்.)

ஹஸ்தியஶஸமஸி ஹஸ்தியஶஸீ பூ⁴யாஸம் வங்காலவஹ ஶ்ரியம் மா(அ)விஶ இந்த்ரஸ்ய த்வா வஜ்ரேணாபிநிததா⁴ம்யஸௌ ॥

ஏ! ஹஸ்தியே! நீ யானைகளுக்குள் கீர்த்தி பெற்றவனுயிருக்கிருய். உன்னைப் போல் நானும் ஹஸ்தியஶஸ் உள்ளவனுக ஆக வேண்டும். காலனை வஹிப்பவனுகிய ஏ! யானையே! என்னை லக்ஷ்மி வந்து அடையும்படி செய்யவும். இந்த்ரனுடைய வஜ்ரம் போன்ற இந்த அங்குசத்தை உனது சிரஸ்ஸில் ஜாக்ரதையாக வைக்கிறேன்.

(ஆப க்ரு. க-23. ஸூ-1. விவாதத்தில் ஜயம்பெற தவிடு ஹோம மந்த்ரம்.)

அவஜிஹ்வக நிஜிஹ்வகாவ த்வா ஹவிஷா யஜே । தஸ்ஸத்யம் பத³ஹம் ப்ரவீர்யோ ரோஹஸளஷா ஸ்வாஹா ॥ ௧௭ ॥

அவஜிஹ்வகன், நிஜிஹ்வகன் என்றவர்கள் நாக்குத்தோஷ

முள்ள தேவதைகள். உங்களை நான் இந்த ஹவிஸ்ஸால் யஜிக்கிறேன். எனக்கு இந்த வாதத்தில் எதிரியாக வந்து என்னை ஜயிக்க விரும்புகிற எதிரியானவன் என்னைவிடக் கீழ்ப்பட்டவனாக ஆகவேண்டும். இந்த ப்ரார்த்தனையை ஸத்யமாகச் சொல்லுகிறேன்.

(ஆப. க்ரு. க-23. ஸூ-1. எதிர்வாதியைப் பார்த்துச் சொல்லும் மந்த்ரம்.)

ஆதே வாசஂ ஆஸ்யாஂ தத³ ஆதே ஹ்ருத³யாத³தி⁴ ।
யத்ர யத்ர தே வாங்நிஹிதா தாஂ த ஆத³தே । தத்³யத³ஹஂ ப்³ரவீம்யத⁴ரோ மத்³வாதா³ஸ்ஸதி⁴ ॥ ௨௧ ॥

ஏ! ப்ரதிவாதியே! உனது முகத்திலுள்ள வாக்கை இந்த ஹோமத்தால் நான் அபஹரிக்கிறேன். மனஸ்ஸில் இருப்பதும், உனது ஹ்ருதயத்தில் இருப்பதுமான வாக் சக்தியையும் நான் எடுத்து விடுகிறேன். மேலும், உன் அவயவத்தில் எங்கெங்கு வாதத்திறமையிருக்கிறதோ அது எல்லாவற்றையும் எடுத்து விடுகிறேன். ஆகையால் நான் நிச்சயமாகச் சொல்லுவதென்னவென்றால் நீ என்னைவிடக் கீழ்ப்பட்டவனாக வீழ்ச்சியடைவாயாக.

இருபத்தோராவது கண்டம் முற்றிற்று.

---

## இருபத்திரண்டாவது கண்டம்.

---

(ஆப. க்ரு. க-23. ஸூ-2. கோபித்துக் கொண்டிருப்பவனைத் தெளிய வைக்க இரண்டு மந்த்ரங்கள். முதலாவது மந்த்ரம்.)

யாத் த ஏஷா ரராட்யா தநூர்மந்யோர்க்ரோத⁴ஸ்ய நாஶிநீ । தாஂ தே³வா ப்³ரஹ்மசாரிணோ விநயந்து ஸுமேத⁴ஸ꞉ ॥

உன்னுடைய நெற்றியில் கோபத்தின் சிஹ்னம் காணப்படுகிறது. அது ஸாதுத் தன்மையை அழிக்கக் கூடியது. அந்தக்

கோபச் சிஹ்னத்தை ப்ராஜ்ஞாவான்களான வேதமறிந்த பெரியோர்கள் உன்னிடமிருந்து போக்கடிக்கட்டும்.

(இரண்டாவது மந்த்ரம்.)

யத் வஏதந்முகெ2 ஽பி4ஹிதம் ஘ோராட்டஷிவவிஸ்ருதி । விதெ

ஜ்யாயஞயாஇவவி ஹஹுஇஶ்வதாஶ்யாஐவ ॥ உ ॥

உன்னுடைய முகத்தில் இந்த சாஸ்த்ர நிஷித்தமான கோபமானது புருவத்தைத் துடிக்கச் செய்கிறது. அந்தக் கோபமானது பெண் குதிரைக்குக் கர்ப்பம் ஏற்படுவது எப்படி அபாயகரமோ, அது போல் அனர்த்த ஹேதுவாகும். ஆகையால் அதை இந்த மந்த்ரத்தால் விலக்குகிறேன்.

(ஆப. க்ரு. க-23. ஸூ-3. பரபுருஷ இச்சையைத் தடை செய்ய மந்த்ரம்.)

அவ்ஜ்யாஇவ யந்வநோ ஹ்ருதொ3 மந்யும் தநோமி தெ ।

ஐந்த்ராவாஸ்ய ஹ்ருஹநெந்யஹ்யஃ வஶஷெஹ்யாzந்யத்ரஇஸ॥

ஏ! ஸ்த்ரீயே! உனது மனதிலுள்ள தோஷமுள்ள காமத்தை விலகச் செய்கிறேன். வில்லிலிருந்து நாண்கயிற்றை அவிழ்த்து விடுவது போல் அதாவது கார்யத்திற்கு அர்ஹதை யற்றதாகச் செய்வது போல. ஏ! இந்த்ரதேவனே! நீயும் இந்த ஸ்த்ரீயை என்னைவிட்டு வேறு புருஷனிடம் ஸம்பந்தம் செய்ய அர்ஹதையற்ற விதமாகச் செய்யவும்.

(ஆப. க்ரு. க-23. ஸூ-5. வ்யாபாரப் பண்டம் செழிக்க)

(ஹோம மந்த்ரம்.)

பணம் யெந ஹுவணம் ஸ்ருமி யெந தெவா

யந்தீவஈநஃ । தஸ்மிந் ஸொமொ ஶவஈஷ்யா ஸவந்தி ஸிந்த்ரா

ப்ருஹஸ்பதிஶ் ஸ்வாஹா ॥ ச ॥

ஹே! தேவர்களே! நான் வ்யாபாரத்தில் எந்தப் பண்டத்தால் தனத்தை இச்சிக்கிறேனே, இச்சித்து வ்யாபாரம் செய்கிறேனே, அந்தப் பண்டத்தில் ஸோமன், அக்நி, இந்த்ரன், ப்ருஹஸ்பதி, ஆகிய தேவர்கள் அந்தப் பண்டம் எப்படி

சீக்கிரமே நஷ்டமில்லாமல் விலையாகுமோ அவ்வாறு ஜனங்களுக்கு அந்தப் பண்டத்தில் ருசியை (விருப்பத்தை) ஏற்படுத்த வேண்டும்.

(ஆப. க்ரு. க-23. ஸூ-6. வேலைக்காரன் விலகிப் போகாமலிருக்க இரண்டு மந்த்ரங்கள். முதலாவது மந்த்ரம்.)

வஶிகவா ஶிரோஜிஹம் வஶிஹ ாதஂ: வஶிஷ்வஸஂ: ।
வஶிஸவே்ஹ்யா ஜூாதிஹ்ய: வஶிஷீத: க்ஷேஷ்யஸி ॥ ரு ॥

ஏ! வேலைக்காரனே! இந்த மந்த்ர ப்ரயோகத்தால் உன்னை மலை முதலியவை உள்ள தேசாந்த்ரத்தற்குப் போக முடியாமல் தடுக்கிறேன். மேலும், உனது ப்ராதா, ஸஹோதரீ முதலியவர்களிடம் போகாமலும் மற்றப் பந்துமித்ரர்களிடம் போகாமலும் கட்டுப்படுத்தியிருக்கிறேன். ஆதலால் நீ எங்கே போக முடியும்?

(இரண்டாவது மந்த்ரம்.)

ஶஶ்வதுஶிகஂவிதேந ஸங்க்ராஶேணாவிஷ்டா । உஶேந
வஶிஷீதோ஽ஸி வஶிஷீதோ஽ஸ்யஂஶேந ॥ சு ॥

ஏ! ப்ருத்யனே! நீ என்னை விட்டு விலகிவிடுவாய் என்கிற சங்கையால், நீண்டகாலம் விச்சேதமில்லாமல் என்னிடம் சேர்ந்திருக்க வேண்டி, எறும்புச் சாரிபோன்ற இந்தத் தாரையால் சுற்றித் தடை செய்யப் பட்டிருக்கிறாய்.

எறும்புச்சாரி வெகு பலமாயிருந்தால் அதைத் தாண்டிப் போவது ச்ரமமாவதுபோல் என்று கருத்து.

(ஆப. க்ரு க-23. ஸூ-7. வேலைக்காரன் ஓடிப்போனால் திருப்ப ஹோமமந்த்ரங்கள்.)

ஆவர்தந வர்தயநிவர்தந வர்தயேந்த்ர நர்தபுஂத ।
ஹூம்யாஸ்வஸ்ய: ப்ரதிஸஹாஸிராவர்தயாவஂந: ॥ எ ॥

ஆவர்தநேநிவர்தந ஆவர்தநிவர்தநாய ஸ்வாஹா ॥

ஓடுகிறவனைத் திருப்பும் தேவதை ஆவர்த்தனன். நிறுத்துகிற தேவதை நிவர்த்தனன். இந்த இரண்டு தேவர்களே! நீங்கள் இந்த வேலைக்காரனை ஓடாமல் நிறுத்தித் திரும்பச் செய்யவும். சப்திக்கும் பாணமுள்ள இந்த்ரனே! நீயும் இவனை நான்கு திக்குகள், விதிக்குகள் ஆகியவைகளிலிருந்து மறுபடி திருப்பிவிடவும்.

ஆவர்த்தன நிவர்த்தன தேவர்களே! உங்களுக்கு இந்த ஹோமம் செய்கிறேன்.

(இரண்டாவது மந்த்ரம்.)

அநுஹ்வாதா அநுஹ்வயோ நிவர்தோ யோ ந்யவீவ்ருதத் ।

ஐந்த்ர: வ: பரிக்ரோஶோ வ: பரிக்ரோஶதஸ் ஸமேத: ॥௯॥

வேலைக்காரர்களே! வேலையைவிட்டு ஓடுகிற உங்களைக் கூப்பிடுகிற மனிதன் உங்களுக்குப் பின்னால் நின்று உங்களைத் திரும்பும்படி கூப்பிடட்டும். உங்களைத் திருப்பச் சக்தியுள்ளவன் திருப்பட்டும். இந்த்ராதி தேவக்ருதமான தடை சப்தமும் உங்களைத் தடுக்கட்டும் ஓடாமல்.

(மூன்றாவது மந்த்ரம்.)

யதி மாமதிமந்யாத்வா அதேவா தேவவத்தரம் । இந்த்ர: பா

ஶேந ஸிக்த்வா வோ மஹ்யமித்வஶமாநயாத் ஸ்வாஹா ॥ ௧௦ ॥

வேலைக்காரர்களே! நான் தேவ அநுக்ரஹம் பெற்றவன். அப்படிப்பட்ட என்னை, தேவர்களற்ற நீங்கள் மீறி நடந்தால் உங்களை இந்த்ரன் பாசத்தால் கட்டி என் வசத்தில் சேர்க்க வேண்டும்.

(ஆப. க்ரு. க-23. ஸூ-8. சரீரத்தில் பழம் விழுந்தால் சாந்தி மந்த்ரம்.)

யத்வ்ருக்ஷாக்ராதப்யபதத்பலம் தத்யத்வாந்தரிக்ஷாத்ஸவாயுரேவ ।

யத்ராஸ்ப்ருக்ஷத்தந்வம் யச்ச வாஸ ஆபோ பாதந்தாம் நிர்

ருதிம் பராசை: ॥ கக ॥

என்னுடைய சரீரத்தில் வ்ருக்ஷத்திலிருந்தாவது, ஆகாசத்திலிருந்தாவது பழம் விழுந்தால் அது வாயுவின் செய்கையே தவிர துர்நிமித்தமாக ஆகவேண்டாம். அந்தப் பழம் என் சரீரத்தில் எந்த இடத்தை ஸ்பர்சித்ததோ அந்த இடத்தினின்றும், அது ஸம்பந்தப்பட்ட வஸ்த்ரத்தினின்றும், அவைகளில் ஏற்பட்ட அமங்களத்தைத் திருப்பி இந்தத் தீர்த்தமானது பாதிக்கட்டும்.

(ஆப. க்ரு. க-23. ஸூ-8. சரீரத்தில் பக்ஷியின் காற்றுப் பட்டால் சாந்தி மந்த்ரம்.)

யெ வக்ஷிணஃ வதய்ஷி ஶிஹ்ருதொ நிரீ்ஜெெதவஸ்ஹ।
தெஶா ஶிவெந ஶஷெ்ந தெஜஸொாநுஞு வலுஷா ॥ கஉ ॥

பயந்து கொண்டிருக்கிற என்மீது பக்ஷிகள் அமங்களங்களுடன் பறந்து வந்து எந்த இடத்தில் வீழ்ந்தனவோ, அந்த இடத்தை இந்தத் தீர்த்தங்கள் சாந்தமாயும், ஸுகமாயுமுள்ள தேஜஸ்ஸாலும், வர்ச்சஸ்ஸாலும் நனைக்கட்டும்.

(ஆப. க்ரு. க-23. ஸூ-8. சரீரத்தில் மழைஜலம் விழுந்தால் சாந்தி)

ஜிவொநூஶாவ்ருஹதொ கஷஷிக்ஷா உவாம ஷொக்கொ கஹ்வ்தஷீெந । ஸஶஹக்ஷிர்யெண ஊந்ஸா ஸஶஶாம் ஸ்ஹ ணா ஸஂவ்ருஞாநஸூக்ருதாக்ருதெந ॥ கங ॥

என்பேரில் தேவலோகத்திலிருந்தோ, பெரிய ஆகாசத்திலிருந்தோ ஜலங்களின் திவலையானது விழுந்தது. அந்தத் துர்நிமித்ததோஷம் ஏற்படாமலிருக்கும்படி நான் சுபமான இந்த்ரியம், மனஸ் இவைகளுடன் கலந்து கொள்ளுகிறேன். மந்த்ரத்தால், தீர்த்தத்தால் சரீரத்தை ஸம்பந்தப்படுத்திச் சுத்திசெய்து கொள்ளுகிறேன். நல்ல கார்யம் செய்யச் சக்தி வாய்ந்த மந்த்ரத்தால் இதைச் செய்கிறேன்.

(ஆப. க்ரு. க-23. ஸூ-9. வீட்டுத்தூணில் முளை முளைத்தால் சாந்தி ஹோமம். வீட்டின் மேல் கோட்டான் உட்கார்ந்தால், சமையல் அறையில் புறு வந்தால், வ்யாதி மரணங்கள் அதிகமானாலும் சாந்திஹோம மந்த்ரங்கள்.)

𑌇𑌮𑌂 𑌮𑍇 𑌵𑌰𑌣 || ௧௪ || 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌯𑌾𑌮𑌿 || ௧௫ || 𑌤𑍍𑌵𑌂 𑌨𑍋 𑌅𑌗𑍍𑌨𑍇 || ௧௬ || 𑌸 𑌤𑍍𑌵𑌂 𑌨𑍋 𑌅𑌗𑍍𑌨𑍇 || ௧௭ || 𑌤𑍍𑌵𑌮𑌗𑍍𑌨𑍇 𑌅𑌯𑌾𑌸𑌿 || ௧௮ ||

மேற்கண்ட ஐந்து மந்த்ரங்களையும், அவைகளின் அர்த்தங்களையும் முதல் ப்ரச்னம் 4-ஆவது கண்டம் 17-18-ஆம் பக்கங்களில் பார்க்கவும்.

(சாந்தி ஹோமமந்த்ரம்)

𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑍇 𑌨 𑌤𑍍𑌵𑌦𑍇𑌤𑌾𑌨𑍍𑌯𑌨𑍍𑌯𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌜𑌾𑌤𑌾𑌨𑌿 𑌪𑌰𑌿 𑌤𑌾 𑌬𑌭𑍂𑌵 | 𑌯𑌤𑍍𑌕𑌾𑌮𑌾𑌸𑍍𑌤𑍇 𑌜𑍁𑌹𑍁𑌮𑌸𑍍𑌤𑌨𑍍𑌨𑍋 𑌅𑌸𑍍𑌤𑍁 𑌵𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌮 𑌪𑌤𑌯𑍋 𑌰𑌯𑍀𑌣𑌾𑌮𑍍 || ௧௧ ||

ஏ! ப்ரஜாபதிதேவனே! உன்னைத் தவிர வேறு தேவன் ஒருவனும் இந்த உலகத்தை, இதிலுள்ள உயிர்வாழும் ப்ராணிகளை அனுக்ரஹிக்க, அதாவது ரக்ஷிக்க, திறமை பெற்றவனில்லை. ஆகையால் உன்னை நாங்கள் எந்த அபீஷ்டத்தை விரும்பி உனக்கு ஹோமம் செய்கிறோமோ அதை நாங்கள் அடையவேண்டும். அந்த இஷ்டத்தைப் பெறுவதன் மூலம் நாங்கள் தனங்களுக்கு அதிபதிகளாக ஆகவேண்டும்.

(ஹோமமந்த்ரங்கள்)

𑌸𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑍀𑌰𑍍𑌵𑌿𑌹𑍃𑌤𑌾𑌃 || ௨௦ ||

மேற்படி மந்த்ரத்தையும், மந்த்ரத்தின் அர்த்தத்தையும் இரண்டாவது ப்ரச்னம், ஒன்பதாவது கண்டம், 88-ஆவது பக்கம் பார்க்க.

(ஆப. க்ரு. க-23. ஸூ-10. க்ருஹத்தில் பாலமரணம் அதிகமாகாமல் தடுக்க மந்த்ரம்.)

𑌇𑌮𑌂 𑌜𑍀𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌿𑌧𑌿𑌂 𑌦𑌧𑌾𑌮𑌿 𑌮𑍈𑌷𑌾𑌂 𑌨𑍁𑌗𑌾𑌦𑌪𑌰𑍋
𑌅𑌰𑍍𑌥𑌮𑍇𑌤𑌮𑍍 । 𑌶𑌤𑌂 𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑍁 𑌶𑌰𑌦𑌃 𑌪𑍁𑌰𑍂𑌚𑍀𑌸𑍍𑌤𑌿𑌰𑍋 𑌮𑍃𑌤𑍍
𑌯𑍁𑌂 𑌦𑌧𑌤𑌾𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑍇𑌨 ॥ ௨௧ ॥

இந்த அஶ்மாவை (கல்லை) ஜீவித்திருப்பவர்களின் க்ஷேமத்திற்காக, ம்ருத்யுவின் மறைவுக்காக, இங்கு ஸ்தாபிக்கிறேன். இதன் பலனாக இவர்களில் வேறு எந்தப் பாலனும் இந்த மரண ரூபமான கஷ்டத்தை அடையக்கூடாது. ஆகையால் இந்தக் குழந்தைகள் வெகுநாள் வ்யாபித்து ஜீவிக்கவேண்டும். அந்த அகால ம்ருத்யுவை இந்தக் கல்லாகிற மலையால் மறைத்து வைக்கட்டும். ம்ருத்யு பாசத்தை மறையும்படி செய்யட்டும்.

இருபத்திரண்டாவது கண்டம் முற்றிற்று.

---

யாஜுஷமந்த்ர ப்ரச்னம், ஏகாக்நி காண்டம் முற்றிற்று.

---